| வரிசை எண்: | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் - அறச் சிந்தனைகள் முனைவர் இரா.சாந்தி | 01 |
| 2 | இலக்கியங்கள் பகரும் இனிய அறநெறி - முனைவர்.அ.பாரதிராணி, | 05 |
| 3 | புறநானூற்றில் அற வாழ்வு - முனைவர். இரா. செல்வராணி | 11 |
| 4 | ஔவையார் தனிப்பாடல்களில் அறம் - அமுனைவர் சௌ.பா.சாலாவாணி ஸ்ரீ | 14 |
| 5 | நீதி இலக்கியங்களில் - புறங் கூறாமை - திரு அ.மகேஸ் | 18 |
| 6 | கலித்தொகையில் வாழ்வியல் அறங்கள் - முனைவர் ஆ.மனோகரன் | 22 |
| 7 | வாய்மொழிச் செய்யுள்களில் - அறநெறிச் சிந்தனைகள் - இரா.மருதவேல் | 28 |
| 8 | நீதி இலக்கியங்கள் உணர்த்தும் - பொறையுடைமை - செல்வன் த.கௌதமன் | 32 |
| 9 | இசையமுது காட்டும் தொழிலாளர்களின் காதல் சிந்தனை - து. பெருமாள். | 36 |
| 10 | நாலடியாரில் அறநெறிச் சிந்தனைகள் - முனைவர் கா.லிங்கவேல், | 41 |
| 11 | நாலடியார் நவிலும் அறத்தின் அவசியம்! - முனைவர் மு. முஹம்மது சலீம், | 45 |
| 12 | புறநானூற்றில் அறநெறிச்சிந்தனைகள் - முனைவர். இல. தங்கராஜ். | 50 |
| 13 | திருக்குறளும் வாழ்வியல் வழிமுறைகளும் - முனைவர் சு. திரிவேணி. | 57 |
| 14 | திருக்குறளில் அறநெறிச் சிந்தனைகள் - முனைவர்.அ.மரிய செசிலி | 62 |
| 15 | திருவாசக பக்திநெறியில் அறம் - முனைவர் செ.மகேஸ்வரி, ந.சரவணன். | 67 |
| 16 | சங்ககால மன்னரின் ஆட்சிமுறையும் அறநெறிகளும் - முனைவர். இம்மானுவேல்ரவி, | 71 |
| 17 | கல்வியில் அறச்சிந்தனைகள் - திருமதி ஜெ.மோகனலட்சுமி. | 76 |
| 18 | சங்க இலக்கிய அறம் சார் வழியில் கவிஞர் கண்ணதாசனின் சிந்தனைகள் - திருமதி.ந.விஜயலட்சுமி, | 80 |
| 19 | விருந்து போற்றல் - கு.மோகன். | 85 |
| 20 | எடுத்துரைப்பு முறையில் ஆத்திசூடியின் அறக்கருத்துகள் - மா.வெண்மணி. | 90 |
| 21 | மு.மேத்தா கவிதைகளில் கல்விச் சிந்தனைகள் - சு.ஜெகநாதன் | 95 |
| 22 | பழந்தமிழரின் குலக்குறியும் அறநெறிக் கோட்பாடும் - முனைவர் ஏ.ராஜ்மோகன். | 101 |
| 23 | சங்க இலக்கியத்தில் அரசியல் அறம் - முனைவர் இரா.இராமன். | 106 |
| 24 | வளையாபதி கூறும் வாழ்வியல் அறம் - முனைவர் சொ.யுகஜெயப்பிரதா, | 111 |
| 25 | அடுக்கிய கோடி பெறினும் - முனைவர் ப.சு.செல்வமீனா, | 115 |
| 26 | அறத்துப்பாலில் இயற்சீர் வெண்டளையான்அமையும் குறட்பாக்கள் முனைவர் க. காயத்ரி. | 119 |

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் - அறச் சிந்தனைகள்

**முனைவர் இரா.சாந்தி**
**தமிழ்த்துறைத் தலைவர்**
**து.ர்.யு அகர்சன் கல்லூரி**
**மாதவரம், சென்னை -60.**

## முன்னுரை

அறத்தை முன்னிருத்தி பாடும் மரபு தமிழர்களிடையே தொன்று தொட்டு வருகின்ற மரபாகும். அன்பு, அறம், மறம் தமிழ் மக்களின் வாழ்க்கையில் இணைந்துள்ளதை தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியலாம். அன்பும் அறத்தையும் இல்லறத்தில் போற்றியதுடன், நாட்டைக் காப்பாற்ற மறத்துடன் வாழ்ந்த வீரர்களும் இருந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கப்படுவதை அறியமுடிகிறது. செம்மொழி இலக்கியங்கள் என்று போற்றப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவ்விலக்கியங்களில் காதலும் வீரமும் பாடுபொருளாக வைத்துப்பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியப் பாடல்களில் ஔவையார் பாடிய பாடல்களில் தமிழரின் அறச்சிந்தனைகள் பற்றி கருத்துக்கள் அடங்கியுள்ளன என்பதைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக காண்போம்.

## ஔவையார்

காலந்தோறும் ஔவையார் பலர் தோன்றியுள்ளனர், இவர்கள் தங்கள் இலக்கியங்களின் மூலம் சமுதாயத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்து வந்துள்ளனர். எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் ஔவையார் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றில் ஔவையார் பாடிய பாடல்களில் தமிழரின் அறச்சிந்தனைகள் பற்றி கருத்துக்கள் இடம் பெற்றிருப்பது பண்டைய மக்களின் வாழ்க்கை முறையினைத் திறம்பட எடுத்துரைக்கின்றது. ஔவையார் எழுதிய பின்வரும் பாடல் அறம் எத்தகைய பண்பைக் கொண்டு விளங்குகின்றது என்பதை விளக்குகின்றன.

## அறத்தின் இன்றியாமை

அறம் என்பது ஒரு மனிதன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தலையாயப் பண்புகளில் ஒன்று. அறம் தான் ஒரு மனிதனுக்கு நற்பேரினைப் பெற்றுத்தருகின்றது என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வாழவேண்டும் என்பதை பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றது. ஒரு மனிதன் **அறம், பொருள், இன்பம், வீடு** என்னும் நான்கு உறுதிப் பொருள்களின் வழியாக அறத்தை முதன்மைப்படுத்தி வாழவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

**‘அறம் பாடின்றே ஆயிழை கணவ’** (புறம் :34)
**‘அறத்தால் வருவதே இன்பம்’** (குறள் : 39)
**‘அறநெறி முதற்றே அரசின் கொற்றம்’** (புறம் : 11)

**அறம் செய விரும்பு’ (ஆத்திச்சூடி : 1)**

என்ற நம் முன்னோர்களின் தொடர்களின் மூலம் அறத்தை முதன்மைபடுத்தி, அறத்தையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அறிமுடிகிறது. புறநானூற்றுப் பாடல்களில் மன்னர்களின் போர் நிகழ்வுகளைப் பற்றி கூறும் வரலாற்றுக் கருவூலமாக இருந்தாலும், அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் வாழ்க்கை களஞ்சியமாக விளங்குகின்றது. புறநானூறுப் பாடல்களில் **ஈகை, விருந்து புறந்தருதல், சுற்றம் போற்றல்** போன்ற அறக்கருத்துகளைக் காணலாம்.

**ஈகை**

ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஈகைப் பண்பினை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஈகைப் பண்பே ஒருவனுக்குப் புகழைச் சேர்க்கும். தன்னை நாடி வரும் மக்களுக்குத் தங்களால் முடிந்த அளவுக்கு உதவிசெய்தல் வேண்டும். ஈகைப் பண்பினை உடையவர்களை சங்க இலக்கியங்கள் வள்ளல்கள் என்று குறிப்பிடுகின்றது. ஈகைப் பண்பு மழையைப் போன்று விளங்க வேண்டும் என்பதை பின்வரும் பாடல்கள் தெளிவுப்படுத்துவதைக் காணலாம்.

**‘சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு’- (கொன்றைவேந்தன் - 27)**

இப்பாடலில் மற்றவர்களுக்கு ஈந்து மகிழ்வது மனிதனுக்கு அழகாகும். பாற்கடல் நஞ்சினை உண்டு உலக மக்களைக் காத்த முக்கண்ணன் போலவும், அதியமான் தனக்கு கிடைத்த நெல்லிக்கனியின் பயனை உணர்ந்து அதை உண்ணாமல், நீண்ட நாள் வாழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் ஔவைக்குக் கொடுத்ததைப் போலவும் ஈகைப் பண்புடன் வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது.

**ஷஆதல் நின்அகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே’ (புறம் -91)**

பசிக்கு உணவு யார் தருவார் என ஏங்கும் விறலியைக்கண்ட ஔவையார் , நீ வருந்தாதே வானம் வறண்டு போனாலும் அதியமான் வழங்குவதில் தவறமாட்டான் வருந்தாதே என்று பாடினார்.

**ஷஅலத்தற் காலை ஆயினும்**
**புரத்தல் வல்லன் வாழ்க அவன் தாளே’ (புறம் -103)**

நாஞ்சில் நாட்டை ஆண்ட சேர மன்னனின் படைக்குத்துணையாக நின்ற நாஞ்சில் வள்ளுவன் இவற்றைத்தான் வழங்கவேண்டும் என்றில்லாமல் , மலை போன்ற பெருங்களிறு கூட்டத்தை வாரி வழங்கினான். வரிசை அறியாமல் பரிசிலர்க்கு ஆராய்ந்து பார்க்காமல் வழங்கும் இப்படிப்பட்ட ஈகையும் உண்டோ? எனப் பாடுவதைக் காணலாம்.

**ஷ…குன்றத்து அன்னதோர்**
**பெருங்களிறு நல்கியோனே அன்னதோர்**
**தேற்றா ஈகையும் உளது கொல் ’ (புறம் -140)**
**ஷகடவர் மீது இரப்போர்க்கு ஈயும்’ (புறம் -315)**

இப்பாடலில், நெடுமான் அஞ்சி கலையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு இரக்கும் நேரத்தில் கொடுத்து மகிழ்ந்தான் என்பதை தெளிவுப்படுத்துகிறது.

**ஷஇரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி**
**வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்ளு**
**வாழசெய்த நல்வினை … ’ (புறம் -367)**

மேலும், அந்தணர்கள் உண்டாக்கும் முத்தீப்போல முவேந்தர்களை நோக்கி ஔவையார், பிறரை வாழ செய்கின்ற நல்வினை மட்டுமே நம்முடன் விண்ணுலகம் வரை வரும். மற்ற செல்வங்கள் வராது. ஆதனால் நாம் உயிருடன் இருக்கும்பொழுது பிறருக்குக் கொடுத்து வாழவேண்டும் என்கிறார்.

**விருந்து புறந்தருதல்**

இல்லறத்தின் சிறப்பே வரியவர்களுக்கு விருந்தளித்தலே சிறந்த பண்பாகும்.

**ஷமுறைசெய்து காப்பாற்றும் மன்னன்மக்கட்கு**
**இறை என்று வைக்கப்படும்' (குறள்-388)**

என் மேல் அம்பு தொடுவதற்குள் தடுத்தி நிறுத்தி, நறுமணம் வீசும் தன் கையால் புலால் நாற்றம் வீசும் என் தலையை அன்பாக கோதிவிடுவான். சேயைக்காப்பாற்றும் தாய் போல, தன் நாட்டு மக்களைப்போற்றி காப்பதில் அதியமானுக்கு ஈடு இணையில்லை என்பதை விளக்குகின்றது.

**சிறியகள் பெறினே எமக்குஈயு மன்னே**
**பெரியகள் பெறினே**
**யாம் பாடத் தான் மகிழ்ந்துண்னு மன்னே"(புறம் -235)**
**ஷகோள்மீன் அன்ன பொலங்கலத்து அளைஇ**
**ஊண்முறை ஈத்தல் அன்றியும் ,கோள்முறை**
**விருந்துஇறை நல்கியோனே... ' (புறம் -391)**

பொருட்டெழினி தன்னைப்பாடி வந்த இரவலர்க்கு உடையும் உணவும் அளித்தது மட்டுமின்றி, அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் முறைப்படி விருந்தளித்தான்.

**இனியவன்**

மக்களுக்கு மன்னனாக மட்டுமின்றி இனிய தலைவனாகவும் விளங்குகின்றான். நீர் நிலையில் சிறுவர்களோடு விளையாடும் பெருங்களிறு போல இனிமைத் தரக்கூடிய இனியவனாக மன்னன் விளங்குகிறான் என்பதை பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

**"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாலின்**
**நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**
**இனியை பெரும, எமக்கே" (புறம் -94)**
**"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாள் போன்ற விருப்பினன் மாதே" (புறம் -101)**

ளஒரு நாள், இரண்டுநாள் ,மட்டுமின்றி பல நாள் பலரோடு சேர்ந்து சென்றாலும் முதல் நாள் போலவே , இன்முகத்ததுடன் பரிசுகளை வறியவர்களுக்கு வாரி வழங்குவான்.

**சுற்றம் போற்றல்**

தன்னை நாடி வரும் இரவலர்களைச் சுற்றம் போல் பாதுகாத்திட வேண்டும். இதற்கு அதியமான் விதிவிலக்காகத் திகழ்கின்றான். கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் வகை அறியாமல் வாரி வழங்கும் வள்ளல் தன்மைக் கொண்டவனாத் திகழ்துள்ளார். அதியமான் செல்வத்தில் குறை ஏற்படினும், ஏழை மக்களை அருகில் வைத்து போற்றும் உறவினராகத் திகழ்ந்தான் என்பதை பின்வரும் பாடல்வரி குறிப்பிடுகின்றது.

**"இல்லோர் ஒக்கல் தலைவன் " (புறம் -95)**
**"வான் அறியல என்பர் அடுபசி போக்கல்**
**அண்ணல் யானை வேந்தர் " (புறம் -390)**

இப்பாடலில், புரவலர்கள் எந்த மன்னனிடம் பரிசில் வேண்டி செல்லவில்லை. மழைக்கும் அவர்களின் பசி தெரியவில்லை. ஆனால் மன்னன் அதியமான் அவர்களின் பாசி நிற அழுக்காடையை நீக்கி, புத்தடை அளித்து,அமிழ்தன்ன உணவை அளித்தது மட்டுமின்றி , அவர்கள் சுற்றத்தார்க்கும் வேண்டிய அளவு கொடுத்தார் என்ற செய்தியை வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

பண்டையகால மக்கள் அறத்தைப் பாடல்களில் சுட்டிச் செல்லவில்லை, வாழ்ந்துகாட்டிச் சென்றுள்ளனர் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் ஔவையார் பாடல்களில் வரலாற்றுச் செய்திகளுடன் அறத்தைப் புலப்படுத்தியிருப்பது ஒரு மனிதன் கடைபிடிக்க வேண்டிய அறங்களாக அறத்தின் இன்றியமையாமை, ஈகை, விருந்தோம்பல், சுற்றம் காத்தல், இனிய சொற்களைக் கொண்டு பேசுதல் ஆகியவை இக்கட்ரையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# இலக்கியங்கள் பகரும் இனிய அறநெறி

**முனைவர்.அ.பாரதிராணி,**
**உதவிப் பேராசிரியர்,**
**தமிழ் உயராய்வு மையம்,**
**அழகப்பா அரசு கலைக்கல்லூரி,**
**காரைக்குடி -3.**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழினத்தின் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் போற்றி வளர்க்கும் ஆதாரம் தமிழ் இலக்கியங்களே. சங்ககால நூல்கள் உணர்த்தும் அறவியல் போன்றே அறம் உணர்த்த யாக்கப்பட்ட சங்கமருவிய கால இலக்கியங்களும், காப்பியங்களும் அறநெறிச் சிந்தனைகளை தெற்றெனப் புலப்படுத்தியுள்ளன என்பதை நிறுவுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

அறம், இறை, அறவோர், அழுக்காறு, வெகுளி, குளம், கூவல், வழிப்புரை, தளிசாலை, அமிழ்தம்.

**முன்னுரை**

மனித வாழ்விற்கு அடிப்படைப் பொருளாக உணவு, உடை, உறைவிடம் என்பவை முதன்மைப் படுத்தப்படுகின்றன. ஆயினும் வாழ்வியலின் உறுதிப் பொருள்களாக அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கினைச் சுட்டுகிறது இலக்கியங்கள். மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாட்டுக் கூறுகள் அறவழியில் அமைய வேண்டும் என்பதையே சான்றோர்கள் முதன்மைப்படுத்தினர். சமூகத்தில் தனக்கான தனித்த இடத்தை ஒருவர் பெறவேண்டுமெனில் அவருக்கான அடையாளமாக ஒருவரின் தனித்த பண்பு மேலோங்கி நிற்றல் வேண்டும். ஆகவே தான் மானிடச் சிந்தனையில் அறநெறியுடன் வாழ்வதைத் தனது அடையாளமாகக் கொண்டனர். அத்தகு அறநெறிகளை விளக்குவதே இக்கட்டுரையின் பொருண்மையாகின்றது.

**அறம் என்பதன் பொருள்**

பண்டைத் தமிழர்கள் அறத்தினைப் போற்றி வளர்த்தனர். அறம் செய்ய விரும்பித் துணிந்தனர். அறப்பண்பே வாழ்வில் உயர்நிலை தரும் என்ற நம்பிக்கை வித்தை விதைத்தனர். சார்ந்துண்ணியாக வாழும் இவ்வுலக வாழ்வில் பிற உயிர்களுக்கு அல்லவை செய்யாதிருத்தலே அறம் என்ற பண்பின் கீழ் பணிக்கப்பட்டது.

**“அகராதிகள் நீதி, நெறி, ஒழுக்கம் ஆகிய பண்புகளைக் கொண்டதே அறம்”**[1] என்கின்றன. “அறு ¸ அம்” எனப் பிரித்து நல்லவை அல்லாதவற்றை நீக்குவது அல்லது அறுப்பது அறம் என்றும் சிந்திக்க இச்சொல் இடம் தருகின்றது. நம்மிடம் உள்ள வேண்டாத ஒன்றை அறுத்தல் என்பது காலம்தொட்டே உள்ள

மரபாம். நல்லவற்றைப் பெற்றுக் கொண்டு அல்லவற்றை நீக்குவதே நமது பண்பு. ஆகவே நன்மை இல்லாதவற்றை அறுப்பதே அறமாகப் போற்றப்படுகின்றது.

**இரட்டைக் காப்பியங்களில் அறச்சிந்தனை**

ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறுங் காப்பியங்கள் என்ற பாகுபாட்டின் கீழ் பிரிக்கப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் கற்பனை மேலுற யாக்கப்பட்டதே காப்பியங்கள். இக்காப்பியங்களும் அறவழியில் வாழ வேண்டும் என்பதையே தலையாய கடமையாகப் போற்றிப் பாடியுள்ளன.

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்" செய்ய இயலாமைக்கு வருந்தும் கண்ணகியின் மனநிலை அறம் செய்யும் மாண்பினை வெளிப்படுத்தியுள்ளது.

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்"[2]** (கு.எ.388)

என்ற கொள்கையின் கீழ் கொற்றம் காணும் கோன் தன் செங்கோல் வழுவ நீதிநெறியைப் பிழையுடன் கண்டதால் கண்ணகி வெகுண்டெழுந்தாள்.

மக்களைக் காக்கும் மன்னன் தவறிழைத்ததால் அவனது அறமே கூற்றுவனாக மாறியதை சிலம்பு "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்று பகிர்கின்றது.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையும், உண்டி, உறையுள், உடை வழங்குவதே அறம் என்பதை,

**"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் ' மன்னுயிர்க்கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்"[3]** (மணி 25 : 228-231)

என்று விளம்புவதுடன்,

**"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"[4]** (மணி 11 : 112-113)

என்றும் அறத்தின் பயனில் உணவிற்கு முக்கியத்துவம் இட்டுச் செல்கின்றது. நல்லவை செய்யும் யாவும் அறமே என்பதையே இரட்டைக் காப்பியங்கள் நிரல்படுத்துகின்றன.

**திருக்குறளில் அறச்சிந்தனை**

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளின் கீழ் படைக்கப்பட்ட தெய்வப் புலவரின் சிந்தனை திருக்குறளாய் ஈரடியில் இவ்வுலகினையே தன்வயமாக்கியுள்ளது. திருக்குறளில் அறன் வலியுறுத்தும் பல்வேறு கருத்துக் கோவைகள் நிறைந்துள்ளன. அறப் பண்பினை எடுத்துரைக்கும் திருக்குறள்,

**"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு"[5]** (கு.எ.31)

என்றும்,

**"அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு"[6]** (கு.எ.32)

என்றும் விளம்புவதுடன் அறன் வழிப்பட்டதே இல்வாழ்க்கை என்றும் புகழ்ந்துரைக்கிறார்.

ஒரு மனிதன் அறப்பண்புடன் வாழவேண்டும் என்று நினைத்தால் அவன் அறத்திற்கு மாறான சில பண்புகளை நீக்க வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை எடுத்துக் காட்டுகின்றார்.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"[7]** (கு.எ.35)

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் இவை நான்கும் அறத்திற்குப் புறம்பானது என்றும் அதனை நீக்கலே நல் அறத்தின் வித்து என்றும் வெளிப்படுத்துகின்றார்.

**இலக்கியங்களில் அறம்**

மனிதன் தனக்கென சில வரையறைகளை வரைந்து கொண்டு அதன்படி வாழ்வதையே இலக்காகக் கொண்டுள்ளனர். அவ்வகையில் நீருக்கு முக்கியத்துவம் கொடுத்தும், நிழலுக்கு சிறப்பு கொடுத்தும், உணவிடல், சாலை அமைத்தல் போன்றவற்றிற்கு முதன்மை இடம் தந்து வாழ்ந்த சூழலை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன இக்கூற்றினை

**"நீரறம் ஒன்று நிழல்நன்று தன்னில்லுள்**
**புாறம் நன்றுபாத்து உண்பானேல் - பேரறம்**
**நன்று தனிசாலை நாட்டல் பெரும் போக**
**மொன்றுமாஞ் சால வுடன்"[8] (சிறுபஞ் -63)**

என்ற சிறுபஞ்ச மூலப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

அப்பூதி அடிகளார் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அறப்பணி புரிந்ததை பெரியபுராணம் சுட்டிக் காட்டுகின்றது. அதே போன்று ஏலாதிப் பாடல் ஒன்று

**"உண்ணீர் வளம் குளம் கூவல் வழிப்புரை**
**தண்ணீரே அம்பலம் தான்படுத்தான் - பண்ணீர்**
**பாடலோடு ஆடல் பயின்று உயர்செல்வனாய்க்**
**கடலோடு ஊடலுளான் கூர்ந்து"[9] (ஏலாதி – 51)**

என்கிறது. வழிப்போக்கர்கள் பருகிட வற்றாத குளமும் கிணறும் வெட்டி வைத்ததுடன், தங்கிச் செல்வதற்கு சாவடிகள் கட்டியும் வைத்திருந்தனர். தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், பொதுமண்டபம் கட்டிவைத்தல் என்ற பணிகளை மேற்கொண்டிருந்தவர்கள் மக்களால் போற்றப்பட்டு இன்புற்று வாழ்ந்தனர் என்பதைத் தெறிவுபடுத்துகின்றது ஏலாதிப்பாடல்.

ஒரு மனிதன் துன்பமின்றி இன்பமுடன் வாழ வேண்டும் என்றால் பிறருக்குப் பயன்படும் விதத்தில் ஈகைப்பண்புடன் நல்லது செய்து வாழ்தல் வேண்டும் என்ற வாழ்வியல் கருத்தை வலியுறுத்துகின்றது.

**எது சிறந்த அறம்**

அறவழியில் வாழவேண்டும் என்று எடுத்துரைத்தால் மட்டும் போதாது. எது சிறந்த அறம் என்பதையும் வலியுறுத்த வேண்டும் என்ற கோட்பாட்டினை இலக்கியங்கள் பகர்கின்றன. வறியோர்க்கு ஈவதும் வறுமையிலும் குடிப்பிறப்பு குன்றாத ஒழுக்கமும், நட்பினை பெருக்குதலுமே சிறந்த அறமாகப் போற்றி வாழ்ந்த சூழலைத் திரிகடுகம்,

**"அலர்ந்தார்க்கொன் றீந்த புகழுந் துளங்கினுள்**
**தன்குடிமை குன்றாத் தகைமையும் - அன்போடு**
**நாள்நாளு நட்டார்ப் பெருகலும் இம்மூன்றுங்**
**கேள்வியு ளெல்லாற் தலை"[10] (திரி-41)**

என்று விளக்குகின்றது.

**பிறன்மனை நயத்தல் தீது**

ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ் மரபினைப் போற்றி வாழ்தல் இல்லற அறமாக நிலைநிறுத்தப்பட்டது. சொல்லாலும், செயலாலும், சிந்தனையாலும் பிறர் மனைவியைத் தீண்டாது இருத்தலே நல்லறமாக இல்லறத்தில் போற்றப்பட்டது. அவ்வாறு தீண்டின் பகை வந்து சேருமென இலக்கியங்கள் எடுத்துரைக்கிறது. அவ்வகையில்

**"................பிறன்தாரம்**

**நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம் என்று**
**அச்சத்தோ பிற்றாற் பொருள்"** [11] **(நாலடியார் 82)**

என்று எடுத்துக்காட்டுகிறது நாலடி. பிறன்மனை நோக்கா பேராண்மை உயர்வான அறமாக மண்ணில் போற்றப்பட்டது.இந்நிலையினைப் பின்பற்றியே உலகோர் வாழ்ந்தனர் என்பதை

**"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற வொழுக்கு" (கு.எ.148)**

என்று திருக்குறளும் விளம்புகிறது. தமிழனின் தலைசிறந்த பண்பாடாக பிறனம்மனை நோக்காத பண்பு கடைபிடிக்கப்பட்டது.

**ஈதல் அறம்**

இரந்து நிற்போருக்கு ஈவதும், விருந்தோம்பி காத்தலும் தமிழரின் பண்பாட்டின் அடையாளம் எனலாம். உண்ணும் போது பிறருக்குக் கொடுத்து உண்ணும் பகிர்தல் அறம் காலம் காலமாகப் பின்பற்றப்படுகிறது.

**"வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்**
**மென்புல வைப்பின் நன்னாட்டு பொருந"[12] (புறம் 34)**

என்கிறது புறநானூறு.

**"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலு மிலரே.."[13] (புறம் 182)**

இந்திரர் அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாது பிறருக்கு கொடுத்து உண்ணும் மரபு தமிழனுடையது என்பதைப் புறநானூறு எடுத்துக்காட்டுகிறது.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை என்று திருக்குறளும் ஈகையின் திறம் பற்றிப் பேசுகின்றது. பொருளின் பயன் ஈதல் என்பதாகும். பொருள் இன்மையால் ஏற்படும் இழிவும், பொருள் உள்ளதால் ஏற்படும் உயர்வும் எடுத்துரைக்கப்படுவதுடன் கொடை,ஈகை என்னும் உயரிய பண்பும் பின்பற்றிட வழியமைத்தது இலக்கியங்கள்.

**"இல் என இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என பொருள்**
**கல் இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள்ஆகுமோ"[14]**
**(கலி.பா.எ.2)**

என்கிறது கலித்தொகை. அறமும் இன்பமும் பொருளினாலே கிடைக்கும் என்பதை பெருங்காப்பியங்கள்,

**"அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்**
**பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்**
**புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும் என**
**பிரிவு எண்ணில் பொருள் வயிற் சென்ற"[15] (கலி.11)**

என்ற அடிகளின் வழி நிறுவுகின்றார்.

**ஊன் உண்ணா அறம்**

உலகில் பிறந்த உயிர்கள் யாவும் பெருமை வாய்ந்தது. மதிப்பு மிக்கது. உயிர்களை வருத்துவதும், கொல்லுவதும் பாவச்செயலாகும். அதனால் தான் வள்ளுவர் அறங்கள் எல்லாவற்றிலும் சிறப்புடையது கொல்லாமை என்று வலியுறுத்துகின்றார். பிரிதோர் உயிரின் ஊனைத் தின்று தன் ஊனைப் பெருக்க எண்ணுவது இழிசெயலாம். "ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" என்கிறது இன்னா நாற்பது.

**"கொலை புரியான் கொல்லான் புலால்மயங்கான் கூர்ந்த**
**விண்ணவர்க்கு மேலாய் விடும்"[16] (ஏலாதி - 1)**

என்ற பாக்கள் ஊன் உண்ணாதிருத்தலையும், கொல்லாமையால் ஏற்படும் உயர்வினையும் எடுத்துக் காட்டுகிறது.

**தொகுப்புரை**

1. தமிழினத்தின் பண்பாட்டையும், தமிழர்களின் அடையாளத்தையும் முன்னிறுத்துவது அறக்கோட்பாடு.
2. மனிதர்களின் அடிப்படைத் தேவை போன்று வாழ்வியல் அடிப்படை ஆதாரமாக அறநெறி கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.
3. நல்லவை நாடி அல்லவை தீர்த்தலே அறம் எனக் கொள்ளப்படுகிறது. அறவோர்க்கும், இரப்போர்க்கும் ஈதல் அறமாகப் போற்றப்படுகிறது.
4. சங்க இலக்கியங்கள் தொட்டு, நீதிநூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் என யாவும் அறத்திற்கே முதன்மை இடம் தருகின்றது.
5. உண்டியும், உறையுளும் கொடுத்தலே அறம் எனப் போற்றப்படுகிறது.
6. பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் நீக்குதலும் அறமென விளம்பப்படுகிறது.
7. நீர் நிழல், சத்திரம் அமைத்தல் போன்றவையும் வாழ்வியல் அறமாகப் பின்பற்றப்படுகிறது.
8. வறுமையிலும் செழுமை, குன்றாத ஒழுக்கம், நட்புப் பெருக்கம் போன்றவை சிறந்த அறமாக எடுத்துரைக்கப்படுகிறது.
9. பிறன்மனை நயத்தல் பேராண்மை அல்ல. அறத்திற்குப் புறம்பானது என்று அறிவுறுத்தப்படுகிறது.
10. ஈதல், அறம், செல்வத்துப் பயன் ஈதல், ஊன் உண்ணாமை, கொல்லாமை போன்றவையும் அறநெறியின் வித்தாக இலக்கியங்கள் நிரல்படுத்துகிறது.

**சான்றென் விளக்கம்**


1. முனைவர் ச.இராமமூர்த்தி - தமிழர் மரபும் அறிவியல் பார்வையும் - பக்.112 லாவண்யா பதிப்பகம்.
2. ஞா.தேவநேயப்பாவாணர் - திருக்குறள் தமிழ் மரபுரை - பக்.315 - இந்து பப்ளிக்கே‘ன்.
3. மார்க்கபந்து - மணிமேகலை - பக்.294
4. மார்க்கபந்து - மணிமேகலை - பக்.128
5. ஞா.தேவநேயப்பாவாணர் - திருக்குறள் தமிழ் மரபுரை - பக்.42 - இந்து பப்ளிக்கே‘ன்.
6. ஞா.தேவநேயப்பாவாணர் - திருக்குறள் தமிழ் மரபுரை - பக்.43 - இந்து பப்ளிக்கே‘ன்.
7. ஞா.தேவநேயப்பாவாணர் - திருக்குறள் தமிழ் மரபுரை - பக்.45 - இந்து பப்ளிக்கே‘ன்.
8. நாராயண வேலுப்பிள்ளை - பதினெண் கீழ்கணக்கு நூல்கள் - பக்.120 -நர்மதா பதிப்பகம் - சென்னை.
9. நாராயண வேலுப்பிள்ளை - பதினெண் கீழ்கணக்கு நூல்கள் - பக்.80 - நர்மதா பதிப்பகம் - சென்னை.
10. நாராயண வேலுப்பிள்ளை - பதினெண் கீழ்கணக்கு நூல்கள் - பக்.25 - நர்மதா பதிப்பகம் - சென்னை.
11. பாலசுந்தரம் தி.சு.பிள்ளை - பதினெண் கீழ்கணக்கு நாலடியார் மூலமும் உரையும் - பக்.112 - கழக வெளியீடு, சென்னை.
12. பரிமணம் அ.ம. - புறநானூறு மூலமும் உரையும் - பக்.60 - நியூ சென்சுரி புக் ஹவுஸ்.
13. பரிமணம் அ.ம. - புறநானூறு மூலமும் உரையும் - பக்.252 - நியூ சென்சுரி புக் ஹவுஸ்.
14. பரிமணம் அ.ம. - கலித்தொகை - பக்.12 - நியூ சென்சுரி புக் ஹவுஸ்.
15. பரிமணம் அ.ம. - கலித்தொகை - பக்.48 - நியூ சென்சுரி புக் ஹவுஸ்.

16. நாராயண வேலுப்பிள்ளை - பதினெண் கீழ்கணக்கு நூல்கள் ஏலாதி மூலமும் உரையும் - பக்.15 - நர்மதா பதிப்பகம் - சென்னை.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# புறநானூற்றில் அற வாழ்வு

**முனைவர். இரா. செல்வராணி**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
து.ர்.யு.அகர்சன் கல்லூரி,
சென்னை - 600 060.

**முன்னுரை:**

மனித வாழ்வில் காணப்பெறும் நிலைகளை காதல், வீரம், சமயம் சார்ந்தும் பாகுப்படுத்தலாம். விலங்கு வாழ்வியலில் இருந்து மனிதன் நாகரீகம் பெற்று பரிணாம வளர்ச்சி பெற்ற முதல் நிலையில் தன் வாழ்வை தானே வகுக்கும் திறன் பெற்றான். அவன் தன் வாழ்வை தானே வகுத்த நிலையின் ஒரு பகுதியே அறம் ஆனது. பரிணாம வளர்ச்சியின் படிக்கற்களாக வாழ்வை சீர்படுத்திக் கொள்ள மனிதன் அறத்தின் துணைக் கொண்டான். சங்க கால மனிதன் நாகரீக வாழ்வின் பதிவுகளான சங்க இலக்கியம் இதைத் தெள்ளத் தெளிவென படம் பிடித்துக் காட்டுகின்றது. சங்க கால மன்னர்கள் மற்றும் அவர்தம் ஆட்சிக்கு உட்பட்ட குடிமக்கள் பின்பற்றிய அறங்களை புறநானூறு வழியாக இவ்வாய்வுக் கட்டுரை வழி உணரலாம்.

**அறம் :**

மனித வாழ்வை செம்மையாக்கும் அறத்திற்கு விளக்கமாக மணிமேகலையின் அடிகள் இங்கு நினைவுக் கூறப் படுகின்றன.

**“அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவா
திதுகேள் மண்ணுயிற்க்கெல்லாம் உண்டியும்
உடையும். உறையுலும் அல்லது கண்டதில்”**

எனும் அடிகளின் வழி “உணவு” அளிப்பதையும் அறமாகக் கொள்ளப்படத் தக்கதாகிறது. மனிதன் உயிர் வாழத் தேவைப்படும் உணவு கொடுத்தும், பகிர்ந்தும் உண்ணுதல் என்பதும் ஓர் அறமாகும். உணவு ஒரு மனிதனுக்கு கிடைக்கும் போது அதை பகிர்தல் என்பது இயலும் செயலாகும். இதை அறமாகக் கொண்டு அவனால் அறம் செய்து வாழும் வழி நிலை கொள்ள முடியும்.
இதை வள்ளுவனின் வழியில்,

**“ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லார் செயல்” (குறள் : 33)**

ஒருவன் தன்னால் இயன்ற வரையில் அறச் செயலைச் செய்யக் கூடிய இடங்களிளேல்லாம் இடைவிடாது செய்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். இதன்படி வரையில் உணவு என்பதை அளித்தலும், அறம் விருந்தோம்பலும் அறம், பகிர்ந்து உண்ணுதலும் அறமாக இங்கு போற்றப்படுகிறது.

**பகிர்ந்துண்ணல் :**

பகிர்ந்துண்ணல் சிறந்த அறமாகக் கருதலாம். உண்ணும் உணவை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்ணும்போது மக்களிடையே ஒற்றுமை நிலை கொள்கிறது. பசி, பட்டினி, வறுமை தீர்க்கப்பட்ட இடத்தில் பேராசை களவு, கொள்ளை, கொலை தடுக்கப்படுகின்றன. எனவே பகிர்தலும் அறமாக்கப்படுகிறது. இதனை கீழ்காணும் புறநானூறு பாடல் உணர்த்துகிறது.

**“உண்டால் அம்ம இவ் உலகம் - இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்**
**தமியர் உண்டலும் இவரே” (புறம்.182)**

இப்பாடலடிகளில் தேவர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தாலோ, தவத்தாலோ தமக்கு வந்து கூடுவதாயினும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டலம் இலா் என உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

**விருந்தோம்பல் :**

தமிழர் மரபில் பண்பாட்டுச் சின்னமாக இன்றளவும் போற்றப்படுவது விருந்தோம்பல் ஆகும். இல்லறத்தின் தலையாய நெறியாக விருந்தோம்பல் கொள்ளப்படுகின்றது. இதற்கு புறநானூற்றின் சில அடிகள் கூறுவன,

**“நெடுநை வந்த விருந்திற்கு மற்றுத் தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன் - இன்று இக்**
**கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இது கொண்டு**
**ஈவதிலாளன் என்னாது நீயும்” (புறம். 316)**

மதுரைக் கள்ளிற் கடையத் தன் வெண்ணாகனார் பாடிய பாடலடிகளில் தன் தலைவன் புகழுங்கால் நேற்று தன்னை நாடி வந்த விருந்தினர்களை உபசரிப்பதற்காகத் தன்னுடைய பழைய வாட்படையை ஈடாக வைத்தான். இன்று தன்னிடம் வந்துள்ள விருந்தினரைப் பேணுவதற்கு சிறிய யாழினை பணயமாக வைத்தான் என்று கூறுகிறார். இப்பாடலின் தலைவன் விருந்தினரை போற்றுதற்குரியவனாக ஆகிறான். விருந்தினரை போற்றி அரசனுக்கு விருந்தோம்பல் மட்டுமின்றி மேலும் சில அறங்களைப் போதித்து மக்களை பேணுதற்கான வழி வகைகள் கூறப்பட்டுள்ளன.

**அரசனுக்கு அறம் :**

மன்னன் என்பவன் மக்களின் பசிப்பிணியையும் போக்க வேண்டிய நிலையுடையவன் ஆகிறான். அவன் மக்களுக்கு உணவு அளிப்பதை விட அதைப்பெற வழிவகை செய்வது மேன்மை எனக் கருதி பாடலின் வழியே அரசருக்கான அறங்களை கடமைகளாகப் போற்றப்படுகிறது என்பதனை,

**“நீரின்றியமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப்படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே” (புறம்.18)**

பண்டையத் தமிழரின் வாழ்வியல் நிலைகளை எடுத்துக் கூறும் புறநானூற்றுப் பாடலடிகள் இவையாகும். சங்க காலப் புலவர்கள் அரசனுக்கு அறிவுரைக் கூறும் நிலையிலும் இருந்துள்ளனர். நீர் வளம் மிகுதல் என்பது நாட்டிற்குத் தேவையான மூன்று. அதை பெருக்க வேண்டி புலவர் தன் பாடலின் வழி நீரின்றி அமையாத உடல் உணவால் அமைகிறது.

உணவையே அது முதன்மையாகவும் உடையது. உணவு தந்தவர், உயிர் தந்தவர் ஆகிறார். எனவே உணவு என்பது நிலத்துடன் நீரும் சேர்ந்தது ஆகும். நிலத்தையும், நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும், உயிரையும் கூட்டிப் படைத்தவர் ஆகிறார். எனவே நீர் நிலைகளை தோன்றச் செய்து வேளாண்மையைப் பெருக்கச் செய்வதைக் கூறுகின்ற பாடலடிகள் இவை. நாடாளும் மன்னர்களுக்கான அறமும் புலவர்கள் வாயிலாக போதிக்கப்படுகிறது.

நீரின்றி உலகில் எவ்வுயிரும் நிலைத்து வாழ இயலாது. வாழ உணவு கொடுத்தோரும் உயிரைக் கொடுத்தவர் ஆகிறார். எனவே நீர் நிலைகளை ஏற்படுத்தி வேளாண்மையை பெருக்கி, உணவு உற்பத்தி செய்வோர் உலகில் பெறத்தக்க எல்லாவற்றையும் பெறுவர் என்று கூறுவது அரசு அறமாக போற்றத்தக்கது ஆகிறது.

**கடமைகள் :**

**“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்கு கடனே**
**நன்னடை நல்கல் வேந்தர்க்கு கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்குக்**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் : 312)**

ஒவ்வொருவரின் கடமையையும் கூறும் போது அவ்விடத்தில் அவரவர்க்கான அறமாக அதை கொள்ளத்தக்கதாகிறது. நாடு வளம் பெற மனித வாழ்வு சிறக்க பெண்கள் தம் கடமைகளை ஒழுக வேண்டியது, கடமையாகிறது. இவற்றை வேந்தரது கடமை, வீரனது கடமை என பிரித்தறிந்து ஒழுகுகின்றனர். இவ்வாழ்வியல் நெறிகளை அறமாக்கி இலக்கியத்தின் வழி வெளிக் கொணரப்படுகிறது. ஒவ்வொருவரின் கடமையை இயம்பும் போது அவ்விடத்தில் அது அறமாக்கப்படுகிறது. மகனைப் பெற்று அவனைப் பாதுகாத்தல் மாந்தரின் கடமை அம்மகனுக்கு கல்வி, வீரம், சான்றோனாக்குதல், தந்தைக்கு கடமை ஓர் நாட்டைப் பாதுகாத்தல் ஓர் வீரனின் கடமை, அவ்வீரனுக்குரியது வேல் அவ்வேலை வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமை, நீர் நிலையைப் பரிசாக வழங்குதல். அரசனுக்கு கடமை போரில் பகைவரை வெற்றி கொள்வது வீரனின் கடமை எனக் கூறிய பிறகு அதை மீறுதல் கூடாது. மேற்கூறப்பட்ட கடமைகள் வாழ்வின் மிக முக்கிய கால கட்டங்கள். இவைகள் கடமைகளாகக் கொள்ளத் தக்கவைகளாகின்றன. இவை மீறினால் நன்மக்கட் பேறு அமையாது! பிறந்த மகன் சான்றோனாக வளர்க்கப்படாமல், அம்மகன் நெறி பிறழ் நடத்தைகள் கொள்பவன் ஆவான். இதனால் நாட்டில் கொலை, கொள்ளை நடந்தேறும். எனவே அறமாகப் போதிக்கப்பட்டால் அதை மீறுதல் என்பது இயலாது. எனவே புலவர் அறம் போல கடமைகளை இயம்புகிறார்.

**முடிவுரை :**

பண்டைத் தமிழ் மக்களின் எண்ணம், சொல், செயல் யாவும் அறம் சார்ந்த தன்மையிலேயே அமைந்திருக்கின்றன. அறத்தின் வழி வாழும் வாழ்வே வாழ்வெனக் கருதப்பட்டது. அறத்தை வாழ்வின் அடிப்படையாக கருதி போற்றுவதாக உணர்த்தப்படுகிறது.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# ஔவையார் தனிப்பாடல்களில் அறம்

**முனைவர் சௌ.பா.சாலாவாணி ஸ்ரீ**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை**
**எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை.**

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் மனிதனை பண்படுத்தவே எழுந்தன. இவ்விலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை வலியுறுத்துகின்றன. மனித விழுமியங்களை விளக்க நேரிடும் இடம் எல்லாம் அறத்தினையே கைக்கொள்கின்றன. நற்செயல், நல் ஒழுக்கம், தீவனைச் செய்யாது இருத்தல், ஈதல், போன்றவை விளக்க அறம் என்னும் சொல் பயன்படுத்தி இருப்பதை அறியலாம். அறம் தனி மனிதனோடும், சமுதாயத்தோடும் நெருங்கிய தொடர்புடையது. மனிதனின் சமுதாய, சமய, பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் அறம் முக்கியமான பங்களிப்பைத் தருகிறது. அந்த வகையில் ஔவையார் அருளிய தனிப்பாடல்களில் காணலாகும் தனிமனித அறமே முதன்மை அறமாக காணப்பட்ட நிலையினை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஔவையார்

ஔவையார் என்னும் பெயர் பூண்ட புலவர் பலர் இருந்தனர். ஔவையாரின் தனிப்பாடல்கள் என்னும் நூலினைப் படைத்த ஔவை சங்க கால ஔவையில் இருந்து வேறுபட்டவர். சங்ககாலத்திற்குப் பிறகு, தமிழகத்தில் தொடர்ந்து அரசியலிலும் வாழ்வியலிலும் பற்பல மாறுதல்களோடு கடந்து வந்தன. இந்நிலையில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் அளவில், மீண்டும் ஓர் ஔவையாரைப்பற்றி அறிகின்றோம். கம்ப நாடரும், புகழேந்தியாரும், ஒட்டக்கூத்தரும், செயங்கொண்டாரும் மற்றும் புலவர் பெருமக்களும் வாழ்ந்த நாளிலே, அவர்கள் அனைவரும் போற்றும் அறிவுத் திட்பத்துடன் இந்த ஔவையார் விளங்கினார். இவர் பாடியவையாக நமக்குக் கிடைப்பனவெல்லாம் தனித்தனிச் செய்யுட்களேயாகும். பந்தன் அந்தாதி என்ற ஒரு நூலும், "அசதிக்கோவை' என்றொரு கோவையும் இவரால் இயற்றப்பட்டதாகக் கூறுகின்றார்கள் சான்றோர் பெருமக்கள். அவற்றுள் கிடைப்பன மிகச்சிலப் பாடல்களே. இவர் மிகச் சிறந்த சிவபக்தராகவும், விநாயகப் பெருமானைப் போற்றி வழிபட்டவராகவும் அறியப்படுகின்றார். இவர் இரண்டாவது ஔவையார் என ஆய்வாளர்கள் கூறுவர். இவர் தம் இலக்கியத்தில் அன்பை அடிப்படையாகவும் அறத்தைத் துணையாகவும் கொண்டு அமைவதே வாழ்வியலுக்கான விழுமியம் என்னும் கருத்தினைப் பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார்.

## ஈதலே அறம்

உலக வாழ்வில் மனிதனின் செயல் முயற்சிகள் பலபடியாக அமைகின்றன. இவற்றையெல்லாம் "அறம் பொருள் இன்பம் வீடு" என்னும் நான்கினுள் ஆன்றோர் அடக்கிக் காண்பார்கள். கழகத் தமிழகராதி **அறன்** என்பதற்குக் கடமை, தருமம்,

கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியம், அறநூல் என்னும் பொருள்களைத் தருகின்றது.

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்” ( தொல் கள 89)**
என தொல்காப்பிரும்,

**“அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே”**
என நன்னூலாரும் அறத்திற்கு பொருள் தருகின்றனர். அறம் மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழுநிறை வடிவே அறம் என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என அறத்தினை வரையறுத்துக்கூறுவர். உலகியலின் விழுமியங்களை விளக்கி உரைக்க எழுந்த அற நூல்கள் கணக்கில் அடங்கா. இவை நான்கின் தத்துவப் பொருளை, ஒரே செய்யுளில் அடக்கி, அனைவரும் எளிதாகப் புரிந்து மேற்கொள்ளும்படியாக உதவுகின்றார் ஔவையார்.

**“ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்”**
எனும் வரியில் அமைந்த பாடலில் செல்வம் நமதன்று. உலகிலே பெறும் இது, உலகினராகிய அனைவருக்குமே உரியது என்பதனை உணர்ந்து, வந்தவர்கட்கு மனமுவந்து ஈதல் வேண்டும். இவ்வாறு மனமுவந்து ஈதலே “அறம்“ எனப்படுவதாம். பொருள்களைத் தேடுவது கடமை. பொருளில்லாதவர்க்கு இவ்வுலக வாழ்வும் சிறப்பாக வாயாதன்றோ! இப் பொருளைத் தேடும் முறையில்தான் நீதி குறுக்கிடுகிறது.

**நல்காத செல்வம்**

செல்வத்தின் நிலையற்ற நிலையினை நம் முன்னோர்கள் உணர்ந்து வைத்திருந்தனர். செல்வம் சிலரிடம் தானாகவே வந்து சேருகின்றது. பலரிடம் முயற்சியின் அளவாலே கிடக்கப் பெருகின்றது, தொழில் வளர்ச்சியிலும்கூடச் சிலரிடம் செல்வம் மிகுதியாக வந்து சேர்வது இல்லை. இத்தகைய நிலையற்ற தன்மையினை ஔவை பெருமகளாரும் நவில்ந்திருப்பது நோக்கத்தக்கது. இதனால், செல்வம் சேர்வது பிறருக்குக் கொடுத்து அவரையும் நல்வாழ்வினராகச் செய்வதற்கே என்னும் அறச்சிந்தனையினை அவர்கள் வற்புறுத்தினர். கொடுக்கும் பண்பு சிறந்த மனிதப் பண்பாகவும் ஆயிற்று. கொடுப்பவரினும், மேம்பட்ட வள்ளல்களாகப் பலர் இருந்தனர். கொடையினால் நாட்டின்கண் பரவுகின்ற புகழையும் அதனால் தமக்கு உயர்கின்ற பேற்றையும் கருதி, கொடுக்கும் குணமற்ற சிலரும்கூடக் கொடுக்கும் வழக்கம் உடையவராக மாறினர். சோழன் கொடை மரபினை அறியாதவன் அல்லன். இருப்பினும் சிவன் அடியார்களுக்கு பொருள் வழங்குவது முறையா? எனும் ஐயம் எழலாயிற்று. சோழனின் அறிவுநுட்பம் ஔவையாரைச் சிந்திக்க வைத்தது. “மன்னவ! செல்வத்தைச் சிவனடியார்க்கு வழங்க வேண்டுமோ என்கிறாய்? அவர்கள் அதனைச் சிவகாரியங்களாகிற பொது நன்மைக்கு உதவுகிறவற்றிலேதான் செலவிடுவர். அதனால், அவருக்கு அளிக்கும் கொடை அளவற்ற பலருக்கும் அளித்த கொடையாகிப் பரந்த புகழினை நினக்குத் தருகிறது. இதனை எண்ணினால், அவருக்கு மனமுவந்து வாரி வழங்குதலே செய்ய வேண்டியதாகும் என்பேன்.

**“நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்”**
அடியவர்க்கு நல்குவதே சிறப்புடைய செயலாகும், அடியார் உலக நலம் கருதுபவர். உலகம் உய்வதற்குப் பாடுபடும் உயர்ந்தோருக்கு உதவுவது மிக உயர்வுடையதாகும் என்ற ஔவையாரின் விளக்கம் மிகவும் தெளிவாக இருந்தது.

**அமுதும் அன்பும்**

அறப்பண்பில் தலையாய அறமாக கருதப்படுவது பசித்தவருக்கு உணவளிப்பது. பசித்தீ மிகவும் கொடியது. **“பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்”**

என்பார்கள்.ஆனால் இங்கு அன்புக்கு எளியரான ஔவையார் பசி வந்தவிடத்தும், அறத்திற்கு எதிராக செயல்படும் நிலையினை முன்வைக்கும் இடத்தில்,

**“காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே**
**மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்”**

என்ற வரிகளில் ஐயையோ! அன்பில்லாத நின் மனையாள் இட்ட அமுது அது! அதனைக் காணவும் கண்கள் கூசுகின்றன! கையால் எடுக்கவும் வெட்கமாகின்றது. பெருமை நிறைந்த என் வாயும் திறக்க மாட்டேன் என்கிறது. பயனின்றி என் எலும்பெல்லாம் பற்றி எரிகின்றது'' அன்போடு அளிக்கும் கூழையும் வியந்து உண்டு பாராட்டும் அந்தக் கனிவான உள்ளமும் கனன்றது என்கிறார். வாழ்வியலில் தலையாய அறம் பிறழும் போது அதனை கண்டிக்கும் பான்மையில் வலியுறுத்துகிறார். மேலும் மிகக் கொடியது என்பது “அன்பற்ற மனைவி இடுகின்ற உணவினையும் விருப்பத்துடன் உண்டு உயிர் வாழ்கின்ற ஆடவனின் நிலைமைதான்' என்பதனை நயமாக எடுத்துரைகின்றார்.

**இனியது எது?**

வாழ்வியல் விழுமியங்களில் சிறந்த அறம் பிறருக்கு தீங்கு வராமல் உலக இன்பங்களை பெறுவதாகும்.அத்தகைய இன்பங்களை குறித்து ஔவையார் கூறுமிடத்தில் இன்பம் என்பது அவரவர் மனத்தின் அனுபவமே என்கிறார். ஒருவன் ஒன்றை இன்பமாக நினைக்கலாம். அதனை இன்னொருவன் துன்பமாகக் கருதலாம். இன்ப துன்பங்கள் ஆகிய இரண்டும் கலந்து வருவதே உலக வாழ்க்கை. இவற்றைத் தருவன புலனிச்சைகள். அதனால், புலன்களை ஒடுக்கித் தனிமையாக இருந்து மனத்தைச் செவ்விதான நெறியில் செலுத்தினால், அதுவே இன்பம் எனவும், இன்பதிதல் அடுத்த படிநிலையாக ஔவையார் முன்வைக்குமிடத்தில் இதனை **“ஏகாந்த நிலை”** என்றும் விவரிக்கின்றார்.

மேலும் அறிவினரைச் சேர்ந்து வாழ்வதிலும், அறிவுள்ளவரைக் கனவிலும் நனவிலும் வழிகாட்டுவோராகக் கொண்டு வாழ்வதுமே மிகவும் இனிமையுடையதாக அறிவுறுத்துகிறார். **ஷதூய அறிவினைப் பெறுவதே மனிதனுக்கு இன்பம்**' என்ற கருத்தினை ஔவையார்,

**“அதனினும் இனியது அறிவினர்ச் சேர்தல்**
**அதனினும் இனியது அறிவுள் ளாரைக்**
**கனவினும் நனவினும் காண்பது தானே”.**

என்ற வரிகளில் ‘இனியது எது?' என்பதனைப் பற்றியும் ஔவையார் முருகப் பெருமான் உவக்குமாறு தெளிவுபடுத்துகின்றார்.

**கல்வியின் பயன்!**

பொதுவாக அறன் என்பதற்கு பிறர் மனம் புண்படாதவாறு நடந்துக் கொள்ளுதலே அறம் எனப்படுகிறது. மனிதனிடத்தில் இயல்பாகவே அன்பு இருப்பது போன்று அறிவும் இருக்கிறது. அறிவை வளர்ப்பதற்கான உபாயமாக கல்வி தேவைப்படுகின்றது. உள்ளத்தின் எழுச்சிக்குக் கல்வி முற்றிலும் இன்றியமையாததாக அமைகின்றது. கல்லாதவன் அறமறிய மாட்டாமையால் தவறிழைக்க நேரிடும் எனவே அறம் சிறக்க கல்வி அவசியம். **“அறமே அறிவு, அறிவே அறம்”** எனக் கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானிகளாகிய சாக்கிரடீஸ், பிளாட்டோ போன்றவர்கள் அளித்த வரையறைகளுக்கேற்ப மனிதனுக்குச் செயற்பாட்டு அறிவைத் தந்து அவனைச் செயலறம் பேறும் அறப் பேறறிஞனாக வாழத் துணை “அறிவியல்” என விளக்கம் கூறுவது மரபு என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது (சங்க இலக்கியங்களில் அறக்கருத்துகள் முனைவர். இரா. அனுராதா) இத்தகைய கல்வியின் சிறப்பைத் தனிப்பாடல்கள் என்னும் இலக்கியம் தனிமனித கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றது.

**“கற்க கசடறக் கற்பவை கற்றபின்,**

**நிற்க அதற்குத் தக"**

என்று குறளாசிரியர் கூறுவர். கசடறக் கற்காத கல்வி பயனற்றது. கசடறக் கற்றும் அதற்கிசைய நிற்காதவனின் கல்வியும் பயனற்றது. கல்வியின் இந்த நிலையினை மேலும் நன்கு தெளிவு படுத்துகின்றார் ஔவையார்.

**"எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்**
**பழுதறவா சிப்பரிது பண்பாய் - முழுதுமதைக்**
**கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்**
**நிற்பரிது தானந் நிலை"**

இப்பாடலின் வழி கற்றதன் பயனாக நற்பயனைக் காணுகின்ற தெளிவினைப் பெற்றவர்களே மிகச் சிறந்தவர்கள். அவர்கள் நிலையில் தளராது நிலைபெறும் உறுதித் தன்மையினையும் பெறுதல் வேண்டும். இங்ஙனம் நிலையினிற் பிறழாது அவர் உறுதியாக நிற்பாரானால், அதுவே கல்வியின் பயனை அடைந்ததாகும் எனச் சாலச் சிறந்த கல்வி அறத்தினைப் போதிக்கின்றார் ஔவை பிராட்டியார்.

**தொகுப்புரை**

- அறச் செயல்களையே தமிழர்கள் தங்கள் வாழ்வியல் விழுமியங்களாக கொண்டிருந்தனர். மக்கள் தவறான வழிக்குச் செல்லாது நல்ல வாழ்க்கை வாழவும் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவும் ஔவையாரின் இலக்கியத்தில் பல அறக்காட்பாடுகள் கூறப்பட்டுள்ளன.
- வாழ்வியல் என்ற அடிப்படையில் தனிமனிதனுக்குச் சொல்லப்படும் கருத்துக்கள் யாவும் சமுதாயத்திற்கும் பொருந்துகின்றன. அதே போன்று சமுதாயத்திற்குச் சொல்லப்படும் கருத்துக்கள் யாவும் தனிமனிதனுக்குப் பொருந்துகின்றன. அற வாழ்க்கையை பொருத்தமட்டில் ஈதல் அவனை சூழ்ந்திருக்கும் சமுகத்திற்கும் கொண்டு சேர்க்கும் பெரும் அறம் என்பது திண்ணம்.
- பண்டைத் தமிழ்ச் சமூகம் கல்வியை அனைவருக்கும் பொதுவுடைமையாகக் கருதியது. கற்றவர் பெரிதும் போற்றப்பட்டனர். இழிந்த இனத்தில் பிறந்தவராயினும், வயதில் இளையவனாயினும் கற்றவனேனுயர்ந்தவனாக ஏற்கப்பட்டான். எனவே எவ்வாறாயினும் கற்றல் வேண்டும் என்ற உறுதி மக்களிடம் இருந்ததை பழந் தமிழ் நூல்கள் சான்றாக அமைகின்றன''.(தமிழ் இலக்கிய அறிமுகம், முனைவர் பெ.சுயம்பு)

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர் *2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நீதி இலக்கியங்களில் - புறங் கூறாமை

**திரு அ.மகேஸ்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
து.ர்.யு. அகர்சன் கல்லூரி
மாதவரம்,
சென்னை – 60

**முன்னுரை**

மனிதனின் வாழ்க்கையில் அன்பு, அறம், இரக்கம், ஈகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்தல் சிறப்பு. அறத்துடன் வாழ்பவன் சிறந்தப் புகழினை அடைவான். உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் புரிதல் என்ற ஒன்று இருத்தல் அவசியமாகின்றது. மனிதனுக்குப் புரிதலே சிறந்த அறத்திற்கு வழிவகுக்கின்றது. குழந்தைகள் பெற்றோரைப் புரிந்து கொள்ளுதல், மாணவர்கள் ஆசிரியரைப் புரிந்து நடத்தல், சிறியோர் பெரியோர்களின் அனுபவங்களை ஏற்று நடத்தல், கணவன் மனைவியைப் புரிந்து நடத்தல், மனைவி கணவனைப் புரிந்து நடத்தல் ஆகிய வழிகளில் நடப்பவன் துன்பத்தில் விலகி இன்பத்தில் தவழ அறம் வகை செய்கின்றது. புரிதல் இல்லாதவன் புறங்கூறலுக்கு ஆளாகுவான் என்பது திண்ணம். ஒருவன் நல் முறையில் வாழ்ந்தால் அவனைக்கண்டு பொறாமைக் கொள்ளும் மனிதர்கள் புறங்கூறும் நிலைக்கு ஆளாக்கி விடுகின்றன. புறங்கூறாமைப் பற்றி பல்வேறு இலக்கியங்கள் எடுத்துரைப்பினும் நீதி இலக்கியங்கள் திறம்பட எடுத்துரைப்பதை இக்கட்டுரையின் வாயிலாக காண்போம்.

**புறங்கூறாமை**

ஒருவரைப் பற்றிப் புரிந்து கொள்ளாதவரே புறம்கூறுவர். ‘ஒருவரைக் காணாதவழி பிறரை இகழ்ந்துரையாமை’ என்று பரிமேலகர் குறிப்பிடுகின்றார். ‘ஒருவர் குற்றத்தையும் புறம் சொல்லாமை’ என்பர் பரிதி. ‘யாவரையும் இகழ்ச்சியானவற்றைப் புறத்து உரையாமை’ என்பர் மணக்குடவர். புறங்கூறுதல் என்பது கொலைக்கு நிகரான குற்றமாகப் பண்டைய மக்களால் கருதப்பட்டது. எனவே புறங்கூறுதல் மனிதனின் வாழ்க்கையைச் செல்லறித்துவிடும். வாழ்வில் புகழ்ந்துரைப்பவனே பின்னாளில் இகழ்ந்துரைப்பவனாக விளங்குகிறான். இதற்குக் காரணம் தெளிவான புரிதல் இல்லாமையே ஆகும். புரிதல் இல்லாத நட்பு பிரிவுக்கு காரணமாகிறது. **உலகப் பொதுமறை** என்று போற்றும் திருக்குறளில் புறங்கூறாமைப் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அறம், பொருள், இன்பம், வீடு பற்றிக் குறிப்பிடும் திருவள்ளுவர், இதனைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் கூறுகையில் புறங்கூறாமை இருத்தல் சிறப்பு என்றுக் குறிப்பிடுகிறார்.

**‘அறம்கூறான், அல்ல செயினும் ஒருவன்**
**புறம்கூறான் என்றல் இனிது’** (குறள் : 181)

இக்குறட்பாவில், அறவழியில் நடக்காது இருத்தலும், அறத்திற்கு மறுதலையாக நடத்தலும் ஒருவனிடம் இருப்பினும் அவன் மற்றவர் பற்றிப் புறங்கூறாது இருத்தல்

இனிமையானது ஆகும் என்று குறிப்பிடுகிறார். புறங்கூறாதவரின் வாழ்க்கை இன்பமாய் அமையும் என்பது இக்குறட்பாவின் கருத்தாகும். மேலும்,

**‘புறம்கூறிப், பொய்த்து உயிர்வாழ்தலின், சாதல்**
**அறம்கூறும் ஆக்கம் தரும்’ (குறள் : 183)**

இக்குறட்பாவில் புறம்பேசிப் பொய் வாழ்க்கை வாழ்வதைவிடச் செத்துப் போதல் நன்று என்றுக் குறிப்பிடுகின்றார், அறநூல்கள் என்றும் ஆக்கத்தைக் கொடுக்கும் என்பதை இக்குறளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும்,

**‘பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பு ஆடல் தேற்றாதவர்’ (குறள் : 187)**

புறம் பேசும் கொடியவர்கள் நெருக்கமாக இணைந்திருக்கும் நண்பர்களையும், பிரித்துவிடுவர். இவர்கள் கூடி மகிழுமாறு நண்பர்கள் இடையே பேசி நட்பை வளரக்காதவர் ஆவர். இக்குறட்பாக்களின் வாயிலாக புறங்கூறுபவன் அறத்தைக் கற்றுக்கொள்ளாத மூடர்களாக வாழ்கின்றனர் என்பது அறியலாகின்றது.

**குற்றம் காண்போரும் காணாரும்**

ஒரு மனிதனின் மிககொடிய பழக்கம் பிறர் மீது குற்றம் காண்பது. புறங்கூறும் மாக்களிடம் இத்தகைய பண்பு காணப்படுகிறது. எத்தகைய அறியவகை நூல்களைக் கற்றுத் தேர்ந்த போதிலும், அவன் பிறர் மீது புறங்கூறும் பாங்கினைப் பெற்றிருந்தால் அவன் கல்லாதவனாவேப் போற்றப்படுவான் என்று புறங்கூறுபவர்களையும், அதனை எதிர் கொள்பவர்களையும் பற்றி நாலடியார் பின்வரும் பாடல்களில் உணர்த்துகின்றது.

**‘இற்பிறப்பு இல்லா எனைத்து நூல் கற்பினும்,**
**சொல் பிறரைக் காக்கும் கருவியரோ? இப்பிறந்த**
**நல் அறிவாளர், நவின்ற நூல் தேற்றாதார்**
**புல்லறிவு தாம் அறிவது இல்’ (நாலடியார் : 32, அவையறிதல் : 10)**

இப்பாடலில், நற்குடியில் பிறக்காதவர் எத்தனை நூல்களைக் கற்றபோதிலும், மற்றவர் மேல் குற்றம் கூறுதலை நிறுத்த மாட்டார். நற்குடியில் பிறந்த நல்லோர் நல்ல நூலை தெளிவுப்படக் கல்லாமல் பொழிவில் புலப்படுத்தும் புல்லறிவை மற்றவர் காணா இகழ்ந்துரையார். அவர்தம் அறியாமையை அறிந்திருந்தாலும் அறியாதவர் போல இருப்பர் என்று குறிப்பிடுகின்றார்.

**பேதையின் நாக்கு**

பிறரைப் பற்றிப் புறங்கூறும் மனப்போக்கு பேதைக்கு உண்டு என்பதை நாலடியார் பின்வரும் பாடலில் புலப்படுத்துகிறது.

**‘பெறுவது ஒன் இன்றியும், பெற்றானே போலக்**
**கறுவுகொண்டு, ஏலாதார் மாட்டும், கறுவினால்**
**கோத்து இன்னா கூறி உரையாக்கல், பேதைக்கு**
**நாத் தின்னும், நல்ல சுனைத்து’ (நாலடியார் : 34, பேதைமை :5)**

பெறத்தக்க பயன் ஒன்றுமே இல்லை என்றுத் தெரிந்தும், புறம் பேசுபவர் ஏதே பயனைப் பெற்றவர் போல் வலிய மற்றவரிடம் சண்டைக்குச் சென்று சினந்து திட்டுவர். அவ்வாறு திட்டாமல் இருக்கவே முடியாது. மற்றவர் பற்றிக் குற்றம் பேசாமல் இருப்பின் பேதையின் நாக்கே தினவு எடுத்துத் தின்றுவிடும் என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

**முகத்தில் ஒன்று முதுகில் ஒன்று**

வாழும் வாழ்க்கையை நேர்மையாகவும், உண்மையாகவும் வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துதே அற இலக்கியங்கள் என்பதை பெரியோர்களின் முதுமொழிக் களஞ்சியமாக விளங்கும் பழமொழி நானூற்றில் பெருவாயின்

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

முள்ளியார் குறிப்பிடும் அறச்சிந்தனைகளைப் பின்வரும் பாடலில் காணமுடிகின்றது.

**‘தாக்குற்ற போழ்தில் தமரேபோல் நன்கு உரைத்து**
**போக்குற்ற போழ்தில் புறன் அழீஇ, மேன்மைக்கண்**
**நோக்கு அற்றவரைப் பழித்தல் என்? ஏன்னானும்**
**மூக்கு அற்றதற்கு இல், பழி.’** (பழமொழி – 250)

மூக்கு அறுபட்டதை யாருக்கும் தெரிவிக்க வேண்டாம், பார்க்கும் அனைவர்க்கும் அது வெளிப்படையாகத் தெரியும். அதுபோல மேன்மை நோக்கு இல்லாத தீயோரை எல்லார்க்கும் தெரியும். வீணே அத்தகு தீயோரை நேரில் சந்திக்கும் போது தமக்கு வேண்டியவர்போல புகழ்ந்துபேசி அவர் அவ்விடத்தை விட்டுப் போனபிறகு இகழ்ந்து மாட்டிக் கொள்வர் என்று குறிப்பிடுகின்றார்

**குறைக் கூறா நிறை**

வாழும் காலத்தை நன்குணர்ந்து வாழவேண்டும் அதுபோல நம்மையும் நம்மை சுற்றியுள்ள நண்பர்களையும் புரிந்து கொண்டு வாழவேண்டும். காலத்தின் சூழ்நிலை ஒரு மனிதனை குற்றவாளியாக மாற்றலாம். அவனை அத்துன்பத்திலிருந்து விடுவிக்க முற்சிக்க வேண்டுமே அன்றி அவரின் செயல்களுக்கு குற்றம் காண்பது என்பது மனித மாண்பு அல்ல என்பதை பழமொழி நானூறு பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றது.

**‘நிலைஇய பண்பு இலார் நேர் அல்லர் என்று, ஒன்று**
**உளைய உரையாது, உறுதியே கொள்க!**
**வளை ஒலி ஐம்பாலாய்! வாங்கியிருந்து**
**தொளை எண்ணார், அப்பம் தின்பார்.’** (பழமொழி – 253)

ஒலிக்கின்ற வயல்களையும் அகாகச் சீவி முடித்த சடையையும் உடைய பெண்ணே! பசி நேர்ந்த இடத்து வேண்டாதவர் பசி கருதிக் கொடுத்த அப்பத்தைப் பெற்று, உடன் அதை ருசித்தும், கொடுத்தவரைப் பாராட்டியும் உண்ண வேண்டுமே தவிர, அப்பத்தில் எத்தனைத் துளைகள் உள்ளன என்று எண்ணிப் பார்த்துக் குறைச் சொல்லுதல் கூடாது. அதுபோல பயனுக்காக ஒருபொருளைத் தேடிச் சென்று ஒருவரிடம் இருந்து பெற்று அப்பொருளால் பயன்கொள்ள வேண்டுமே தவிர, பொருளைக் கொடுத்த அவர் நிலையில்லாதவர், பண்பில்லாதவர், நேர்மையில்லாதவர் என்று அவர்தம் மனம் வருந்தும்படி பேசி நடக்க வேண்டிய காரியத்தைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது என்று கூறுகின்றது.

**அடக்கமுடைமை**

அறத்தின் பண்பு அடக்கமுடமை என்று குறிப்பிடுவர். அடக்கத்துடன் வாழ்பவன் அறத்தின் வழி நடப்பர் என்று சொன்னால் மிகையாகாது. பழகும் பழக்கத்தை எண்ணிப் பெருமைக் கொள்ள வேண்டும். பழகிய பழக்கத்தைக் குறைக்கூறும் மானிடர்களிடம் அறம் செழித்து ஓங்காது என்பதை இனிவை நாற்பதில் பூதஞ்சேந்தனார் குறிப்பிட்டுள்ளார்.

**‘நட்டார் புறங்கூறான் வாழ்தல் நனி இனிதே**
**பட்டாங்கு பேணிப் பணிந்து ஒழுகல் முன் இனிதே**
**முட்டு இல் பெரும் பொருள் ஆக்கியக்கால், மற்றுஅது**
**தக்குழி ஈதல் இனிது’** (இனியவை நாற்பது : 19)

இப்பாடலில், நண்பர்களைப் பற்றி புறம் பேசாதிருத்தல் இனியது. சத்தியத்தைப் பேணி அடங்கி நடத்தல் இனியது. செல்வம் சேர்த்தல் இனிது. சேர்த்த செல்வத்தைத் தக்கவர்க்கு வழங்குதல் இனியது என்றுக் குறிப்பிடுகிறது.

**நல்லொழுக்கம்**

மனிதனின் அறச்செயல்களை நல்லொழுக்கம் என்று குறிப்பிடலாம். கல்வி கற்றவன் சென்ற இடமெல்லாம் சிறப்பு பெறுவான் என்பது போல நல்லொழுக்கம் உடையவர் எத்திசைக்குச் சென்றாலும் புகழினைப் பெறுவான் என்பதை அற இலக்கியங்கள் உணர்த்துகின்றன. நல்லொழுக்கங்களைப் பற்றி நீதி நூலான நாண்மணிக்கடிகையில், விளம்பி நாகனார் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் மனிதன் கடைபிடிக்கும் நல்லொழுக்கத்தைப் பற்றி சிறப்பித்திருப்பதை அறியமுடிகிறது.

**‘திரு ஒக்கும், தீதுஇல் ஒழுக்கம், பெரிய**
**அறன் ஒக்கும், ஆற்றின் ஒழுகல், பிறனைக்**
**கொலை ஒக்கும், கொண்டு கண்மாறல், புலை ஒக்கும்**
**போற்றாதார் முன்னர்ச் செலவு’ (நான்மணிக்கடிகை : 06)**

ஒருவரிடம் உள்ள நல்லொழுக்கமே செல்வமாகும். நெறியுடன் வாழ்தல் பெரும் அறச்செயல்கள் ஆகும். ஒருவனைப் பற்றிப் புறம் கூறுதல் அவனையே கொலைச் செய்தல் ஆகும். முதியாதார் வாசலை மிதிப்பது இழிவான வாழ்வை வாழ்பவன் என்றுக் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

வாழும் வாழ்க்கையை அறத்துடன் வாழவேண்டும் என்று பண்டைய இலக்கியங்கள் நெறிப்படுத்தினாலும், இத்தகைய செயல்களைச் செய்தால் இத்தகையத் துன்பம் வரும் என்று மையமிட்டுக் காட்டுவது அற இலக்கியங்களாகும். புரிதல் இல்லாத வாழ்க்கை துன்ப வாழ்க்கை என்பதை மேற்கண்ட பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றது. பழகிய பழக்கத்தை பொருட்படுத்தாமல் குறைக்கூறும் மனிதர்களை நெறிப்படுத்தும் விதமாக இப்பாடல்கள் காணப்படுகின்றன. எனவே இக்கட்டுரையின் வாயிலாக திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, பழமொழி நானூறு ஆகிய நூல்களில் காணப்பட்ட பாடல்களில் புறங்கூறும் மனிதர்களையும், அவர்கள் தங்களை நல்வழிப்படுத்திக்கொள்ளும் விதத்தினை எடுத்துரைக்கும் விதத்தினைப் பற்றித் தெளிவுப்படுத்துவதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX,* பதிப்பு *22,* ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நீதி இலக்கியங்களில் - புறங் கூறாமை

**திரு அ.மகேஸ்**

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# கலித்தொகையில் வாழ்வியல் அறங்கள்

**முனைவர் ஆ.மனோகரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஜேப்பியார் தொழில் நுட்பக்கல்லூரி (தன்னாட்சி)
குண்ணம், திருப்பெரும்புதூர்,
சென்னை

## முன்னுரை

உலக மொழிகளில் மூத்த மொழியாக விளங்கும் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலக்கண, இலக்கிய வளமுடைய மொழியாகத் திகழ்கிறது. இம்மொழி திராவிட மொழிக்குடும்பத்தின் தாயாகவும் விளங்குகிறது. பாண்டிய மன்னர்களால் முச்சங்கங்கள் வைத்து வளர்த்த காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுப்பே சங்க இலக்கியம் எனப்படுகிறது. அவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். சங்க இலக்கிய பாடல்கள் அனைத்தும் அக்கால மக்களின் வாழ்வியல் கூறுகளையும், ஆட்சி அதிகாரத்தையும், அறநெறிகளையும் உணர்த்துவனவாக உள்ளன. பழந்தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர். இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர். உலகமே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர். சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலமே சங்ககாலம். இக்காலத்தில் தோன்றிய சங்க இலக்கியங்களுள் ஒன்றான “கற்றறிந்தார் ஏத்தும் கலி” என சான்றோர்களால் போற்றப்படும் “கலித்தொகையில் வாழ்வியல் அறங்கள்” என்னும் தலைப்பில் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

## கலித்தொகை

கலி என்னும் சொல்லுக்குக் களிப்பு, களிப்பின் பெருக்கு, செருக்கு, ஆரவாரம் முதலிய எழுச்சி நிலைகளை உணர்த்துகிறது. (தமிழ் லெக்சிகன், தொகுதி – 2, பக். 227). கலிப்பாவினால் ஆன பாடல்களைக் கொண்டது கலித்தொகை ஆகும். கலித்தொகை பாவகையால் பெயர்பெற்றது. கலித்தொகையில் பாலைத் திணையில் 35 பாடல்களும், குறிஞ்சித் திணையில் 29 பாடல்களும், மருதத் திணையில் 35 பாடல்களும், முல்லைத் திணையில் 17 பாடல்களும், நெய்தல் திணையில் 33 பாடல்களும், கடவுள் வாழ்த்து 1 பாடலும் ஆக ஐந்து திணைகளிலும் 150 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த 150 பாடல்களையும் தொகுத்துத் திணைவழிப் பிரித்தவர் நல்லந்துவனார் என்னும் புலவராவார். ஐந்திணைகளையும் ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர். பாலைத் திணையைப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ, குறிஞ்சித் திணையைப் பாடியவர் கபிலர், மருதத் திணையைப் பாடியவர் மருதனிளநாகனார், முல்லைத் திணையைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன், நெய்தல் திணையைப் பாடியவர் நல்லந்துவனார். கலித்தொகையின் முதல் பதிப்பு 1887 ஆம் ஆண்டில் வெளிவந்ததாகும். இதனை வெளியிட்டவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. இவ்வெளியீடு நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியதாகும்.

**அறம் – விளக்கம்**

'அற' என்ற வினைச் சொல்லின் அடியாகப் பிறந்ததே 'அறம்' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் அல்லது ஒழுக்கநெறி (ஆழசயடவைல) சொல்லிற்கு, மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே எனலாம். அறம் என்ற சொல்லிற்கு ஆங்கிலத்தில் நுவாறைஉள என்று பொருள். அறம் என்ற சொல்லிற்கு நேர்மை, உண்மை, கடமை, கற்பு, புண்ணியம், உதவி, தர்மம் என்னும் பல பொருள் உண்டு.

**கலித்தொகையில் வாழ்வியல் அறங்கள்**

தமிழர் காதலையும் வீரத்தையும் தம்மிரு கண்களாகப் போற்றினர். காதல் உணர்வை அகம் என்றும், வீரத்தைப் புறம் என்றும் பிரித்தனர். அகவாழ்விலும் புறவாழ்விலும் அறநெறியில் தமது வாழ்க்கையை நடத்தினர். அறத்தினை அக அறம், புற அறம் என்றும் புற அறத்தினைப் போர் அறம், சமுதாய அறம் என்றும் பிரித்தனர். ஆணும் பெண்ணும் காதல் உணர்வு கொண்டு இன்புற்று வாழும் வாழ்வு 'அகம்' எனப்பட்டது. இதனை சான்றோர் அகத்திணை என்று கூறுவர். அகத்திணை மாந்தர்களான தலைவன், தலைவி, தோழி, செவிலி, தந்தை, தமையன் ஆகியோர் அறஒழுக்கத்தோடு வாழ்ந்தனர். மாந்தன் வாழ்வின் உயர்ந்த உறுதிப் பொருளான முப்பொருளும் அறத்தின் வழியில் இயங்குவன என்ற கருத்தைச்' சிறப்புடைய மரபில் பொருளும் இன்பமும் அறத்துவழிப் படுஉம் தோற்றம் போல' என்று புறநானூற்றுப் பாடலில் (பாடல்.31) விளக்கப்பட்டு இருக்கிறது. இவ்வாறு தமிழர்களின் அகவொழுக்கத்தைப் பற்றி விளக்கும் கலித்தொகையில் அறக் கருத்துக்கள் பல உள்ளன. மனிதன் வாழ்வு செம்மையாக அமையக் கலித்தொகை காட்டும் வாழ்வியல் அறநெறிகளை இங்கே காணலாம்.

**குடும்பம் – இல்லறம்**

சமூக அமைப்பிற்கு அடிப்படையாகத் திகழ்வது குடும்பமே. ஓர் ஆணும் பெண்ணும் பெரியோர்களால் வகுக்கப்பட்ட அறநெறியில் இணைந்து வாழும் வாழ்க்கையே இல்லறம் எனப்பட்டது. அந்த இல்லறம் நல்லறமாக அமைவதை உறுதி செய்யச் சில கோட்பாடுகள் தமிழர்களால் தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**கணவன் - மனைவி இணைந்திருத்தல்**

கணவனும் மனைவியும் காலந்தோறும் இணைபிரியாது வாழ்தலே அறம் எனக் கொண்டனர் பண்டையத் தமிழர்கள். கொடுமையிலும் கணவனைப் பிரியாது இருப்பதே கற்புடைய மகளிருக்கு அழகு எனக் கூறித் தன் வேண்டுகோளைத் தலைவனிடம் வலியுறுத்துகிறாள். இதனை,

**"ஒன்றன் கூறுடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை" (பா.கலி.18)**

உயிரோடு உள்ள வரையில் ஒரு கையால் கணவனைத் தழுவிக் கொண்டு, மற்றொரு கையால் கூறுபட்டுக் கிடக்கும் ஆடையை உடுத்திக் கொள்ளும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்பதை பாலைக்கலி பாடல் அடிகள் மூலம் அறியமுடிகிறது.

**ஒருவனுக்கு ஒருத்தி**

கடலைப் போன்ற உலகத்தையே பெற்றாலும் அறநெறியில் செல்லும் ஆய மகளுக்கு இருமணம் என்பது குடி மரபுக்கே பழக்கம் அல்ல. அவ்வாறு நேர்ந்தால் குடிமரபு சிதைந்துவிடும் என்று கூறுகிறாள். மேலும், எனக்கு ஏற்கனவே திருமணம்

ஆகிவிட்டது. இதனை அறியாமல் என் பெற்றோர் மற்றொரு திருமணப் பேச்சு எடுக்கின்றனர் என்று கூறுகிறாள். இதனைத்

**“திருநுதல் ஆயத்தாள் தம்முள் புணர்ந்த**
**ஒருமணம் தான் அறியும்**
**அருநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இல்இயல்பு அன்றே” (கலி. 115)**

இப்பாடலின் மூலம் ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்வது இல்வாழ்வின் இயல்பு ஆகும் என்பதை அறியமுடிகிறது.

**ஈகை**

பண்டையத் தமிழர்கள் தங்களைத் தேடி வந்த மக்களை நன்கு உபசரித்தனர். பொருளில்லை என்று தங்களிடம் வருவோருக்கு உள்ளதை வாரி வழங்குவர். ஈகையின் இன்றியமையாமையைப் பாராட்டாத அறநூல்களே இல்லை எனலாம்.

**“ஈதலில் குறைகாட்டாது அறனறிந்து ஒழுகிய**
**தீதிலான் செல்வம்போல் தீங்கரைமரம் தந்த” (பா.கலி.27)**

ஈதலில் குறையாது அறவழியில் நடப்பவனின் செல்வம் வளரும் என்பதை இப்பாடல் அடிகள் உணர்த்துகிறது. மேலும்,

**“ஈதல் இரந்தார்க்கு ஒன்றாற்றாது வாழ்தலின்**
**சாதலும் கூடுமாம் மற்று ‘’ (குறி.கலி. 25)**

புற இலக்கியங்களில் மட்டுமின்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

**மன்னனின் நீதி**

சங்ககால மக்களிடையே அறத்தினை வளர்க்கும் பொருட்டு மன்னன் நீதி வழங்கும் முறையினைக் கலித்தொகையில் பாடப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

**ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ**
**ஓர்வுஉற்று ஒருதிறம் ஒல்காத நேர்கோல்**
**அறம்புரி நெஞ்சத்தவன் ‘’ ( குறிஞ்சிக்கலி.6)**

மன்னன் நீதி வழங்கும் தன்மை அறம் சார்ந்ததாக இருப்பதை இப்பாடல் அடிகள் சுட்டுகின்றன.

**தாய்மையின் அறம்**

அறநெறிகளை பொதுவில் சுட்டுவது மட்டுமின்றி ஒரு தாய் தன் மகனுக்கு அறத்தைப் போதிப்பது போன்று மருதக்கலிப் பாடல் காட்சி ஒன்று அமைந்துள்ளது. அப்பாடலில் தன் கணவனைப் போன்று தோற்றப் பொலிவுடன் விளங்கும் தன் மகனை அணைத்துப் பாராட்டும் தாய் ஒருத்தி, நல்ல செயல்கள் செய்வதில் அவன் தன் தந்தையைப் போன்று விளங்க வேண்டும் என்றும், கொண்ட மனைவியை அவன் விட்டுச் செல்லக் கூடாது என்றும் வேண்டுகிறாள். இதனை,

**“செம்மால் வனப்பெல்லாம் நுந்தையை ஒப்பினும் நுந்தை**
**மகன் அல்லான் பெற்ற மகன்” (மரு.கலி. 21)**

இப்பாடலில் தாயானவள், தோற்றத்திலும் அழகிலும் நீ உன் தந்தையைப் போன்றே விளங்கினாலும் உன் தந்தை கொண்டிருக்கும் குணங்களில் சிலவற்றையே நீ கொண்டு விளங்கிட வேண்டும். பகைவர்களை வெற்றி பெறுவதில் உன் தந்தையைப் போன்றே விளங்க வேண்டும். உன் தந்தை நீதி வழுவாது விளங்குவது போன்று நீயும் திகழ்ந்திட வேண்டும். மனைவியைக்

கைவிட்டுப் பரத்தமை கொள்வதில் நீ உன் தந்தையைப் போல் இருத்தல் கூடாது. உயர்ந்த பொருள்களைப் பிறருக்கு வழங்கி மகிழ்வதில் நீ உன் தந்தையைப் போன்று விளங்குவாயாக என்றெல்லாம் தன் சிறு மகனுக்கு அறிவுரை மற்றும் அறநெறி கூறுகிறாள்.

**தோழி தன் தாயிடம் அறத்தொடு நிற்றல்**

தலைவன் பெண் கேட்கச் செல்லும்போது பெண் வீட்டார் பெண் கொடுக்க மறுக்கின்றனர். இதை அறிந்த தோழி, தலைவியின் களவு வாழ்க்கையையும், தலைவனின் நேர்மை மற்றும் சிறப்பையும், இத்தலைவனை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஏற்படும் தீங்கினையும் தோழி தன் தாயிடம்,

**"சிறுகுடி யீரே சிறுகுடி யீரே**
**வள்ளகீழ் விழாவரை மிசைத்தேன் தொடா**
**கொல்லை குரல்வாங்கி ஈனாமலை வாழ்நாள்**
**அல்ல புரிந்து ஒழுகலான்" (குறி.கலி. 3)**

என்று தோழி அறத்தொடு நிற்றலைத் தன் தாயிடம் எடுத்துரைக்கிறாள்.

**உதவி**

மனித உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் உணர்ச்சிகளுள் நன்றியும் ஒன்றாகும். நன்றி என்னும் சொல் சங்க இலக்கியத்தில் நன்மை, உதவி, அறம் என்னும் பொருள்களில் கையாளப்பட்டுள்ளது. கலித்தொகை காலத்தினால் செய்யவல்ல உதவியின் மேன்மையை எடுத்துரைக்கிறது. ஒருவருக்குச் செல்வம் இருக்கும்போது உடனிருந்து உதவுவதைவிடவும் செல்வம் இல்லாத போது உதவுவதே சிறந்தது என்னும் அறநெறி கூறப்பட்டுள்ளது.

**"செல்வத்துள் சேர்ந்து அவர்வளன் உண்டு மற்றவர்**
**ஒல்கிடத்து உலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்"( பா.க.24 )**

ஒருவர் செல்வச் செழிப்பாக வாழும் காலத்தில் அவரோடு சேர்ந்திருந்து அவர் வளத்தை உண்டு வாழ்ந்துவிட்டு அவர் வறுமையுற்ற காலத்தில் அவருக்கு எவ்வித உதவியும் செய்யாதவர்கள் சிறியோர் எனவும் விளக்கப்பட்டுள்ளதன் வாயிலாகக் காலத்தினால் செய்த உதவியினைச் சிறந்த அறமாகக் கருதலாம்.

**"பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல்**
**சான்றவர்க்கு எல்லாம் கடன்" (கலி. 139)**

என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, பிறருக்கு உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

**விருந்தோம்பல்**

முன்பின் அறியாதவர்கள் இல்லறம் வரும்பொழுது அவர்களை உபசரிப்பது விருந்தோம்பல் ஆகும். இல்லற மகளிர்க்கு இன்றியமையாத பண்புகளுள் ஒன்றாக விருந்தோம்பல் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது. விருந்தோம்பலைப் பேணுதல் இல்லறத்தில் கணவன் – மனைவி இருவராலும் போற்ற வேண்டிய அறநெறியாகும். செல்வத்தைவிடவும் விலைமதிப்பற்ற செல்வமாக விருந்தோம்பல் கருதப்படுகிறது. எத்தகைய சூழலிலும் விருந்தோம்பலைத் தவறாது கடைபிடித்தனர் என்பதையும் கலித்தொகையில் அறியலாம். இதனைத் தலைவி மனையிலிருக்கப் பரத்தையருடன் கூடியிருந்து விட்டுப் பின்னர் வீடு திரும்பும் தலைவன் தன்னுடன் விருந்தினரையும் அழைத்து வருவதையும் காணலாம். இங்ஙனம் விருந்தினரை அழைத்து வருவதால் மனைவியானவள் அவனோடு ஊடல் கொள்ள முடியாது. வரும் விருந்தினர்களை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் கவனம் கொண்டு கணவனின் தவறான செயலை மறந்துவிடுகிறாள். இதனை,

**"விருந்து எதிர்கொள்ளவும் பொய்ச்சூள் அஞ்சவும்**
**அறம்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்**

**மாய மகிழ்நன் பரத்தமை நோவேன்''** (மரு.கலி. 10)

இப்பாடல் அடிகள் மூலம் விருந்தினரை உபசரித்தல் பேரறமாகவே போற்றப்பட்டு வருகிறது.

**வாய்மை**

தலைவன் அறம் இல்லாத செயல்களைச் செய்பவனாயின் அவனுக்கு அவனது குடிப்பெருமையையும் அவனது ஊர்ப்பெருமையையும் இழக்க நேரிடும். அரசனின் பேச்சு வாய்மையாக இருந்தால்தான் குடிமக்களின் பொய்களைத் தண்டிக்க முடியும். வாய்மை இல்லாத அரசனின் பேச்சை மக்கள் கேட்க மாட்டார்கள். அதனால் வாய்மை இல்லாத செயல்களைச் செய்ய வேண்டாம் என்பதைப் பின்வரும் பாடலால் உணரலாம்.

**"ஆய்மலர்ப் புன்னைக்கீழ் அணிநலன் தோற்றாளை**
**நோய்மலி நிலையளா துறப்பாயன் மற்றுநின்**
**வாய்மைக்கண் பெரியதேர் வஞ்சமாய்க் கிடவாதோ '' (நெ.க.18)**

வாய்மை இல்லாத அறம் அறமாகக் கருதப்படாது என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

**அரசியல் அறம்**

தனிமனிதனின் பண்பு அவனையும் அவனைச் சார்ந்தோரையும் வாழ்விக்கும். ஆனால், நாடாளும் வேந்தனின் பண்பும் செயல்களும் நாடு முழுவதையும் பாதிக்கவல்லன. நாட்டு மக்களின் நிலைகருதி அவன் ஆட்சி அமைய வேண்டும். அருளோடும் அன்போடும் குழந்தையைக் காக்கும் தாய்போல் அரசன் மக்களைக் காக்க வேண்டும்.

**"நல்லற நெறீஇ உலகாண்ட அரசன்'' (நெய்.கலி. 12)**

என்ற தலைவி கூற்றின் வாயிலாகச் செங்கோல் அரசன் ஆட்சிக் காலத்தில் மக்கள் துன்பமின்றி வாழ்ந்தனர் என்பது விளங்கும். செங்கோல் மன்னனிடம் நயனும் வாய்மையும் நடுவுநிலைமையும் கூடவே இருக்கும். செங்கோல் மன்னனின் சிறப்பை,

**"நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்**
**இவனில் தோன்றிய இவையென இறங்கப்**
**புரைதவ நாடிப் பொய்புத் தினிதாண்ட அரசன்'' ( நெய்.கலி.13 )**

என்ற பாடல் அடிகள் மூலம் நாடாளும் வேந்தனின் அரசியல் அறநெறிகளை அறியமுடிகிறது.

**காத்தோம்பல்**

குழந்தையைப் பார்த்ததும் தாய் பால்சுரந்து கொடுப்பது போலவும், தன்னை வேண்டின பொழுது பெய்து உலகைக் காக்கும் மழையைப்போல உரிய நேரத்தில் காப்பவன் என்பதனால் அரசனின் காத்தோம்பல் பண்பு புலப்படுகிறது. இதனை,

**"குழவியைப் பார்த்தூறு உம்தாய்போல் உலகத்து**
**மழைசுரந்து அளித்து ஓம்பு'' (மரு.கலி. 34)**

என்ற உவமையின் வாயிலாக மன்னன் மக்களைப் பாதுகாத்து உபசரிக்கும் பண்பு வெளிப்படுகிறது.

**அறநெறிகளின் ஒட்டுமொத்த சாரம்**

கலித்தொகையில் குறிப்பிடப்பெறும் அறநெறிகளின் ஒட்டுமொத்தச் சாரமாக பின்வரும் பாடல் விளங்குகிறது.

**ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்**
**அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை**

**அறிவு எனப்படுவது பேதையர்சொல் நோன்றல்**
**செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை**
**நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை**
**முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வௌவல்**
**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் ’’ (நெ.க.16)**

இப்பாடலின்வழி, ஆற்றுதல் எனப்படுவது வறுமையில் உழல்பவர்களுக்குத் தம்மால் முடிந்ததைக் கொடுத்து உதவுவதே ஆகும். போற்றுதல் என்பது உண்மைப் பொருளோடு கூடி மகிழ்ந்தவரைப் பிரியாதிருத்தலாகும். பண்பு எனப்படுவது பொருளானது உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதாகும். அன்பு என்பது தன் சுற்றத்தாரோடு இணைந்து வாழ்தலைக் குறிக்கும். அறிவு எனப்படுவது அறிவற்றவர்கள் தம்மைப் பார்த்துப் பேசுகின்ற அவச் சொற்களையும் தாங்கிக் கொள்வதாகும். உறவு எனப்படுவது கூறியது எதையும் எந்த நிலையிலும் மறவாதிருந்து அறத்தின்வழி நடப்பது. நிறை எனப்படுவது மறைவாகக் காக்கப்பட வேண்டியவற்றை எல்லாம் எந்த நிலையிலும் காத்துப் போற்றுவதாகும். முறை என்பது தவறு செய்தவர்கள் உறவினர்களாகக்கூட இருந்தாலும் அவர்கள் செய்த தவறுகளைக் கண்டிப்பது. பொறை என்பது தன்னை இழித்துரைப்பவர்களிடமும் சினம் கொள்ளாது பொறுமையுடன் இருப்பதாகும். இவ்வகையான அறநெறிக் கருத்துக்கள் நெய்தல் கலியில் இடம்பெற்றிருப்பது கலித்தொகைக்கு கிடைத்த பெரும் சிறப்பு எனலாம்.

**முடிவுரை**

தமிழர் பண்பாட்டில் அறம் எனப்படுவது எல்லா மக்களுக்கும் பொதுவானதாகக் கருதப்படுகிறது. இல்லறத்தில் கணவன் மனைவி பிரியாது இணைந்திருத்தல், ஒருவனுக்கு ஒருத்தியாக வாழும் நெறிகள், ஈகை, கொடை, நடுநிலைமையோடு செயலாற்றிட வேண்டும் எனும் அறக்கருத்தினைத் தாய் மகனுக்குச் சொல்லுதல், தோழி தன் தாயிடம் அறத்தொடு நிற்றல், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி உதவுதல், செல்வத்தைவிடவும் விலைமதிப்பற்ற செல்வமாகக் கருதப்படும் விருந்தோம்பல், அரசனின் வாய்மை, அரசியல், காத்தோம்பல் போன்ற அறநெறிகள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது. அறநெறிகள் அனைத்திற்கும் நெய்தற் கலியில் உள்ள 16 ஆம் பாடல் முழுவதும் உயர்ந்த அறநெறிகளைத் தன்னகத்தே அடக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. அப்பாடலானது ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, செறிவு, நிறை, முறை, பொறை எனக் குறிப்பிடுவது அனைத்தும் அறநெறிச் செய்திகளை முன்வைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**துணைநூல் பட்டியல்**


1. புலியூர்க்கேசிகன் (உ.ஆ), கலித்தொகை, பாரி நிலையம், சென்னை, பதிப்பு – 2005
2. வரதராசன், மு, தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, புதுதில்லி, பதிப்பு –1998.
3. பாலசுப்பிரமணியன், உ.ல, சங்க இலக்கியம் ஓர் எளிய அறிமுகம், பாரதி புத்தகாலயம், சென்னை, பதிப்பு – 2006.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# வாய்மொழிச் செய்யுள்களில் - அறநெறிச் சிந்தனைகள்

**இரா.மருதவேல்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
து.ா.யு. அகர்சன் கல்லூரி,
மாதவரம், சென்னை – 60

**முன்னுரை**

தமிழர்களின் பாரம்பரியக் கலைகளில் தெருக்கூத்துக் கலை முதன்மையானதாகப் போற்றப்படுகிறது. தெருக்கூத்து கிராமப்புற மக்களிடையே காணப்படும் வழக்காறுகளில் ஒன்று. திருவிழாக் காலங்களில் மக்கள் கண்டுகளிக்க தெருக்கூத்து நிகழ்த்தப்படுகிறது. அதனைக் காண்பதற்காக வெகுதூரத்திலிருந்து மக்கள் வருவதைக் காண்கிறோம். தெருக்கூத்து என்றாலே பெரும்பாலும் இராமாயணம், மகாபாரதம் காவியங்களை மையமாகக் கொண்ட கதைகளைத்தான் நிகழ்த்துகின்றனர். அவ்வாறு நிகழ்த்தும் தெருக்கூத்துக் கலைஞர்கள் கதைகளோடு மக்களுக்கு நல்ல அறச்சிந்தனை உடைய கருத்துக்களை வெளிப்படுத்தும் விதமாக பல வாய்மொழிச் செய்யுள்களை பாடப்பட்டு வருவதை இக்கட்டுரையில் காண்போம்.

**தெருக்கூத்துக் கலைஞர்களின் வாய்மொழிச் செய்யுள்கள்**

தெருக்கூத்துக் கலைஞர்கள் பாடல்கள் மற்றும் நாடகங்களை இயற்றுவதில் வல்லவர்களாகக் காணப்பட்டாலும், செய்யுள்கள் இயற்றும் பாங்கை நோக்கும் போது அவர்கள் உலக அறிவு நுட்பங்களைத் தெள்ளத் தெளிவாக அறிந்திருக்கின்றனர் என்பது விளங்கும். புதுவைக்கு அருகாமையில் உள்ள **நானமேடு** கிராமத்தைச் சேர்ந்த தெருக்கூத்துக் கலைஞர் **ஆர்.என் சீனுவாசன்** அவர்கள் பல வாய்மொழிச் செய்யுள்களை இயற்றியுள்ளார். இவர் தனது செய்யுள்களின் வாயிலாக மக்களின் வாழ்க்கைக்குத் தகுந்த அறக் கருத்துக்களையும், மனிதன் தீய வழிகளில் செல்லாமலிருக்க அவன் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளையும் வெளிப்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**தாய்த்தந்தையை வணங்குதல்**

பிள்ளைகளுக்கு அன்பையும், அக்கறையும் காட்டி உலகைக் காண்பதற்கு வெளிச்சத்தைத் தந்தவர்கள் பெற்றோர்கள். அவர்களின்றி நாம் இல்லை. அவர்களின் கடைசிக் காலத்தில் பார்த்துக் கொள்ளாமல் கேட்பாரற்றுத் தவிக்கும் பெற்றோர்கள் முதியோர் விடுதிகளில் நிரம்ப உள்ளனர். ஒருவேளை உணவுக்குக் கூட வழியில்லாமல் வாடித் தவிக்கும் பெற்றோர்களின் நிலையை எடுத்துரைக்கும் விதமாகப் பின்வரும் செய்யுள் அமைந்துள்ளதைக் காணலாம்.

**“கண்டதோரு கோவிலெல்லரங் கையெடுத்துக் கும்பிட்டு**
**உண்டி செலுத்திவரு முலகீரே – மண்டலத்தி**
**லுற்றத் தவமிருந்து வுடன்மெலிய வயிர்சரிய**
**பெற்று வளர்த்தாரைப் பேண்” (சீனுவாசன், நாணமேடு)**

எனும் இச்செய்யுளில் கோவில்களுக்குச் சென்று கையெடுத்து வணங்கி அங்குள்ள உண்டியலில் பணம் செலுத்தும் பிள்ளைகள், பத்து மாதம் சுமந்தெடுத்த தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணங்கள் தோன்றுவதில்லை. ஒருவனுக்கு தாயும் தந்தையும் தான் முதல் தெய்வம், அவர்களை வணங்கி மகிழ்ந்து அவர்களுக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்வதே பிள்ளைகளின் அறச்செயல்கள் என்பதை வாய்மொழிச் செய்யுளில் வலியுறுத்துகின்றார். மேலும்,

**“கன்றை மறாவதக் கறவைப்போற் றாய்தந்தை**
**அன்று வளர்த்தெடுத்த அருமையதை - இன்று வந்த**
**மனையாளின் சொற்கேட்டு மாறாக நடப்பவனைத்**
**துனய னென்றே கூறத் தகா” (சீனுவாசன், நாணமேடு)**

இச்செய்யுளில் கன்றை ஈன்ற பசுவானது கன்றுக்குத் தவறாமல் பால் கொடுத்து வளர்க்கும். அதுபோலத் தாயும் தந்தையும் தன் பிள்ளைதான் தனக்கு வாழ்க்கை என்று மார்மீதும் தோள்மீதும் தூங்க வைத்து, சீராட்டிப் பாலும் சோறும் ஊட்டி வளர்க்கின்றனர். ஆனால் பெற்றோரின் சொல் படி நடக்காத பிள்ளை மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பானாயின் அவன் தாயையும் தந்தையையும் தன் நாவினால் பிள்ளை என்றுச் சொல்ல தகுதியில்லாதவன் என்று குறிப்பிட்டுள்ளார்.

**“பாலோடு சோறும் பூணமும் பவிப்புமும் பசிக்குதுவி**
**சீலை யுடுத்தியவர் ஜீவனைப்போற் மேலாக**
**ஊட்டிலிலும் கொட்டிலிலும் வளர்த்தானைக் கதிகலங்க**
**விட்டவனைக் கொல்லும் வினை” (சீனுவாசன், நாணமேடு)**

எனும் இச்செய்யுளில் பாலும் சோறும் பசி நேரம் அறிந்து, அப்பா! மகனே! கண்ணே! சாப்பிடு, என்று கொடுப்பதோடு, குழந்தைகள் தூங்கும் வரை அருமையான பாட்டுகள் பாடியும், கதைகளைச் சொல்லியும் மகிழ வைக்கின்றனர். மேலும், தன் குழந்தைக்கு வண்ண வண்ண பட்டு ஆடைகளுடுத்தி அழகு பார்த்து வளர்த்த தாய் தந்தை உண்ண உணவும், அணிய ஆடையும் இல்லாமல் தவிக்கின்றனர். இவ்வாறு தவிக்கவிட்ட பிள்ளைகளுக்குப் பாவம் வந்து சேரும் என்பதை எடுத்துரைக்கின்றார்.

**“மாயமருந்திட்ட மாமிமனையான் மகிழ**
**தாயை மறந்திட்ட தறுதலைகள் தேயந்தில்**
**நீதியுளத் தெய்வத்தை நினைத்தாலும் போகாது**
**பாதக னென்னும் பழி (சீனுவாசன், நாணமேடு)**

இச்செய்யுளில், தாய், தந்தை பாசமும், சுற்றத்தாருடைய நன்றிக் கடனையும், பெரியோர்களுடைய அனுதாபமும் இல்லாது திருமணம் செய்து, மாமியாரும் தன் மனையாளும் ஆனந்தக்களிப்பு அடையுமாறு செய்து, பெற்றெடுத்த தாய் தந்தையை மறந்த பிள்ளைகள் எண்ணற்ற நதிகளில் நீராடினாலும், கோவிலுக்குச் சென்று கும்பிட்டாலும் பாவமும், பழியும் அவனைவிட்டு நீங்காது என்று குறிப்பிட்டுளார். தாய் தந்தையைப் பேணிக் காப்பதே ஒரு பிள்ளைக்கு தலைச்சிறந்த அறம் என்று வலியுறுத்துகின்றார்.

**மனிதன் செய்யும் பயனற்ற செயல்**

பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று இருந்திடாமல் எந்தச் செயலைச் செய்தாலும் பயனுடைய அறச் செயல்களைச் செய்ய வேண்டும். வாழ்விற்குப் பயனளிக்காத எந்தச் செயலும் பயனற்றது. மனிதன் குற்றமற்றவனாய் வாழ மனதில் எந்தத் தீய எண்ணங்களும் இல்லாமல் நல்ல செயல்களைச் செய்து வாழ்வானாயின் வாழ்க்கையானது சிறப்பாக அமையும் என்பதைப் பின்வரும் செய்யுள் வலியுறுத்துகிறது.

**“அனுதினமும் வேதநூற் படித்துமென்ன**

**ஆலயஞ்சென்றழுத் தொழுதாலென்ன**
**கனபடுத்து அரியாதவ மிருந்தாலென்ன**
**வாய்பேசா விரமதைக் கொண்டாலென்ன**
**கனங்கொண்ட காவேரி கங்கை பெண்ணை**
**காசி நதித்தீர்தளங்களாடி யென்ன**
**மனதில் தூய்மை ஒழுங்குறயிருந்தால் மட்டில்**
**மகிமையுற்ற ஜோதியைக் கண்டறியலாமே"[24](சீனுவாசன், நாணமேடு)**

இச்செய்யுளில் தினந்தோறும் வேதநூற்களைப் படித்துப் பயன் என்ன? தேவாலயங்களுக்குச் சென்று தன் குறையைக் கூறி அழுது தொழுது பயன் என்ன? ஒரு நாள் முழுவதும் பேசாமல் மௌனமாக இருந்து பயன் என்ன? காவேரி, காசி, கங்கை, யமுனா, தென்பெண்ணை முதலிய பல நதிகளில் நீராடுவதால் பயன் என்ன? இத்தகைய செயல்களைச் செய்தால் எந்தவிதப் பயனும் இல்லை. மனதில் அழுக்கெனுங் கறையை அகற்றி பரிசுத்தம் செய்து வந்தால் அறிவு என்னும் ஒளியைப் பெறுவான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலின் வாயிலாக மனதை தூய்மையான எண்ணத்தைக் கொண்டு வாழ்பவனே நல்ல அறங்களைச் செய்ய வழிவகுக்கும் என்று கூறுகிறது.

**பொய்வேடம் உள்ள மானிடப்பிறவி**

மனிதர்கள் பிறருக்கு தகுந்தாற்போல் தங்களை மாற்றிக் கொள்கின்றனர். நான்தான் இவ்வுலகில் பெரியவன், எனக்கு எல்லாம் தெரியும் என்று கூறிக்கொண்டு பல பொய் வேடங்களில் நடித்துக் கொண்டிருக்கும் மானிடர்களை பின்வரும் செய்யுள் விளக்குகிறது.

**"மண்டலத்தில் நான் பெரிய யோகியென்றும்**
**மந்திரத்தால் மலையைப் பிளந்திடுவேனென்றும்**
**தண்டுகமண்டலத்தோடு புலித்தோலாடைத்**
**தரித்து வெண்ணீரணிந்து சடைகளாட**
**அண்டர்புகழ் சிவபெருமான் உருவந்தோன**
**அடியேனுக்கமுதளிப்பீரம்மா வென்று**
**உண்டகவீட்டில் ரண்டகங்கள் செய்வோர் தன்னால்**
**உண்மையான சாதுகளுக்கிழி வுண்டாச்சே" (சீனுவாசன், நாணமேடு)**

எனும் இச்செய்யுளில் உலகத்திலே நான் தான் பெரிய யோகி என்று கூறுபவர்களும், மந்திரத்தால், மலையை மண்ணாக்குவேன், மண்ணைக் கயிறாகத் திரிப்பேன் என்று கூறுபவர்களும், தாடியையும் நீண்ட சடையையும் வளர்த்துக் கொண்டு கையில் தண்டும், கமண்டலம் பிடித்துக் கொண்டு இடையில் புலித்தோலையும் கட்டிக் கொள்பவர்களும், உடம்பு முழுவதும் திருநீறணிந்து கையில் திருவோடேந்தி, **"அம்மா! சிவனடியார் வந்திருக்கிறேன் முதலளிப்பீர"** என்று வேண்டுபவர்கள் அவர்களிட்ட அன்னத்தை உண்டு, அந்த வீட்டுக்கே துரோகம் செய்யும் பாவிகளால் ஆபத்து உண்டாகும் என்று கூறுகின்றார். பால் வார்த்த வீட்டுக்கு பழி நினைக்கக் கூடாது என்பதை இச்செய்யுள் உணர்த்துகின்றது.

**காலம் மாறியது**

**"காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது"** என்பதை உணராதவர்கள் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறனர். வாழ்வில் எத்தகைய முன்னேற்றமும் அடையாமல் பிறரின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைக் கொள்ளும் மனிதனைப் பற்றிப் பின்வரும் செய்யுளின் வாயிலாகத் தெளிவுப்படுத்துகின்றார்.

**"ஓயாது பொய் சொல்லி ஊர்க்குடியைக் கெடுத்து**

**மூலுத்தருக்கு உதவி புரிந்தோங்க வைக்குங்காலம்**
**வாயாடி வம்பர்களை வழக்கறிஞ ரென்றே**
**வையத்தோர் பொருளீயீந்து வாழ வைக்குங் காலம்**
**ஈயாரைக் கொடைவள்ள லென்றேற்றுங் காலம்**
**இவ்வுலகில் நல்லோர்களெழில் மறையலாச்சே" (சீனுவாசன், நாணமேடு)**

எனும் இச்செய்யுளில், ஓயாது சும்மா இருக்காமல் பிறர் நம்பும் படியாக உண்மையாக நடந்ததைப்போல் சொல்லிப் பிறரின் குடியைக் கெடுத்து, தான் வாழ வேண்டும் என்று நினைக்கும் மனிதர்களும், ஒன்றும் அறியாத மக்களிடத்தில் உண்மையானவை என்று பொய்சொல்லி அவர்களின் குடியைக் கெடுத்தவர்களும், பொய்யை மெய்யைப் போலவும், மெய்யைப் பொய்யைப் போலவும் யாருக்கும் அஞ்சாமல் பேசித் திரிபவர்களும், இவரைக் கொண்டு நம் வழக்கை ஜெயித்து விடலாமென்று மதிமயங்கி பொருள் கொடுத்தவர்களும், பெற்றதாயின் தலையில் புல் சுமையை வைத்து தன் மனைவிக்கு குடை பிடித்துச் செல்லுபவர்களும் காலம் மாறியது என்று கூறப்படுகிறது. மனிதனாகப் பிறந்தவன் வாழுங்காலத்தை அறிந்து வாழவேண்டும் என்றுக் குறிப்பிடுகின்றார்.

### கோபத்தால் வருங்கொடுமை

**"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு"** என்பது பழமொழி. எந்த ஒரு செயலையும் நிதானத்துடன் செய்ய வேண்டும். ஆத்திரப்படுதல் கூடாது. கோபம் ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும். அதனால், கோபத்தை அடக்கி இடத்திற்கு ஏற்றாற்போல பொறுமையுடன் செயல்பட வேண்டும். அப்படிப் பொறுமையைக் கடைப் பிடிப்பவனே வாழ்வில் வளம் பெறுவான். கோபம் கொண்டு வாழ்ந்தால் பின்வரும் துன்பநிலையை அடைவான் என்பதைப் பின்வரும் செய்யுள் தெளிவுப்படுத்துகிறது. இதனை,

**"கோபத்தால் வரும் பெரிய ஆபத்தையா**
**கோபத்தால் குடியுழிந் கொலைகள் நேரும்**
**கோபத்தால் கொண்ட பொருளனைத்தும் போகுங்**
**கோபத்தால் வருமொழியாத்துயருந் துன்பம்**
**கோபத்தால் தாய் தந்தை யுறவைப்போக்குங்**
**கோபத்தாலழிந்தவர்கள் கோடானகோடி**
**கோபத்தால் வரும் வினைகள் மெத்தவுண்டு**
**கோபமே கூற்றனென வறிகுவீரே" (சீனுவாசன், நாணமேடு)**

எனும் செய்யுளில் கோபக்குறியைக் கொண்டவர்களுடைய குடி பாழாய்ப் போகும், கொலைச் செய்ய நேரும், அழியாத துன்பமும் துயரமும் பெருகும், தாய், தந்தை, தமையன், தம்பி உறவைப் போக்கும், கோபத்தால் இவ்வையகத்தில் கோடான கோடி பேர்கள் மாண்டிருப்பதை நமக்குத் தெரிந்த வரையில் அறிந்திருப்போம் என்றும் ஆகையால், கோபத்தைக் காட்டிலும் பொறுமை நிதானத்தைத் தரவல்லது என்று குறிப்பிடுகிறார்.

### முடிவுரை

தெருக்கூத்துக் கலை ஆதியந்தமான கலையாக காணப்பட்டு வருகின்றது. இதில் பயனித்து வரும் தெருக்கூத்துக் கலைஞர்கள் தங்களின் கேள்வி ஞானத்தால் பெற்ற கல்வியைக் கொண்டு வாய்மொழியின் வாயிலாக பல செய்யுள்களை இயற்றி மக்களுக்கு அறச்சிந்தனை உடையக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். இவர் பாடிய இச்செய்யுள்களின் வழியாக தாய் தந்தையைப் பேணிக்காத்தல், காலத்தால் வரும் கொடுமை, கோபத்தினால் உருவாகும் பகைமை, கால மாற்றத்தினால் வரும் துன்பம் ஆகியவற்றை மையமிட்டுக் காட்டியிருப்பது வாய்மொழிச் செய்யுள்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய*www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நீதி இலக்கியங்கள் உணர்த்தும் - பொறையுடைமை

**செல்வன் த.கௌதமன்**
முதுகலைத் தமிழ் முதலாம் ஆண்டு
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம், சென்னை – 05.

## முன்னுரை

மனிதன் வாழ்வில் கடைபிடிக்கும் ஒழுக்கங்களில் பொறையுடைமை ஒரு சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது. ஒருவர் தீங்கு செய்த போதிலும் அவரைப் பதிலுக்குப் பழிவாங்கும் எண்ணம் இருத்தல் கூடாது என்பதை பொறையுமை உணர்த்துகின்றது. அவ்வாறு பழிவாங்கும் எண்ணம் கொண்டிருந்தால் மேலும் மேலும் பகைதான் உருவாகுமேயன்றி ஒருபோதும் அந்தப் பிரச்சனைக்குத் தீர்வுக் காண இயலாதபடி போகும். ஆனால் யாரேனும் ஒருவர் பொறையுடைமையைக் கைப்பற்றினால் அவர்களின் துன்பங்கள் ஒழிந்து, வாழ்வில் இன்பங்கள் தழைக்க வழிவகை செய்கின்றன என்பதை நீதி இலக்கியங்கள் உணர்த்துவதை இக்கட்டுரையின் வாயிலாக காண்போம்

## நிலமும் மனிதனும்

‘பொறுமையில் சிறந்தவள் பூமாதேவி’ என்பதைப் போல பொறுமைக்கு எடுத்துக்காட்டாக நிலத்தை கூறலாம். பூமியை எவ்வளவுதான் தோண்டினாலும் அதாவது காயப்படுத்தினாலும், அது தன் நிலையிலிருந்து மாறாமல் பொறுத்துக்கொள்கிறது. அதுபோல மனிதனும் தன் வாழ்வில் யார் நமக்கு எத்தகையத் தீங்கினைச் செய்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்ளும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்ள வேண்டும், என்பதை உலகப் பொதுமறை என்று அழைக்கப்படும் திருக்குறளில், வள்ளுவர் பெருந்தகை பொறையுடைமை என்னும் அதிகாரத்தின் வழியாக எடுத்துரைக்கின்றார்.

**‘அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வாரைப் பொறுத்தல் தலை’ (குறள் : 151)**

இக்குறட்பாவில் தன்னை வெட்டித் தோண்டுபவரையும், கீழே விழாமல் தாங்கி காக்கும் நிலத்தைப் போல தம்மை அவமதிப்பவரை பொறுத்துக் கொள்ளுதல் முதன்மையான அறம் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும்,

**‘ஒருத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்’ (குறள் : 156)**

தமக்குத் தீமை இழைத்தவனைத் தண்டிப்பதால் உண்டாகும் இன்பம் ஒரு நாளைக்குத்தான். மாறாக தீமையைப் பொறுத்துக் கொள்வார் இறக்கும் வரைப் புகழுடன் போற்றப்படுவர் என்றுக் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

## அடக்கம் உடமையின் சிறப்பு

அடக்கம் என்பது ஒரு மனிதனிடத்தில் சிறு வயதிலிருந்து தோன்றியிருத்தல் சிறப்பினை அளிக்கும். எச்செயலைச் செய்தாலும் நிதானத்துடன் செயல்பட

வேண்டும் அவன் நிசானத்துடன் செயலாற்றுவதற்கு பொறுமை குணம் அவசியமாகிறது. பொறுமையின் சிறப்பினைப் பற்றி நாலடியார் பின்வரும் பாடலில் விளக்குகின்றது.

**‘இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்**
**இல்லான் கொடையே கொடைப்பயன் எல்லாம்**
**ஒறுக்கும் மதுகை உரனுடையாளன்**
**பொறுக்கும் பொறையே பொறை’ (நாலடியார் - 7)**

இளைய வயதில் அடங்கி இருப்பது சிறப்பு. பெரும்பொருள் இல்லாதவன் கொடையளிப்பது சிறப்பு. அனைவரையும் வெல்ல வல்ல வலிமையும் அவ்வலிமையைக் காட்டவல்ல அறிவையும் உடைய ஆட்சியாளன் பிறர் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் குணம் அவன் வாழ்விற்கு அறங்களாக அமையும் என்று குறிப்பிடுகிறது.

**முட்டாள்களுடன் வாதிடாதே**

முட்டாள்களுடன் விவாதம் செய்யக் கூடாது. முட்டாள்கள் என்றுமே அவசரத்துடன் வார்த்தைகளை வீசி மனதைக் காயப்படுத்தும் மனப்போக்குடன் வாழ்கின்றனர். பொறுமையைக் கடைபிப்பவனே தக்க நேரம் வரும்பொழுது வெற்றியை அடைவான் என்பதை நாலடியார் பின்வரும் பாடலில் குறிப்பிடுவதை காணமுடிகின்றது.

**கோதை அருவிக் குளிர்வரை நல்நாட**
**பேதையோடு யாதும் உரையற்க, பேதை**
**உரைகின், சிதைந்து உரைக்கும், ஒல்லும் வகையால்**
**வழுக்கிக் கழிதலே நன்று’ (நாலடியார் - 8)**

மாலைபோல் வாழுகின்ற அருவியினை உடைய குளிர்ந்த மலையைச் சார்ந்த நல்ல நாட்டனே! முட்டாளுடன் எதுவும் பேசாதே. நீ பேசின் அம்முட்டாள் சினந்து கொடும் சொல்லைப் பதிலுக்குச் சொல்லுவான். முடிந்தவரை அவனிடமிருந்து தப்பி விலகுதலே நல்லது என்று எடுத்துரைக்கின்றது. இப்பாடலின் வழியாக முட்டாளுடன் விலகி இருத்தல் நல்லது, முட்டாள் எத்தகையச் செயலைச் செய்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் பொறுமைக் காப்பதே சிறந்த அறம் என்று உணர்த்தப்படுகிறது.

**பொறுமை சான்றோர்க்கு அழகு**

அனுபவத்தில் சிறந்த சான்றோர்கள் பொறுமையில் சிறந்தவர்களாவர். ஒருவனுக்கு அனுபவமே சிறந்த ஆசான் என்று கூறப்படுகிறது. ஒரு குழந்தையின் வளர்ப்பு பெற்றோர்களின் அரவனைப்பினைப் பொருத்து அமைகின்றது. பொறுமையைக் கடைப்பிடித்து செயலாற்றுபவர்களைச் சிறந்த சான்றோர்கள் என்று நாலடியார் பின்வரும் பாடலில் உரைக்கின்றது.

**‘பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத**
**மூடர் மனிதக்க சொல்லுங்கால், கேடு அருஞ்சீர்ச்**
**சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே, மற்று அவரை**
**ஈன்றாட்கு இறப்பப் பரிந்து’ (நாலடியார் :32)**

மூலபாடம் ஒன்றை மட்டும் படித்து அப்பாடத்தின் பயனை ஆராயாது தெளிவில்லாமல் மூடர் சிலர் வெறுக்கத்தக்கவற்றை அவையில் சொல்ல நேரிடும்போது அழியாத புகழை உடைய சான்றோர் இத்தகு மகனை ஒரு தாயும் பெற்றாளே என இரக்கமுற்று வருந்தி அமைதிக் காப்பர். பொறுமையின் சிறப்பு, பெற்ற தாயும், தந்தையும் வளர்த்த விதத்தினை வெளிப்படுத்துகிறது.

**சிறியோர், பெரியோர்**

ஒருவரின் செயலினைக் கொண்டே பெரியோர், சிறியோர் என நிர்ணயிக்க முடிகின்றது. வயதினைக் கொண்டு சிறியோர், பெரியோர் என எண்ணுவதை விட

அவர்களின் செயலாற்றும் செயல்களைக் கண்டு நிர்ணயிக்கலாம். வயதில் சிறியவர்களாக இருப்பர். ஆனால் அவர்களின் செயல்கள் அனைத்தும் வியக்கும் படி அமையும். வயதில் பெரியோர்களாக இருப்பர் ஆனால் அவர்களின் கர்வத்தினைக் கொண்டு எந்நேரமும் முட்டாள்தனமாக செயல்படுவர். எனவே பொறுமையினைக் கடைபித்து நடக்கும் குணத்தை உடையவர்களையே பெரியோர்கள் என்றுக் கூறத்தகும்.

**'இறப்பச் சிறியவர் இன்னா செயினும்**
**பிறப்பினால் மாண்டார் வெகுளார் திறத்துஉள்ளி**
**நல்ல விறகின் அடினும் நனி வெந்நீர்**
**இல்லம் சுடுகலா வாறு.' (பழமொழி – 370)**

பொறுத்துக்கொள்ள முடியாத அளவு சிறியோர் துன்பத்தைத் தமக்குச் செய்தாலும், நல்ல குடிப்பிறப்பில் வந்த சான்றோர் சீற்றங் கொள்ள மாட்டார். நல்ல விறகைக் கொண்டு அடுப்பெரித்து வெந்நீரை மிகுதியாகக் கொதிக்கக் கொதிக்கச் சுட வைத்தாலும் அந்த வெந்நீர் வீட்டை எரித்துவிடாது என்று குறிப்பிடுவதை காண முடிகிறது.

**நகைகெட வாழ்**

ஒரு மனிதன் பிறர் நகைக்கும் வண்ணம் வாழ்தல் கூடாது. பொறுமையைக் கடைபிடிப்பவர்கள் பிறர் நகைக்க வாழ மாட்டார்கள். தனக்கு எத்தகையத் துன்பத்தைக் கொடுத்தாலும் அதனைப் பொறுத்துக்கொண்டு பிறர் வியக்கும் வண்ணம் வாழ்ந்து காட்டுபவர்களே பொறுமை என்னும் அறத்தைக் கடைப்பிடிப்பவர்களாவர் என்று சிறுபஞ்சமூலம் பின்வரும் பாடலில் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

**'பிழைத்த பொறுத்தல் பெறுமை சிறுமை**
**இழைத்த தீமை எண்ணி இருத்தல், பிழைத்த**
**பகைகெட வாழ்வதும், பல்பொருளால் பல்லார்**
**நகைகெட வாழ்வதும் நன்று' (சிறுபஞ்சமூலம் - 14)**

பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளல் பெருமை. பிறர் செய்த தீங்கினையே எண்ணியிருந்தால் சிறுமை. தான் செய்த பிழைகளிலிருந்து திருத்தி வாழ்தலும், செல்வரும், சான்றோரும் நம்மைப் பார்த்துக் கேலி செய்யாது வாழ்வதும் நன்மைத் தருவனவாகும்.

**மன்னித்தல் சான்றோர்க்கு அழகு**

பிறர் செய்யும் தீங்கினைப் பொறுத்துக்கொள்ளும் அழகு சான்றோர்களுக்கு உரியது என்று வெற்றிவேற்க்கைக் குறிப்பிடுகின்றது.

**'சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்**
**பெரியோர் ஆயின், பொறுப்பது கடனே' (வெற்றிவேற்கை – 31)**

சிறியவர்கள் செய்த சின்னப் பிழைகளைப் பெரியோர்கள் மன்னித்து விடுதலே கடமையாகும் என்பதை உணர்த்துகின்றது.

**புன்னியத்தைப் பாவத்தால் வெல்ல முடியாது**

பிறருக்கு நன்மையைச் செய்தவர்களுக்கு புன்னியம் கிட்டும். பிறருக்குத் தீமையைச் செய்தவர்களுக்கு பாவம் கிட்டும். நன்மையைச் செய்பவர்களுக்கு அறம் ஊன்றுகோலாய் அமையும். என்றுமே நன்மை செய்பவர்களுக்குத் தீங்கு நேராது. நன்மையைக் கடைபிடிக்கும் பெரியோர்கள் பொறுமையை கடைப்பிடிப்பவர்களாவர். புன்னியம் செய்தவர்களை யாராலும் ஒன்னும் செய்ய முடியாது என்பதை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**'சத்தியத்தை வெல்லாத சத்தியந்தா னீள்பொறையை**
**மெத்திய கோபமது வெல்லாது – பத்திமிகு**

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

**புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்**
**கண்ணானைத்தான் வெல்லுவரோ காண்' (நீதி வெண்பா – 53)**

அரக்கர்கள் கண்ணனை வெல்ல முடியாது அதுபோல பொய், மெய்யை வெல்ல முடியாது, பெரும் சீற்றம் பொறுமையை வெல்ல முடியாது. எனவே பாவம் புண்ணியத்தை வெல்ல முடியாது என்பதை இப்பாடல் தெளிவுப்படுத்துகிறது.

**முடிவுரை**

பொறுமையைக் கடைபிடிப்பவனே சிறந்த அறத்தைப் பெறுவான் என்பதை இக்கட்டுரை தெளிவுப்படுத்துகிறது. மேலும், பொறுமையில் சிறந்த அறம் எதுவும் இல்லை என்பதே உண்மை. பொறுமையைக் கற்றவன் கல்வியில் சிறந்து விளங்குவான். பொறுத்தவர் என்றும் பூமியில் நிலைத்து ஆள்வார். பொங்கினவர் விரைவில் அழிந்துபோவர் என்பதை இலக்கியங்கள் பல்வேறு கதைகளைக் கொண்டு விளக்குகிறது. நீதி இலக்கியங்கள் அறத்தை பின்பற்ற வேண்டும் என்பதை விளக்க பல்வேறு கதைகளை நினைவூட்டும் விதத்தினைக் காணமுடிகின்றது. எனவே பொறுமை என்பது ஒரு மனிதனுக்கு அவசியமாகிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# இசையமுது காட்டும் தொழிலாளர்களின் காதல் சிந்தனை

**து.பெருமாள்**
**முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை,**
**மாநிலக்கல்லூரி (தன்னாட்சி),**
**சென்னை – 05.**

## ஆய்வுச்சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டினை ஒரு தொழிற்புரட்சிக் காலம் என்று சொல்லலாம். சமுதாயத்தில் பெரும்பாலோராக இருக்கக்கூடியவர்கள் உழைக்கும் மக்களே. இவ்வுலகம் இயங்குவதற்கு மனிதவாழ்வில் ஒவ்வொரு நாளும் நடைபெறும் மாற்றங்களுக்கும் உழைப்பின் பயனே அடிப்படையாக அமைகின்றது. இவற்றை உணர்ந்த தமிழ்க் கவிஞர்கள் உழைப்பின் பெருமையையும் உழைப்போரின் நிலமையையும் பாடல்களாகவும் கவிதைகளாகவும் பதிவு செய்து கொண்டிருந்தார்கள். சிற்றிலக்கிய காலத்தில் வாழ்ந்த கவிஞர்கள் நிலவுடமையளார்களை துதிப்பாடி மகிழ்ந்தனர். அந்நிலையை மாற்றி இக்காலத்தில் உள்ள கவிஞர்கள் தொழிலாளர்களின் வாழ்வியலையும் அவர்கள் பெருகின்ற இன்ப துன்பங்களையும் பற்றி எடுத்துரைக்கும் வகையில் கவிதை படைக்கின்றார்கள். அத்தகைய புதுக்கவிதை படைப்பாளர்களின் முன்னோடியாக பாவேந்தர் பாரதிதாசன் விளங்குகின்றார். அந்த வகையில் பாரதிதாசன் படைப்பு வரிசையில் ஒன்றான இசையமுது என்ற கவிதையில் குறிப்பிடப்படும் தொழிலாளர்களின் சிந்தனை மற்றும் அவர்களின் காதல் மேன்மையைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்று பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் இசைய வைக்கின்ற, பணிய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசை. உலகிலுள்ள தொன்மையான மொழிகளுள் ஒன்று நம் தாய்மொழியாம் தமிழ்மொழி. அது மற்ற மொழிக்கும் இல்லாச் சிறப்புடையதாய் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனும் முத்தமிழாய் இயன்று நிலைபெற்றுள்ளது. சங்ககாலத்து நூல்களாகிய பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கல்லாடம், பரிபாடல் முதலியவற்றில் இசைபற்றிய குறிப்புக்கள் பரந்து காணப்படுகின்றன. இதனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இசைத்தமிழ் பெற்றிருந்த உயர்வை அறியலாகும். பிற்காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் கானல் வரி, வேட்டுவ வரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை போன்றவற்றிலும் தேவாரத்திருமுறைகளிலும் இயல், இசை, நாடகம் என்ற மூன்று இசைக்கூறுகள் பரவலாகக் காணப்படுகின்றன.

**மகரத்தின் ஒற்றாற் சுருதி விரவும்**
**பகருங் குறிநெடில்பா ரித்து-நிகரிலாத்**
**தென்னா தெனாவென்று பாடுவரேல் ஆளத்தி**
**மன்னாவிச் சொல்லின் வகை” (2) – ( சிலப்பதிகரம்-புகார்)**

பிற்காலத்தில் வேதநாயக்கர், முத்தாண்டவர், அருணாச்சலக்கவிராயர் ஆகியோர் இசைக் கீர்த்தனைகளை இயற்றி தமிழ் இசைக்கு வளம் சேர்த்தனர். விடுதலைக்குப் பின் தமிழும் தமிழ் இசையும் வீறுகொண்டு எழுவதற்கு காரணமாக பாரதி விளங்கினார். இவரின் பாடல் திசையை எங்கும் ஒலிக்கத் தொடங்கின. பின்னர் பாரதியின் வழியில் வந்த பாவேந்தர் பலநூறு இசைப்பாடல்களை இயற்றினார். நாட்டு மக்கள் உள்ளம் நொந்த போதெல்லாம் இவரது பாடல்களை உவந்து பாடிவருகின்றார்கள். ஒருகாலத்தில் பண்ணும் பாரதமும் மேட்டுக்குடி மக்கள் மட்டுமே பாடமுடியும் என்ற நிலையை உடைத்து வாழ்வின் அடித்தட்டிலுள்ள ஏழை எளியவர்கள் பற்றி இசைப்பாடல்களை முதன்முதலில் பாடல்கள் இயற்றியப் பெருமை பாவேந்தரையே சாரும். இசை உலகில் என்றும் அழியாத உயிர் ஓவியங்களாகப் பாரதிதாசனின் பாடல்கள் விளங்கி வருகிறது. பாவேந்தர் பாரதிதாசன் பாவலர் மட்டுமல்லர் முத்தமிழ்க் காவலர்

முத்தமிழ் அறிஞர் என்று பேராசிரியர் முனைவர் ச.மெய்யப்பன் குறிப்பிடுகிறார்.(3) அடிமைத்தனம், கல்வியின் அவசியம், நாட்டுப்பற்று போன்றவற்றை மட்டும் பாடாமல் காதல் பற்றியும் சுவைப்படவும் நகைச்சுவை உணர்வுடனும் படைத்துள்ளார்.

**இசையமுது காட்டும் காதல்**

இசையமுது என்ற பகுதியில் பாரதிதாசனின் இசைப் பாடல்களில் காதல் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலாளியின் காதல் எண்ணங்களை வெளிப்படுத்துவதாய் இருக்கின்றன. வண்டிக்காரன், மாடு மேய்ப்பவன், பாவோடு பெண்கள், தறித்தொழிலாளி நினைவு, உழவன் பாட்டு, உழத்தி, ஆலைத் தொழிலாளி, இரும்பாலைத் தொழிலாளி, கோடாலிக் (கோடரி) காரன், கூடைமுறம் கட்டுவோர், பூக்காரி, குறவர், தபால்காரன், சுண்ணம் இடிக்கும் பெண்கள், ஓவியக்காரன் என்று காதல் பாடல்களைப் படைத்துப் புதுமை செய்துள்ளார் பாரதிதாசன். இந்தத் தொழிலாளிகளின் தொழில் சார்ந்த சிந்தனையுடன் காதலை வெளிப்படுத்தியுள்ள தன்மை மிகச்சிறப்பாக இருக்கின்றது.

**வண்டிக்காரன்**

மாட்டுவண்டிக்காரன் தன் மனைவியை விட்டு வியபாரத்திற்காக பிரிந்து வெளியூர் செல்கின்றான். நான் மீண்டும் வீடு திரும்ப தாமதம் ஆகும். என் வரவை எண்ணி நீ வருத்தப்படவேண்டம், என்று ஆறுதல் சொல்லி, அன்பாகப் பேசி தன் காதல் உனர்வுகளை மனைவியிடம் பகிர்ந்து கொண்டு செல்கிறான். வண்டிக்காரனின் மனைவி தன் தோழியிடம், அவள் கணவனின் அன்பையும் பெருமையையும் பற்றி கவித்துவமாக சிந்தித்து கூறுகிறாள்.

**அதோ பாரடி அவரே என் கணவர்**
**அதோபாரடி**
**புதுமாட்டு வண்டி ஓட்டிப்**
**போகின்றார் என்னை வாட்டி**
**அதோ பாரடி**
**இருப்பவர் உள்ளே முதலாளி செட்டி**
**ஏறுகால் மேல்தானென் சர்க்கரைக் கட்டி**
**தெரிய வில்லையோடி தலையில் துப்பட்டி**
**சேரனே அவர் என்றால் அதில் என்ன அட்டி**
**அதோ பாரடி**
**ஐந்து பணத்தினை என்னிடம் தந்தார்**
**அடிசாயும் முன்னே வரவு மிசைந்தார்**
**அந்தி வராவிட்டால் பெண்ணே இந்தா**
**ஆசைமுத்தம் என்று தந்து நடந்தார்**
**அதோ பாரடி-(4)**

**மாடு மேய்ப்பவன்**

மாடு மேய்ப்பவன் தன் காதலியைப் பார்த்து மாலை நேரத்தில் வஞ்சி என்று அழைக்கின்றான். அதற்கு அவள் மாடுமேய்ப்பவனிடம் எனக்கு என்ன வேலை என்று சொல்லிவிட்டு நடந்து செல்கின்றாள். மீண்டும் அவனை திரும்பிப்பார்த்து ஒரு பாட்டுப் பாடு என்று கேட்கிறாள். அவள் கேட்டதும் மாடு மேய்ப்பவன் பாடத் துவங்கினான். அவன் பாடும் பைந்தமிழ் இசையைக் கேட்டு மகிழ்ச்சியாக ஆடுகின்றாள். அவள் முகமலர்ச்சியுடன் ஆடுவதைக் கண்ட அவன் தன் காதல் சிந்தனையை இன்னமும் மெருகேற்றுகின்றான். நீர் ஓடையில் பூத்து நிற்கும் தாமரைக்கூட வாடிடும் ஆனால் எப்பொழுதும் வாடாமல் புதுப்பொழிவுடன் இருக்கும் தாமரை உன்முகம் என்று அவன் கவித்தமிழைப் பாடினான். அவன்பாடும் கவிதையைக் கண்டு வியந்து வாய்ப்பார்த்து நின்றாள் காதலி. காதலன் சொன்னதுபோல் மறுநாள் சென்றாள். அவளைப்பார்த்து கனிபோன்ற தென்மாங்கு பாடாயோ என்று கேட்டான். அதற்கு அவள் நேரம் ஆகிவிட்டது நான் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு நடந்தாள். காதலன் தனது மாடுகளில் இருந்து பால் கறந்து கொண்டுவந்து குடி என்று விரும்பி நின்றான். அவள் பாலைப் பார்த்து மிகவும் அழகுப் பால் என்றாள். இது அழகுப்பால் அல்ல, இது காதல் கலந்தப் பால் என்று கூறினான். மாடுமேய்ப்பவன் தன்னை சார்ந்துள்ள உயிர்களின் மேலும் இயற்கையின் மேலும் தன் சிந்தனையை இயற்றி காதலை வெளிப்படுத்தியுள்ளான் என்பவற்றை பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

**மாடுமேய்ப் பவனிடம் எனக்கென்ன வேலை?**
**வஞ்சிஎன் றழைத்தான் ஏனென்றேன் மாலை!**
**மாடுமேய்ப் பவனிடம் எனக்கென்ன வேலை?**
**பாடொரு பாட்டென்றேன் பாடி இருந்தான்**
**பைந்தமிழ் கேட்டுநான் ஆடி யிருந்தேன்-**

**மாடுமேய்ப் பவனிடம் எனக்கென்ன வேலை?**
**ஓடையில் தாமரை வாடிடும்" என்றான்**
**உள்ளங்கை விரித்தும் கூப்பியும் நின்றேன்**
**வாடாத தாமரை உன்முகம்" என்றான்**
**மலர்காட்டி முகங்காட்டி வாய்பார்த்து நின்றேன்**
**"கூடியிருக்க" என்றான் கைகோத்து நின்றேன்**
**காடும் கமழ்ந்தது நான்விட் டகன்றேன்!**
**மாடுமேய்ப் பவனிடம் எனக்கென்ன வேலை?**
**காளைசொற் படிமறு நாளைக்குச் சென்றேன்**
**"கனிபோன்ற தென்பாங்கு பாடாயோ?" என்றான்**
**வேளை யாகிவிடும் என்று நவின்றேன்**
**விரும்பிப் பசுக்கறந்து "குடி" என்று நின்றான்**
**ஆளன் கொடுத்தபா லாழாக்குப்பால் என்றேன்-**
**"அல்லடி காதற் கலப்பால் தான்" என்றான்-**
**மாடுமேய்ப் பவனிடம் எனக்கென்ன வேலை? -(5)**

**ஆலைத்தொழிலாளி**

பஞ்சாலைக்கு வேலைக்குப் போன தன் காதலன் வருவான் என்று மாலைநேரத்தில் தலைவி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். தலைவன் இன்னும் வரவில்லை. ஆலையின் சங்கு ஊதினால்தானே தலைவன் வருவான். சங்கு ஏன் இன்னும் ஊதவில்லை என்று சிந்தித்தாள். பாரதிதாசன் சங்கஇலக்கிய காதலர்களின் உனர்வுகளை உள்வாங்கி தற்கால காதலர்களின் சூழலுக்கு ஏற்றவாறு படைத்திருக்கின்றார். சங்க இலக்கியங்களில் போருக்காகவும், பொருள் ஈட்டுவதற்காகவும் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனின் வரவை எண்ணி தலைவி ஏங்கி நிற்பதாக பல பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றது.

**வார் உறு வணர் கதுப்பு உளரி, புறம் சேர்பு,**
**""அழாஅல்"" என்று நம் அழுத கண் துடைப்பார்**
**யார் ஆகுவர் கொல்? தோழி! சாரல்**
**பெரும் புனக் குறவன் சிறு தினை மறுகால்**
**கொழுங் கொடி அவரை பூக்கும்**
**அரும் பனி அற்சிரம் வாராதோரே. (குறுந்)-82**

எப்போதும் சங்கின் ஒலியானது விண்ணைப் பிளக்கும் வேகத்தில் ஒலிக்கும். அவ்வாறு விண்ணைப் பிளக்கும் அளவிற்கு ஒலித்ததால் அதன் தொண்டை வறண்டு விட்டதோ என்று அவள் நினைக்கின்றாள். எவ்வளவு அழகான கற்பனை நயத்தை பாரதிதாசன் கையாண்ட விதம் மிகச்சிறப்பாக உள்ளது. ஆலையின் சங்கு ஓர் உயிரற்ற பொருள், மின்சாரத்தினால் ஒலிக்கும் இயல்புடையது. அது உரிய நேரம் வந்தால் ஒலிக்கும். தலைவன் சீக்கிரம் வர வேண்டும் என்று கருதியதால் அவளது மனம் சங்கு ஒலிக்கும் நேரம் கடந்து விட்டதாகக் கருதுகிறது. அதிகமாக ஒலி எழுப்பினால் மனிதனின் தொண்டை வறண்டு விடுவது போல் ஆலைச் சங்கின் தொண்டையும் வறண்டு விட்டதோ என்று நினைக்கிறாள். இவ்வாறு உயிரற்ற பொருளை உயிருடைய பொருள்போல் கற்பனை செய்ய வைத்திருக்கின்றது.

**ஆலையின் சங்கே நீ ஊதாயோ? மணி**
**ஐந்தான பின்னும் பஞ்சாலையின் சங்கே ஊதாயோ?**
**காலை முதல் அவர் நெஞ்சம் கொதிக்கவே**
**வேலை செய்தாரே! என் வீட்டை மிதிக்கவே (ஆலையின்)**
**மேலைத் திசைகளில் வெய்யிலும் சாய்ந்ததே**
**வீதி பார்த்திருந்த என் கண்ணும் ஓய்ந்ததே**
**மேலும் அவர் சொல் ஒவ்வொன்றும் இன்பம் வாய்ந்ததே**
**விண்ணைப் பிளக்கும் உன் தொண்டையேன் காய்ந்ததே (ஆலையின்)**
**குளிக்க ஒரு நாழிகையாகிலும் கழியும்**
**குந்திப் பேச இரு நாழிகை ஒழியும்**
**விளைத்த உணர்வில் கொஞ்ச நேரம் அழியும்**
**வெள்ளி முளைக்கு மட்டும் காதல்தேன் பொழியும் (ஆலையின்) -**

**உழத்தி**

வயலில் களை எடுக்கின்ற உழத்திப் பெண்ணைப் பார்த்து, காதலன் பாடும் பாட்டின் கற்பனை நயத்தில் பாரதிதாசன் பல இடங்களில் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். குனிந்து களை எடுக்கும் பெண்ணைக் கவிழ்ந்த தாமரை என்று பாரதிதாசன் பாடியுள்ளார். மலர்ந்த தாமரை என்று இயல்பாகக் கவிஞர்கள் தாமரையைப் பாடுவார்கள். ஆனால் கவிழ்ந்த தாமரை

என்று பெண்ணின் முகத்தைப் பாவேந்தர் உவமைப்படுத்தியுள்ளார். களை எடுத்துக் கொண்டிருக்கும் அந்த உழத்திப் பெண்ணின் கருங்கூந்தல் அவிழ்ந்து தொங்குகிறது, அதைப் பார்த்த காதலன் அது அருவி நீர் என்கிறான். அந்தக் கருங்கூந்தலாகிய அருவி நீரில் எப்போது முழுகலாம் என்று அவன் ஒரு கேள்வியும் கேட்பதாக பரதிதாசன் குறிப்பிடுகின்றர்.

**களை எடுக்கின்றாள் - அதோ**
**கட்டழகுடையாள் சிற்றிடையாள் அதோ**
**களை எடுக்கின்றாள்!**
**வளவயல்தனில் மங்கைமாருடன்**
**இளங் கரும்பிடைச் செங்கரும்புபோல்**
**களையெடுக்கின்றாள்!**
**கவிழ்ந்த தாமரை**
**முகம் திரும்புமா? - அந்தக்**
**கவிதை ஓவியம்**
**எனை விரும்புமா?**
**அவிழ்ந்து வீழ்ந்த கருங்கூந்தலாம்**
**அருவி நீரில் எப்போது மூழ்கலாம்? - (களை)**
**செந்நெல் காப்பது**
**பொதுப்பணி செய்யல்! - ஆம்**
**என்ற நினைவினால்**
**என்னருந் தையல்**
**மின்னுடல் வளைய வளையல்கள் பாட**
**விரைவில் செங்காந்தள் விரல்வாட (களை)**

**பூக்காரி**

பூ விற்கும் பெண்ணுக்கும் அவள் காதலனுக்குமான காதல் பரிமாற்றங்களின் மேல் பாரதிதாசன் தன் கவிதை ஆற்றலை இயற்றிப் பாடியுள்ளார். சேர்த்துக் கட்டிய முல்லைப் பூ வேண்டும் என்று கேட்டேன், அவளோ அழகான அவள் சிரிப்பு முல்லை தந்தாள் என்று காதலன் பாடுகின்றான். பறித்து வந்த தாமரைப் பூவை விலை தீர்த்து நல்ல விலைக்குக் கொடடி என்று கேட்டேன். அவளோ தாமரைப் போன்று பூத்திருக்கும் முகத்தைக் காட்டி நின்றாள். இவற்றைப் பரதிரதாசன் ஒரு காதலனுடைய சிந்தனை எவ்வாறு இயங்குமோ அதைத் தன்னுடைய பார்வையில் கவிதையாகப் படைத்த விதம் மிகவும் அருமையாக உள்ளது. பூ விற்கும் தன் காதலியைப் பார்த்து வேண்டுமடி ஒரு தாமரை இதழ் என்றான் காதலன். அதற்கு அவள் அவனைப்பார்த்து புன்னகைக்கின்றாள். அவளின் புன்னகைச் சிரிப்பைப் பார்த்து இவளின் இதழ் தேன் ஒழுகும் மலர் என்று வர்ணிக்கின்றான் காதலன். பூக்காரிக்கும் காதலனுக்குமான காதல் உறவை ஓர் உரையாடல் போலவே கொண்டு செல்கிறார் பாரதிதாசன்.

**சேர்த்துக் கட்டிய முல்லை வேண்டுமென்றேன்-நல்ல**
**சேயிழை அவள் சிரிப்பு முல்லை தந்தாள்**
**பார்த்துப் பறித்த தாமரைப்பூத்**
**தீர்த்து விலைக்குக் கொடடி என்றேன்**
**பூத்தமுகத் தாமரையால்**
**புதுமை காட்டி மயக்கி நின்றாள் சேர்த்து....**
**தேவையடி தாமரை இதழ் என்றேன்**
**தேனொழுகும் வாயிதழ் மலர்கின்றாள் –ஒரு**
**பூவைக் காட்டி பேர் சொல் என்றேன்**
**பூவை என் பேர் பூவை என்றாள்**
**ஆவல் அற்றவன் பொல் நடந்தேன்**
**அவள் விழிதனில் அலரி கண்டேன் சேர்த்து....**
**காவல் மீறிகடைக்கு வந்துவிழுந்த –பலர்**
**கண்பட வாடிய மருக்கொழுந்து நீ**
**மேவா தடி என்று சொன்னேன்**
**வேங்கையில் ஈ மொய்க்கா தெனாறாள்**
**தேவைக்கு மணம் வேண்டும் என்றேன்**
**திருமணம் என்று தழுவி நின்றாள் சேர்த்து....**

**முடிவுரை**

காதல் பாடல்களில் அரசர்களின் காதலையும், பெரு முதலாளிகளின் காதலையும் பாடியவர்களின் மத்தியில் உழைக்கும் மக்களின் காதலைப் பாடியவர் பாவேந்தர் பாரதிதாசன்.

வண்டிக்காரன், மாடுமேய்ப்பவன், ஆலைத்தொழிலாளி, உழத்தி போன்ற தொழிலாளர்களின் காதல் வலிமையை மிகவும் அற்புதமாகத் தனது இசையமுது மூலமாக படைத்திருக்கின்றார். அதுமட்டுமின்றித் தமிழ் மொழியின் வலிமையைத் தன்னுடைய சிந்தனைகளாக மாற்றி காதலர்கள் போற்றுகின்ற கவிதைகளைப் படைத்திருக்கின்றார் புரட்சிக் கவிஞர். 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்த சங்க இலக்கியத்திலிருந்த மொழி ஆற்றலையும் காதல் ஆற்றலையும் உள்வாங்கி அவற்றைத் தற்போதைய நவீன உலகத்தில் வாழ்ந்து வரும் காதலர்களின் சிந்தனையாக உருமாற்றி தந்துள்ளார்.

**துணைநூற் பட்டியல்**

1.இசையமுது- பாவேந்தர் பாரதிதாசன்—மணிவாசகர் பதிப்பகம்

2.சிலப்பதிகாரம் மூலமும் உரையும்—புலவர் பொ.வே. சோமசுந்தரம்.

3. சிலப்பதிகாரத்து இசைத்தமிழ்—டாக்டர்.எஸ்.இராமநாதன்.

4.தேவாரப் பண்ணிசை-பேரா.ஞானாம்பிகை-தமிழ் இணையக் கல்விக்கழகம்.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய*www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX,* பதிப்பு *22,* ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நாலடியாரில் அறநெறிச் சிந்தனைகள்

**முனைவர் கா.லிங்கவேல்,**
முதுகலை தமிழ் ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
சிவகுருநாதபுரம், சுரண்டை,
தென்காசி மாவட்டம்,
அ.கு.எண்: 627859

**முன்னுரை:**

தமிழ் இலக்கியங்களின் முக்கியமான நோக்கம் வாழும் மக்களுக்கு அறம் உரைப்பதே ஆகும். மனித இனத்தை மேலும் மேன்மை அடையச் செய்வது, **"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"** என்பது ஆன்றோர் முதுமொழி ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக வைத்து எண்ணப்படும் பெருமைக்குரியனவாகும். நூல் முழுமைக்கும் நானூறுப் பாடல்களை நாற்பது அதிகாரங்களாக பகுத்தும், தொகுத்தும் அமைக்கப்பட்டு உள்ளதை நாம் காணலாம். நாலடியாரில் அறநெறி சிந்தனைகள் என்னும் தலைப்பில் (ஐ)கல்வி (ஐஐ)சமூகம் (ஐ)அறன் வலியுறுத்தல் (ஐை)நட்புறவு (ஐைை)ஒற்றுமை வாழ்க்கை (ஐ)பொருளாதாரப் பரிவர்த்தனை (எ)பிறருக்கு உதவும் மனப்பான்மை (எ)நிலையாமைத்தத்துவம் (எை)பிறன்மனை நோக்கா பேராண்மை (எைை)கற்பு நெறி மகளிர் (ஒ)பெருமை (ஐஐஐ)ஆன்மீக வாழ்க்கை (ஐஏ)அரசியல் அறம் ஆகிய தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது.

**ஐ கல்வி**

ஆறறிவு படைத்த மனிதன் கல்விக் கற்பதனால் முழுமைப் பெறுகிறான். "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பார் ஔவையார். நாடாளும் மன்னனை விட கல்வி கற்ற ஒருவனே சிறப்புடையவன் என்பதை கற்றோர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை மூதுரை 26-வது பாடல் வாயிலாக அறியலாம்.

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர் (குறள் எ- 393)**

கற்றவர்களே கண் உடையவர்கள், கல்வி கற்காத ஒருவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்று திருவள்ளுவர் கூறுவதையும் நாம் அறிந்ததே. நாலடியாரில் பொருட்பால் 14-வது அதிகாரமான கல்வியில் ஓர் ஆண் மகனுடைய தலைமுடி அவனுடைய மற்ற படைபலங்கள், அடுத்ததாக பெண்கள் ஒப்பனைச் செய்து கொள்ளும் மஞ்சளும் மானிடருக்கு அழகு சேர்ப்பது இல்லை. சான்றாக நல்ல கல்வி கற்று நடுவுநிலை மாறாமல் உள்ளத்தால் நல்லவர்களாய் வாழும் வாழ்க்கையே ஒரு மனிதனுக்கு அழகு தரும் என்பதை உறுதிபட கூறுவதைக் காணலாம்.

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவு நிலையால்**
**கல்வி அழகே அழகு – (நாலடி-131) – (குஞ்சி-ஆண் தலைமுடி)**

இந்த உலகில் கல்வி ஒன்றே அழியாத செல்வம் ஆகும். வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாது. வெந்தழலால் வேகாது. பகைவராலும் வெல்ல முடியாது, கள்வராலும் கொள்ளை போகாத ஒரே ஒரு நிலையான செல்வம் எனலாம்.

ஐஐ **சமூகம்**

(i) **அறன் வலியுறுத்தல்:-**

தன் மனதில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறநத் அறம் என்பார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். ஆம் உண்மைதான். இவ்வுலகம் இன்னும் சீராக இயங்கிக்கொண்டிருக்கும் நிலைக்கு அறம் சார்ந்த செயல்பாடுகளும், அதனால் விளையும் பயன்பாடே காரணம் என்பர்.

**மக்களா லாய பெரும்பயனும் ஆயுங்கால்**
**எத்துணையும் ஆற்ற பலவானால் - தொக்க உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க் கிடந்துண்ணப் பண்ணப் படும் - (நாலடி – 37)**

இப்பூமியில் நாம் மக்களாகப் பிறந்த தன் பலன் என்னவென்று ஆராய்ந்தால் அவை பல திறப்பட்டவையாக இருந்தாலும் நம் பிறவிப்பயன், நம் உடல் உறுப்புகளுக்கு சுகமும், நாவிற்கு சுவையும் தருகிற செயல்களில் மட்டும் ஈடுபட்டு மகிழ்வது இல்லை. மாறாக, பேரின்ப வாழ்வுதரும் நல்லறம் செய்வதே பிறவிப் பயன்பாடு என்கிறது நாலடியார்.

(ii) <u>நட்புறவு</u>:-

நட்பு பற்றி கூறவந்த திருவள்ளுவர் கூட நான்கு அதிகாரங்களில் நாற்பது குறள்கள் (1. நட்பு, 2. நட்பாராய்தல் 3. தீ நட்பு, 4. கூடா நட்பு ) பாடியுள்ளார். ஆனால் நாலடியார் முப்பது பாடல்களில் 1. நட்பாராய்தல் 2. நட்பிற் பிழை பொருத்தல் 3. கூடா நட்பு நட்பின் நன்மை, தீமை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

**நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை**
**அல்லா ரெனினும் அடக்கிக் கொளல் வேண்டும்**
**நெல்லுக் குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு**
**புல்லிதழ் பூவிற்கும் உண்டு (நாலடி - 221)**

ஒருவரை நல்லவர் என நம்பி நாம் ஏற்றுக்கொண்ட ஒருவரிடம் சிறு தவறுகள் காணப்பட்டாலும் நாம் தாங்கிக் கொள்ளவேண்டும். உயிர் காக்கும் உணவு தரும் நெல்லுக்கும் தவிடு என்ற ஒரு குறை உண்டு. நுரை என்னும் களங்கம் நீரின் தூய்மையைக் கெடுக்கும். நன்கு மணம் பரப்பும் பூவிற்கும் புற இதழ் உண்டு. ஆதலால் குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி நண்பர் குறை தாங்குதல் நிறைவான பண்பு என்பதை வலியுறுத்தி கூறுவதை அறியலாம்.

**iii) ஒற்றுமை வாழ்க்கை:- அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம் நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப் - பழுமரம்போல் பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே நல்லாண் மகற்குக் கடன் (நாலடி - 202)**

'வெயிலின் அருமை நிழலில் தெரியும்' என்ற பழமொழிக்கு ஏற்ப ஒருவர் வெப்பத்தால் வாடி வருந்தி ஒதுங்க நிழல்தேடி வருபவர்களுக்கு மரம் குளிர்ந்த நிழல் தந்து உதவுகிறது. பழுத்த மரங்கள் தன்னை அண்டியவர்களுக்கு உண்ணக் கனி கொடுத்து உதவுகின்றன. இதுபோலவே பலரும் பயன் அடைந்து மகிழும்படி வாழ்வதே பாடுபட்டு பணம் சேர்த்து வாழும் ஆண்மகனுக்கு அதுவே அழகாகும் என்ற செய்தியை நாலடியார் மூலம் நாம் நன்கு அறியலாம். மேலும், பெரியோர்களிடம் காணப்படும் பெருஞ்சிறப்பு சிறியர்பெரியர் என்ற வேறுபாடு இன்றி எல்லோரிடத்தும் அன்பும், பணிவும் காட்டும் தன்மை, அடக்கம் என்னும் உயர் பண்பாடு கொண்டு விளங்கும். பணம் படைத்தவர்கள் தம்மை அண்டி வருபவர்களின் துன்பம் துடைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்பவர்கள் உண்மையில் அருட்செல்வர் என்னும் சிறப்புக்கு உரியார் என்று அனைவராலும் போற்றப்படுவர்.

**பெரியார் பெருமை சிறுதகைமை ஒன்றிற்**
**குரியா ருரிமை யடக்கம் - தெரியுங்கால் செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தார் அல்லல் களைப வெனின் - (நாலடி - 170)**

iv) <u>பொருளாதாரப் பரிவர்த்தனை</u>:-

தான் பெற்ற செல்வத்தின் பயனை தானும் அனுபவிக்க மாடட்டான். துறவிகளுக்குக் கூட தந்துதவ மாட்டான். வீணாக அதைப் பாதுகாத்து வைத்து கொண்டிருக்கும் அறிவில்லாத மூடனைப் பார்த்து அவன் சேர்த்து வைத்திருக்கிற பொருள்கூடக் கேலி செய்யும். மேலும் உலகின் நல்லறம் அவனைப் பார்த்துச் சிரிக்கும். என்பதை

**துய்த்துக் கழியான் துறவோர்க்கொன்றீகலான் வைத்துக் கழியும் மடவோனை – வைத்த பொருளும் அவனை நகுமே உலகத்து**
**அருளும் அவனை நகும் (நாலடி – 273)**

நாலடி உணர்த்துவதை அறியலாம். மேலும், மிகுந்த அலையை வீசும் கடல்நீர நமக்கு அருகே இருந்தாலும் தம் தாகம் தீர்க்க மனிதர்கள் அதை நாடிசெ சலவ் திலன் ல. குறைந்த அளவே நீர் இருந்தாலும் குளம், கிணறு, ஆறு போன்ற நீர் நிலைகளையே நாடுவர். அதுபோலவே, செல்வம் உடைய பெரும் பணம் கொண்ட அற்பர் அருகே இருந்தாலும் அவரிடம் செல்லாது. பிறர்க்கு உதவும் மனம் உடைய நல்லவர் வெகு தொலைவில் இருந்தாலும் வறியவர் அவர்களிடமே சென்று பயன்பெறுவர்.

**மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும் வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றெண்பர்**
**செல்வம் பெரிதுடைய ராயினும் சேட்சென்றும்**
**நல்குவார் கட்டே நசை (நாலடி-263) (சேட - தொலைவில்)**

v) <u>பிறருக்கு உதவும் மனப்பான்மை</u>:-

மழைக்காலத்தில் பெருக்கெடுத்து வரும் ஆறு நீரால் உலகுக்கு உணவூட்டி நீர்ப்பெருக்கும் சிறந்து விளங்கும் கோடை காலத்தில் நீர் வற்றி வறண்ட போதும் தனது ஊற்று நீரால் மக்களுக்கு உதவும் தன்மை போல பிறருக்கு உதவும் பெரியோர்கள் வறுமைப்பட்ட நேரத்திலும் சிலருக்காவது கொடுத்து உதவும் நற்செயலை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பர் என்ற செய்தியை பின்வரும் பாடலில் அறியலாம்.

**உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்**
**கல்லூற் றுழியூறும் ஆறேபோல் - செல்வம் பலர்க்காற்றிக்**
**கெட்டுலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச் செய்வர் செயற்பா லவை (நாலடி – 185)**

vi) நிலையாமைத் தத்துவம்:-

நாலடியார் தம் நூலில் முதல் மூன்று அதிகாரங்களில் செல்வம், இளமை, யாக்கை ஆகியன இவ்வுலகில் என்றும் நிலையற்ற தன்மை உடையன என்பதை **'உள்ளங்கை நெல்லிக்கனிப் போல'** தெற்றென தெளிவாக உணர்த்தும் தன்மை கொண்டனவாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

**செல்வர்யாம் என்று தாம் செல்வுழி எண்ணாத**
**புல்லறிவாளர் பெருஞ்செல்வம் எல்லில்**
**கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல்**
**தோன்றி மருங்கறக் கெட்டு விடும் (நாலடி - 8)**

நாம் இன்று பெருஞ்செல்வம் பெற்று உள்ளோம் என்ற இறுமாப்பில் நாளை என்ன நடக்கும் என்பதை உணராது வாழ்பவர் நம்மில் பலர் உண்டு. செல்வமும் வாழ்க்கையும் இருளில் தோன்றி மறையும் மினன் லைபே பால் நிலையற்ற தன்மைக் கொண்டது. எனவே நாம் வாழும் போதே நல்லறங்களை உடனே செய்து முடித்தல் வேண்டும என்று வலியுறுத்திக் கூறுவதை உணரலாம். மேலும் நாலடியார் இளமைப் பற்றிக் கூறும்போது குளிர்ந்த சோலையில் காய்த்து பழம் பழுத்து குலுங்கும் மரங்கள் எல்லாம் ஒருநாள் உதிர்ந்து வெறுமையுற்று இருப்பதைப் போல இளமையும் அழகும் தன்னைவிட்டு காலத்தால் கழிந்துபோகும். அதுபோல வேல் போன்ற கண்ணுடையவள் என்று விரும்பி நீங்கள் ஆசை வைக்கும் அவளும் ஒருநாள் கோல் ஊன்றி நடக்கும் கூன் உடைய முதுகு தோன்றி முதியவளாக வாழும் வாழ்க்கையை உணர்த்துகிறது.

**பருவம் எனைத்துள பல்லின்பால் ஏனை**
**இருசிகையும் உண்பீரோ என்று வரிசையால் உண்ணாட்டம்**
**கொள்ளப்படுதலால் யாக்கைக் கோள் எண்ணார் அறிவுடை யார் (நாலடி-18)**

அடுத்ததாக, யாக்கை பற்றி நாலடியார் கூறும் போது பனிக்காலங்களில் புல் நுனியில் மேல் பனிநீர் முத்துமுத்தாக தங்கியிருக்கும் அப்பனி நீர் வெய்யோன் வரவர ஆவியாகி மறைநது போகும். அதுபோல இவ்வு டம்பு ஒருநாள் மறைந்து போகும் தன்மை கொண்டது. ஆகையால் இப்பூத உடலைத் தாங்கி வாழும்போதே நல்லறம் செய்து முடிக்க வேண்டும். மாறாக இப்போது நன்றாகத்தான் இருந்தான். நோயென்று படுத்தான், சுற்றத்தார் கதறி அழ செத்து விட்டான் என்ற நிலை எப்போது வேண்டுமானாலும் ஒருவருக்கு வரலாம் என்ற நிலையாமைத் தத்துவத்தை **'பசுமரத்து ஆணிபோல'** பதமாக கூறிச் செல்வதை அறியலாம்.

**புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி இன்னினியே**
**செய்க அறவினை - இன்னினியே நின்றான் இருந்தான் கிடந்தன**
**தன்கேள்அலறச் சென்றான் எனப்படுதலால் (நாலடி - 29)**

vii) **பிறன்மனை நோக்கா பேராண்மை**:-

வில் விடும் அம்பும், கொடிய நெருப்பும், சூரிய வெப்பமும் சுடுகின்ற தன்மை உடையவை என்றாலும் அவை சுட்டுத் துன்புறுத்துவது வெளி உடலைத்தான். ஆனால் அழுது வருந்தும்படி மனத்தைச் சுட்டுத் துன்புறுத்துவதால் பிறன்மனைவியை விரும்புகிற பாதகச்செயல் அம்பையும், நெருப்பையும் விட தீயது என்று பயந்து ஒதுக்க வேண்டும் என்பதை,

**அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்**
**வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் - வெம்பிக்**
**கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்**
**அவற்றினும் அஞ்சப் படும் (நாலடி - 89)**

எ.கா கமப் ராமாயணத்தில் வரும் இராமன ் மனநிலை போலும் ஒவெ வாரு மானிடனும் வாழவேண்டும் என்பதை உறுதியாக கடைபிடிக்க வேண்டும்.

viii) **கற்புநெறி மகளிர்**:-

நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும் மேலாறு மேலுறை சோரினும் - மேலாய வல்லாளாய் வாழும் ஊர்தற்புகழ மாண்கற்பின்
இல்லாள் அமர்ந்ததேஇல் - (நாலடி - 383)

வீட்டின் நான்கு பக்கம் சுவர்களும் இடிந்தும், அந்த வீடும் மிகச் சிறியதாகவும், மழை பெய்தால் உள் ஒழுகும் பிய்ந்த கூரை உடையதாகவும் இருந்த பொழுதும் இவை எல்லாவற்றையும் பொறுத்தும் கொண்டு வாழும் மனவலிமையும், ஊர்மக்கள் போற்றிப்புகழும் கற்பு நெறியும் உடைய மனைவி இருக்கிற வீட்டிற்குத்தான் வீடு என்று பெயர் அதுவே நல்லறம் என்று கருதப்படும்.

ஐஒ) **பெருமை**:-

ஒருவர் எப்போதும் நல்லவர்களுடன் சேர்ந்திருத்தல், இன்சொல் பேசுதல், பொருள் இல்லாதவர்களுக்கு ஒன்றை கொடுத்து உதவுதல், மேலும் மனத்தளவில் மாசற்றவனாக வாழ்தல் ஆகிய எல்லா நல்ல குணங்களும், மாணிக்கமும், முத்தும் ஒளிவீசும் கடற்கரைப் பட்டினத்துக்குரியவனே! உயர்குடியில் பிறந்தவர்களிடம் மட்டுமே பொருந்தி இருக்கக்கூடிய நல்ல குணங்களே பெருமை தருவனவாகும்.

**இனநன்மை இன்சொல் ஒன்றிதல் மற்றேனை மனநன்மை என்றிவை யெல்லாம் - கனமணி முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப**
**இற்பிறந்தார் கண்ணேயுள. (நாலடி - 146)**

ஐஐஐ ஆன்மீக வாழ்க்கை

நாலடியார் கடவுள் வாழ்த்துப்பாடல் அருகக்கடவுளை போற்றும் தன்மையை நாம் அறிந்ததே சமணமுனிவர்கள் பலர் இயற்றிய இந்நூலானது ஆன்மீக வாழக்கையைக் கூறும் போது ஒருமனிதன் தன் உடல், வாய், கண், காது, மூக்கு என்கிற ஐம்புலன்களாலும் எழும் ஆசையை அடக்கி அவற்றைத் தீயவழியில் செல்லாமல் காத்து நல்வழியில் செலுத்தும் மனவலிமை உடையவர்கள் நிச்சயமாக பேரின்ப வாழ்வு பெறும் பெருமைக்குரியவர் ஆவார்கள் என்பதை,ள

**மெய்வாய்கண் மூக்குச் செவியெனப்பேர் பெற்ற**
**ஐவாய வேட்கை அவாவினைக் - கைவாய் கலங்காமற் காத்துய்க்கும் ஆற்ற லுடையான் விலங்காது வீடு பெறும் (நாலடி-59)**

இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

ஐஏ **அரசியல் அறம்:**

இவ்வுலகில் வாழும் பசுக்கள் பல நிறம் உடையவனாக இருக்கலாம். ஆனால் அவை எல்லாம் தரும் பாலின் நிறம் ஒரே வெண்மை நிறம்தான் எனப்தில் மாற்றம் இல்லை. அதுபோல முறை செய்து காப்பாற்றும் மன்னவன் உலகில் அறம் செய்யும் முறையும் வழியும் பலவாக இருந்தாலும் அதனால் வருகிற பயன் மக்களுக்கு நன்மை என்பதில் மாற்றம் இல்லை என்பதை,

**ஆவேறுருவின் வாயினும் ஆபயந்த**
**பால்வே லுருவின வல்லவாம் - பால்போல்**
**ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்**
**உருவு பலகொளல் ஈங்கு (நாலடி – 118)**

பாடல் மூலம் அறியலாம்.

**முடிவுரை:**

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும் (குறள் - 138)**

சொல் நயம், பொருள் நயம் மிகுந்த இந்நூல் திருக்குறளுக்கு இணையாகப் பெருமை பெற்று விளங்குகிறது. மேலும் ''கல்வி கரையில கற்பவர் நாற்சில'' எனும் பாடலில் வரும் 'தெள்ளிதின் நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து' என்னும் பாடலடியில் வரும் அன்னப் பறவை ஒரு காலத்தில் வாழ்ந்ததாக அறியப்படும் வரலாற்றுப் பெட்டகமாக உள்ளது எனலாம். பாலோடு கலந்த தண்ணீர் எவ்வாறு வெண்மை நிறம் பெறுகிறது என்பதை 'பருகற் கமைந்தபால் நீரளா யற்றே' என்னும் பாடலடி நட்பின் தன்மையை விளக்கிக் கூறுவதாக அமைகிறது. மேற்கண்டவாறு கல்வி, சமூகம், ஆன்மீகம், அரசியல் ஆகிய தலைப்புகளில் நூல் முழுமையும் எடுத்துக்கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் தேடுபொருளாக அமைந்துள்ளது.

**ஆய்வுக்குப் பயன்பட்ட துணைநூற்பட்டியல்**

1. சமணமுனிவர் பலர், நாடிலயார், உமா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை மூன்றாம் பதிப்பு ஜுன் 1998.
2. திருவள்ளுவர் திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 2002.
3. ஔவையார் - ஆத்திசூடி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை 108. மூன்றாம் பதிப்பு 1987.
4. தமிழ் இலக்கியக்கழகம் நன்னெறி நூல், தமிழ் இலக்கியக்கழகம் (பதிப்புரிமை), திருச்சிராப்பள்ளி 1980.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX,* பதிப்பு *22,* ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நாலடியார் நவிலும் அறத்தின் அவசியம்!

**முனைவர் மு. முஹம்மது சலீம்,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் முதுகலை ரூ ஆய்வுத்துறை,
புதுக்கல்லூரி (தன்னாட்சி),
இராயப்பேட்டை, சென்னை – 14.

## ஆய்வு முன்னுரை:

இலக்கியம் என்பது கற்பனைகள் வாயிலாக கற்போரைக் களிப்படையச் செய்வதோடு நின்றுவிடக் கூடாது. அவர்களை நல்வழிப்படுத்தவும் வேண்டும். அப்போதுதான், காலத்திற்கும் நிலைத்து நிற்கின்ற தலைச்சிறந்த இலக்கியமாக திகழும். இவ்வுயந்த தன்மை தமிழிலக்கியத்திற்கு கூடுதலாக இருக்கின்றது. இப்படியாக, தமிழிலக்கியத்தில் பதிவாகியுள்ள அறக்கருத்துகள் தொடர்பாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வு எல்லை:

மனிதனைப் பண்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்ட நிறைய நூல்கள் தமிழ் மொழியில் எழுந்துள்ளன. அத்தகைய நூல்களுள் ஒன்று தான், நாலடியார். இந்நூல் மட்டுமே இந்த ஆய்வுக் கட்டுரைக்குரிய ஆய்வு எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## அறம் - பொருளும் விளக்கம்:

மனிதர்கள் தங்களுக்குள் முறைப்படுத்தி ஏற்றுக் கொண்டுள்ள ஒழுக்க நெறியிலான சிந்தனைகளும் செயல்களும் அறம் எனப்படும். இவ்வகையில், தம்மிடம் இருப்பது கொண்டு பிறருக்கு உதவுவது, துன்பம் விளைவிக்காமல் இருப்பது அனைத்தும் அறமே ஆகும்.

## நாலடியாரில் நவிலும் அறம்:

அறம் எனும் சொல், இடத்தைப் பொருத்து பல நிலைகளில் பயன்படுத்தப்படும். ஒரு மனிதன் தன்னளவில் கடைபிடிக்க வேண்டியது தனிமனித அறம், குடும்ப உறுப்பினர்கள் கடைபிடிக்க வேண்டியது குடும்ப அறம், ஆள்வோர் கடைபிடிக்க வேண்டியது அரசியல் அறம். தனிமனிதன், குடும்பம், நாடு போன்ற வரம்பு இல்லாமல் மனிதர்களாக பிறந்த அனைவரும் கடைபிடிக்க வேண்டியது மானுட அறம்.

இப்படியாக, மனிதர்களாகிய நாம் கடைபிடிக்க வேண்டிய அறங்கள் குறித்து நாலடியாரில் கூறப்படுள்ளது. முன்பாக, அறத்தைக் கடைபிடிப்பதின் அவசியத்தை நாலடியார் அழகுற விளக்கியுள்ளார்.

## அறம் செய்வதே பிறவிப் பயன்:

இப்பூமிப் பந்தின் மீது பல கோடி படைப்பினங்கள் உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்த இனமாக மனிதன் குலம் திகழ்கிறது. இங்கு மனிதனாகப் பிறந்திருப்பதின் முக்கிய நோக்கம் அறம் செய்வதே என்பது பற்றி நாலடியார்,

**அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்**
**பெரும் பயனும் ஆற்றவே கொள்க - கரும்பூர்ந்த**
**சாறுபோல் சாலவும் பின்உதவி மற்றதன்**

**கோதுபோல் போகும் உடம்பு.** (34) 1

என்று உணர்வுபொங்க உரைக்கிறார்.

உண்டுப் பருகிக் களிப்பது, வேடிக்கைகளில் வீழ்ந்து பொழுதைப் போக்குவது மட்டுமே இவ்வரிய வாழ்வின் இலக்காகச் சிலர் கருதுகிறார்கள். இத்தகைய நபர்களைக் குறித்து,

**தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்**
**கூற்றம் அளந்துநும் நாளுண்ணும் - ஆற்ற**
**அறஞ்செய் தருளுடையீர் ஆகுமின் யாரும்**
**பிறந்தும் பிறவாதார் இல்.** (7) 2

என்று நாலடியார் இடித்துரைக்கிறார்.

ஒவ்வொரு நாளும் சூரியன் உதிக்கின்றது் மறைகின்றது. இப்படி நாட்கள் கழியக்கழிய வாழ்நாளும் கழிந்து கொண்டே இருக்கிறது. இதைப் புரியாமல் அறத்திலே கவனம் செலுத்தாமல் வெறுமனே வேடிக்கை நிகழ்வுகளில் மூழ்கிக் கிடப்பவர்கள், இவ்வுலகில் தாம் பிறந்திருப்பதின் பயனை அடையாதவர் என்கிறார், நாலடியார்.

**ஆன்றோர் அறம் செய்வர்:**

இன்பமும் துன்பமும் கலந்ததுவே வாழ்க்கை. நமது வாழ்வு எந்நாளும் ஒன்றுபோலவே இருக்காது. இப்போது இருக்கும் இன்பச் சூழலே எப்போதும் நிலைத்திருக்கும் என்று எண்ணிவிடக் கூடாது. இதுபற்றி நாலடியார்,

**மன்றம் கறங்க மணப்பறை யாயின**
**அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை**
**ஒலித்தலும் உண்டாமென்று உய்ந்துபோம் ஆறே**
**வலிக்குமாம் மாண்டார் மனம்.** (23) 3

என்று எடுத்துரைத்து அறம் செய்யுமாறு அறிவுறுத்துகிறார்.

திருமணம் முன்னிட்டு மங்கல ஒலி எழுந்த இடத்தில் மரணம் பொருட்டு சாவுப்பறை ஒலிக்கவும் வாய்ப்பு உண்டு என்பதை அறிவுடைய பெரியோர் அறிவர். ஆகவே அவர்கள் அறச்செயல்களில் அக்கறை செலுத்துவர் என்று விளக்குகிறார். இதே கருத்தினை இன்னொரு பாடலிலும்,

**வெறியயர் வெங்களத்து வேல்மகன் பாணி**
**முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க**
**மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி**
**அறிவுடை யாளர்கண் இல்.** (16) 4

என்று எடுத்துரைக்கிறார்.

பலிகொடுப்பதற்காகப் பூசாரியால் இழுத்துவரப்படும் ஆடு, அவரது கையில் இருக்கும் இலைதழைகளைத் தின்னத் துடிப்பது போன்று அறம் செய்யாமல் அற்பமான காரியங்களில் ஆன்றோர்கள் ஈடுபடமாட்டார்கள் என்று நாலடியார் உணர்வு பொங்கும் வண்ணம் குறிப்பிடுகிறார்.

**சிறிய அறமும் பெரிய பயனும்:**

குறிப்பிட்ட சில செயல்களை மட்டும் அறம் என்று எண்ணி விடக் கூடாது. நல்ல நோக்கத்தில் நல்வழியில் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் அறச்செயல்களாகும். இவ்வகையில் வாழ்வில் நாம் கடைபிடிப்பதற்கு அறச்செயல்கள் பல உள்ளன என்பதை,

**மக்களா லாய பெரும்பயனும் ஆயுங்கால்**
**எத்துணையும் ஆற்றப் பலவானால் - தொக்க**
**உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகாதுஉம்பர்க்**
**கிடந்துண்ணப் பண்ணப் படும்.** (37) 5

என்று நாலடியார் தெளிவுபடுத்துகிறார்.

பெரிய அளவிலான அறச்செயல்கள் செய்தால் போதுமென இருந்துவிடால் சின்னஞ்சிறு அறச்செயல்களிலும் கவனம் செலுத்துமாறும் அவற்றிலும் கூட மிகப் பெரும் பாக்கியம் கிடைக்கும் எனவும் அறிவுறுத்துகிறார்.

**உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி**
**இறப்ப நிழற்பயந் தாஅங்கு - அறப்பயனும்**
**தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்**

**வான்சிறிதாப் போர்த்து விடும். (38) 6**

**செல்வத்தால் விளையும் அறம்:**

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு. இங்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாயினும் செல்வம் அவசியம். அத்தகைய செல்வத்தைத் தமது தேவைக்குப் போகப் பிறருக்கும் கொடுத்து உதவுவது பெரும் அறமாகும். இதைச் செய்யுமாறு,

**இழைத்தநாள் எல்லை இகவா பிழைத்தொரீஇக்**
**கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை - ஆற்றப்**
**பெரும்பொருள் வைத்தீர், வழங்குமின் நாளைத்**
**தழீஇம்தழீஇம் தண்ணம் படும். (06) 7**

என்ற வரிகளில் கூறுகிறார்.

தமது தேவைக்குப் போக எஞ்சிய செல்வத்தைச் சேர்த்து வைப்பதில் தவறேதும் இல்லை. சிலரோ தமது பல தலைமுறைக்குப் போதுமான செல்வம் பெற்றிருப்பினும் அவற்றை அடுத்தவருக்குக் கொடையளிப்பதில் அலட்சியமாக இருக்கிறார்கள். இத்தகையவர்களுக்கு நாலடியார்,

**என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்**
**பின்னாவ தென்று பிடித்திரா - முன்னே**
**கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்**
**கொடுத்தாறு செல்லும் சுரம். (05) 8**

என்று அறிவுரை பகர்கின்றார்.

தேனீக்கள் கடும் உழைப்பால் சேர்த்துவைத்துக் கொண்ட தேன்களை உண்டு முடிப்பதும் இல்லை அடுத்தவர்களுக்கும் உண்டு மகிழ அளிப்பதும் இல்லை. இவ்வாறு தானும் பயன்படுத்தாமல் பிறருக்கும் தராமல் மறைத்தும் தடுத்தும் வைத்திருக்கிற செல்வம் பயனற்றுப் போகும் என்று நாலடியார் மனம் குமுறுகிறார்.

**உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்**
**கெடாஅத நல்லறமும் செய்யார் - கொடாஅது**
**வைத்தீட்டி னார்இழப்பர், வான்தோய் மலைநாட!**
**உய்த்தீட்டும் தேனீக் கரி. (10) 9**

பிற்காலத்தில் தமக்கு உதவும் என்று எண்ணிக் கொண்டு செல்வத்தைப் பூட்டி வைத்துக் கொண்டு வாழ்வதால் மரணத்தில் இருந்து தப்பித்துவிட முடியாது என்று எச்சரிக்கிறார். இத்தைய ஆட்களின் தன்மை குறித்து,

**உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்**
**துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே**
**வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அஆ**
**இழந்தான்என் றெண்ணப் படும். (09) 10**

என்று குறிப்பிடுகிறார், நாலடியார்.

செல்வத்தை அறச்செயல்களுக்கு அளிக்காமல் கருமித்தனம் கொள்பவர்கள் உயிரோடு இருந்தாலும் இறந்தவர்களைப் போன்றவரே என்று கண்டிக்கிறார்.

**அறத்திற்கு உதவும் உடல் வலிமை:**

செல்வத்தைப் போன்று ஆரோக்கியமும் உடல் வலுவும் மிகப்பெரும் அருட்கொடை ஆகும். சிலர் மற்றவரைக் காட்டிலும் சிறந்த உடல் வலிமையைப் பெற்றிருப்பார்கள். அவர்கள் அதைக் கொண்டு அறச்செயல்களில் ஈடுபட வேண்டும் என்பது குறித்து,

**யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற**
**யாக்கையா லாய பயன்கொள்க் - யாக்கை**
**மலைநாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே**
**நிலையாது நீத்து விடும். (28) 11**

என்கிறார், நாலடியார்.

குழந்தை மற்றும் முதியப் பருவத்தைக் காட்டிலும் இளமைப் பருவத்தில் உடல் பலம் அதிகம் இருக்கும். ஆகவே இளைஞர்களாக இருப்பவர்கள் தங்களது உடல்

வலிமை மூலம் அறச்செயல்கள் செய்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதை,

**மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்**
**முற்றியிருந்த கனியொழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு. (19) 12**

என்று விளக்குகியுள்ளர்.

**<u>நிலையாமையை எண்ணி அறம் செய்க:</u>**

இவ்வுலகில் எதுவும் நிரந்தம் இல்லை. செல்வம், இளமை, யாக்கை மட்டுல்ல உலக வாழ்வும் கூட ஒரு நாள் காணாமல் போய்விடும். இப்படியான நிலையாமையை நினைவில் கொண்டு அறம் செய்ய முன்வர வேண்டும் என்கிறார், நாலடியார். இதோ பாருங்கள்.

**புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி**
**இன்னினியே செய்க அறவினை - இன்னினியே**
**நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்**
**சென்றான் எனப்படுத லால். (29) 13**

புல்லின் நுனிமேல் இருக்கும் பனித்துளியானது ஆதவன் வந்ததும் காணாமல் சென்று விடும். விதி வந்துவிட்டால் உலக வாழ்வு முடிந்துவிடும் என்று உவமையால் உணர்த்துகிறார். மேலும்,

**நின்றன நின்றன நில்லா எனஉணர்ந்து**
**ஒன்றின ஒன்றின வல்லே செயின்செய்க்**
**சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்**
**வந்தது வந்தது கூற்று. (04) 14**

என்று எச்சரிக்கிறார்.

தம்மைக் காத்துக் கொள்வதற்காக மனிதன் சேர்த்து வைத்துக் கொள்கின்ற எந்தவொன்றும் நிலையானது அல்ல. அனைத்தும் அழியக் கூடியதே என்பதை அறிந்து அறம் செய்யுமாறு மன்றாடுகிறார்.

**<u>இப்போதே அறம் செய்க:</u>**

மனிதர்களில் சிலர், அறச்செயல்களில் ஈடுபடுவதின் அவசியத்தை அறிந்து வைத்திருப்பார்கள். ஆனால் அடுத்த நாள் செய்வோம் இன்னொரு நாள் செய்வோம் என்று வாய்ப்பைத் தள்ளிப்போட்டுக் கொண்டே இருப்பார்கள். இப்படி இல்லாமல், அறம் செய்ய விரையுமாறு நாலடியார்,

**இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது**
**பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி**
**ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்**
**மருவுமின் மாண்டார் அறம். (36) 15**

என்று அறிவுரை பகர்கின்றார்.

சூரியன் காலத்தையும் ஆயுளையும் அளவிடும் கருவியாக இருக்கிறது. சூனியன் வந்துச் செல்லும் போதெல்லாம் வாழ்நாள் குறைந்து கொண்டே இருக்கின்றது. ஆகவே மரணத்திற்கு முன் அறப் பணியில் ஈடுபடுமாறு,

**வாழ்நாட்கு அலகுஆ வயங்கொளி மண்டிலம்**
**வீழ்நாள் படாஅது எழுதலால் - வாழ்நாள்**
**உலவாமுன் ஒப்புர வாற்றுமின் யாரும்**
**நிலவார் நிலமிசை மேல். (22) 16**

என்று வழிகாட்டுகிறார், நாலடியார்.

உலகில் இறந்துபோகிற மனிதன் இங்கிருந்து எதையும் கொண்டு செல்ல இயலாது. அவன் கொண்டுச்செல்லும் வகையில் ஏதேனும் இருக்கிறது எனில் அது அறத்தினால் கிடைக்கும் பாக்கியம் மட்டுமே ஆகும். ஆகவே அதற்கேற்ப செயல்படுமாறு பின்வருமாறு நம்மை நாலடியார் வழிப்படுத்துகிறார்.

**ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்**
**தோட்கோப்புக் காலத்தால் கொண்டுய்ம்மின் - பீட்பிதுக்கிப்**

**பிள்ளையைத் தாய்அலறக் கோடலான் மற்றதன்**
**கள்ளம் கடைப்பிடித்தல் நன்று. (20) 17**

**அறம் செய்வோருக்குக் கவலை இல்லை:**

உலக வாழ்வுக்குப் பின்னருள்ள வாழ்க்கையில் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும் என ஆசைகொள்பவர்கள் அறம் செய்ய களமிறங்க வேண்டும். ஏனெனில் அறம் மட்டுமே அந்த வாழ்க்கையில் கவலை இல்லாத தகுதியைக் கொடுப்பதாக,

**கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்**
**வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**
**வருங்கால் பரிவ திலர். (35) 18**

என்று குறிப்பிடுகிறார், நாலடியார்.

மறுமை வெற்றியை அனைவரும் விரும்புகின்றனர். ஆனால் அதற்கு ஏற்ற வழியை அறிவதும் இல்லை. அறிந்தால் அதன்படி செயல்படுவதும் இல்லை. இந்நிலை மாற வேண்டும். மோட்சத்தை விரும்புவோர் அறம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

**ஆய்வு முடிவுரை:**

நீதி, நேர்மை, தர்மம், கொடை, இரக்கம் என்று நாம் கடைபிடிக்க வேண்டிய அறச்சிந்தனைகள் மற்றும் அறச்செயல்கள் நிறைய இருக்கின்றன. இவை நம் வாழ்வில் வெளிப்பட வேண்டுமெனில் முதலில் அறத்தின் அவசியத்தை அறிய வேண்டும். இவ்வகையில் அறத்தின் அவசியம் குறித்து நாலடியார் அருளியுள்ள கருத்துக்களை இவ்வாய்வுக் கட்டுரையில் கண்டுள்ளோம்.

**மேற்கோள்கள்:**

1. நாலடியார், பாடல் எண்: 34, பக்கம் - 14
2. மேலது, பாடல் எண்: 07, பக்கம் - 04
3. மேலது, பாடல் எண்: 23, பக்கம் - 10
4. மேலது, பாடல் எண்: 16, பக்கம் - 08
5. மேலது, பாடல் எண்: 37, பக்கம் - 16
6. மேலது, பாடல் எண்: 38, பக்கம் - 16
7. மேலது, பாடல் எண்: 06, பக்கம் - 04
8. மேலது, பாடல் எண்: 05, பக்கம் - 04
9. மேலது, பாடல் எண்: 10, பக்கம் - 04
10. மேலது, பாடல் எண்: 09, பக்கம் - 04
11. மேலது, பாடல் எண்: 28, பக்கம் - 12
12. மேலது, பாடல் எண்: 19, பக்கம் - 08
13. மேலது, பாடல் எண்: 29, பக்கம் - 12
14. மேலது, பாடல் எண்: 04, பக்கம் - 02
15. மேலது, பாடல் எண்: 36, பக்கம் - 16
16. மேலது, பாடல் எண்: 22, பக்கம் - 10
17. மேலது, பாடல் எண்: 20, பக்கம் - 08
18. மேலது, பாடல் எண்: 35, பக்கம் - 14

**துணைநூல் பட்டியல்:**

நாலடியார் (தெளிவுரை, பொழிப்புரை, அரும்பதவுரை), ஞா.மாணிக்கவாசகன்
உமா பதிப்பகம், எண்: 18, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை - 1.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# புறநானூற்றில் அறநெறிச்சிந்தனைகள்

**முனைவர். இல. தங்கராஜ்**
**உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை**
**தரங்கைப்பேராயர் மாணிக்கம் லுத்தரன்**
**கல்லூரி பொறையார் 609307.**

## ஆய்வுச் சுருக்கம்

அறம் குறித்த செய்தியானது காலம் காலமாக விரிவடைந்து கொண்டே வந்திருக்கிறது. சங்க காலத்தில் அறமெனக் கருதப்பட்டவற்றில் சில சங்ககாலத்தின் பிற்காலங்களில் அறமற்ற செயல்களாகவே கருதப் பெற்றுள்ளன. மேலும் பல புதிய ஒழுக்கங்கள் அறங்களாக கையாளப்பட்டுள்ளன. நீதி இலக்கியங்களின் காலத்தில் அ டயட்றம் குறித்த மதிப்பீடுகள் பெருமளவு விரிவு படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. நீதி சொல்வதல்ல அறம். ஆயினும் நீதியைக் காட்டிலும் அறம் என்பது நெகிழ்வுத் தன்மையுடையதாக விளங்கியுள்ளதைக் காண முடிகிறது. பொய் சொல்வது ஆகாது என்பது நீதி .நன்மை பயக்குமெனில் பொய் சொல்லலாம் என்பது அறம். அறம் என்பது இன்பத்தைக் கொடுப்பது மட்டுமன்றி அதற்குக் காரணமான செல்வத்தையும் நிச்சயம் கொடுப்பது அறச்செயலாகும். அறம் செய்வதால் பொருளுக்கு அழிவு வராது. பொதுவாக பொருளும் இன்பமுமே மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தாலும் கூட இவை இரண்டிற்குமே அறமே மூல காரணமாகும். பிறருக்குச் செய்யும் அறத்தின் மூலம் தான் அடைய முடியும் இப்படி அறம் செய்வதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் சங்க இலக்கியங்களும் நீதி இலக்கியங்களும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதை நாம் அறிய முடிகிறது. எனவே சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் குறிப்பிடும் அறங்களை குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது.

**கலைச்சொற்கள்:**

மன்னுதல்,இறைஞ்சுக, நான்மறை, முக்கட் செல்வன், சிதறு, இலமே, பெரியோர், இலக்கியங்கள், படூஉம், கயல், நரைமுள், அன்ன, மூப்பின்,பயன்இல், தொக்குயிர், வெளவும், பொதுமை, மூவர் .

**முன்னுரை:**

உலகத்தில் சமுதாயப் போக்கிற்கு ஏற்பச்சாய்ந்து கொடுத்துக் கொண்டே தத்தம் நிலையில் தளராத மனிதனே அறிஞன் எனப்படுகிறான். அதுபோல காலங்காலமாகத் தோற்றமும் மாற்றமும் வளர்ச்சியும் பெற்று வரும் சமுதாயத்தின் மனநிலைக்கு ஏற்ப பொருந்தி வரும் நீதிகளே அழியாத நீதிகள் நிலைத்த நிதிகள். மக்களின் சமுதாய நீதிகளில் ஒரு குலத்திற்கு ஒரு நீதி என்ற நச்சுத்தன்மை கலக்குமானால் தனி மனிதனுடைய தன்னலநோக்கு என்ற வேர்ப் புழு விழுமானால் நீதிக்கற்பம் நிலைக்காதுசாய்ந்து விடும். பொது நோக்குடையவை எந்தப் புயலுக்கும் சாயாமல் நிலைத்து வாழும். அத்தகைய நீதி நூல்களின் மணிமுடியாக திகழ்வது திருக்குறள் ஒன்றே என்பதை இன்றைய உலகம் உணர்ந்திருக்கிறது. இருப்பினும் இதற்கு முன்பே சங்ககாலத்தில்

தோன்றிய இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் கூறும் அற பண்புகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம் விளக்கம்:**

இலக்கியங்களே தனிமனித வாழ்க்கைக்கும், அரசியல் வாழ்க்கைக்கும், சமுதாய இனப்பெருக்க வாழ்க்கைக்கும் உரிய அறங்களை வழங்குகிறது"இந்த அறம் என்ற சொல்லிற்கு ஒத்த பொருள் நிறைவான பெயரொன்றும் கீழை நாட்டு- மேலைநாட்டு மொழிகளில் இல்லாமையால் தருமம் என்ற சொல்லாலே என் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஆளுகிறேன்"என்கிறார் கனம் இராசாசி-1 தருமம் என்ற சொல்லடியாகப் பிறந்த தருமவான் என்ற சொல்லாட்சி இருக்கு வேதத்தில் அத்தியாயம் 9 காண்டம் 24 இல் உள்ளது. அதற்கு ப் பகுதி ப்பொருளாக தாங்குபவன் எனப் பொருள் தந்துள்ளது. அங்கன மாயின் தருமம் என்ற சொல் தாங்கப் பெறுவது என்பதாகும் இதனை விட அறம் என்ற சொல் அவ்வப்போது ஆன்றோர் ஆட்சியும் ஆவணச் சான்றும் கொண்டு பரந்து விரிந்து தன்னலம் கருதாத நன்மைகளைக் குறிப்பதால் சிறந்ததாகும். "அறம் என்பது நல்வினை, ஏழைகட்குக்கொடுப்பது, நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பது நடுநிலை அறம் போலும் கூற்றம் இன்னும் பல நிலைகளில் விளக்கம் தரப்படுகிறது.-2

**தகுதி அறிந்து அறம் செய்தல் :**

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக்கிழார் வாழ்த்தும்போது வேந்தே உனக்கு எல்லா உலகிலும் உருவும் புகழும் உண்டாக வேண்டும் நின் கோல் ஒருதிறம் பற்றாது நடுநிலை நிற்க வேண்டும் நின் படை குடி முதலியன சிறக்க வேண்டும் பகைப்புலத்து வென்ற நன்கலப்பொருள்களைத் தகுதி அறிந்து பரிசிலர்க்கு வழங்கிஉயர்வதோடு முக்கட் செல்வன் நகர்வலம் செய்யும்போது நின் குடை பணிய வேண்டும் நான்மறை முனிவர் கை கவிழ்த்து வாழ்த்துங்கால் நின்சென்னி தாழ வேண்டும் பகைப்புலத்து கடும் புகையால் நின் கண்ணி வாட வேண்டும். மகளிர் கூட்டத்திற்கு சினமின்றி மெல்லியனாக இருக்க வேண்டும். மதியமும் ஞாயிறும் போல இந்நிலமிசை வாழ வேண்டும் என வாழ்த்துவதில் பணிக என்பதனால் வீடும் ,இறைஞ்சுக என்பதனால் அறமும் ,வாடுக என்பதனால் பொருளும், தணிக என்பதனால் இன்பத்தையும் கூறினார் காரிக்கிலார். இதனை"

**பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப் பணியியர்**
**இறைஞ்சுக பெரும நின் சென்னி சிறந்த**
**நான்மறை முனிவரேந்துகை யெதிரே"-3**

என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் கூறுகிறார். இங்கு தகுதி அறிந்து அறம் செய்தல் வேண்டும் என்கிறார் காரிக்கிழார். இதனை திருவள்ளுவர்

**"பொது நோக்கான் வேந்தன் வரிசையாக நோக்கின்**
**அது நோக்கி வாழ்வார் பலர்"-4.**

என்னும் குறள் மூலம் கூறுகிறார்

**ஈதல் அறம்:**

செல்வத்துப்பயன் ஈதலே ஆகும். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியைப் பாடும் பொழுது உலக மக்களின் பிறப்பில் காணப்படும் மனவளம் குன்றிய சிதடு, உறுப்பு குறையுள்ள உடல், கூன், குள்ளம், ஊமை, செவிடு, விலங்குத்தன்மை, பித்து ஆகிய எண்வகை எச்சங்களும் ஒருவருக்குப் பிறப்பில் பொருந்துவது குற்றமாகும். காட்டை இடமாகக் கொண்டு வாழும் உன்னுடைய பகைவர் போன்று அல்லாமல் கூத்தர் ஆடுகளம் போன்ற அகநாட்டை நீ யுடையையாதலால் நீ பெற்ற செல்வம் அறம் பொருள் இன்பங்களை ஆற்றுவதற்காகவே ஆகும். அவ்வாறு இல்லை எனில் மேலே கூறப்பட்டுள்ள பிறப்புண்டாகும் என்று நளங்கிள்ளிக்கு நல்லறிவு கூறும் போது,

**“அதனால் அறனும் பொருளுமின்பமுமூன்றும்**
**ஆற்றும் பெரும நின் செல்வம்**
**ஆற்றாமைந்நிற் போற்றாமையே ”-5**

என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் கூறுகிறார். மேலும் வேந்தே உன் திருநாட்டில் உன் புகழ்பாடும் பாணர் நிறைந்திருத்தல் வேண்டும். எப்போதும் கொடியவர்களை அளிப்பதும் நல்லவர்களுக்கு உதவுவதுமாக இருப்பாயாக நல்லது செய்தால் நன்மையும் தீயது செய்தால் தீமையும் விளையாது என்பவர் பக்கம் சேராதே பெற்றது போதும் என்று கூவைக்கொடி படர்ந்த சிறிய நாலுகால் பந்தல் மனையில் வாழ்கின்றனர் அவர்களின் வாழ்வு செழிக்க நீ உதவ வேண்டும். வந்தவர்களுக்கு எல்லாம் உதவும் பண்புடையதாக உன் வாழ்நாள் செய்கை அமைய வேண்டும். விழாவில் இசைமுழக்குவோர் வந்து போவது போல வாழ்க்கை நிலை இல்லாதது. நகைத்து மகிழும் பக்கம் உன் சுற்றம் சேரட்டும் (பகைத்து மகிழும் பக்கம் சேரவேண்டாம்) உன் செல்வம் புகழின் பக்கம் இருக்கட்டும் என்பதை உறையூர் முதுகண்ண சாத்தனார் அவர்கள்,ள

**“நல்லதனலனுந் தீயதன்றீமையும்**
**இல்லையென்போர்க்கின்னாகிலியர்**
**நகைப்புறனாக நின் சுற்றம்**
**இசைப்புறனாகநீ யோம்பிய பொருளே ”-- 6 .**
**என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் கூறியுள்ளார்.**

**அறமே வெற்றிக்கு வழி:**

பாண்டியன் இளவந்திகை பள்ளி துஞ்சிய நன்மாறனை மதுரை மருத னிலநாகனார் அவர்கள் கடிய சினத்தை உடைய கொல்லும் யானைப்படை, விரைந்து செல்லும் செருக்குடைய குதிரைப்படை, உயர்ந்த கொடிகளுடைய தேர்ப் படை , நெஞ்சில் வலிமையுடன் போரை விரும்பும் காலாட்படை ஆகிய நான்கு படைகளும் உன்னிடம் இருந்தாலும் பெருமைமிக்க அறநெறி தான் உன் ஆட்சியின் வெற்றிக்கு அடிப்படையாகும். அதனால் இவர் நம்மவர் என்று நடுவு நிலைமையிலிருந்து தவறாமல் இவர் நமக்கு அயலார் என்று அவர் நற்குணங்களை ஒதுக்கித் தள்ளாமல் கதிரவனைப் போன்ற வீரம், திங்களைப் போன்ற குளிர்ந்த மென்மை, மழை போன்ற வண்மை ஆசிய மூன்றையும் உடையவனாகி இல்லை என்பார் இல்லை என்னும் படி நீ நெடுங்காலம் வாழ வேண்டும் என்பதை ஆழமான திரையுடைய கடலின் மேல் உள்ள வெண்ணிற அலைகள் மோதும் திருச்செந்தூரில் முருகக்கடவுள் நிலைபெற்றிருக்கும் அழகிய அகன்ற துறையில் பெருங்காற்றால் திரட்டப்பட்ட கரு மணலினும் நீ பலகாலம் வாழ்வாயாக என்பதை”

கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும் நெடுங்கொடிய நிமிர் தேரு நெஞ்சுடைய புகன்மறவரும் என நான்குடன் மாண்ட தாயினுமாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம் ”-- 7.
என்னும் புறநானூற்றுப் பாடல் வழி எடுத்துக் கூறுகிறார்.

**8. நற்பண்பும் நற்செயலும் நல்ல அறமே:**

ஒருவருடைய வாழ்வும் தாழ்வும் நிலத்தைப்பொறுத்தது அல்ல. அந்த நிலத்தில் வாழ்கின்ற ஆடவரைப் பொருத்தது. நற்பண்பும் நற்செயலும் உடைய ஆடவரே நாட்டின் நிலத்திற்கும் புகழுக்கும் வளத்திற்கும் காரணம் ஆவார். தீய நிலமாக இருந்தாலும் நற்பண்பு உடையவர்கள் அங்கே வாழ்ந்தால் அத்தீய நிலம் நல்ல நிலம் என்றே கூறப்படும். ஆனால் நல்ல நிலமாகவே இருந்தாலும் அங்கே தீயவர்கள் வாழ்ந்தால் அந்த நல்ல நிலம் தீய நிலம் என்றே கருதப்படும் இதுவே உலகத்தின் இயற்கை என்பதை ஔவையார் ”

நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவராடவர்
அவ்வழிநல்லை வாழிய நிலனே"--8.
என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் விளக்குகிறார்.

**9. புகழாமையும் இகழாமையும் சிறந்த அறம்:**

இராமநாதபுரம் மாவட்டம் மகிபாலன்பட்டி பூங்குன்றம் ஆகும் கணியன் பூங்குன்றனார் அவ்வூறினராவார் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரும் இவ்வூரினரேஆவார். இச்சான்றோர்கள் இடரினும் தளரினும் இன்பத்திலும் துன்பத்திலும் எவ்விடத்தும் அயராத உள்ளமும் கலங்காத அமைதியும் உடையவர். நலம் செய்தார் என ஒருவரை பாராட்டலும் தீமை செய்தார் என ஒருவரை இகழ்தலும் இல்லாதவர். இவ்வாறே பெரியோர் என ஒருவரை புகழ்தலும் சிறியோர் எனப் புறக்கணித்தலும் அறியாதவர். உயிர்கள் அனைத்தும் தாம் தாம் செய்த வினைக்கு ஏற்ப இன்பமும் துன்பமும் உயர்வும் தாழ்வும் செல்வமும் வறுமையும் எய்தும் என்பதை நூல்களாலும் நடைமுறையானும் நன்கு அறிந்தவர் இப்பண்பினால் கணியன் பூங்குன்றனார் எத்தகைய வேந்தரையும் வள்ளல்களையும் பாடவில்லை அதனால் அக்காலச் சான்றோர்கள் கேட்டதற்கு இணங்க"
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தனிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்"--9.
என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

**10. தீமை செய்யாமல் இருப்பதே சிறந்த அறம்:**

நரிவெரூஉத்தலையார் காலத்துச் சான்றோர் சிலர் பரிசில் பெற வேண்டி மன்னர்களை வீணாகப் புகழ்ந்தும் போர் புரிய ஊக்குவித்தும் தங்களின் புலமை வளத்தைத் தவறாகப்பயன்படுத்தி உள்ளனர். இதனை அறிந்த இவர் நூல் பலவும் கற்றுத் தேர்ந்து கெண்டை மீனின் முள் போல விரைந்து நிற்கும் நரை முடியும் முதுமை எய்தியதால் கன்னங்களில் வரி வரியாக சுருக்கமும் ஏற்பட்டு பயனில்லாத முதுமையை அடைந்த சான்றோர்களை ப்பார்த்து இறப்பு உங்களைத் தழுவும் தருணத்தில் ஐயகோ தவறு செய்து விட்டோமே என்று வருத்தப்படுவதால் பயனில்லை நீங்கள் யாருக்கும் நன்மை தரும் செயல்களைச் செய்யாவிட்டாலும் கூட பாதகம் இல்லை தீமை விளைவிக்கும் செயல்களைச் செய்யாமல் தவிர்த்திட வேண்டும் அதைத்தான் இந்த உலகமே உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. அதுமட்டுமின்றி இதுவே உங்களது பிறவி பயனை அடைவதற்கு வழி காட்டும் நன்னெறியும் நல்ல அறமும் ஆகும் என்பதை
"நல்லது செய்தலாற்றீராயினும்
அல்லது செய்தலோம்புமினதுதான் எல்லாருமுவப்பதன்றியும்
நல்லாற்றுப்படுஉநெறியுமாரதுவே."--10.
என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் விளக்குகிறார் மேலும்"
தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்" --11.
என்ற குறல் மூலம் தீய செயல்கள் தீமையை தரும் அதனால் அதைச் செய்யாமல் இருப்பதே சிறந்த அறம் என்கிறார் திருவள்ளுவர்.

**11. உலக வாழ்வியல் அறம்:**

சேர சோழ பாண்டியர் என்னும் மூவர் உலகத்தையும் ஒரு குடையின் கீழ் ஆண்ட பேரரசர்க்கும் வாழும் ஆண்டுகளும் துய்க்கும் செல்வங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. அவரவர்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேல் எவராலும் துய்க்க இயலாது இது அவரவர்களுக்கு படைக்கப்பட்டுள்ள தெய்வம்

"விதி "ஊழ் என்ற அடிப்படையில் நடக்கும் என்றெல்லாம் கூறுவர். அவரவர் செய்யும் அறவினையை மேல் உலகத்து இன்ப விளைவிற்கு வித்தாகும். இந்த உலக வாழ்வியல் ஆகிய கடலைக் கடந்து மேல் உலகமாகிய அக்கரை சேர்வதற்கு அறவினையே தெப்பமாய் துணை செய்யும் இந்தத் தெப்பத்தை கைவிட்டு விட்டு யாராலும் செல்ல முடியாது.
எமன் ஒருவர் உயிரை எடுத்துப் போன பின்னால் மற்றொருவர் அழுவதை அன்றி இவ்வுலகத்தை விட்டு விட்டு அவ்வுலகத்துக்கு அவருடன் செல்ல இயலாது. இதுவே உலகியல் மாட்சியாகிய வாழ்வியல் அறமாகும். இதனை
"பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
பொதுமையின்றி ஆண்டிசினோருக்கும்"-----------------------அறவணை அன்றே விழுத்துணையத்துணைப் புனணகைவிட்டோர்க்கு அ அரிதேதுணைஅழத்
தெக்கு உயிர்வெளவுங்காலை
இக்கரை நின்று இவர்ந்து உக்கரை கொளலெ "--12.
என்ற புறநானூற்று பாடல் வரிகள் மூலம் உலக வாழ்வியல் அறத்தை குறிப்பிட்டுள்ளார் பிரமனார் என்னும் புலவர் மேலும் இதனை"
வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு" --13.
என்கிறார் தொல்காப்பியர். இந்த நிலவுலகில் உடை வேல் மரத்தின் சிறிய இலை அளவு இடமும் பிறர்க்கின்றித் தாமே ஆண்ட வேந்தர்கள் பலர் இருந்தனர். ஆனால் முடிவில் தன் நாட்டை பிறர் கொள்ள அவர் இறந்தனர். அதனால் இறவாது நின்றோர் ஒருவரும் இல்லை இறத்தல் உண்மை பொய்யென்று எனவே இன்ன நாளாகிய இறக்கும் நாள் வரும் முன்னே நீ இவ்வுலகியலைத் துறந்து உனக்குரிய நல்வினையாகிய தவத்தைச் செய்வாயாக. ஏனெனில் யாக்கையும் செல்வமும் நிலையற்றது என்ற உலக வாழ்வியல் அறத்தை"
உடையிலை நடுவணதிடைபிறர்க்கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர் --------------------------------------- இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே "--14.
என்னும் புறநானூற்றுப் பாடல் வழி விளக்கியுள்ளார் ஐயாதிச்சிறுவெண்றே யார். மேலும் இதனை" மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்"--15. என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**12. இறப்போர்க்கு ஈவதே சிறந்த அறம்:**

சேரமான் மாவண் கோவும் பாண்டியன் கானப்போர் தந்த உக்கிரப் பெறுவழுதியும் சோழன் இராய சூயம் வேட்ட பெரு நற்கிள்ளியும் ஒருங்கிருந்த சூழ்நிலையில் ஒளவையார் அவர்களை வாழ்த்தும்போது தமிழ் வேந்தர் மூவரும் மனத்தால் ஒன்றுபடாமைக்கு காரணமாக இருந்தது ஒவ்வொருவருக்கும் தாம் ஒருவரே மேம்பட்டு நிற்க வேண்டும் மற்றவர்கள் தன்னுடைய ஆணை வழி அடங்கி நடக்க வேண்டும் என்ற வேட்கை ஆகும். அந்த வேட்கை நாட்டின் மேல் நின்றால் அதனை விலக்கி ஒருமை மனம் உடையர் ஆகுதல் வேண்டும் என்று கருதினார் ஔைவையார். நாகலோகத்தைப் போன்று மிகுந்த வளமிகுந்த பகுதியாக உள்ளது இந்த நிலவுலகம் இதனை ஒருவர் மட்டும் தாமே ஆள வேண்டும் என்று எண்ணி ஏனைய இருவரையும் பொழருது வென்று நாட்டினை தன்னடிமைப்படுத்திய வேந்தரும் இறந்தனர். அவ்வாறு இறந்தபோது தமிழகம் அவர் பின் சென்றொழியாது வேறொருவருக்கு என்று கருதாது யார் தன்னை தாங்குகிறார்களோ அவர்கள் அடியின் கீழ் இவ்வுலகம் நிற்கும் இயல்பினை உடையதாகும். ஆதலால் நீவீர் உம்முடைய நாட்டை இனிது தாங்கும் முகத்தான் பார்ப்பார்க்கும் இரவளர்க்கும் வேண்டுவன நல்கி வாழ்தல் வேண்டும். இதுவே

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

நீவீர் செய்யத்தக்க நல்வினையாகும். இந்த நல்வினையை உம்மை இனிது வாழச் செய்வதாகும். உமக்கு இந்த நல்வினையைக்காட்டிலும் வேறு ஒரு துணையும் இல்லை. இவ்வளவே தான் அறிந்தது என்று கூறினார். இந்த நல்வினையை மேற்கொண்டு நீவிர்மூவரும் ஒருமை மனத்தோடு வாழ்வீர் ஆயின் வானத்தில் தோன்றும் விண்மீன்களைக்காட்டிலும் பெரு மழையினால் தோன்றும் நீர்த்துளியைக் காட்டிலும் பல்லாண்டு நெடிது வாழ்வீர். இல்லையேல் வீழ்வீர் வேரோடு ஒழிவது நிச்சயம். இத்தமிழகம் வேற்று மன்னர் ஆட்சிக்கு உட்பட்டு தன் மொழி, கலை, பண்பாடு, செல்வம், வாணிகம் முதலியவற்றை பலவற்றினும் சீரழித்து வேறொருவருக்கு அடிமை நாடாகிவிடும் என்று அவர்களை உய்த்துணர் வைத்தார் ஔவையார். அப்பேதை மன்னர்கள் அவர் கூற்றை மனம் கொள்ளாவிட்டால் அவர்கள் செய்த தீய செயலால் தமிழகம் மொழியும், கலையும், பொருளும், பண்பாடும் குன்றிப்போய் பிற நாட்டவர் ஆட்சி யானைக்குத் தலை தாழ்ந்து செல்வதாகும். இதனால் நாட்டிற்கு வறுமை உண்டாகும் என்று கூறுகிறார் ஔவையார். இதனை

" இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங்காலைப் புணைபிறிதுஇல்லை "-16.

என்ற புறநானூற்று பாடல் மூலம் குறிப்பிட்டுள்ளதை காணலாம். தான் பெற்ற செல்வங்களை தனக்கென வைத்துக் கொள்ளாமல் உங்களுக்கென்று வழங்கப்பட்ட வாழ்நாள் எல்லாம் வழங்க வேண்டும் இவ்வாறு வாழ்ந்து பிறரையும் வாழச் செய்வது தான் நல்வினை. இந்த நல்வினை உங்களை ஏற்றிச்செல்லும் மிதவையாக உதவும், வாழ்க்கை துன்பத்தில் மூழ்கும்போது உதவும் இந்த நல்வினை போல வாழ்க்கைக்கு இன்பம் தந்து உதவக்கூடிய வேறு ஒன்றுமே இல்லை.

**13. முடிவுரை:**

1. ஒருவரின் தகுதி அறிந்தும் தரம் அறிந்தும் பொருள் தந்து உதவுதல் சிறந்த அறமாகும்.

2. ஒருவர் நிறைந்த செல்வங்களை பெற்றிருப்பது இரவலர்களுக்கு கொடுத்து மகிழ்வதற்கே என்ற சிறந்த அறத்தை எடுத்துக் கூறுகிறது.

3. ஒருவரை நம்மவர் என்று பாராமல் நடுவு நிலையோடும் இவர் அயலார் என்று பாராமல் அவரின் நற்குணங்களை ஒதுக்காமல் கதிர்வனை போன்று வீரமும் திங்களைப் போன்று மென்மையும் மழையைப் போன்று வண்மையும் கொண்டு இல்லை என்பார் இல்லை என்ற அறநெறியோடு வாழ வேண்டும் என்பதும் உணரப்படுகிறது

.4. நற்பண்பும் நற்செயல்களுமே சிறந்த அறமாக கருதப்படுகிறது .

5. ஒருவரை புகழாமையும் இகழாமையுமே சிறந்த அறமாக கருதப்படுகிறது.

6. தீமையைச் செய்யாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.

7. உலக வாழ்வியல் ஆகிய கடலைக் கடந்து மேல் உலகமாகிய அக்கரை சேர்வதற்கு அறவினையே தெப்பமாய் துணை செய்யும் என்பதை அறிய முடிகிறது.

8. இரப்போர்க்கு இல்லையென்று ஈவதே சிறந்த அறமாகக் கருதப்படுகிறது. மிகவும் அருமையான செய்திகளைச் சங்க இலக்கியம் எடுத்துக் கூறியுள்ளன ஒவ்வொரு பாடல்களிலும் வியக்கத்தக்க அறச் சிந்தனைகளை எடுத்துக் கூறியிருக்கிறது. சங்கங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனாலும் அன்று தோன்றிய இலக்கியங்கள் கூறியுள்ள அறச் சிந்தனைகள் காலமெல்லாம் நிலைத்து நிற்கின்றன. அதுபோல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ள திருச்செந்தூர் முருகன் கோவில்

இன்றளவும் சிறப்புடன் அமைந்திருப்பதை கண்டு மகிழ்கிறோம். எனவே இந்த ஆய்வு இன்னும் பல சிறந்த ஆய்வுகளை உருவாக்குவதற்கு துணையாக அமையும் என்பதில் எந்த அளவும் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்:


1. சி.ஆர். ஆங்கில மொழிபெயர்ப்பு இராசாசி --2.

2.ஞா. தேவநேயப் பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகராதி தொகுதி -1 ப.523.

3. செவ்விலக்கியக்கருவூலம்--புறநானூறு--1.ஔவை சு. துரைசாமி பிள்ளை ப.20,21

.4. திருக்குறள் கருத்துரை திருந்திய பதிப்பு ப. பகலவன் --ப.117

5. செவ்விலக்கியக் கருவூலம் புறநானூறு--1 ஔவை சு.துரைசாமிபிள்ளை.ப. 104.

6. மேலது--ப.107. ய

7. மேலது -- ப.184

.8. மேலது --ப.526.

9. மேலது -- ப. 537.

10. மேலது -- ப. 544.

11. திருக்குறள் உரைக்களஞ்சியம் அறத்துப்பால் -- இல்லறவியல் -ச. தண்டபாணி தேசிகர் --ப. 562.

12. புறநானூறு தெளிவுரை புலியூர்க்கேசிகன் --ப. 352.

13. தொல்காப்பியம் மூலமும் உரையும் புலியூர்க்கேசிகன் --ப. 377.

14. புறநானூறு தெளிவுரை புலியூர்க்கேசிகன் --ப. 359.

15. தொல்காப்பியம் மூலமும் உரையும் புலியூர்க்கேசிகன் --ப. 284.

16. புறநானூறு தெளிவுரை புலியூர்க்கேசிகன் --ப. 363.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# திருக்குறளும் வாழ்வியல் வழிமுறைகளும்

**முனைவர் சு. திரிவேணி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை
அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

**முகவுரை :**

"முன்னைப் பழமைக்கும் பழமையாய்
பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்"

என்று சுட்டப்படும் இறைத்தன்மைகளைத் தனக்குள் பொதிந்து, உலகப்பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள், நிலம், காலம் என்ற எல்லைகளைக் கடந்த பொதுமைப் பண்புடையதாகத் திகழ்கிறது. பழந்தமிழ் இலக்கியமான திருக்குறள், அண்மைக்கால மனித வாழ்க்கைக்கும் மக்களுக்கும் ஏற்றதாக, நெகிழ்வுத் தன்மை கொண்டதாக விளங்குகிறது. தனிமனிதர்களுக்கும் சமூகத்திற்கும் பொருந்தும் அறக்கருத்துக்களையும் மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கேற்ற வழிமுறைகளையும் வள்ளுவர் முறைப்படுத்திக் கூறுகிறார்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறள், அற இலக்கியம் என்ற தன்மைக்கு அப்பாற்பட்டதாக, மனித மனம், மனதில் எனும் உணர்வுகள், மக்கள் வாழும் மற்றும் வாழ வேண்டிய விதம் என்ற பல கூறுகளையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டுகிறது. மனித வாழ்வுக்குத் தேவை அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பரிமாணங்கள் என்று தெரிவிக்கிறது.

சங்கத்தமிழர் அகம், புறம் என வாழ்வை இரண்டாகப் பிரித்தனர். அகமாயினும் புறமாயினும் அறம், பொருள், இன்பம் ஆகியவை பொதுவாகும்.

**அகவாழ்வியல் :**

★ அறம் - களவு மற்றும் கற்பில் உண்மை, சொல் தவறாமை.

★ பொருள் - கையுறை, இல்லறத்துக்குத் தேவையான கூறுகளில் ஒன்று.

★ இன்பம் - காதல் இன்பம்

**புறவாழ்வியல் :**

★ அறம் - கல்வி, வீரம், வாய்மை உள்ளிட்ட நற்பண்புகள்

★ பொருள் - கொடை

★ இன்பம் - அறம், பொருளால் ஏற்படும் மகிழ்ச்சி

எனவே திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற பகுப்பை முன் வைப்பது அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் பொதுவாகவும் பொருத்தமாகவும் அமைகிறது. அறச்செயலை அறவழியில் செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் எண்ணம். செல்லும் வழியும் சேரும் இடமும் சிறப்பிற்குரியதாக இருந்தால் மட்டுமே வாழ்க்கைப் பயணம் போற்றத்தக்கதாக அமையும். எனவேதான்,

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (குறள் எண் : 34)

என்ற குறள் மூலம் மனதால் குற்றமற்று இருத்தலே முதன்மையானது என்று குறிப்பிடுகிறார்.

**மனிதன் என்பவன் தெய்வமாகலாம்**

ஒரு சாதாரண மனிதன் குறள் கூறும் கருத்துக்களைப் படிக்கத் தொடங்கும்போது மரியாதைக்குரிய மனிதனாகிறான். அக்குறள் உணர்த்தும் கருத்துகளை உணர்ந்து தன் வாழ்வில் விழுமியக் குறட்பாக்களைக் கையாளும்போது மனித நிலையிலிருந்து தெய்வத்தன்மை பொருந்தியவனாக உயர்கிறான். காரணம், பிறருக்கு உதவி செய்து, தன் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி, பண்பட்ட வாழ்க்கை வாழ்பவனே சிறந்த மனிதன். தன் கடமைகளைப் புறக்கணிக்கும் ஒருவனை அவனுடைய வாழ்க்கையும் இந்த உலகமுமே புறக்கணிக்கிறது. சிறந்த மனிதன் பற்றிக் கூறப் புகுந்த வள்ளுவர்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை" ( குறள் எண் : 43)

என்று ஒருவனை அவனது சக மனிதர்களுக்குள் உயர்ந்தவனாக வாழும் வழியைக் கூறுகிறார். முன்னோர், தெய்வம், விருந்தினர்கள், தன் குடும்பத்தினர் என அனைவரையும் பரிந்தோம்புதலை இல்வாழ்வில் மேம்பட்டமாகக் குறள் எடுத்துரைக்கிறது. மேலும்

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (குறள் எண் : 47) என்றும்

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள் எண் : 388)

என்றும் கூறி, வீட்டுக்குத் தலைவராக இருந்தாலும் நாட்டுக்குத் தலைவராக இருந்தாலும் தத்தம் கடமைகளைச் சரிவர செய்வோர், தெய்வமாகவோ, தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகவோ போற்றப்படுவர் என்று வள்ளுவர் உணர்த்துகிறார்.

**வாழ்வியல் இலக்கணம்**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் கருத்துக்களைச் சுவைபடச் சொல்லும் வகையில் திருக்குறள் ஒரு இலக்கியமாகத் திகழ்கிறது. மொழி இலக்கணம் மட்டுமல்லாமல் வாழ்விலக்கணங்களும் வகுத்துத் தந்த பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் போல, வாழும் நெறிகளை, வாழ்வியல் சட்டங்களைக் கூறும் திறத்தால் திருக்குறள் ஒரு இலக்கண நூலாகவும் பரிமாணம் பெறுகிறது. இவ்வாறு தமிழர் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியையும் தொட்டுத் துலங்கச் செய்த பெருமைமிக்கது திருக்குறள்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்", (குறள் எண் : 596)

"கான முயலெய்த அன்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (குறள் எண் : 772)

எனக் கூறுகையில் திருவள்ளுவர் மனதிற்கு ஊக்கமூட்டும் ஆலோசகராக விளங்குகிறார். சொல்வன்மை, குறிப்பறிதல், இனியவை கூறல் முதலியவற்றால் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சியாளராகவும் மருந்து கூறும் மருத்துவராகவும் பலவாறெல்லாம் தோற்றம் பெறும் வள்ளுவரைக் காலத்திற்கு ஏற்ப மக்கள் மனதில் பதிவிக்க வேண்டும்.

**மனித மனங்களைப் பலப்படுத்துதல்**

உலகிற்குத் தேவையான நற்கருத்துக்களை எடுத்துரைத்து அறத்தைப் போதிப்பதோடு நில்லாமல் அந்த நற்கருத்துக்களை வாழ்வில் கடைபிடிக்கும்

மக்களின் மனவலிமையைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர் வள்ளுவர்.

அறக் கருத்துக்களை எல்லாம் வகைப்படுத்தி, வரிசைப்படுத்திக் கூறியிருந்த வள்ளுவர், மனித மனம் மற்றும் மனித வாழ்வானது தோல்விகளையும் சந்திக்கக்கூடும் என்ற நடைமுறை உண்மையை உணர்ந்தவர். தோல்விகளால் மனிதர்கள் துவண்டு விடக்கூடாது என்று விரும்புகிறார். உள்ளம் திடமாக இருந்தால் எத்தகைய வீழ்ச்சியிலிருந்தும் மீண்டு வர முடியும். உடல் உறுதியோ, பணபலம் மற்றும் படைபலமோ இல்லாமலே கூட மக்கள் தங்கள் வாழ்வில் மீண்டெழ முடியும்.

**மென்மையும் வன்மையும்**

இயற்கையின் படைப்பில் இருந்து நாம் கற்றுக் கொள்ள நிறைய கருத்துக்கள் உள்ளன. நத்தை, ஆமை, மண்புழு ஆகிய மூன்றும் மென்மையான, பஞ்சுப்பொதி போன்ற உடலமைப்பைக் கொண்டவை. இவற்றுள் ஆமை மற்றும் நத்தையின் மென்மையைப் பாதுகாக்க பலமான ஓடு உதவுகிறது. அவ்வாறான இயற்கையின் படைப்பால் அவற்றின் இயக்கம் மிக மெதுவாக அமைகிறது. ஆனால் அவற்றைப் போலவே மென்மையான உடலமைப்புக் கொண்ட மண்புழுவோ, தன்னைப் பாதுகாக்கும் வலிமையான அமைப்பைப் பெற்றிருக்கவில்லை.

மென்மையான மண்புழுக்குப் பாதுகாப்புக்கான அமைப்பு இல்லாத போதிலும் தன் சோதனைகளை சுயமாக எதிர்கொண்டு மீண்டு வரும் தகவமைப்பை இயற்கை அமைத்திருக்கிறது. மண்புழுவை இரண்டாக வெட்டினால் அது இரு வேறு மண்புழுவாகிவிடும். பாதுகாப்பான வாழ்வு தேடி ஓடாமல் தனக்கு வரும் இன்னல்களை மண்புழு எதிர்கொள்கிறது. எத்தகைய துன்பம் வந்தாலும் துவண்டு போய் விழுந்து விடாமல் மீண்டு வருகிறது. தன் துன்பங்களுக்குத் தானே துன்பமாக மாறிவிடுகிறது. இதனை வள்ளுவரின்,

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்" (குறள் எண் : 623)

என்ற குறள் கொண்டு உணரலாம்.

மனித வாழ்விலும் இத்தகைய சூழல்களைக் காணலாம். செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்களாக, சிறு துன்பம் வந்தாலும் உறவுகளால் தாங்கிப் பிடிக்கக்கூடியவர்களாக சிலரது வாழ்க்கை அமைகிறது. மாறாக, தன் வாழ்வைத் தானே சுமக்க வேண்டியவர்களாகச் சிலரது வாழ்க்கை அமைந்துவிடுகிறது. இவ்விரு வகையினரின் வாழ்க்கை நிலையும் அனுபவங்களும் முற்றிலும் வேறானவை. மனிதர்கள் தங்களைப் பிறரோடு ஒப்பிட்டு மனம் குழம்பாமல், மனம் தளராமல் தங்களுடைய வாழ்க்கை மற்றும் வாய்ப்புகளை ஏற்று வாழ்தல் வேண்டும் என்ற கூடுதல் அறிவையும் இந்தக் குறள் உணர்த்துகிறது.

மென்மையானவள், பாதுகாக்கப்பட வேண்டியவள், சிறு துயர் கூடப் பொறுக்க முடியாதவள் எனக் கற்பிக்கப்பட்ட சாதாரணப் பெண், தன் குழந்தைக்காக சராசரி மனிதர்களைத் தாண்டி 57 டெசிபல் அளவு வரை வலியை எப்படித் தாங்குகிறாள், அதிலிருந்து எவ்வாறு மீண்டு வருகிறாள், இதற்கான மன வலிமையை அவளுக்கு யார் தருகிறார்கள் என்ற வினாக்களுக்கு எல்லாம் பதிலாக அமைகிறது,

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அ∴தே துணை" (குறள் எண் : 76)

என்ற குறள். இதன் மூலம் பெண்ணின் அன்பு தான் அவளின் வலி தாங்கும் வீரமாக மாறுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**தன் வலிமையறிதல்**

இந்த உலகில் எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள், தம் வாழ்வு முடித்துக் கடந்து சென்று இருக்கிறார்கள். அவர்களில் யாரோ ஓரிருவர் மட்டுமே லிங்கனாக, காந்தியாக, மண்டேலாவாக, பாரதியாக, நேதாஜியாக, செக்காவாக உருவெடுக்கிறார்கள். பரந்து விரிந்த இந்த உலகத்தில் எங்கோ ஒரு சிலர் மட்டுமே எப்படி காலத்தின் அடையாளமாக மாறுகிறார்கள், அவர்களுக்கென இயற்கை எதையேனும் சிறப்பாகத் தந்திருந்ததா எனச் சிந்தித்தால் பதிலாக,

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" (குறள் எண் : 599)

என்ற வரிகளை எடுத்தியம்ப முடியும். சாதாரண மனிதர்கள் சாதனையாளர்களாக உருவெடுக்க எல்லோரையும் விட வேகமாகச் செயல்பட வேண்டியதில்லை. மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும். தன் வலிமை எது என்பதைப் புரிந்திருக்க வேண்டும் என்கிறது வள்ளுவம்.

**அக வாழ்வில் அறம்**

"அன்பீனும் ஆர்வ முடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" (குறள் எண் : 74)

- என்று அன்பின் மூலமாக ஒருவர் மீதான ஆர்வம் அதிகரித்து, அது நட்பாகப் பரிணாம வளர்ச்சி பெறுவதைத் திருவள்ளுவர் அன்புடைமையில் கூறுகிறார். உறவுகளுக்கு அடிப்படையாக அமைவதும் அமைய வேண்டியதும் அன்பேயாகும். அன்பின் அடிப்படையில் அமையும் உறவுகள் காலத்தாலும் வேறு பல காரணங்களாலும் ஏற்படும் நெருக்கடிகளைத் தாங்கி நிற்கும். கருத்து வேறுபாடுகள், முற்றிய முரண்பாடுகள் என எவ்வித இடர்களையும் அன்பு வெல்லும்.

எந்த நாட்டவராயினும் எந்தக் காலமாயினும் எந்த இனமாயினும் காதல் என்ற உணர்வு வாழ்வில் வருவது இயல்பான ஒன்று. யாரைக் காதலிப்பது என்பது அவரவர் மனதைப் பொறுத்தது. அதில் வள்ளுவர் கருத்திடவில்லை. தொல்காப்பியத்தில் அதற்கான வரையறை, வரைமுறை இருந்தது என்பதை இங்கு நினைவுகூர்க. மாறாக வள்ளுவர் எப்படிக் காதலிப்பது என்பதில் சிந்தனையைச் செலுத்துகிறார்.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (குறள் எண் : 1151)

என்று காதல் என்பது உயிர்க் காற்றுப் போல இருக்க வேண்டும் என்று காட்டுகிறார். அன்பு செலுத்துவது, ஆளுமை செய்வது என்ற இரண்டையும் ஏற்றுக் கொள்வதே காதல். அங்கே வேறுபாடுகளுக்கோ, நடைமுறைச் சித்தாந்தங்களுக்கோ இடமில்லை.

இலாப நோக்கங்களைக் கருத்தில் கொள்ளாமல் அன்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்படும் குடும்பங்களே தமிழர் வாழ்வின் மிகப்பெரிய பலமாக இருந்துள்ளன. வணிக நோக்கோடு மணம் பேசத் தொடங்கியதே குடும்பக் கட்டமைப்புச் சிதைய அடிப்படையாக இருந்துள்ளது என்பதையும் உணர முடிகிறது. மக்கள் அறிவு, தொழில், செல்வ நிலைகளில் எந்த உயர்வில் இருந்தாலும் குடும்பத்தில் அதைக் கொண்டு அவர்களை எடைபோடக் கூடாது, குடும்பத்திற்கு அடிப்படையாகவும் அளவுகோலாகவும் அமைய வேண்டுவது அன்பு மட்டுமே என்பதை வாழ்க்கைத் துணைநலம், இல்வாழ்தல் மற்றும் இன்பவியலின் மூலமாகத் திருக்குறள் எடுத்தியம்புகிறது.

இவ்வாறாகத் திருக்குறள் வழியாக அக வாழ்விலும் புற வாழ்விலும் மனிதர்கள் தாங்களும் தங்களால் சமூகமும் மேன்மையடையக் கூடிய நல்ல வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளை அறியலாம்.

**நிறைவுரை**

வள்ளுவத்தின் வழிகளைக் கையாண்டால் நேர, தூர எல்லைகளைக் கடந்து மனிதர்களும் இறவாப் புகழ்பெற்றவர்களாக, உயர்வாழ்வை அடையலாம். அதற்கேற்ற குறட்பாக்கள் மனித மன, உணர்வு, செயல்களுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுக் கூறப்பட்டுள்ளன. உலகப் பொதுமறையாகிய திருக்குறளை நில, நாடு, சமய, மொழி எல்லைகளுக்குள் அடக்கிவிடாமல் மனித இனத்திற்கான பொது நூலாக ஏற்றுக் கொண்டு திருவள்ளுவர் கூறும் அறச்சிந்தனைகளை நடைமுறைப்படுத்துவது காலத் தேவையும் காலத்தின் கட்டாயமுமாகும்.

**துணைநின்ற நூல்கள் :**

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை
2. திருக்குறள் - தெளிவுரை, வ.சுப.மாணிக்கம்
3. எண்ணங்கள் - டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி
4. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் மு.பாக்கியமேரி
5. வெற்றி நிச்சயம் - சுகி சிவம்
6. பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும் - சாமி. சிதம்பரனார்

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX,* பதிப்பு *22,* ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# திருக்குறளில் அறநெறிச் சிந்தனைகள்

**முனைவர்.அ.மரிய செசிலி**
முதல்வர்
டாக்டர் சிவந்தி ஆதித்தனார்
ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,
திருச்செந்தூர்

**முன்னுரை:-**

மனித சமுதாயத்துக்கு பெரிதும் பயன்தரும் அறநெறிச் சிந்தனைகளைத் தொகுத்தும் வகுத்தும் சுவைபடக் கூறுவதில் ஒப்புயர்வற்ற அறநூலாகத் திகழ்வது திருக்குறள். இனம், மொழி, நர்டு என்னும் எல்லையைக் கடந்து மனித வாழ்வை நெறிப்படுத்தி மேம்படுத்தும் ஈடு இணையற்ற
ஓர் அறநூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்கும் இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழிகாட்டும் சீர்மிகு அறநூல்.

**“என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்**
**நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மைய தாய்க்குன்றாத**
**செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத்திருமலர் போன்ம்**
**மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்”**

என்று கற்பகத்தருவாம் திருக்குறளை, திருவள்ளுவமாலை புகழ்ந்துள்ளது. வள்ளுவரின் அறக்கருத்துக்கள் “தமிழனுக்குரியது” என்னும் நிலையை கடந்து “உலகத்தாருக்குரியது” என்றுணர்ந்த பாரதி,

**“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”**

எனப் புகழ்ந்துரைத்தார், வள்ளுவப் பொருட்சிறப்பை அறிந்த மதுரைத்தமிழ் நாகனார் “ எல்லா பொருளும் இதன்பால் உள” என்று தெளிந்துரைத்துள்ளார். உலகப் பொதுமறையாம் திருக்குறளில் அறியலயாகும் பன்முக அறங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம் - வரையறை:-**

“அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கின ஒழிதலும் ஆம். தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப்பட்டது” என்பார் பரிமேழலகர். “அறம் என்ற சொல்லுக்கும் தமிழில் எட்டுவகையான பொருள்கள் வழங்கி வருகின்றன. பொதுவாக அது நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்ற பொருளிலேயே பெரும்பாலும் தமிழ் இலக்கியங்களில் வழங்கப் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம். அறம் உணர்த்தும் இப்பொருள் அறவியற் சொற்பொருள் வகையைச் சேர்ந்ததாகும். இப்பொருள் மட்டுமல்லாமல் வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்று பல்வேறு பொருள்களிலும் அறம் என்னும் சொல் வழங்கப்பட்டு வருகிறது”. “மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே

– முழுநிறை வடிவமே – அறம் என்று கூறுவர்'' என்கிறார் க.த. திருநாவுக்கரசு அறம் என்பதற்கு 'அறுத்தல்' என்று கொண்டு விளக்கம் தருவர் சிலர். ''அறம் என்னும் சொல் அறு என்னும் முதனிலை அடியாகப் பிறந்து தீவினையை அறுப்பது எனப் பொருள்படும். தீவினையை அறுப்பது அறம் என்பது சரி. ஆனால் நல்வினை ஆற்றலும் அறமல்லவா?

அறம், அருள்,அறிவு,அன்பு - இவை நான்கும் 'பொருந்தி நிற்றல்' கலத்தல் என்று பொருன் தரும்படி 'அல்' என்ற வேர்ச்சொல்லடியிற் பிறந்தவை என்பது செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலியாற் புலப்படுகிறது. இவ்வடிப்படையில் அறம் என்பது நன்னடத்தையில் பொருந்திநிற்றல் எனலாம்.

**அறநெறிப்பட்ட வாழ்க்கை:-**

மனித மனங்களை விரிவுபடுத்தி, அறவழிப்பட்ட வாழ்க்கையை உருவாக்குவது திருக்குறளின் நோக்கமாகவும் உள்ளது. மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமையான மனிதவாழ்க்கை நெறி என்கிறார். அடிப்படை அறங்களுக்கு நெஞ்சன்றோ களம் என்கிறார்.

**''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற''.**

என்னும் குறட்பா இதனை உணர்த்துகிறது.

**வள்ளுவரின் அறக்கோட்பாடு:-**

''அறிவே நற்பண்பு''என்பார் சாக்ரடீசு. அவர் வழிவந்த பிளாட்டோ, அறிவு துணிவு, அடக்கம், நீதி என்று நான்கு சொன்னார். வள்ளுவர் கூறுவது இரண்டு. அவை அன்பும் அறிவும். அன்பும் அறிவும் ஒருங்கிணைகின்ற போது தான் அறம் முழுமையடைகிறது என்பது வள்ளுவர் கருத்து. ''அறம் செய்தற் பொருட்டு நிறைவடைதல்'' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தனிமனிதனை வழிநடத்த வினைகிறார் வள்ளுவர். அன்பை வேராகவும், அறிவை நீராகவும் கொண்டது வள்ளுவம், எல்லா அறங்களுக்கும் மூலப்பண்புகளாக அன்பையும் அறிவையும் விதித்தார்.திருவள்ளுவர் அறத்துப்பாலை முதலில் வைத்து பொருட்பாலையும், காமத்துப்பாலையும் அடுத்தடுத்து வைத்திருப்பதிலிருந்து அறத்தின் முக்கியத்துவத்தை உணர முடிகிறது.

**அன்புடைமை:**

அன்போடு கூடியதுதான் அறம். அன்பு இல்லாத அறம் வெயிலில் காய்ந்து அழியும் புழுப்போல் அழிந்துபோகும். அன்பு என்பது அறத்திற்கு மட்டுமன்று மறத்திற்கும் அன்பு தேவை. இராவணன் இராமபிரானோடு போர் செய்யும்போது, இராமனால் இராவணனின் போர்ப்படை அழிக்கப்படுகிறது. படை இழந்து தனித்து நின்ற இராவணனைப் பார்த்து, நீ தனித்து உள்ளாய் உன்னோடு போர் செய்தல் மறம் அன்று என்று அன்போடு கூறி, **''இன்று போய் நாளை நின் படையோடு வருக''** என்று கூறினார்.

**''அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
**மறத்திற்கும் அ∴தே துணை'' (குறள் : 76)**

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நாயே, பேயே என்று திட்டாது அன்பு வார்த்தைகளைக் கூறி வளர்த்தால் குழந்தைகள் மனத்தூய்மை பெற்று உடல்நலம் பெற்று உயர்வார்கள் என்பதற்காகத்தான் இல்வாழ்க்கை, வாழ்க்கை துணைநலம், மக்கட்பேறு அதற்கு அடுத்து அன்புடைமை என்ற அதிகாரத்தை வள்ளுவர் கூறியுள்ளார். குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் அன்பு காட்டிப் பாடங்களை சொல்லித் தந்தால் மாணவர்களிடம் அறிவு வளரும். அவர்கள் தனக்குச் சொல்லி தந்த அசிரியர்களிடம் பற்றும் உண்டாகும். சமுதாயம்

முன்னேற வேண்டுமானால் மனிதர்களிடம் உள்ள தீய குணங்களை நீக்கி பிற உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும். அன்புதான் மனிதனை மனிதனாக்குகிறது. அன்பு வழியை பின்பற்றினால் நாம் எத்தகைய துன்பத்தையும் வென்றிடலாம். அத்தகைய அன்பில்லாத ஒருவனை வள்ளுவர் எலும்புக் கூட்டின் மீது தோல் போர்த்தப்பட்ட வெற்று உடம்பு என்கிறார். இதனை,

**“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு”** (குறள் : 80)

**ஒழுக்கமுடைமை:**

இல்லறவியலில் ஒரு அதிகாரமாக திகழக் கூடியது ஒழுக்கம் உடைமை ஆகும். ஒழுக்கமுடைமை அதிகாரம் மானுடம் சமூக மேம்பாடு அடைவதற்கு உண்டான வழிகளைக் கூறும் விதமாக அமைந்துள்ளது.

**“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்”** (குறள் : 131)

என்ற குறட்பாவில் ஒருவருக்கு உயிரைவிட மேலானது ஒன்றும் இல்லை எனலாம். உயிரானது இன்பத் துன்பங்களை மாறிமாறி அனுபவிக்கிறது. உயிரை விட மேலான பொருள் ஒன்று உண்டெனில் ஒழுக்கத்தை கூறலாம். ஒழுக்கம் என்பது மானுட பிறப்பதற்கே உரிய ஒன்றிய நலம் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவன் மேம்பாடு அடைகிறான்.

**“ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்”** (குறள் : 133)

ஒருவன் உயர்ந்த குடியில் பிறப்பதால் அவன் சிறந்த பண்பு உடையவன் என்றும், தாழ்ந்த குடியில் பிறப்பதால் ஒருவனை தீய பண்புகள் உடையவன் என்றும் கூற முடியாது. ஒருவன் எப்படியிருப்பினும் அவன் ஒழுக்கத்தை கடைப்பிடித்தால் உயர்ந்தவன் ஆகவே கருதப்படுகிறான். ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும். பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும் என்ற கருத்தை தம் குறள்வழி சிறப்பாய் விளக்குகிறார்.

**“பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்**
**தேரினும் அஃதே துணை”** (குறள் : 132)

**இல்வாழ்க்கை:**

மனித வாழ்வில் முதலில் பின்பற்றத்தக்கது இல்லற நெறி ஆகும். இதனை,

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்”** (குறள் : 50)

இவ்வுலகில் நல்ல முறையில் இல்வாழ்க்கையில் ஈடுபடுபவன் தேவலோகத்தில் உள்ள தேவர்களுக்கு ஒப்பாக கருதப்படுவான் என்பதை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது.

**விருந்தோம்பல்:**

திருக்குறளில் விருந்தோம்பல் பற்றி கூறுவதற்கு வள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை படைத்துள்ளார். அதிகாரத்தின் மூலம் விருந்து பற்றியும் விருந்து அளிக்கக் கூடிய மக்களின் பண்புகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றார்.

**“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு”** (குறள் : 81)

என்ற குறளின் மூலம் இல்வாழ்க்கையில் ஈடுபடக்கூடியவர்கள் பொருளை சேமிப்பது மட்டுமல்லாமல், விருந்தினர்களுக்கு விருந்து அளிக்க வேண்டும் என்ற

பதிவினை மக்களுக்கு எடுத்தியம்புகிறார். வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் உபசரித்து அவர்களுக்கு விருந்தளிக்க வேண்டும். விருந்து அளிக்கும்போது நம் முகம் சிறிதேனும் வாடி இருந்தால் விருந்தினர்களின் முகமும் வாடும் என்பதை,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து" (குறள் : 90)**

என்ற குறளின் வழி வள்ளுவர், அனிச்ச மலர் ஆனால் அது எப்படி முகர்ந்தவுடன் வாடிவிடும் அதுபோல் நம் முகத்தில் சிறிது மாற்றம் ஏற்படும். இதனால் வரும் விருந்தினரின் முகமும் வாடும் என்ற கருத்தினை எடுத்துரைக்கிறார்.

**உயிர் கொல்லாமை:**

எந்த ஒரு உயிரையும் கொலை செய்யாது, புலால் உண்ணாது வாழ்பவர்களை இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்று கூறுகிறார் வள்ளுவர்.

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி**
**எல்லா உயிரும் தொழும்" (குறள் : 260)**

என்ற குறள் புலால் மறுத்தலை வலியுறுத்துகிறது. நெய் முதலிய பொருள்களை வேள்வியில் செய்யும் யாகத்தால் விளையக் கூடிய நன்மை விட அதிகமான நன்மை, ஒரு உயிரை கொல்லாது இருப்பதின் மூலம் விளைகிறது என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

**ஆசையை விடுதல்:**

மனித வாழ்வின் அடிப்படையானது ஆசை எனலாம். தனிமனித பேராசை தான் நாட்டில் தலை விரித்தாடும் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் எனலாம். லஞ்சம், ஊழல் போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் அடிப்படை காரணம் எனலாம். எல்லாவற்றையும் தானே அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைதான் ஒருவனை அழிவு பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

**"அவாவில்லார்க் கில்லாகும் துன்பம.். துண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்" (குறள் : 368)**

என்ற குறள் பேராசைப்பட்டோருக்கு துன்பங்கள் தொடர்கதையாகும் என்ற எச்சரிக்கையை விடுத்தது போல அமைகின்றது.

**கல்வி:**

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக" (குறள் : 391)**

கல்வி இன்றைய வாழ்விற்கு அவசியமான ஒன்றாகும். ஆதலால் அனைவரும் கல்வி கற்க வேண்டும். கற்கும் நூல்களை குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு அதனை தன் வாழ்வியலில் கடைபிடிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**வாய்மை:**

வாய்மையைச் சிறந்த அறம் எனப் பறைசாற்றிக் கீழ்வரும் குறள்களால் வாய்மைக்குக் கீழெல்லையும் பொய்மைக்கு மேலெல்லையும் குறிக்கிறார் திருவள்ளுவர்.

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்" (குறள் : 291)**
**"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**

**நன்மை பயக்கும் எனின்” (குறள் : 292)**

**இனியவை கூறல்:**

நம்முடைய இனிய சொற்கள் பாவத்திற்கு கழுவாயாக அமையும் அறத்திற்கு சமமானது என்பதை,

**“அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்” (குறள் : 96)**

என்ற குறள்வழி சுட்டுகிறார்.

**செய்ந்நன்றி மறவாமை:**

மற்ற உயிர்களிடம் இருந்து மனிதனை தனிமைப்படுத்திக் காட்டுவது அவனுடைய ஆறாவது அறிவுதான். அவர் இவனது நல்ல வி'யங்களை பகுத்து அறிந்து கொள்வதற்கு தான் இறைவனால் படைக்கப்பட்டது. மனிதன் போற்ற வேண்டிய செயல்பாடுகளில் ஒன்றுதான் நன்றி மறவாமை ஆகும். ஏனெனில் எவ்வகை பாவம் செய்து அதிலிருந்து மீள்வதற்கு எந்த வழியும் இல்லை எனலாம்.

**“காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது” (குறள் : 102)**

என்ற குறட்பாவில் நாம் துன்பப்படும் காலத்தில் நமக்கு உதவி செய்தவர்களை உடலில் உயிர் உள்ளளவும் மறத்தல் கூடாது என்பதை இக்கருத்துக்கள் உணர்த்துகின்றன. ஆனால் இன்று உயிர் கொடுத்து, உரு கொடுத்து, உணவு ஊட்டி வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை பாரமாக கருதும் அவலநிலை பெருகி வருகிறது. செய்ந்நன்றி மறந்த நிலையை தான் இன்றைய முதியோர் இல்லங்கள் நினைவுட்டுகின்றன. இன்றைய சூழலில் மனிதர்களிடம் வளர வேண்டிய பண்புகளில் இதுவும் ஒன்றாகும்.

**முடிவுரை:**

சமூகத்தில் அறப்பண்பு வளர வேண்டும். அன்புடைமை, ஒழுக்கமுடைமை, இல்வாழ்க்கை, விருந்தோம்பல் பண்பு, உயிர் கொலை செய்யாமை, ஆசையை விடுதல், கல்வி, வாய்மை, இனியவை கூறல், செய்ந்நன்றி மறவாமை முதலிய அறச்சிந்தனையை கடைப்பிடிப்பதன் மூலம் நம் வாழ்வு சிறந்து விளங்கும் என்பதை வள்ளுவரின் வாக்கு மூலம் உணர முடிகிறது. இச்சமூகத்தில் நம் வாழ்வு சிறப்பாக அமைவதற்கு வள்ளுவம் காட்டும் இவ்வழிமுறைகளை கடைபிடித்தால், நம் வாழ்வு கலங்கரை விளக்கமாக ஒளிரும் என்பது வெள்ளிடைமலை.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய*www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# திருவாசக பக்திநெறியில் அறம்

**முனைவர் செ.மகேஸ்வரி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
சென்னை – 78

**ந.சரவணன்**
உதவிப் பேராசிரியர் மற்றும் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை,
கிங் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி)
ஸ்ரீபெரும்புதூர், சென்னை – 17

## முன்னுரை

மனிதனிடமுள்ள பண்புகள் அனைத்தும், அவனது செயல்கள் மூலமே வெளிப்படுகின்றன. சமூகம் வகுத்துள்ள அறநெறிக்கோட்பாடுகளை மனிதன் பின்பற்றும்போது, சிறந்த அறநெறியாளனாக அவன் கருதப்படுவான். இத்தகைய தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்புடைய அறக்கருத்துக்களைப் பல நூல்களும் வலியுறுத்தியுள்ளன. மனிதன் என்பவன் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பவனாக உருவாவதற்கு அறநெறிக் கருத்துகள் துணை செய்கின்றன. கடவுளை வழிபாடு செய்தலிலும் அறம் இன்றியமையாத தாகின்றது. கடவுள்நம்பிக்கை என்பது ஒருபுறம் இருப்பினும் மூடநம்பிக்கையை கடவுள் வழிபாட்டோடு புகுத்தும் செயல்கள் அறமற்றதாகின்றது. வன்முறையான வழிபாடு இல்லை. மனிதன் மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை இமைப்பொழுதும் நீங்காது இருக்கும் நிலையை மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

## அறமற்ற குணங்கள்

அறம் என்பது என்ன என்பதை அறிவதற்கு அறமல்லாதவற்றை அறிந்திருந்தாலே போதுமானது. அறமல்லாதவைகள் பாவம், பொறாமை, ஆசை, பேராசை, சுயநலம், ஆதிக்கம் செலுத்துதல், தற்பெருமை. பழிக்குப்பழி, கோபம், சோம்பல், வெட்கம், வெறுப்பு போன்ற பின்பற்றத்தகாத குணங்களும் சமூக வாழ்வில் பரவிக்கிடக்கின்றன. தனிமனிதனின் நலத்திற்கும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் இவை கேடு விளைவிக்கின்றன.

## மதங்கள் போதிக்கும் அறங்கள்

மனித வாழ்விற்குத் தேவையான நல்லறங்களை போதிப்பது மதங்கள். ஒவ்வொரு மதங்களின் வழிபாட்டுமுறைகள் மாறுபட்டிருந்தாலும் சொல்லக் கூடிய கருத்துக்கள் ஒன்றேயாகும். அக்கருத்துக்கள் மனித வாழ்விற்கு முக்தி அளிக்கும் விதமாகவும் ஒரு மனிதனின் நல் வாழ்விற்கு துணை செய்யும் வகையிலும் அமைந்திருக்கும். மதங்களில் கூறப்பட்டிருக்கும் சமயக்கருத்துக்களும் அதில் பொதிந்துள்ள அறச்சிந்தனைகளும் தனி மனிதனைப் பக்குவப்படுத்தி இறை அனுபவம் பெற வைக்கிறது. அவ்வகையில் படிக்கும்போதே கண்ணீர் மல்கச் செய்யும் சக்தி வாய்ந்த பாடல்களால், தேனாகப் போற்றப்படும் நூலான சைவசமயத்தின் எட்டாம் திருமுறையாகிய திருவாசகமேயாம். அதில் கூறப்படும் வழிபாட்டு நெறிகளைக் கொண்டே உணர்த்தப்படும் அறம் புரிதலாகிறது.

## மனித வாழ்வில் அறம்

**புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்**

**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து**
**ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"- திருவாசகம் 26 - 31**

ஓருயிரிமுதல் எல்லா பிறவிகளையும் எடுத்து இறுதியில் மனிதப் பிறவியை எடுத்து வந்ததன் பலனாக நல்லவை அல்லாதனவற்றை நிலையானது என்று நம்பும் அறியாமை வசப்படாமல் மனிதன் தன் வாழ்நாளில் தன்னை உணரும் அனுபவத்தை விடுத்து உலகியலின் பின்னால் சென்றால் பிறவிப்பயனை அடையாமல் பிறவி மீண்டும் மீண்டும் எடுக்கும் நிலை ஏற்படும். இதனையே வள்ளுவரும்,

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்"- குறள் 10**

என்று வள்ளுவரும் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

**இறை அனுபவ வாழ்வு**

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க! என்ற வரிகளின் வழி இறைவனை எப்பொழுதும் நிலைநிறுத்தி வாழ்பவர்களின் வாழ்வானது அறவாழ்வாகவே அமைந்திருக்கும். அடியார்களின் அருள் செயல்கள் அனைத்தும் பிறர்நலம் பேணும் அறம் மிகுந்த வாழ்வாகவே இருக்கும். வாழ்வில் நடக்கும் அனைத்து செயல்களுக்கும் இறைவன் ஒருவனே காரணம் என்பதை உணர்ந்து உரைப்பர். புகழுக்கு மயங்கியும், பழிவந்தால் கலங்கியும் வாழமாட்டார்கள். நடுவுநிலைமையுடன் அமைதியான மனநிலையில் அறவாழ்வு வாழ்வர். திருவாசகம் படிப்போரின் எண்ணங்களை சீர்படுத்தும் விதமாகவும் கண்ணீர் மல்கச் செய்யும் உணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்துள்ளது. மதத்தைப் பரப்புவதற்கு வந்த ஜி.யு.போப் திருவாசகம் போன்ற ஒரு நூலை உலகில் எந்த மொழியிலும் இதுவரை கண்டது இல்லை என்று கூறுகிறார். இது திருவாசகத்தின் உண்மை அவர் பெற்றதன் பயனாகும். மேலும் திருவாசகத்தை ஓதி உணர்ந்து ஊற்றெழும் கண்ணீரில் நனைந்து பாடும் நிலையானது சிறந்த இறை அனுபவமே எனலாம்.

திருவருட்பிரகாச வள்ளலார் எல்லோராலும் எலும்பையும் உருக்கும் திருவாசகத்தைப் படித்து இறை அனுபவத்தைப் பெற முடியும் என்று கூறிவிடமுடியாது. அந்த அனுபவத்தைப் பெறுவதற்கு திருவாசகத்துடன் கலக்க வேண்டும். என்பதை,

**"வான்கலந்த மாணிக்கவாசகரின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்சுவை கலந்தென்**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!" –திருவருட்பா 3263**

என்று பாடியுள்ளார். திருவாசகத்தை படிக்கும்போது நமக்குள்ளே கலக்கும் நிலையிலிருந்து படித்தால் இறைஅனுபவம் உணர முடியும்.

**மனித வாழ்க்கையின் நிலை**

மனித வாழ்வின் நிலையானது நாங்கூழ்ப் புழுவைப் புலன்களாகிய எறும்பு அரிக்கிறது. மேய்ப்பார் இல்லாத மாடுபோல அலைந்தும், சாதி குலம் வேறுபாட்டோம் என்று அறியாமையில் நிலை தடுமாறியும், முக்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வதையும், தையலார் மையலிலே பேசியும், கல்லாத புல்லறிவிக்க கடைப்பட்ட நாய்ப் போலவும், மனித வாழ்க்கை அமைந்து கிடக்கிறது. இறைவனை நாடாத மனத்தைக் கடிந்து தூய்மையாக்குதல் வேண்டும்.

**இறைவழிபாட்டில் அறம்**

மனம், மொழி. மெய்களால் இறைவன் திருவடிகளையே நினைந்து வழிபடுவதைத் திருவாசகம் கூறுகையில், இறைவனிடத்தில் அன்பு மீதூர்ந்து உருகி வழிபட வேண்டும். எவ்வாறு உருகி வழிபட வேண்டும் என்பதை,

**"அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய், அழல் சேர்ந்த**
**மெழுகே அன்னார், மின்னார், பொன்னார் கழல்கண்டு**
**தொழுதே உன்னைத் தொடர்ந் தாரோடும் தொடராதே**
**பழுதே பிறந்தேன் என் கொண்டு உன்னைப் பணிகேனே"**
**-திருவாசகத்தில் சைவ சித்தாந்தம் பா.எண் 92 ப 36**

உன்னிடத்தில் அன்புமயமான உள்ளம் உடையவராய், ஒளிபொருந்திய பொன் அனைய திருவடிகளைத் தரிசித்து தீயிடைப்பட்ட மெழுகினைப் போன்றவராய் தொழுது வழிபட்ட நிலையிலேயே உன்னைப் பின்பற்றித் தொடர்ந்தடைந்த அன்பரோடும் தொடர்ந்து வாராமல் தனிமைப்படுத்தப்பட்டு அழுவேனாயினேன். எனவே என் பிறப்புப் பாழ்பட்டு விட்டது. இனி

எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு உன்னை வழிபடுவேன்? (ஒரு வழியும் காணேன் என்றவாறு) வழிபாட்டுக்கு முதற்கண் வேண்டுவது, அன்புமயமான உள்ளம், இறையன்பினையன்றி வேறெதுவும் வழிபாட்டின் போது, உள்ளத்தில் இருந்தால், இறைவன் அருள் பாலிக்க வரும்போது அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாது, இழந்து விடுவோம் என்பது அறிவுறுத்தப்படுகின்றது.

தீயில் பட்ட மெழுகினை ஒத்த உணர்வு வேண்டும். மெழுகு உருகும்போது தன் நிலையை இழந்துவிடுகிறது. இறையன்பு உள்ளத்தில் நிறைந்து இருக்குமாயின், ஆன்மா தன் உணர்வை இழந்து நிற்கும். சிவபெருமானையன்றி வேறு நினைவு உள்ளத்தில் இருக்குமாயின் இந்த நிறைவு ஏற்படாது. அதனால் வழிபாடு பயனற்றதாகிவிடும். ஏக இறை தத்துவம் என்பது நமக்குப் பிடித்த ஒரே தெய்வத்தை எப்போதும் வழிபடும் முறையாகும். ஆதில் மாறுபட்டோமானால் குழப்பமும் பிரார்த்தனையில் முழுமையும் இல்லாமல் போய்விடும். எண்ணியவை எதுவும் ஈடேறாமல் போகும். ஆகையால் ஒரே தெய்வமாக வழிபடும் அறமானது எல்லாவகையிலும் சிறப்பு தரும். சைவ சித்தாந்தத்திலும் சரி திருவாசகத்திலும் சரி இக்கொள்கை வலியுறுத்தப்படுகின்றது.

**“கற்றைவார் சடைஎம் அண்ணல், கண்ணுதல்**
**பாதம் நண்ணி, மற்றும் ஓர் தெய்வம்**
**உண்டு என நினைந்து, எம்பெருமாற்கு**
**அற்று இலாதவரைக் கண்டால்,**
**அம்ம! நாம் அஞ்சுமாறே” திருவாசகத்தில் சைவசித்தாந்தம் பா.எண் 516 ப 38**

சிவபெருமானிடம் அன்பு மீதூர்ந்து வழிபடும்போது தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் இழந்து போகாதவர் என்ற பொருளில், நமது உடைமை என்பது எதுவும் இல்லை என்ற உணர்வோடு வழிபடல் வேண்டும்.

சைவசித்தாந்த த்தின் இத்தலையாய கொள்கையை மாணிக்கவாசகர் வலியுறுத்தக் காரணம், சிவபெருமான் ஒருவனே ஐந்தொழில் ஆற்றுபவன் என்பதனாலேயே ஆகும்.

**பக்தியில் அன்பு வெளிப்படும் நிலை**

திருவாசகத்தில் சிவபெருமானின் பெருமையையும் நமது சிறுமையையும் ஆயிரக் கணக்கான இடங்களில் மணிவாசகப் பெருந்தகை கூறியருளியுள்ளார்கள். திருமுறைகளைப் பாடும்போது நம்மையும் அறியாமல் சிவபெருமானிடத்தில் அன்பு மீதூர்ந்த நிலை ஏற்படும். இத்தகு நிலையை

**“சிவன் எம்பிரான் என் சிறுமை கண்டும்**
**என்னை ஆண்டு கொண்டான் அவன்**
**எம்பிரான் என்ன, நான் அடியேன் என்ன**
**இப்பரிசே எம்பிரான் தெரியும் பரிசு ஆவது”**
**- திருவாசகத்தில் சைவ சித்தாந்தம் பா.எண் 13 ப 38**

என்னும் உணர்வுத் தலைப்படும் இதுவே வழிபாட்டின் பயன் ஆகும். (பரிசு – தன்மை) சிவபெருமானும் ஆன்மாவும் அத்துவித – நிலையில் இருக்கும் தன்மையே வழிபாட்டின் முடிந்த பயன் இதனினும் மேலான நிலை வேறில்லை.

வேண்டாமை என்னும் விழுச்செல்வத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபடவேண்டும். புதுவாழ்வின் பொய்மையினை உணர்ந்து இறைவனை அடையும் வாழ்வைத் தேடும் அரும் முயற்சியில் ஈடுபடவேண்டும். பிறர் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். இம்மண்ணுலகில் மிகுந்த தகுதியுடையவன்போல் நடித்து பொய்மை வாழ்வு வாழக்கூடாது என்பதை,

**“நடித்து மண்ணிடைப் பொய்வினைப்**
**பல செய்து நானெனது எனும் மாயக்**
**கடித்த வாயிலே நின்றுமுன்**
**வினைமிகக் கழறியே திரிவேனைப்**
**பிடித்து முன்னின்றப் பெருமறை**
**தேடிய அரும்பொருள் அடியேனை**
**அடித்தடித்து அக் காரமுன்**
**தீற்றிய அற்புதம் அறியேனே”- திருவாசகம் அற்புதப் பத்து பா.எண் 3 ப 118**

என்ற பாடலில் உணர்த்தி யான் எனது என்னும் பற்றுக்களை விடவேண்டும் என்று வாழ்வியல் அறம் கூறுகின்றார். மாயையைக் கடந்து இன்பநிலை அடையவேண்டுமெனில் அன்பு மீதூர்ந்த பக்தி மேலோங்க வேண்டும். அச்சம் தவிர்த்து இறை அனுபவத்தை நுகர்தல் வேண்டும் என்கிறார்.

**முடிவுரை**

இறைவாழ்வு வாழ்வதற்கான வழிகாட்டுதலாக நாம் உலகியல் பொய்மைகளை விடுத்து மெய்ம்மைகளை கடைபிடிக்கும் வழிகளை திருவாசகம் இயம்புகிறது. இறையருள் கிடைத்து விட்டால் அறிவின் துணை கொண்டு பெற வேண்டியது அனைத்துமே தாமே வந்து விடும். மனித வாழ்வு இருண்டு கிடப்பதற்கு ஒரு நல்ல தீபமாக திருவாசகம் வெளிச்சம் தந்துள்ளது. திருவாசகத்தின் மீது பல அறிஞர்களுக்கு மனம் குவியக் காரணம் அதில் மாணிக்கவாசகர் குறிப்பிடும் உண்மை அனுபவங்களாகும். இதன் மூலம் பலரும் இறை அனுபவத்தை அடைய முடியும். திருவாசகத்தில் வாழ்வியலாகப் பொதிந்துள்ள அறக்கருத்துக்கள் மனித குலத்தின் துயரத்தை நீக்கி பேரானந்தத்தைத் தருகிறது. திருவாசகத்தில் உள்ள பக்திநெறியில் காணப்படும் அறம் வாழ்வின் மெய்ம்மையை விளக்குகின்றது,

**பார்வை நூல்கள்**


1. சிவனடியார் திருக்கூட்ட அறக்கட்டளை, மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்,திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த சைவத் திருமுறை அமைப்பாளர்,ஸ்ரீராம் நகர். காரைக்கால் - 02 பதிப்பு – 2017
2. ஸ்ரீ நிவாஸ் டாக்டர் சு.சாது, மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் மூலமும் உரையும், ஸ்ரீ இந்து பப்ளிகே'ன்ஸ், சென்னை பதிப்பு - 2002
3. திருவாசகத்தில் சைவசித்தாந்தம், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடை மருதூர். முதல் பதிப்பு – 1992
4. பரிமேலழகர் (உ.ஆ), திருவள்ளுவர், திருக்குறள், கழக வெளியீடு, சென்னை, பதிப்பு – 1961
5. கவிஞர் பத்மதேவன் (உ.ஆ), திரு அருட்பிரகாச வள்ளலார், திருவருட்பா, ஸ்ரீ இந்து பப்ளிகே'ன்ஸ், சென்னை பதிப்பு - 2015

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# சங்ககால மன்னரின் ஆட்சிமுறையும் அறநெறிகளும்

**முனைவர். இம்மானுவேல்ரவி,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தனலட்சுமி சீனிவாசன்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி.
மாமல்லபுரம், சென்னை -104

**முன்னுரை**

புறவாழ்க்கை என்பது மன்னன் உட்பட்ட மக்கள் வாழ்க்கை தான், எனினும் மன்பதை காக்கும் நீள்குடி “என்று போற்றப்பெற்ற அரச குடும்பத்தில் பிறந்து முடிசூட்டிக் கொண்டு மக்களை ஆண்ட மன்னரின் புறவாழ்க்கையானது மக்களின் புறவாழ்க்கையொடு, இயைந்து ஒரு தனிப்பகுதியாகவே தெரிகிறது. மன்னனது கோன்மை என்பது மக்கள் வாழ்வோடு தொடர்புடையது. கோன்மையின் ஒரு கூறாக விளங்கிய போர் வினையும் மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை உண்டாக்கிய ஒரு தொடர்பினைக் கொண்டதாகவே, இருந்தது. நாட்டைக் காக்கவும் தமிழரின் மானத்தைக் காக்கவும் மக்களொடு தொடர்புடைய அரச குடும்பத்து மானத்தைக் காக்கவும் மேற்கொண்ட போரினையும் எதிர்கொண்ட போரினையும் மக்கள் ஏற்றுக்கொண்டனர். அதனால் நேர்ந்த சீரழிவினையும் தாங்கிக்கொண்டனர். மன்னனின் வெற்றிக்குத் துணையும் செய்தனர். மன்னன் தன் செருக்கினால் மேற்கொண்ட போரினை மக்கள் வெறுத்தனர். அச்செவ்வி மன்னனை அணுகும் உரிமை மிகப்பெற்றிருந்த புலவர் நயந்தும் கடிந்தும் அறிவுரை கூறிப் போரினைத் தடுத்தனர். நன்னடை நல்குதல், மக்களை வருத்தாத அளவில் அரசிறை கொள்ளுதல், நல்லமைச்சினைத் துணையாகக் கொள்ளுதல், இரவலர்க்கு ஈதல், பல வளம் பெருக்குதல் ஆகிய நன்னெறிகள் மன்னரிடம் செறிந்திருந்தன. அவை மன்னர்க்குப் பெருமை சேர்த்தன. நன்னெறிகளைப் பின்பற்றாத மன்னர்க்குப் அறிவுறுத்தித் திருத்தினர். அதனால் மக்களின் புறவாழ்க்கை மேம்பட்டது. புலவர்கள் பல கருத்துகளை சங்கப் பாடல்களில் எடுத்துரைத்துள்ளனர். அக்கருத்துகளை இன்றைய ஆட்சியாளரும் உணர்ந்து மேற்கொள்ளத் தக்கவையாக விளங்குகின்ற சங்ககால மன்னரின் சிறப்பியல்புகளையும் ஆட்சி நெறிகளை அறவியல் செயல்பாடுகளுடன் ஆராய்ந்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**மன்னரும் அறமும்**

சங்க காலத் தமிழ் மன்னர்கள் நேர்மையான முறையில் இருந்து என்றும் தவறிவிடாமல் புலவர்கள் அறிவுரை வழங்கப்பட்டது. பல இனிய சொற்களால் அறம் சார்ந்த கருத்துகளை உணர்த்தியுள்ளனர். சில வேளைகளில் செவியில் கடுமையாக ஒலிக்கும் சொற்களைக் கூட அஞ்சாமல் கூறி, அரசர்களைத் திருத்தமான வழிநோக்கித் திருப்பியிருக்கிறார்கள். அவற்றினை செவியறிவுறூஉ, பொருள் மொழிக் காஞ்சி, வாயுறை வாழ்த்து முதலான துறைகளில் அமைந்த புறநானூற்றுப் பாடல்களில் இத்தகைய அறிவுரைகளைக் காணலாம். மன்னர்களும், மற்றவர்கள் தம்மைப் பார்த்துப் பின்பற்றத் தக்க வகையில் நல்ல நடத்தை உடையவர்களாய் வாழ்ந்துள்ளனர். அத்தகைய அறம் சார்ந்த காருத்துக்களை பின்வருமாறு காணலாம்.

**முறைசெய்யும் வேந்தே மக்களுக்கு உயிர்**

நெல்லும் நீருமே மனித வாழ்க்கைக்கு உயிர். இஃது யாவரும் அறிந்த உண்மை. ஆனாலும் மன்னன் முறைசெய்து வளம் பெருக்கிக் காப்பதனால்தான் நாட்டில் நெல்லும் நீரும் உளவாகின்றன. ஆதலின் மக்களுக்கு நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று மன்னனே உயிர் என்று பழந்தமிழர் எண்ணினர். அதனால் மன்னனைப் போற்றி மதித்தனர். மன்னனும் தன்பால் அன்பும் மதிப்பும் கொள்ளும் மக்களை மதித்தான். தானே மக்கட்கு உயிர் என்பதை உணர்ந்து மக்களைக் காப்பதைத் தன் கடைமையாகக் கொண்டதை சிறந்த அறம்மாக காணலாம்.

**மன்னன் செலுத்திய ஆட்சிச் சகடம்**

உருளையையும் பார் என்னும் உறுப்பினையும் சரியாகக் கோத்துச் சகடத்தைச் செலுத்துவோன் மாட்சிமைப்படச் செலுத்தினால் ஊறுபாடின்றிச் சகடம் செல்லும், செலுத்துதலைத் தெளிய மாட்டானாயின் சேற்றிலோ குழியிலோ அழுந்திச் சகடம் கெடும். அ்.தே போல் மன்னன் மாட்சிமைப்பட்டு நல்லமைச்சர் முதலானாரொடு ஒன்றி நாடு என்னும் சகடத்தைத் தெளிவுடையவனாய்ச் செலுத்தின் மக்கள் வாழ்க்கை இனிதே இயங்கும். இல்லையேல் நாடு சீரழியும்.” இந்த ஆட்சி நெறியைப் பழந்தமிழ் மன்னர் தெளிந்திருந்தனர். இந்நெறியைத் தொண்டைமான் இளந்திரையன் என்னும் ஒரு மன்னனே எல்லாரும் உணருமாற்றான் மொழிந்தான். பழந்தமிழ் மன்னர் இவ்வாட்சி நெறியை உணர்ந்து பின்பற்றி முறை செய்து மக்களைக் காத்தனர். புலவர்களும் அவ்வப்போது மன்னர்களுக்கு நல்ல அறவுரை நல்கி நெறிப்படுத்தியுள்ளது சிறந்த அறமாகும்.

**அரசிறை கொண்ட அறநெறி**

விளைச்சலை அறுத்தபின் உணவாக்கிக் கவளமாக யானைக்கு ஊட்டினால் அளவினதாகிய சிறிய இடத்தில் விளைந்த நெல்லும் நாளுக்கு உணவாகும். ஆனால் நூறு செறு அளவினதாகிய அகன்ற நிலமாயினும் யானையே புகுந்து உண்ணுமாயின் வாயில் புகுவதினும் காலில் மிதிபட்டு அழிவது மிகுதியாகும். இவ்வாழ்வியல் உண்மையைப் பழந்தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். இவ்வுண்மையே போல் மக்களின் நிலைமையை அறிந்து மன்னன் இறை கொளின் செல்வமும் கோடியாகச் சேரும். மக்களும் வருத்தமின்றி மனம் உவந்து இறை செலுத்துவர். மன்னன் இரக்கமின்றிக் கல் நெஞ்சம் உடைய அமைச்சுச் சுற்றமொடு ஒன்றி, பரிவு இன்றி இறை கொள நினைத்தால் யானை புக்க புலம் போல நாடு சீரழியும். அரசிறை கொள்ளும் இந்நெறியைப் பழந்தமிழ் மன்னர் பின்பற்றி மக்கள் மனதில் நிலைத்து வாழ்ந்ததை புறநானூற்றுப்பாடல் 184 மூலம் அறியமுடிகின்றன.

**உழவரை காத்தல் அறம்**

மன்னனது குடையானது அவனுக்கு வெயிலை மறைத்தற்கு அன்று குடிகட்கு நிழல் செய்வதற்கேயாகும். விளைவு குறையினும் மக்கள் இயல்பல்லாதன செய்யினும் மன்னனுக்கே பழியாகும். படை வெற்றியும் நெல்லினது பயனால் அமைவது என்னும் இவ்வுண்மைகளை மன்னர் தெளிந்திருந்தனர். எனவே ஏரினைப் பாதுகாப்பாருடைய குடிகளைப் பாதுகாத்து அக்காவலானே ஏனைய குடிகளையும் பாதுகாத்துப் புகழ் எய்தினர். என்பதை

**”நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே**
**உண்டி முதற்றே யுணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**
**நீரு நிலனும் புணரி யோரீண்**
**டுடம்பு முயிரும் படைத்திசி னோரே” (புறம்.18)**

என்றப் பாடல் குறிப்பிடுகின்றன. மேலும் ,தேப்போன்றப் பாடல் ஒன்று ““மழையைப் பார்த்திருக்கும் புன்செய் நிலம் இடம் அகன்றதாயினும் அரசனது முயற்சிக்குப் பயன்படாது. எனவே நிலங்குழிந்தவிடத்து நீர் நிலையை அமைத்துக் கொடுப்பது மன்னனுக்கு அறிவுடைமையும் கடமையும் ஆகும் என புறநானூற்றுப்பாடல் வழியாக காணமுடிகின்றன. பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் புலவர் குடபுலவியனார் அறிவுறுத்த மன்னனும் அ்.தேற்று நீர் வளம் செய்து தந்து ஏரின் வாழ்நரையும் பிற குடிகளையும் காப்பது முதன்மையான அறம்மாக எடுத்துரைக்கப்படுகிறது.

**நீர்வளமும் பிறவளமும்**

கரிகாலனாகிய திருமாவளவன் மக்கள் மகிழ ஆட்சி செய்தான். காடுகளை அழித்து நாடாக்கினான். குளம் அகழ்வித்து நீர் வளம் பெருக்கினான். உறையூரை விரிவு செய்தான். கோவில்களுக்கு வாயில்கள் அமைத்துப் புதுப்பித்தான். குடிகளை நிலை பெறச் செய்து மகிழ்வித்தான் என்பதனை பட்டினப்பாலை (283- 287) உணர்த்துகிறது . மேலும், பசிப்பிணி போக்க ஆங்காங்கே உணவு அறச்சாலைகள் அமைத்த அறச்செயலை

**”அறநிலை, அகனட்டிற்**
**சோறுவாக்கிய கொழுங்கஞ்சி**
**யாறுபோலப் பரந்தொழுகி**
**ஏறுபொரச் சேறாகித்**
**தேரோடத் துகள்கெழுமி**
**நீறாடிய களிறுபோல**
**வேறுபட்ட வினையோவத்து**
**வெண்கோயில் மாசூட்டும் ” (பட்டி.43-50)**

என்று பட்டினப்பாலை ,லக்கியம் போற்றுகிறது. அதோடு எல்லாரும் எல்லாவற்றையும் பெறுதற்கு வணிகத்தை மன்னர் நெறிப்படுத்தி வளர்த்தனர். திருமாவளவன் ஆட்சியில் ஏற்றுமதி ,றக்குமதி வாணிகமும் செவ்வனே நிகழ்ந்தது. பண்ட சாலைகளில் வாணிபப் பொருட்களைப் பாதுகாத்தும் சுங்கவரி விதித்தும் வாணிபத்தை விரிவுபடுத்தினான். இதனை

**"நீரினின்று நிலத்தேற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்**
**அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பறியாமை வந்தீண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்லணங்கினோன்**
**புலிபொறித்துப் புறம்போக்கி"( பட்டி.129-135)**

என்று பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

நகத்தடியில் தைத்திரக்கும் நடு ஆணிபோல நடுவுநிலைமை உள்ளத்தோடு விளங்கியும் பழிக்கு அஞ்சி உண்மையே பேசியும் தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்பக் கருதியும் கொள்வதும் மிகை கொள்ளாமலும் கொடுப்பதும் குறையாகக் கொடுக்காமலும் வணிகர் நேர்மையாக வாணிபம் செய்யுமாறு மன்னன் நெறிப்படுத்தினான்." என்பதை பட்டினப்பாலை 206-210 எடுத்துரைக்கின்றன. எனவே பண்டைய காலத்தில் நேர்மையான முறையில் வணிகம் நடந்திருப்பதை அறியமுடிகிறது.

**வேந்தர் மேற்கொண்ட ஒழுக்க நெறிகள்**

துலாக்கோலின் சமன் வாய்போல் ஒரு பக்கம் கோடாது ஒழிதலையும் வாழ்த்தும் அந்தணரை வணங்குதலையும் ,றைவழிபாட்டினால் மனம் தூய்மை அடைதலையும் இல்வாழ்க்கை இன்பத்தினால் சினம்தணிய ஒழுகுதலையும் முதுகுடுமிப் பெருவழுதி தன் அறநெறிகளாகக் கொண்டு ஒழுகினான் என்பதை புறநானூற்றுப்பாடல்- 6 வாயிலாக அறியமுடிகிறது. மேலும், பகைவரது பிழையைப் பொறுத்தலும் பொறுத்தற்கு இயலாததாயின் நல்லமைச்சரொடு உசாவிய பின் பகைவரை அழித்தலும் பகைவர் பணிந்து வழிபட்டால் அருள் கூர்ந்து விடுத்தலும் நல்லொழுக்கங்கள் என முரஞ்சியூர் முடி நாகராயர் அறிவுறுத்த் (புறம்.2) பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் அவற்றைப் பின்பற்றி ஆட்சி செய்தான் என்பதை எடுத்துரைக்கின்றன.

பகைத்தோரை ஒழித்தலும் நட்டோரை மிகுத்துக் கூறுதலும், வலியர் என்று யாரையும் வழிபடாமையும், எளியர் என்று யாரையும் மிகுத்துப் பழிக்காமையும் இரந்தார்க்கு மறுக்காமையும், யார் மாட்டும் இரக்காமையும், அவையில் புகழை நிலைபெறச் செய்தலும், பரிசிலரின் பசி தீர்த்தலும், படையொடு வரும் பகைவரை எதிர் நின்று தடுத்தலும், புறம் காட்டி ஓடுநரின் பின் செல்லாது நிற்றலும், நல்லரச நெறிகள் எனப் புலவர் பேரெயின் முறுவலார் அறிவுறுத்த நம்பி நெடுஞ்செழியன் அவற்றைக் கொண்டொழுகி நல்லாட்சி செய்ததை புறநானூற்றுப்பாடல் (239) வாயிலாக அறியமுடிகிறது. இப்படிப் புலவர் பலர் நன்னெறிகளைக் காட்ட அவற்றைப் பழந்தமிழ் மன்னர் பின்பற்றி முறை செய்து புகழ் பெற்றனர்.

**சூளுரை உணர்த்தும் அரச நெறிகள்**

அவைக்களத்தை அறம் நிலை கலங்காததாகவும் அன்புடையதாகவும் வைத்துக் கொள்வதையும் நல்லார் நட்பினைத் துணையாகக் கொண்டு ஆள்வதையும் பல உயிர்களையும் காப்பதை அரச குடியின் கடமையாகக் கொள்வதையும் செங்கோன்மையாக மன்னர் கருதினர். அறத்தின் திறப்பாடு அறியாத ஒருவனைத் துணையாகக் கொள்வது கொடுங்கோன்மை என்பதையும் புறநானூற்றுப்பாடல் (71) எடுத்துரைக்கின்றன.

குடி பழி தூற்றும் கொடுங்கோலன் என்று மக்கள் தூற்றுவதற்கும் கொடுங்கோன்மையால் மக்கள் கண்ணீர சிந்துவதற்கும் மன்னர் அஞ்சினர். கொடுங்கோன்மையை உள்ளிப் புலவர் பாடாது நீங்குவதற்கும் அஞ்சினர். இப்பழிகள் நேரா வகையில் செங்கோன்மை செய்ததை புறநானூற்றுப்பாடல் ( 72) எடுத்துரைக்கிறது. அதோடு, பகைவரை வெற்றிபெறேனாயின் இத்தகைய பழிகள் என்னைச் சேர்க என்று வஞ்சினம் கூறியவற்றால் மன்னரின் அறிநெறிகள் இப்படி வெளிப்பட்டு நிற்கின்றன.

**நம்பிக்கை விளைத்த நன்னெறிகள்**

கொடுங்கோல் ஆட்சி செய்தால் அடுத்த பிறவியில் நல்ல அரச குடியில் பிறக்காமல் வன்புலம் காக்கும் தீக் குடியில் பிறக்க நேரும் என்ற நம்பிக்கை பழந்தமிழ் மன்னரிடம் இருந்தது." இந்த நம்பிக்கை எண்ணத்தை

**"மறுமை உலகத்தின்கண் நுகரும் செல்வத்தை விரும்பினும்**
**யாரையும் வென்று நீயே தலைவனாதலை விரும்பினும்**
**இம்மையில் புகழை நிலை நிறுத்த விரும்பினும்**

**நீர் வளம் பெருக்கிக் குடிகளை ஓம்புக ” (புறம்.18)**

என்று பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் புலவர் குடபுலவியனார் மொழியும் நல்லுரையும் தெரிவிக்கிறது. ,ந்த எண்ணம் தீநெறிகளை மேற்கொள்ளாமல்மன்னரைக் காத்துள்ளது. இந்த நம்பிக்கையை

**இம்மை**

**நன்றுசெய் மருங்கில் தீதில் என்னும்**
**தொன்றுபடு பழமொழி”(அகம்.101)**

என்று மறுதலையாக எண்ணி எடுத்த ,ப்பிறவியில் நல்லன செய்து ஒழுகுதலை ,ல்லறத்தாரும் கொண்டிருந்தனர்.

**செங்கோல் ஆட்சியில் மக்கள் நிலைமை**

மன்னரின் நல்லாட்சியின் கீழ் வாழ்ந்த மக்கள் சோறடும் வெம்மையையும் ஞாயிற்றின் வெம்மையையும் அறிந்தனரேயன்றிக் கொடுங்கோன்மையால் எழும் உள்ளத்து வெம்மையை அறிந்ததில்லை. ,ந்திரவில்லை அறிந்தனரேயன்றிக் கொலைவில்லைக் கண்டதில்லை. கலப்பைப் படையைக் கண்டனரேயன்றிக் கொலைப்படையைக் கண்டதில்லை. மன்னர் நல்வளம் பெருக்க் அவற்றால் ,ன்புற்று வாழ்ந்தனர் என (புறம்.20) பாடல் குறிப்பிடுகிறது.

**மன்னரே மொழிந்த அறிவுரைகள்**

மன்னரே கல்வி கேள்விகளின் சிறந்த புலவராய் விளங்கினர். நன்னெறிகள் பலவற்றை இலக்கியமாக்கினர். ” (புறம். 182) எனப் போற்றுமாறு விளங்கி தமக்காகவே வாழாமல் பிறர்க்கெனவும் வாழ்கின்ற சான்றோர் ஆங்காங்கே நிலைத்திருப்பதால்தான் இவ்வுலகமும் அழியாமல் நிலைபெற்று விளங்குகிறது.என்று பாடிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாட்டினால் வாழ்க்கை நெறிகளை மட்டுமின்றி அவனது அறவுணர்வினையும் அறிய முடிகிறது.

ஆசிரியர்க்கு உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் வெறுப்புறாமல் வணங்கிக் கற்றல் நன்று. ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்விச் சிறப்பினால் தாயும் மனம் வேறுபடும். ஒரு குடியில் பிறந்தோருள் மூத்தோனை வரவேற்காமல் அவருள் கற்றோனையே மன்னனும் வரவேற்பான். கீழ்க்குலத்துள் கற்றோனை மேற்குலத்தானும் வழிபடுவான்” (புறம். 183) என்று கல்வியின் சிறப்பினையும் கற்றலின் அவசியத்தையும் வலியுறுத்துகிறான். ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றி குறிப்பிடுகையில்

**”படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்**
**நெய்யுடை அடிசின் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை வில்லோர்க்குப்**
**பயக்குறை யில்லை தாம்வாழு நாளே ” (புறம். 188)**

என்று இப்பாடல் இல்வாழ்க்கையின் சிறப்பை வெளிப்படுத்துகிறான் பாண்டியன் அறிவுடை நம்பி.பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் வஞ்சின உரைப்பாட்டிலும் சோழன் நலங்கிள்ளியின் வஞ்சின உரை” பொருண்மொழிப் பாடல்களிலும்” ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் வஞ்சின உரைப் பாட்டிலும்” கோப்பெருஞ்சோழனின் பொருண்மொழி” இயன்மொழிப்” பாடல்களிலும் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் இயன் மொழிப் பாட்டிலும் சோழன் நல்லுருத்திரனின் பொருண்மொழிப் பாடல்களிலும்” வாழ்க்கை நெறிகளும் அரச நெறிகளும் செறிந்து விளங்குகின்றன. இப்படி நன்னெறிகளை வலியுறுத்தி இலக்கியமாக்கிய மன்னர் தம் ஆட்சியிலும் நல்லனவே செய்திருப்பர் என்பதை உணரமுடிகிறது.

**உணவறம் ஓம்பிய உயரிய ஆட்சி**

பசிதினத் திரங்கிய யாக்கை” பசியலைக்கும் பகை அழி பசி வருத்தம் கடும்பசி கலக்கிய இடும்பை” பழம் பசி கூர்ந்த ஒக்கல்” என உள்ளம் நொந்து குறிப்பிடும் பசித் துன்பத்தைப் போக்கி உதவுவது பேரறம் என்று பழந்தமிழர் எண்ணினர். எளிய குடிமக்களும் உண்டாயின் பதம் கொடுத்து மிகுதியாக இல்லாயின் பகிர்ந்துண்ணும் இல்லத்தோராய்” வாழ்ந்தனர். இரவலர் கூடத் தாமே வல்லாங்கு வாழ எண்ணாது பெற்றது கொண்டு சுற்றம் அருத்தி ஓம்பாது உண்டு கூம்பாது வீசி வாழ்ந்தனர் உணவு அறம் செய்ய இயலும் வாய்ப்பு மிகப் பெற்ற மன்னர்களும் வள்ளல்களும் இப்பேரறத்தை விரும்பிச் செய்தனர்.

**பசிப்பிணி மருத்துவன் பண்ணன்**

சிறுகுடிக் கிழான் பண்ணன் ஓம்பாது உணவளித்து ,ரவலரின் பசியைப் போக்கும் பேரறம் செய்து கொண்டிருந்தான். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் ‘பசிப்பிணி மருத்துவன்“ என்னும் போற்றுதலையும் “யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய“ என்னும் வாழ்த்தினையும்

பெற்ற பேறினனாய் விளங்கினான் என்பதை (புறம். 173) அதோடு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்று கொற்றங் கொற்றனாரும் "கைவள் ஈகைப்பண்ணன்"" என்று கோவூர் கிழாரும் போற்ற் உணவறம் செய்து மேம்பட்டான் என்று குறிப்பிடுகின்றன.

**உணவு அறம்**

சங்க கால மன்னர்கள் "உண்ணா ராயினுந் தன்னொடு சூளுற் ∴ றுண்மென விரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்"(புறம். 178) என்று உண்பிக்கும் அறத்தை ஆவூர் மூலங்கிழார் போற்ற் பாண்டியன் கீரஞ் சாத்தனும் "தேன் கடுப்பன்ன நாட்படு தேறலைப் பொலங்கலத்தில் ஊற்றி உணம் எனக் கொடுப்பான்"(புறம்.392) என்று ஔவையார் போற்ற பொகுட்டெழினியும் உணவறம் செய்தனர். இப்படித் தம்மை நாடி வந்த பரிசிலர்க்கு உணவளித்து உண்மின் என வலியுறுத்தி ஊட்டிப் பசி போக்கி மன நிறைவு கண்டனர் என்பதை சங்கப்பாடல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

**முடிவுரை**

பழந்தமிழ் மன்னர்கள் தம் ஆட்சியை மக்கள் வருந்தாத வகையில் அரசிறை கொண்டனர். உழவர் குடியைக் காத்து அதன்வழி பிறகுடிகளைக் காத்து அறத்தினை மேற்கொண்டுள்ளனர். நாட்டின் வளத்தினைப் பெருக்க நீர்வளம் மிகவம் முக்கியம் என்பதனை நன்கு உணர்ந்து அதனை பெருக்கியும் காத்தும் வந்துள்ளனர். உணவு இன்றி நாட்டுமக்கள் வாழ்தல் இருக்காமல் இருப்பதற்க்கு உணவுச்சாலைகள் அமைத்து அறம் செய்துள்ளனர். அந்தணரை வணங்குதலும் அவர்களை பாதுகாத்தலும், பகைவரது பிழையைப் பொறுத்து நடத்தலும், நல்லமைச்சரின் உதவியால்அறிவுரைகளைப் பெற்று நாட்டுமக்களை வழிநடத்திய பாங்கு, வரியவர்களுக்கு பரிசுக் கொடுத்து ஈதல் போன்ற நல்லொழுக்கங்களை மன்னர்கள் மேற்கொண்டுள்ளனர். மேலும் மன்னரின் செருக்கினால் நேர்ந்த போரினை மக்கள் வெறுத்தனர். புலவர் மன்னரை அணுகி நயந்தும் கடிந்தும் அறிவுறுத்திப் போரினைத் தடுத்துள்ளதும். சில செவ்வி மக்கள் நலம் கருதி மன்னரே கோட்டையைப் பகை மன்னரிடம் ஒப்படைத்து விட்டுப் போரைத் தவிர்த்துள்ளது மன்னருகளின் சிறந்த அறமாகப் பார்க்கப்படுகிறது.

**பார்வை நூல்கள்**


1. பாலசுப்பிரமணியம் கு.வெ – அகநானூறு (2007) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98.
2. பாலசுப்பிரமணியம் கு.வெ – பட்டினப்பாலை (2007) (தொகுதி- 1) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சிட்கோ ,ண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 98.
3. பாலசுப்பிரமணியம் கு.வெ- புறநானூறு ( 2007) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர்,சென்னை – 98.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# கல்வியில் அறச்சிந்தனைகள்

**திருமதி ஜெ.மோகனலட்சுமி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மாதவரம், சென்னை – 60

## முன்னுரை

கல்வி என்பது அறிவைப் புகட்டுவதற்காக மட்டும் அல்ல ஒரு மனிதனுக்கு உயரிய பண்புகளைப் போதித்து அவனை மேன்மையான மனிதனாக செய்வதே கல்வியின் உண்மையான நோக்கமாகும்.

**'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தர்மங்கள் யாவும்**
**பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'**

என்ற பாரதியாரின் வரிகள் கல்வியின் அவசியத்தை உணர்த்துகின்றது. **'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்று பிற'** என்கிறார் பொய்யாமொழிப் புலவர். அதாவது உலகத்தில் மனிதர்களுக்கு கல்வி தான் சிறந்த செல்வம் ஏனைய செல்வங்கள் இதற்கு இணையாகாது என்பது இதன் பொருளாகும். கல்வி கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பர். செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். இத்தகைய உயர்ந்த செல்வத்தை அடைந்துகொள்ள எத்தகையச் செல்வத்தையும் இழக்கலாம் என்பதைக் இக்கட்டுரை வாயிலாக காண்போம்.

## இறந்தாலும் வாழ்வது கல்வி

நாம் இறந்தாலும் கூட மற்றவருக்கு நாம் கற்பித்தல் மூலம் வாழ்ந்துகொண்டே தான் இருக்கும் என்பதை நாலடியார் பாடலில் குறிப்பிடுகிறது.

**'இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாம் காணோம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து' (நாலடியார்)**

இப்பாடலில், கல்வியானது ஒரு மனிதனுக்கு மருந்தாகச் செயல்படுகிறது என்பதை புலப்படுத்துகிறது. மேலும், தன்னால் படைக்கப்பட்ட ஒரு படைப்பின் வாயிலாக கல்வி நிலைத்து நிற்க்கின்றது. மனிதனின் உடல் அழிந்தாலும் அவன் உள்ளத்து உணர்வால் எழுதப்பட்ட கல்வியானது அழியாது என்பதை இப்பாடல் விளக்குகிறது.

## விலங்கும் மனிதனும்

இவ்வுலகில் எண்ணற்ற விலங்குகள் வாழுகின்றன. அவற்றிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது கல்வி அறிவு ஒன்று மட்டுமே. கல்விக்

கற்றவன் மனிதனாகப் போற்றப்படுவான். கல்வி அறிவு இல்லாதவன் விலங்காகக் கருதப்படுவான் என்பதை திருவள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**‘விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்’ (குறள் : 410)**

கல்விதான் ஒரு மனிதனது அறிவுக் கண்களைத் திறக்கின்றது. பகுத்தறிவை உருவாக்கி அவனை வழிநடத்திச் செல்கின்றது என்பதை இக்குறட்பா புலப்படுத்துகிறது. கல்வி என்னும் சொல் கற்றல், கல்லுதல் ஆகிய சொற்களால் குறிக்கப்படுகிறது. கல்வியைக் கற்க எல்லையே இல்லை. அதை கற்கும் நம்முடைய ஆயுட்காலம் தான் மிகக் குறைவாக உள்ளது. அந்த குறைவான ஆயுட்காலத்தையும் நோய்களின் தாக்குதல்கள் இன்னும் குறைவடையச் செய்கின்றன. எனவே குறுகிய காலத்திலும் பயனுள்ள நூல்களை நாம் கற்க வேண்டியது அவசியமாகிறது.

**கல்வியை விரும்பிக் கற்க**

கல்வியானது ஒருவர்மீது திணிப்பதாக இருக்கக்கூடாது. அவர்கள் விரும்பும் கல்வியைப் படிப்பதற்கு வாய்ப்பினை அளிக்க வேண்டும். இன்றைய கல்விமுறை உண்பதாக இல்லாமல் ஊட்டுவதாக இருக்கின்றது. அறிவு வளர்வதற்கும், விரிவடைவதற்கும் கல்வி இன்றியமையாததாகிறது. இன்றைய சூழலில், கல்வியானது அறிவு வளர துணைபுரிகிறதா என்பதில் ஐயப்பாடு நிலவுகிறது. காரணம், விரும்பி ஒன்றைக் கற்கும்பொழுது அறிவு விரிவடைகிறது. திணிக்கப்படும் போது புறந்தள்ளப்படுகிறது. கல்வி என்பது கட்டிடங்களுக்குள் மட்டும் நடக்கின்ற நிகழ்வாக இருத்தல் கூடாது. ஒவ்வொரு நொடியிலும் அது இருக்கின்றது. கல்வியானது கடப்பாரைப் போல் கடினமாக பயன்படுத்தாமல் ‘பூக்களுக்கு வலிக்காமல் தேனிக்கள் தேன் எடுக்கிற நேர்த்தியுடனும், பூமிக்கு நோகாமல் விதைகள் வேர் விடுகின்ற நயத்துடனும் போதிக்கப்பட்டால் அதை எல்லோரும் நேசிப்பார்கள் என்று இன்றைய கல்வி முறைகள் எப்படி மாற்றம் பெறவேண்டும் என்பதை இறையன்பு வலியுறுத்துகிறார். விரும்பி உண்ணும் உணவினைப்போல கல்வியும் விருப்பப்பட்டு கற்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும் எனறுக் குறிப்பிடுகிறார்.

**உழைப்பே உயர்வு தரும்**

கம்பர் எவ்வளவு பெரிய கவிஞராக இருந்தாலும், பதிமூன்றாயிரம் பாடல்கள் எழுதுவதற்கு அவர் மிகக் கடினமாக உழைப்பையே ஈட்டிருக்க வேண்டும். அதனால் தான் நமக்கு தமிழ்மொழியில் கம்பராமாயணம் என்னும் பெருங்காப்பியம் கிடைத்திருக்கின்றது. அவர் அதை நேசித்து செய்தால் கம்பருக்கு எளிமையாக இருந்தது. நாம் கல்வியை நேசிக்கும்பொழுது கல்வியைப் பாரமாக இல்லாமல் எளிமையானதாக இருக்கும். முதலில் நாம் நமது திறமையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். ஏதேனும் திறன்களில் நமக்குப் பற்றாக்குறை இருந்தால் அவற்றை நாம் வளர்த்துக்கொள்ள இன்னும் அதிப்படியாக உழைக்க வேண்டும். படிப்பைத் தேர்ந்தெடுத்தப் பின் அதில் சராசரியாக இல்லாமல், உச்சத்தைத் தொடுகின்ற உந்துதலுடன் ஒரு நொடியையும் வீணாக்காமல் இயங்க வேண்டும். அது தொடர்புடைய விரிவான வாசிப்பை நிகழ்த்த வேண்டும். படித்தவற்றை அசைபோட்டு அலசி புதிய கோணங்களில் சிறகுகளைச் செலுத்திப் பார்க்க வேண்டும்.

**மாணவர்களின் கல்வித் திறன்**

‘வின்ஸ்டன் சர்ச்சில் ஒருபோதும் விட்டுவிடாதே’ என்கிற தலைப்பில் அவர் படித்த பள்ளியில் உரையாற்றினார். நோக்கம் முக்கியமாக இருந்தால், உணவோ, சுவையோ, பெரிதெல்ல என்கிறார். நமது நோக்கம் தெளிவாக இருந்தால் எதிலும் வெற்றியைப் பெறலாம். சீடர்கள் எப்பொழுதும் குருவிடம் இருந்து நிறைய

செய்திகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் நோக்கமும் அவர்களின் இலக்கை அடைய உதவுகிறது. ஒரு குரு எல்லோரையும் சீடனாக ஏற்றுக்கொள்வதில்லை. சீடர்களாக இருப்பவர்கள் பல சோதனைக்கு பின்னே சீடனாகிறார்கள். அத்தனை சோதனைக்கு பின்னும் பொறுமையுடனும், பணிவுடனும் இருந்து தன் வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளை கற்றுக்கொள்கிறார்கள்.

**குருவின் குணப்பெருமை**

சீடர்கள் ஒருபோதும் தன் வாழ்வில் தன்னை வெற்றிபெற வேண்டும் என எண்ணுவதில்லை. அவர்கள் யாரையும் போட்டியாளராக நினைப்பதில்லை. தங்கயை யாரிடமும் ஒப்பிடுவதில்லை அவர்கள் தன்னைத்தானே ஒப்பீட்டுக்கொள்கிறார்கள். ‘சீடர்களோ குருவின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்வார்கள். குருவிடமிருந்து கற்கும் ஆர்வத்தை, தொழில் அர்ப்பணிப்பை வாக்குத் தவறாமையைத் தூய்மையை அவர்கள் அனுதினமும் கற்றுக்கொள்ள முயல்வார்கள் என்று விளக்குகிறார் இறையன்பு. எப்பொழுதும் சீடர்கள் நாம் எதையாவது கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நொடியும் நாம் கற்றுக் கொண்டதைப் பயன்படுத்த வேண்டும். எப்பொழுதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். நீங்கள் சென்ற வழியிருந்து மாறவிடில் நம்முடைய வளர்ச்சியினை நாம் காண முடியாது. எனவே மாற்றம் ஒன்றே உலகிற்கு தேவையானதாகிறது.

**‘வலியின்றி வழியில்லை**
**சுமையின்றி சுகமில்லை**
**சோதனையின்றி சாதனையில்லை’**

வாழ்க்கையில் நாம் எதைப் பெற வேண்டும் என்றாலும், பல சோதனைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாம் சாதனையாளராக முடியும் என்கிறார். வாழ்க்கையில் எங்கேயும் எப்பொழுதும் கற்றுக் கொள்ள தயாராக இருக்க வேண்டும். நம்முடைய கவனம் முழுவதும் கற்றுக்கொள்வதில் குறிக்கோளாக இருந்தால் தேவையற்ற ஏமாற்றங்களும் அவசியமற்ற கவலைகளும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. கற்றல் என்பது வாழ்நாள் முழுக்க நாம் தொடர வேண்டிய பழக்கமாகும்.

**கல்வியை அனுகும் முறை**

கல்வி என்பது சில நிகழ்ச்சிகளையும், பொருள்களையும், அவற்றின் இயல்புகளையும் அறிவது மாத்திரம் அன்று. ஊக்கமும், மகிழ்ச்சியும் விளைத்து உள்ளத்தைப் பயன்படுத்தி, உயர்ந்த எண்ணங்களைத் தோற்றுவித்து உயர் நெறியில் செலுத்துவது உண்மையான கல்வியாகும் என்று பேராசிரியர் பி.விருதாச்சலம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கல்வி ஒருவருக்கு எந்தெந்த இடத்தில் எவ்வாறு அணுகவேண்டும். என்பதையும் கருத்துப்பரிமாற்றத் திறத்தினையும் கற்றுத் தருகிறது. கற்றவர்களுக்கு நினைத்ததைத் தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல் இருப்பதோடு மற்றவர்களின் எண்ணங்களையும் பல கோணங்களில் ஆராய்ந்து அதற்குத் தீர்வு கூறும் வல்லமை பெற்றிருப்பர். இதனால் அவர்களால் எந்த சூழலையும் சிறப்பாக எதிர்கொள்ள முடிகிறது. கல்வி ஒருவருக்கு தொழில்நுட்ப அறிவை தருவதோடு, அதனால் அவர்களால் எந்த இயந்திரத்தையும் எளிதாக உபயோகிக்க முடிகிறது. மற்றும் பல துறைகளில் அவர்கள் சாதித்துக் காட்டுகிறார்கள். ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறையினருக்கு முறையாக வழி நடத்த வேண்டும் என்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் கல்வி உதவிப் புரிகின்றது.

**கல்வியே மனிதனை வளமையாக்கும்**

கல்வி ஒரு மனிதனின் அறிவைத் திறக்கும் திறவுகோல் ஆகும். மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடைய செய்வது கல்வியாகும். மனிதனாக மாற்றம் அடையச் செய்வது கல்வியாகும் மனிதனின் நாகரீக வளர்ச்சிக்குக் கல்வியின் வளர்ச்சியே அதிகமாகத் தேவைப்படுகிறது. ஒருவருடைய திறமையை வெளிக்கொண்டு வந்து அவர்களைச் சமுதாயத்தில் மதிக்கத்தக்கவராக ஆக்குகிறது. கல்வி ஒரு மனிதனை முன்னேற்றுவதோடு அவனுடைய சமூதாயத்தையும், நாட்டையும் முன்னேற்றுகிறது. கல்வியின் நோக்கம் ஒருவருக்கு அறிவோடு ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் கற்றுத் தருவதாகும். அறிவின் நோக்கம் மகிழ்ச்சியே. மகிழ்ச்சி விளையாத அறிவு பிறழ்ச்சியே என்கிறார் இறையன்பு. நாம் எந்த ஒரு செயலையும் செய்யும் பொழுதுதான் நாம் வெற்றி காணமுடியும். அறிவு என்பது எல்லோரிடமும் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒருவிதமான அறிவு உள்ளது. எல்லாவற்றிலும் எல்லோராலும் சிறந்து விளங்குகிறது. ஒரு செய்தியை மட்டுமே அவர்களின் அறிவு சிறந்து விளங்குமானால் அதுவும், வாழ்வுக்கு பயன்படும் நமது நோக்கத்தை ஒரு பாதையில் மட்டும் செல்லாமல் அனைத்து விதமான செயல்களிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும். அறிவை அதிகரிக்கும் முயற்சி என்பதே நம் அறிவை மூடியிருக்கும் அறியாமையை அகற்றுவதுதான். அப்படி அறியாமையை அகற்றச் சம்மதிப்பதுதான் கற்றுக்கொள்ளுதல் அத பள்ளிகளில்தான் நிகழ வேண்டும் என்பதல்ல. எங்கு வேண்டுமானாலும் நிகழலாம். யாரிடம் வேண்டுமானாலும் நிகழும் அதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிற தாகம் இருந்தால் போதும் என்கிறார் இறையன்பு.

**முடிவுரை**

கல்வியில் சேர்ந்துவிட்டோம். நமக்கு வேண்டியது கிடைத்துவிட்டது என எண்ணி இனி வாசிப்பதற்கு ஒன்றும் இல்லை எனப் பலர் இருந்துவிடுவது உண்டு. அறிவைப் பொருத்தவரை புதுப்பித்துக்கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது தேய்மானம் அடைந்துவிடும். எனவே பணிச் சார்பாகவும் படிக்க வேண்டும். இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் போன்றவற்றைக் குறித்தும் தொடர்ந்து வாசிக்க வேண்டும். இந்த பரந்துபட்ட வாசிப்பு நம்முடைய தன்னம்பிக்கையை வளர்ப்பதோடு ஆளுமைப் பண்புகளையும், தலைமைப் பண்புகளையும் மிளிரச் செய்யும். எந்த ஒரு கூட்டத்திலும் நாம் எடுத்து வைக்கும் கருத்துக்கள் தனித்தன்மையுடன் பளிச்சிடுவதோடு மேலதிகாரிகள் கவனத்தையும் ஈர்க்கும் நாம் மற்ற நிறுவனங்களோடு தொடர்புகொள்ளும்போது நம்முடைய அறிவாற்றல் அவர்களைக் காந்தம் போல் கவர்ந்து நமக்குச் சாதகமாச் செயல்பட வைக்கும்.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# சங்க இலக்கிய அறம் சார் வழியில் கவிஞர் கண்ணதாசனின் சிந்தனைகள்

**திருமதி.ந.விஜயலட்சுமி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,
கே.கே.நகர், சென்னை-78.

**முன்னுரை**

பழந்தமிழர்கள் அறம்,பொருள், இன்பம், வீடு என்று வாழ்க்கையை வகுத்து வாழ்ந்துள்ளனர். அவ்வகையில், பழந்தமிழர்கள் தம் வாழ்வில் நற்பண்பு என்று சொல்லப்படுகின்ற அறத்தைக் கடைபிடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. அத்தகைய அறமானது அகம் சார்ந்த வாழ்விலும், புறம் சார்ந்த வாழ்விலும் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளதையும் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாகிறது. இதனை கவியரசர் கண்ணதாசனின் கவிதையில் எடுத்துக் காட்டியுள்ளதை இக்கட்டுரையின் வழி அறியப்படுகின்றது.

**அறம் என்பதன் விளக்கம்**

அறம் எனும் சொல்லுக்கு கடமை, கற்பு, புண்ணியம், தருமம், கண்ணியம், நல்வினை என அகராதி பல பொருள் உரைக்கின்றது. தமிழில் அறம் என்னும் சொல் தோன்றுவதற்கு முன்பு அறம் என்பதற்கான மாற்று சொல்லாக நீதி, பழமொழி, முதுமொழி, மூதுரை, வாயுறை வாழ்த்து, நன்று, நன்றி, நன்மை, நல்லது, முறை, முறைமை, நயம், நன்னெறி, நெறி, ஒழுக்கம், கடமை, போன்ற சொற்கள் கையாளப்பட்டு வந்துள்ளன. அறம் என்பது நல்லவை செய்ய வேண்டும் தீமையைக் கைவிடுதல் வேண்டும். என்பதும் அறியப்படுகின்றது. மேலும், மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியாகும்.

**திருக்குறளில் அறம்**

திருக்குறள் அறக்கருத்துக்களை இரண்டே வரிகளில் பதிவு செய்திருக்கிறது. அறத்துப் பாலில் இல்லறம், துறவறம் எனப் பகுத்து, இல்லறத்தார்க்குரிய அறம், துறவறத்தார்க்குரிய அறம் எனக் கூறுவதோடு இருவகையாருக்கும் பொதுவான அறங்களைத் திருவள்ளுவர் இயம்பியிருக்கிறார். மக்களுடைய வாழ்வுக்குத் தீமை பயக்கும் எண்ணங்களையும் சொற்களையும் நீக்கி இன்பம் பயக்கும் செயல்களை மேற்கொள்ளுவதே அறம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்”** -குறள் 35

சிந்தித்துப் பேசவேண்டிய சொல்லானது பிறரைக் காயப்படுத்தும் விதமாக அமையாமல் எவ்வித கெடுதி எண்ணங்களின் வெளிப்பாடாக இல்லாமல் இருக்கும் சொற்கள் அறமாகிறது.

**“முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்”** -குறள் 93

என்ற வள்ளுவர் கூற்றின்படி மக்களுடைய இன்ப வாழ்வுக்கு இன்றியமையாத பண்புகள் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள் அனைத்தும் அறம் எனக் கருதலாம்.

**கண்ணதாசன் கவிதைகளில் அறம்**

வாழ்க்கையானது ஆனந்தமாக அமைய வேண்டுமாயின் இன்பத்தினையும் துன்பத்தினையும் சமமாக நினைத்தல் வேண்டும். இன்பமாயினும் துன்பமாயினும் அறத்தினாலும் அன்பினாலும் ஏற்படுதல் வேண்டும். வாழ்வின் பேரின்ப உணர்ச்சியை,

**அன்பும் அறனும் உயிராய்க் கொண்டால்**
**அதுதான் ஆனந்தம் – வாழ்வில்**
**இன்பமும் துன்பமும் சமமென நினைத்தால்**
**என்றும் பேரின்பம் – வாழ்வில்**
**என்றும் பேரின்பம் (க.க.தி.இ.பா தொகுதி -3 ப.294)**

என்று கண்ணதாசன் குறிப்பிடுகின்றார். கடமையைச் செய்வதில் கண்ணியம் இருக்க வேண்டுமேயொழிய களவு எண்ணம் இருத்தல் கூடாது. அன்பினையும் பண்பினையும் வளர்க்கும் தொழிலே உயர்வாக அமைவதை,

**ஆடிப் பிழைத்தாலும் பாடிப் பிழைத்தாலும்**
**அன்பும் பண்பும் எல்லையடி பகுத்**
**தறிவைக் கெடுக்காத பெருமை அழிக்காத**
**எதிலும் கேவலம் இல்லையடி (க.தி.இ.பா.தொகுதி 1 ப 315)**

ஆடியும் பாடியும் சம்பாதிக்கும் நிலை வருகையில் அத்தொழில் தருமம் இருக்கவேண்டும் என்பதைக் கூறுகையில் அன்பாலும் பண்பாலும் நிறைந்திருப்பதோடு பகுத்தறிவைக் கெடுக்காத வகையில் இருத்தல் அவசியம் என்று அறத்தைக் கவிஞர் எடுத்தியம்புகிறார். தாய் தந்தையின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றுவதே பிள்ளைகளுக்குரிய முக்கிய கடமையாவதை,

**பெற்ற தாய் தந்தை கொடுமையே**
**செய்தாலும் சகோதரர்கள் வசைமாரி பொழிந்தாலும்**
**அவர்களது சாப்பாட்டுக் கிண்ணத்தை நெய்**
**சோற்றால் நிரப்ப வேண்டியது உனது சுயதர்மம்**
**(க.அ.இ.பாகம் -4, ப.64)**

என்று கடமையே தருமமாவதை விளக்கியுள்ளார். தவறாமல் செய்யும் தருமமானது சிறந்த பண்பிற்கும் அறத்திற்கும் கால்கோளாக விளங்குவதைக் காணமுடிகிறது.

**நன்றியை மறந்தால் மன்னிக்க மாட்டேன்**
**நெஞ்சுக்கு நெருப்பாவேன்**
**நல்லவர் வீட்டில் நாய்போல் உழைப்பேன்**
**காலுக்கு செருப்பாவேன் (க.தி.இ.பா தொகுதி -1 ப 354)**

நன்றியை மறந்தவர் நெஞ்சங்களுக்கு நெருப்பாகவும், நன்றியை மறக்காதவர்கள், அன்புள்ளவர்கள் வீட்டிற்கு நாய்போல் உழைத்தும், அவர்கள் காலுக்கு செருப்பாகவும் இருப்பேன் என்கிறார். ஒருவருடைய பேச்சு உரிமையையும் கடமையையும் வெளிப்படுத்தும் விதமாக் கூறுகையில், உழைப்பாளியின் உரிமையைப் பெறும் வீர உணர்ச்சியினை,

**துடிக்கும் ரத்தம் பேசட்டும்**
**துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்**
**உழைக்கும் வர்க்கம் சேரட்டும்**
**உரிமை உடமை காணட்டும் (க.அ.இ.பாகம் - 4 ப 60)**

இந்தப் பாடல் வழியாக உரிமைப்போரினை வென்றிடச் செய்கிறார். கண்ணதாசனின் சிந்தனைகள் கோப்பெருஞ்சோழனின் ஆட்சியின்போது அவனது புதல்வர்கள் சிற்றினத்தாரின் சேர்க்கையால் அறிவுப் பேதுற்று அவன்மேல் பகைகொண்டு போரிட முனைந்தார். சோழனும் கோபம் கொண்டு போரிடத் துணிந்தார். இதைக் கண்ட புல்லாற்றூர் எயிற்றினார் என்னும் புலவர். உடன் மறவொன்றியைக் கைவிடுக. உயிருக்கு உறுதி பயக்கும் ஒழுகலாற்றிற் செல்லுக.- தி.சு.நடராசன் கவிதையெனும் மொழி ப 73 என்று அறிவித்து சந்து செய்வித்தார். ..............பழியெழ் சுவையே

**"ஆதனால் ஒழிகதில்**
**அத்தை நின் மறனே! வல்விரைந்து.**
**எழுமதி வாழ்க நின் உள்ளமே! அழிந்தோர்க்கு**
**ஏமம் ஆகும் நின் தாள்**
**நிழல் மயங்காது**
**செய்தல் வேண்டுமால் நன்றோ" (புறநானூறு பா.எ 213)**

மேற்கண்ட பாடல் வரிகளின் வாயிலாக சோழ மன்னனே! உன் புதல்வர்களுடன் போரிட்டால் உனக்குக் கிடைப்பது பழி மட்டுமே. ஆதனால் போர் செய்யும் எண்ணத்தை கைவிடுக என்று சுட்டியுள்ளார். இதைப் போலவே கவிஞர் கண்ணதாசனும் தனது கவிதையில்,

**பதினெட்டு வயதான பாலகர் தம்**
**பசுங்குருதி நீராட அமெரிக்காவின்**
**பதினெட்டு வயதான பாலகர்கள்**
**படையாகப் போகின்றார்!**
**நாகரிகம் படும்பாட்டைக் கேளீர்! (இந்த(ச்)**
**சதியாய சமர்லூய உயிர்கள் வாழத்**
**தர்மத்தின் பெயராலே**
**முழக்கஞ் செய்வீர்! (க.க.தொகுதி 4 ப 110)**

என்று வியட்நாமை அமெரிக்கப் படைகள் தாக்கியபோது போரின் அழிவுகள் குறித்து வருந்தினர். ஏழை நாடான வியட்நாமை அழிக்க முனைந்த அமெரிக்காவைக் கண்டிக்கும் பாங்கும். போர் முறைகள் ஒழிய உலக மக்களுக்கு அவர் விடுக்கும் அறைகூவலும் இவர் தம் கவிதைகளில் தெளிவாகத் தென்படுகிறது. போரினால் மக்கள் படும் துன்பத்தை அறங்கூறும் விதமாக அறிவுறுத்தப்படுகிறது. போரினால் ஏழை படும்பாடும் துன்பத்தையும் அதனால் மக்களுக்கு ஏற்படும் அவலங்களையும் எடுத்துக்கூறி மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழப் போரினைத் தவிர்க்க வேண்டும் என்கிறார். மேலும்

**பரந்தோர் நிலத்தை ஒருவர்கொள்ளாமல்**
**பங்கு போட்டமைப்பதெம் வேலை**
**……………………………………..**

**அறவழி மூலம் இவை வருமென்றே**
**அமைதி கொண்டுள்ளனம் இன்று (க.க.தொகுதி 5 ப 192)**

என்று கவிபாடி இந்த நிலம் என்னுடைய நிலம் என்றும், இது உன்னுடைய நிலம் என்று பிரிவினை பங்கு போடாமல் அனைவரும் அறவழியில் அமைதியாக வாழவேண்டும் என்கிறார் கவியரசர்.

**புறப்பொருள் வெண்பாமாலை**

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலில் பாடாண் படலத்தில் வரும் 48 துறைகளில் ஒன்றாக இயன்மொழி வாழ்த்து குறிப்பிடப்படுகிறது. இயன்மொழி வாழ்த்து என்பது

வெற்றியினாலும்குணச்சிறப்பினாலும் உயர்ந்து நிற்போரின் இயல்பைப் புகழ்ந்து கூறுவது ஆகும். ஔவாள் அமருள் உயிரோம்பாதவன் எனவும் இரவலர் நடுவண் கொடையினின்று நீங்காதவன் எனவும் உலகினை நன்கு காப்பவன் எனவும் மிகுபுகழ் மன்னவன் இயல்புகளை இத்துறை விளக்குகிறது.- ம.கா.ப.க வெளியீடு புறப்பொருள் வெண்பாமாலை படலம் 1 ப 80 மேலும் சிறுபாணாற்றுப்பாடலில்

**கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்**
**பெருங்கல் நாடன் பேகனும் சுரும்புண**
**நறுவீ.ஃ.யுறைக்கு நாக நெடுவழிச்**

**சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**
**பிறங்கு வெள்ளருவி வீழுஞ்சாரற்**
**பறம்பிற் கோமான் பாரியும்**
**..................................................**
**ஆர்வ நன்மொழி ஆயும் (சிறுபாணாற்றுப்படை பா.வ 85-99)**

கண்ணதாசன் பழங்கவிதை இப்பாடலின் வழி மயிலுக்குக் கலிங்கம் கொடுத்த பேகன், முல்லைச் செடிக்குத் தன் தேரைக் கொடுத்தவன் பாரி. இரவலர்க்குக் கொடுத்தவன் காரி, நீல நாகம் கொடுத்த ஆடையை ஆலமர் செல்வனுக்குக் கொடுத்தவன் ஆய் என்ற கடையெழு வள்ளல்களின் இயல்பைக் கூறுகிறது சிறுபாணாற்றுப்படை. இந்தக் கருத்தினையொட்டியே கடையெழு வள்ளல்களின் சிறப்பைக் கவியரசர் அவர்கள்,

**அறவலியும் பொருள் வலியும் அரண்வலியும்**
**புறவலியும் அடுகளத்துத்**
**திறவலியும் மிகவுடையான் திகைத்திருந்த**
**கொடி வளரத் தேரளித்தான்**

**................................**

**இனிய மொழி முடமோசி எழுத்துவழி**
**நின்றலவும் ஆயைக் கேட்டோம்**
**குதிரைமலை எழினியையும் நள்ளியையும்**
**மலையணையும் பேகன் என்பான்**
**கதகதக்க மயிலுக்குப் போர்வை தரு**
**கனிவினையும்............................. (க.க.தொகுதி 12 ப 68-69)**

என்று வாழ்க்கையில் அறச்செயல்களைச் செய்து பிறருக்குக் கொடுத்து உதவியவன். முல்லைக்குத் தேரளித்தப் பெருமையுடையோன் என்றும் இனிய மொழி பேசுபவனும் குதிரைமலை தலைவனும் புகழ்படைத்த நள்ளியென்பானும் மயிலின் குளிருக்குப் போர்வையளித்த பேகனும் என்று கடையெழு வள்ளல்களின் சிறப்பைத் தம் கவிதையெனும் சொற்பயன்பாட்டில் சிறுபாணாற்றுப்படைக்கு இணையாக எடுத்துக் கூறுகிறார்.

**நட்பின் அறம்**

அறப் பண்புகளில் தலைசிறந்த பண்புள்ள அறமாக நட்பு திகழ்கிறது.தமிழ் இலக்கியங்கலுள் நட்பின் உயர்வு மிகுவித்து சொல்லப்பட்டுள்ளது.மேலும் எட்டுத் தொகை நூலான நற்றிணையில்,

**முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் (நற்றிணை பா.எ 335)**

என்று சொல்லப்பட்டுள்ளது. தன்னோடு பழகிய நண்பர் நஞ்சையே கொடுத்தாலும் அதை வாங்கி உண்ணும் அளவிற்கு நட்பு மதிக்கத்தக்கதாக இருந்துள்ளதை வள்ளுவரும்,

**பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டுபவர் (குறள்-580)**

என்று தன் சொல்வன்மையால் நட்பின் சொல்வன்மையை விளக்குகிறார். கண்ணதாசனும்,

**நஞ்சு தந்தாலும் அதை**
**நாகரிகம் என்று**

**நானுண்பேன் வண்ண மயிலே (க.க.தொகுதி 12 ப 131)**

என்கிறார் கவிஞர். நஞ்சு கொடுப்பவர் நண்பர் என்றாலும் அதனை உண்ணும் பண்பை நற்றிணை விளக்குகிறது. கவியரசர் கண்ணதாசனோ நற்குணம் பொருதிய மனைவி மகன்களைப் பெற்று நல்ல கொள்கையைக் கடைபிடிக்கும் சொல்வன்மை மிக்கவர் நண்பராக இருந்து கொடிய நஞ்சைக் கொடுத்தாலும் உண்பேன் என்கிறார். நற்குணம் பொருந்தியோர் கொடுப்பது நஞ்சாக இருந்தாலும் அது கொடுப்பவரின் குணத்தால் அமிழ்தம் ஆகிவிடும் என்று கூறுகிறார்.

**முடிவுரை**

கவிஞர் கண்ணதாசனின் கவிச்சிந்தனைகளில் பொதிந்துள்ள அறக்கருத்துக்கள் அனைத்தும் சமுதாயத்திற்குப் பயன்படும் விதமாக உள்ளன. அறம் என்ற நல்லொழுக்கம் பழந்தமிழரிடையே இருந்துவந்துள்ளதை கவிஞர் கண்ணதாசன் கவிதைகளின் வாயிலாகவும் அறியமுடிகிறது. கவிஞர் தம் கவிதைகளின் மூலம் சொல்லும் கருத்துக்கள் அனைத்தும் அறம் சார்ந்தவையாகவே இருக்கிறது. இருப்பினும் சங்க இலக்கியங்களின் வழி நின்று கவிஞரின் பாடல்களில் விரவியுள்ள அறக்கருத்துக்களை ஆராயும்விதமாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**


1. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், பாகம் 4, வானதி பதிப்பகம், சென்னை. பதிப்பு 1977.
2. கவிஞர் கண்ணதாசன், திரையிசைப் பாடல்கள், தொகுதி – 3
3. கவிஞர் கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைத் தொகுதிகள் -1,2,3,4,5 வானதி பதிப்பகம், சென்னை. தொகுதி 1,2 - ஏழாம் பதிப்பு 1996, தொகுதி 3 - மூன்றாம் பதிப்பு 1994, தொகுதி 4 - முதல் பதிப்பு 1971, தொகுதி 5 - மூன்றாம் பதிப்பு 1975
4. நாராயணசாமி ஐயர், (உ.ஆ) நற்றிணை, நானூறுகழக வெளியீடு, சென்னை. பதிப்பு-1967
5. பரிமேலழகர்,(உ.ஆ) திருவள்ளுவர் திருக்குறள் கழகவெளியீடு, சென்னை. பதிப்பு – 1961
6. ளபுலியூர்கேசகன் உரை புறநானூறு ,பாரிநிலையம், சென்னை- 108 8,ஆம் பதிப்பு -2011
7. புலியூர்க்கேசிகன்,(உ.ஆ) புறப்பொருள் வெண்பாமாலை, கௌரா பதிபபகக் குழுமம் , ராக்கின்ஸ் சாலை, திருச்சி 1, பதிப்பு – 2012.
8. இரா.ருக்மணி, சிறுபாணாற்றுப்படையும் பண்டைத்தமிழரும், காவ்யா பதிப்பகம், சென்னை -24, பதிப்பு – 2008.
9. தி.சு.நடராசன், கவிதையெனும் மொழி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை பதிப்பு – 2008.

இணையத்தில் பதிவிறக்கம்
செய்யwww.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி IX, பதிப்பு 22, ஜனவரி - டிசம்பர்2024
Formally UGC Approved Journal (64089), © Author

# விருந்து போற்றல்

**கு.மோகன்**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி
திருவண்ணாமலை-606 603

## முன்னுரை

தன்னிகரற்ற தனிப்பெரும் சிறப்பினை உடையது தமிழ். இது தரணி போற்றும் இலக்கண இலக்கிய வளங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. மனித வாழ்விற்குத் தேவையான அனைத்து நற்கருத்துக்களையும் நல்கக் கூடியது. எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் ஆகிய நான்கினை மட்டுமே பிற மொழிகளில் காணலாம். ஆனால் மனித வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைந்த பொருளிலக்கணத்தை கூறுகின்ற தனிப்பெரும் சிறப்புடையது தமிழ். இது மட்டுமல்லாது பல்வேறு காலகட்டங்களில் எழுந்த பல்வேறு இலக்கிய வடிவங்களையும் பெற்று மிளிர்கிறது. மனிதன் தோன்றிய இப்புவியில் நன்முறையில் வாழ அடிப்படையான வாழ்வியல் சார்ந்த அறநெறி கருத்துக்களையும், நெறிபிறழா பண்புகளையும் எடுத்து இயம்புகிறது. அவ்வாறு அமைந்த தமிழரின் அறங்களில் சிறந்து விளங்கக்கூடிய விருந்தோம்பல் பண்பாட்டை இக்கட்டுரையில் காணலாம்.

## விருந்து - சொல்வடிவம்

தமிழரின் தொன்மை நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் விருந்து என்று சொல்லிற்கு, புதுமை என்ற பொருளே உரைக்கப்படுகிறது. என்பதனை

**“விருந்தே தானும்**
**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே”(தொல்காப்பியம்)**

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

## அகராதி தரும் சொல் விளக்கம்

**விருந்து** - புதியது (ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி), **விருந்து** - அதிதியருக்கு உணவு (எம்.வின்சுலோ,தமிழ் ஆங்கில அகராதி), **விருந்து** - புதியதாய் வந்தவருக்கு உணவு கொடுத்தல் (தமிழ் மொழி அகராதி, நா.கதிரைவேல்பிள்ளை), **விருந்து** - அதிதி முதலியவருக்கு உணவு கொடுத்தல் (நா.சி கந்தையா பிள்ளை, செந்தமிழ் அகராதி), **விருந்து** - புதுமை, உணவளித்துப் போற்றுதல் (கழகப் புலவர் குழுவினர்), **விருந்து** - அதிதியருக்கு உணவளித்தல், ளநூல் வனப்புகளில் ஒன்று.(மணிமேகலை பிரசுரம்,) **(தமிழ்ச்சொல் அகராதி)**

‘விருந்து’ என்ற சொல் புதுமை என்ற பொருள் தரும். எனவே இச்சொல் உற்றார், உறவினரை விடுத்து, முன்பின் அறிமுகம் இல்லாதவராக வரும் புதியவர்களையே குறிக்கும்” என்று செ.வரதராசன் கருத்து மொழிகின்றார்.

ஓம்புதல் என்ற சொல் முன்பின் அறிமுகம் இல்லாதவரை, புதியவரை குடும்பத்தில் வைத்துப் பேணுதல் (காத்திடுதல்) என பொருள்படும். பசியில் இருந்து காத்திடுதல் என்னும் பொருண்மை அடிப்படையிலும் அமைகிறது.

**விருந்தோம்பலின் தோற்றம்**

மனித இனம் நாகரீக வளர்ச்சிக்கு முற்பட்ட காலத்தில் இனக்குழுக்களாக வாழும் பொழுது வேட்டையாடி உண்ணும் சூழல் இருந்தது. கொடிய விலங்குகளை வேட்டையாட கூட்டமாகச் சென்றனர். அவ்வாறு வேட்டையாடிய உணவை நாடோடியாக வாழ்ந்த அவர்களால் சேமித்து வைக்க இயலவில்லை. அத்தகையச் சூழலில் வேட்டையாடிய உணவைப் பகிர்ந்து கொண்டனர். தன் கூட்டத்தாருக்கு கொடுத்துவிட்டு, மீதமுள்ள உபரியை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்துள்ளனர். பகிர்ந்து கொடுக்கும் பண்பானது இரு வகைகளாகப் பகுத்து ஆராயப்படுகிறது.

1. **பொதுப்படையான பரிமாற்றம்** (இரத்த உறவு உள்ள கூட்டத்தாருக்கு அளித்தல்)
2. **சமச்சீர் பரிமாற்றம்** (இரண்டு இனக்கழுக்களுக்குள் உள்ள பரிமாற்றம்)

என இருவகையாகப் பகுத்து அளிக்கப்படுகிறது. மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த நிலை மாறி நாகரீக நிலைக்கு மாற்றம் பெற்ற காலத்தில் நில அமைப்பானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப் பகுதிகளில் வாழ்ந்த மக்களுடைய வாழ்வியல் கூறுகளை ஆராய்வதன் மூலம் விருந்து எப்பொழுது தோன்றியிருக்க வேண்டும் என்று ஓரளவிற்கு அறியமுடிகிறது.

'விருந்தோம்பல்' குணம் தமிழருக்கே உரிய சிறப்பு அம்சம். வெளியாறை ஐயுறுதலோ விலக்குதலோ தமிழ் மரபுகள் அல்ல. புதியோரை விருந்தினராகக் கொண்டு, வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்தல் வேண்டும் என்பது தமிழ் மரபு. எனவே இந்த நல்வரவு ஆரியர் தம் வரவிற்கும், உறவிற்கும், நிலைப்பாட்டிற்கும் பெரும் காரணமாக இருந்தது' (தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்பு, க.பா அறவாணன்)

**விருந்து பற்றிய நம்பிக்கைகள்**

பறவைகளின் ஒளி குறிப்பினைக் கொண்டு அறியப்படும் நிமித்தம் 'புள்' நிமித்தம் எனக் கூறப்படுகிறது.

**"நாளும் புல்லும் பிறவற்றின் நிமித்தமும்**
**காலம் கண்ணிய ஓம்படை"(தொல்.பொருள்-36)**

சங்க கால மக்கள் சில சகுனங்களை வைத்து நன்மைத் தீமைகளை கணித்தனர். இதில் 'புள்' நிமித்தம் குறிப்பிடத்தக்கது. வீட்டின் வாயில் மற்றும் அதன் அருகில் அமர்ந்து காக்கை கரைவது,விருந்தினர் வருகையை தெரிவிக்கும் சகுனமாகக் கருதியுள்ளனர். இல்லற மகளிர் நாள்தோறும் காக்கைக்கு பலியிடும் முறையை மேற்கொண்டுள்ளனர்.

**"முழுவதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு**
**எழுகலத்து ஏந்தினும் சிறிது என் தோழி**
**பெருந்தோள் நெகிழ்ந்த செல்லர்க்கு**
**விருந்து வர கரைந்த எகாக்கையது பலி" (குறுந்210)**

என்ற குறுந்தொகை பாடலில் விருந்தினர் வருகையை அறிவிக்கும் பொருட்டாக காகம் கரைதல் நம்பப்பட்டுள்ளது.அதனால் விருந்தினர் வருகையை அறிவிக்கும் காக்கைக்கு, கோப்பெருநல்லியின் காட்டிலுள்ள இடையர்கள் நெய்யுடன் தொண்டி எனும் ஊரில் விளைந்த வெண்ணெல் சோற்றை கலந்து தந்தாலும் தகாது, என்று தோழி கூறுகின்றாள். காக்கை வீட்டின் அருகே அமர்ந்து கரைந்தால் விருந்தினர் வீட்டிற்கு வருவர் என்ற நம்பிக்கை இன்றும் கிராமப்புறங்களில் காண முடிகின்றது.

**விருந்தோம்பல் இல்லற கடமையாதல்**

இரவலர் வீட்டிற்கு வரவேண்டும், அவர்கள் பசியாறிச் செல்ல வேண்டும். என்பது முன்னோர்களின் விருப்பமாக இருந்துள்ளது. மேலும் விருந்தோம்பல் சங்ககால மகளீரின் பண்புகளில் முதன்மையாக இருந்துள்ளதை,

**"நெல் பல பொலிக பொன் பெரிது சிறக்க" (ஐங்குறுநூறு)**

**"விளைக வயலே வருக இரவலர"(ஐங்குறுநூறு)**

மேற்கூறப்பட்டுள்ள பாடல் வரிகளின் மூலம் நாம் அறியலாம். இப்பாடல் வரிகளில் விருந்தினருக்கு உணவளிக்க வேண்டிய உணவுப் பொருட்களில் வளம் பெற்று திகழ வேண்டும் என எண்ணியுள்ளமையும், இதன் காரணமாக இயற்கை செழிக்க வேண்டியுள்ளமையும் புலப்படும். சக மனிதர்க்கு உணவிடும் உணர்வானது விருந்தோம்பல் என்னும் நிகழ்வால் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இல்லற வாழ்வில் ஈடுபடும் ஆணும், பெண்ணும் இணைந்தே விருந்தோம்பலைச் செய்துள்ளனர். இதுவே மனையற மாண்பாகக் கருதப்படுகிறது.

**"இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்81)**

'வீட்டிலிருந்து பொருட்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம், விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்'' என்ற மு.வரதராசன் அவர்களின் கருத்தின் மூலம் விருந்தோம்பல் பண்பாட்டை இல்லறத்தில் ஈடுபடுவோர் மேன்மையாக போற்றியுள்ளமையை அறியலாம். வாழ்வில், இல்லறத்தானின் தலையாய நெறியாக விளங்கும் இப்பண்பாட்டினை சிலம்பும், கம்பராமாயணமும், வெளிப்படுத்துகிறது. இளங்கோவும் இதனை இல்லற வாழ்வோடு இணைத்துள்ளார். என்றச் செய்தியை

**"மறட்பருங் கேன்மையோ டயப்பரி சாரமும்**
**விருந்து புறந்தருஉம் பெருந்தன் வாழ்க்கையும்"(சிலம்பு)**

மேற்கு கூறப்பட்ட வரிகளின் மூலம் அறியலாம். மேலும் ஆணும், பெண்ணும் இணைந்தே விருந்தினருக்கு விருந்து செய்ய வேண்டும் என்ற கருத்தும்,

**"அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"(சிலம்பு)**

கோவலன் பிரிவால் வாடும் கண்ணகி, விருந்தோம்பல் செய்ய முடியாத நிலை பற்றி மிகவும் வருந்துவதாக அமைகின்றது. கணவனைப் பிரிந்த மனைவி விருந்து உபசரிப்பு செய்ய முடியாத நிலைப் பற்றி எண்ணி வருந்துவதைப் போல், மனைவி பிரிந்த,கணவனும் விருந்தோம்பல் செய்ய முடியாத நிலை பற்றி கம்பராமாயணம்,

**" விருந்து கண்ட போது என்னுறுமோ என்று**
**விம்மும்"(கம்பராமாயணம்)**

என்ற மேற்கூறிய பாடல் வரியால் குறிக்கிறது. இதில் மனைவியை பிரிந்த இராமன் விருந்தோம்பும் தகுதியை இழந்து துன்புறும் நிலைக்குச் சீதை வருந்துகிறாள். மேற்கண்ட செய்தியானது கணவன், மனைவி இணைந்து விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்ற கருத்தினை புலப்படுத்துகிறது.

**விருந்து உபசரிப்பு**

விருந்தோம்பலில் உபசரிக்கும் பாங்கே முதன்மையானது. அவ்வகையில் வரவேற்பே விருந்தோம்பலில் முதன்மையானது என்ற கருத்தினை திருவள்ளுவர்,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குறையும் விருந்து"(குறள்-90)**

என்னும் திருக்குறளில் விருந்தினரை முகக்குறிப்பினால் அணுகும் தன்மையினை வெளிப்படுத்துவதின் முக்கியத்துவத்தை கூறியுள்ளார். முகம் மலர்ந்து உபசரிக்கும் போது விருந்து பொருள் உப்பில்லாத கூழாக இருந்தாலும் அமுதத்திற்கு நிகராக கருதப்படும் என்றச் செய்தி புலப்படுகிறது.

**“ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மை பேசி**
**உப்பில்லாத கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்”(விவேக சிந்தாமணி)**

என்ற விவேக சிந்தாமணியின் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. சங்க கால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் முகம் திரிந்து நோக்காது அவர்களை எதிர்கொண்டு வரவேற்று உணவளித்த செய்தியை சங்கஇலக்கிய அகப்படலான,

**“அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்”( நற்றிணை-142)**

என்ற நற்றிணை பாடலின் வழி அறியலாம்.

**அரண்மனை விருந்து**

சங்க கால மக்கள் தான் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்பவும், குலத்திற்கு ஏற்பவும், அவர்களிடையே உணவுப் பொருட்கள் வேறுபடுகின்றன. எனினும் அநேக தமிழர்கள் காய்கறி உணவையும், புலால் உணவையும் விரும்பி உண்டனர். நெற்ச்சோறு, வரவு சோறு, வெண்ணைச் சோறு, நண்டு கறி, உடும்புக்கறி, வரால் மீன் குழம்பு, கோழி இறைச்சி, வற்றல், மிளகுப்பொடி, கருவேப்பிலை பொரியல், ஊறுகாய் என சங்ககாலத்தில் வாழ்ந்த பலதரப்பட்ட மக்கள் தன் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கும் விருப்பத்துடன் விருந்து அளித்துள்ளமை அறியப்படுகிறது.

சோழ நாட்டு மன்னனான கரிகாலன் தன்னைத் தேடி வந்த பொருணனுக்கும், பொருணனின் சுற்றத்தாருக்கும் முதலில், நடந்து வந்த களைப்புத் தீர மயங்கச் செய்யும் கள் அவர்களுக்கு கொடுத்தான். அதனை உண்டு, வந்த களைப்பை போக்கிக் கொள்கின்றனர். அடுத்து கொழுத்த செம்மறி கிடாயின் இறைச்சித் துண்டுகளை இரும்பு கம்பியில் கோர்த்து சுட்டு தருகின்றனர். பல வடிவங்களில் அமைந்த பல்வகை சுவையுடைய பணியாரங்கள் தரப்பட்டன. பின்பு அவர்களுக்கு முல்லை அரும்பை ஒத்த அரிசிச் சோறு கொடுக்கப்பட்டது. பாலைக் காய்ச்சி அதனோடு கூட்டிய பொறிக்கறிகளும் கொடுத்தனர். கரிகாலன் தந்த மிகுதியான இறைச்சி உணவால் பொருநண் மற்றும் அவன் சுற்றத்தினர் ஆகியோருக்கெல்லாம் கொல்லையை உழுத கொழு போன்று பற்கள் மழுங்கிக் காணப்பட்டது.

**“கொல்லை உழு கொழு ஏய்ப்ப மல்லே**
**எல்லையும் இரவும் ஊண் தின்று முங்கி**
**உயிர்ப்பிடம் பெறாது ஊண் முனிந்து ஒரு நாள்”(பொருண)**

**இன்மையிலும் விருந்து**

விருந்தாக வந்தவருக்கு வரிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். தானியம் ஏதுவும் இல்லாத நிலையிலும், விதைக்க வைத்திருந்தத் தினையை உரலில் இட்டு குத்தி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் ஒரு தலைவி ,

**“குரல் உணங்கு விதைத்தினை உரல் வாய் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ இலள்” (புறம்)**

நேற்று வீட்டிற்கு வந்த விருந்தினரைப் பேணுவதற்காகப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான்

தலைவன். இன்றும் விருந்தினர் வந்தால் தன் கருங்கோட்டு சீறியாழை பனையம் வைத்து விருந்தளிக்க எண்ணியுள்ளான் என்று

**"நெருநனை வந்த விருந்திற்கு மற்றுதன்**
**இரும்புடை பழவாள் வைத்தனன் இன்று இக்**
**கருங்கோட்டு சீறியாழ் பனையம்" (புறம்)**

மேற்கூறிய பாடல் வரிகளின் மூலம் புறநானூறு இயம்புகிறது

**முடிவுரை**

நம் முன்னோர்களின் தலையாய பண்புகளில் ஒன்றாகக் கருதப்படும் விருந்தோம்பல் பண்பானது, வீட்டிற்கு வரும் புதியவரை இன் முகத்துடன் உபசரிக்கும் நிகழ்வைக் காண்பது அரிதிலும் அரிதாகி விட்டது. விருந்தினர் என்பவர் உறவினர்களே என்ற கருத்தும், ளஅவர்களுக்கு உணவிடுதலே விருந்தோம்பல் என்ற கருத்தும் தற்காலத்தில் காண முடிகிறது. இருப்பினும் கோயில் திருவிழாக்களிலும், இல்லத்தில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளிலும் புதிதாக வருபவருக்கு உணவிடும் பழக்கம் இன்றளவும் கடைபிடிக்கப்படுகிறது.

**துணை நூல் பட்டியல்**

1.முனைவர் ஆ. ஏகாம்பரம்- தமிழரின் விருந்தோம்பல்-- சுபம் பிரிண்டர்ஸ்
2.தமிழண்ணல்- தொல்காப்பியம்(மூலமும் உரையும்) செல்லப்பா பதிப்பகம்
3.முனைவர் வி.நாகராஜன்- சங்க இலக்கியம்-- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
4.சிற்பி பாலசுப்பிரமணியம்- புதிய தமிழ் இலக்கிய வரலாறு-- சாகித்ய அகாடமி

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX,* பதிப்பு *22,* ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# எடுத்துரைப்பு முறையில் ஆத்திசூடியின் அறக்கருத்துகள்

**மா.வெண்மணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சைதாப்பேட்டை,சென்னை-15,

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்களில் நீதி இலக்கியம் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.பிற்கால நீதி இலக்கியத் தோற்றத்திற்கு வித்திட்டவர் ஔவையார்.இவர் சங்க இலக்கியம் கூறிய அறங்களை ஆத்திசூடி எனும் நூலில் ஓரடியில் சுருக்கமாக அற கருத்துகளை வலியுறுத்தியுள்ளார்.இவை மக்களுக்கான உயரிய வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கும் இலக்கியமாகும். பிற்கால நீதி இலக்கியங்களில் அறத்தை மையமாகக் கொண்டு கல்வி, செல்வம், ஒழுக்கம், பண்புகள், நம்பிக்கை, வெற்றி, குடும்ப்,குடும்பம், போன்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சுருங்கசொல்லல் விளங்கவைத்தல் எனும் எடுத்துரைப்பு முறையில் ஔவையாரின் கல்வி பற்றிய கருத்துகள் அமைந்துள்ளதை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**எடுத்துரைப்பு முறையில் ஆத்திசூடியில் அறச்சிந்தனைகள்**

ஆத்திசூடி பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்ற சிறந்த நீதி நூலாகத் திகழ்கிறது. பெரியவர்களுக்கேற்ற முறையில் கூறும் நீதிகளை, குழந்தைகளுக்குப் புரியும் வண்ணம் எளிய சொற்களாலும் ஆழமான கருத்துகளாலும் எழுதியவர் ஔவையார். ஒழுக்கநெறி, அறம், வாழ்க்கைத் தர்மம் ஆகியவற்றை குழந்தைகளும் எளிதில் அறியும்படி வகுத்து எழுதப்பட்டது.ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு கருத்து அடங்கிய ஆத்திசூடியிலே ஔவையார் எழுதிய ஆத்திசூடி ஒரு சிறந்த நீதி நூலாக திகழ்கிறது. “அ” முதல் “ஔ” வரை ஒரே வரியில் நெறிகளைக் கொடுத்து, குழந்தைகளுக்கேற்ற முறையில் அறத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்குகிறது. ஆத்திசூடியில் உள்ள ஒவ்வொரு ஓரடிப்பாக்களும், வாழ்க்கையின் அடிப்படையான நல்லொழுக்கங்களையும், வாழ்க்கைச் சிக்கல்களையும் நேர்த்தியாக தீர்க்கும் வழிமுறைகளையும் கூறுகின்றது.

**பண்பு சார்ந்த அறச்சிந்தனைகள்**

**“அழகு அலாதன செயேல்”**

இழிவான, அநியாயமான அல்லது தவறான செயல்கள்,ஒழுக்கமற்ற, பிறருக்கு தீங்கும் துன்பமும் விளைவிக்கும் செயல்களை செய்யக்கூடாது என்று மாணவர்களுக்கு நேரிடையாக கூறுகிறார்

**“கெடுப்பது ஒழி”**

நல்ல வாழ்வுக்கும், ஒழுக்க நெறி உடைய சமூகத்திற்கும் அடிப்படையாக உள்ள தீய செயல்களை அழிக்க வேண்டும்.

**“குணமது கைவிடேல்”**

நல்ல குணங்களை எப்போதும் கைவிடாமல் கடை வாழ வேண்டும் என்பதாகும். நல்ல குணநலன்கள் ஒருவரின் வாழ்விற்கு அடிப்படையாக இருப்பதையும், அதைத் தக்க வைத்துக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் இக்கருத்து வலியுறுத்துகிறது

**சக்கர நெறி நில்**

சக்கர நெறி என்பது தர்மம், அறம், மற்றும் நீதி ஆகியவற்றின் அடையாளமாகும்.இது மனிதன் அடிப்படையாக பின்பற்ற வேண்டிய உண்மையான ஒழுக்க முறையை குறிக்கிறது.தனிநபர் மட்டுமின்றி சமுதாயத்திற்கும் வழிகாட்டும் ஒழுக்க வழியாகும். நீதியுடனும் ஒழுக்கத்துடனும் நிலைத்திருப்பதே உயர்ந்த வாழ்க்கைக்கு வழி என்று சொல்லப்பட்டுள்ளது.

**உத்தமனாய் இரு**

எப்போதும் சிறந்த மனிதனாக வாழ வேண்டும் என்பதாகும். உத்தமன் எனும் சொல் உயர்ந்த குணங்களுடனும் நல்லொழுக்கத்துடனும் வாழும் மனிதனைக் குறிக்கிறது. இது ஒழுக்க நெறி, நேர்மை, அறம், மற்றும் கருணை போன்ற உயர்ந்த பண்புகளை வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**வாய்மை சார்ந்த அறச்சிந்தனைகள்**

உண்மையற்ற கற்பனைகள், பொய்கள், அல்லது மிகையுரைகளை பேச வேண்டாம் என்பதாகும். இது நேர்மையான பேச்சு மற்றும் உண்மையான சிந்தனைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இது நேர்மையையும் உண்மையையும் அடிப்படையாகக் கொண்ட வாழ்வியல் நெறியை வலியுறுத்துகிறது.

**“சித்திரம் பேசேல்”**

உண்மையை பேசுவது மட்டுமே தனிநபரின் நற்பெயரையும், சமூகத்தின் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும். பொய்களைத் தவிர்த்து, நேர்மையான பேச்சு மற்றும் செயலில் நிலைத்திருப்பதே வாழ்க்கையின் உயர்ந்த நோக்கமாகும் என்று அறியமுடிகிறது.

**வெகுளாமை சார்ந்த அறச்சிந்தனைகள்**

தனிநபரின் வாழ்வில் அமைதி, பொறுமை, மற்றும் தெளிவை நிலைத்திட உதவும் முக்கியமான கருத்தாகும்.

**“ஆறுவது சினம்”**

கோபம் அல்லது சினத்தை அடக்கி, எதிலும் உறுதியுடன் செயல்படுவது வாழ்க்கையில் சிறந்த முடிவுகளை அடைய வழிவகுக்குகிறது.

**“துன்பத்திற்கு இடம் கொடேல்”**

மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் வலியுறுத்துகிறது. வாழ்க்கையின் எந்த நிலையில் வந்தாலும் துன்பங்களை சமாளித்து, மன அழுத்தத்தை அடக்கி, முன்னேற்றத்தை நோக்கிச் செயல்பட வேண்டும் என்பதே இதன் உன்னத நோக்கமாகும். தன்னம்பிக்கையும் பொறுமையும் இதற்கான அடிப்படையாக அமைகிறது

**கல்வி சார்ந்த அறச்சிந்தனைகள்**

ஆத்திசூடியில் உள்ள கல்வி சார்ந்த கருத்துகள், கல்வி மனித வாழ்க்கைக்கு ஒளி அளிக்கின்றது என விளக்குகின்றன.

**“அறிவு பழகு”**

கல்வியின் அடிப்படை அறிமுகமே இவ்வுரை. அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. அறிவு என்பது மனிதனின் நெறிமுறைகளை வடிவமைக்கும் கருவியாகும்.

**“ஓதுவது ஒழியாது”**

ஓதுதல் அல்லது கல்வி கற்பது ஓய்வின்றி தொடர்ந்து இருக்க வேண்டும். கல்வி என்பது நியமமாகவும் வளர்ச்சியின் அடிப்படையாகவும் கருதப்படுகிறது.

**நெறியுடனான கல்வி**

ஆத்திசூடி மொத்தமாக நல்லொழுக்கத்தை மையமாகக் கொண்டது.

**“செய்வன தியவாய்”**

கல்வி கற்றவர்களின் செயல்கள் நல்ல செயல்களாக இருக்க வேண்டும். கல்வி அறிவைப் பெறுவதற்காக மட்டுமல்ல, நெறி நிலைப்பதற்கும் பயன்பட வேண்டும்.

**“தீயினில் சுட்டபுண் ஆறும்”**

தீய பழக்கங்கள் கூட கல்வியால் களைப்படலாம். கல்வி ஒழுக்கமிக்க மனிதனாக மாற்றும் திறனைக் கொண்டது.

**தொடர்ந்து கற்றல்**

ஆத்திசூடியில் தொடர்ந்து கற்றல் என்பதற்கான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

**“ஏறு வழி காண்”**

முன்னேறும் வாய்ப்புகளை கண்டுபிடிக்க, அறிவு மற்றும் கற்றல் அவசியம் என எடுத்துரைக்கிறது.

**“நல்லது கடைபிடி”**

கல்வி கற்றவர்களால் நல்ல வழிகளை நாடி அதை கடைபிடிக்க வேண்டும்.

**கல்வியின் அவசியம்**

மனிதன் தனது வாழ்க்கை முழுவதும் செய்ய வேண்டியதென்றால் அது கல்வி கற்பது ஒன்றுதான் இளமை முதல் இறக்கும் வரை இடைவிடாது கற்றாலும் ஒருவனால் கல்வியியல் முழுமை அடைய முடியாது எனவேதான் கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்னும் தொடர் மக்கள் இடையே நிலவுகிறது ளுகல்வி என்பது மனிதனை சுயமாக நடத்தத் தேவையான அடிப்படை கருவியாகும். இது மனிதனை அறிவாளியாகவும்,நெறிமுறையுடனும் வளர்க்கிறது.

**கல்வியின் சமூக பங்களிப்பு**

கல்வி சமூகத்தில் உள்ள சமத்துவத்தை ஏற்படுத்துகிறது. கல்வி பெற்றவர்களுக்கு கடமைகள் இருப்பதாகவும், அவர்களின் அறிவு மற்றவர்களின் நலனுக்கு பயன்பட வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

**சுயவளர்ச்சியில் கல்வியின் பங்கு**

நீதி இலக்கியங்களில் கல்வி ஒரு தனிமனிதனின் அறிவாற்றலை மேம்படுத்தி, அவரின் வாழ்வியலுக்கும் பண்பாடுக்கும் உயர்ந்த நிலையை வழங்குகிறது.

**ஒழுக்கம் சார்ந்த அறச்சிந்தனைகள்**

எளிய சொற்களால் ஆட்சி நெறி, ஒழுக்க நெறி, வாழ்க்கை முறைகள் குறித்து அறிவுரை வழங்குகிறது.

**தேசத்தோடு ஒத்து வாழ்**

ஒருவரின் சொல் அல்லது செயல், மற்றவர்களின் மனதை வருத்தப்படாத வகையில் இருக்க வேண்டும். சமுதாயத்தில் நல்லிணக்கமாக வாழ வேண்டும்.துயரத்தைக் கொடுத்தவருக்குப் பொறுத்தும் நன்றியுணர்வோடு நடக்க வேண்டும். இது சுமூகமான சமூக உறவுகளுக்குப் பாதை வகுக்கிறது.ஒருவரின் சமுதாய வாழ்க்கையில் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.இவை அனைத்தும் தேசத்தோடு ஒத்துப் போகும் வகையில் ஒருவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அடிப்படையாக ஔவையாரின் ஓரடிப்பா விளக்குகின்றன. ஒற்றுமை, நல்லிணக்கம், பகிர்வு ஆகியவை அமைதியான மற்றும் நலமான சமுதாயத்தை உருவாக்கும் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

**"ஊருடன் கூடி வாழ"**

ஒருவரின் செல்வம், அறிவு, திறமைகள் போன்றவற்றை ஊருடன் பகிர்ந்து கொள்ளப்படும்போது, ஒட்டுமொத்த சமுதாயம் முன்னேற்றமடையும் என்றும்,ஊரின் நலனுக்காகச் செயல்படும்போது சண்டைகளும் மனக்கசப்புகளும் குறையும் என்பதில் ஒழுக்கம் சார்ந்த கருத்தினை பதிவு செய்திருப்பதை அறிய முடிகிறது.

**"நேர்பட ஒழுங்கு"**

நேர்மையாக வாழ்வதே உறுதியான வாழ்க்கையை அளிக்கும். ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளும் வாழ்வு சமுதாயத்திற்கும் தனி மனிதனுக்கும் நன்மை அளிக்கும். நேர்மையுடன் தவறுகளை விலக்கி நற்பணிகளைச் செய்வது உயர்வான வாழ்க்கையை தரும் என்பதை அறிய முடிகிறது.

**ஆத்திசூடியின் அறக்கோட்பாடு**

ஆத்திசூடியில் பண்பு,கல்வி,ஒழுக்கம் சார்ந்த கருத்துகள் எளிய முறையில் சொல்லப்பட்டாலும், அவை ஆழமான வாழ்க்கை பயன்களை உள்ளடக்கியவையாக அமைந்துள்ளது.

**பொதுவான பொருத்தம்**

கல்வி, பண்பு, ஒழுக்கம் குறித்த கருத்துகள் அனைத்தும் காலம் கடந்தவை. ஆனால் இன்றைய காலக்கட்ட சமூகத்திற்கும் பொருந்தும் வகையில் நேரிடையாக கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

**அரிய வாழ்வியல் வழிகாட்டி**

ஔவையார் குறிப்பிடும் அறம் பண்பு, வாய்மை,வெகுளாமை,கல்வி போன்றவை தனிப்பட்ட வாழ்க்கையின் மட்டுமல்லாது, சமூக வாழ்வின் பரந்த பரிமாணங்களுக்கும் உதவக்கூடியது என்பதை ஆத்திசூடி நம்பிக்கையுடன் கூறுகிறது.

**"அறிவு பழகு"**

அறிவு வளர்க்கும் பண்பு குழந்தைகள் நிலையிலேயே வளர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கூறுகிறது.

**முடிவுரை**

ஔவையார் தமது நீதி இலக்கியங்களில் தன் அறச்சிந்தனைகளை மக்கள் நலம்பெறும் வண்ணம் இயல்பாக அமைத்துள்ளார். மக்களும் சமுதாயமும் நலம்பெறவேண்டும், நற்சிந்தனைகளால் மனத்தைச் சீரமைத்துக் கொள்ள வேண்டும் என்னும் அடிப்படையில் ஔவையார் நிறைவான அறச்சிந்தனைகளை வழங்கியிருக்கின்றார்.மனித வாழ்க்கை பல்வேறு சூழல்களையும் வாழ்வியல் சிக்கல்களையும் உள்ளடக்கியது அமைதியற்ற வாழ்க்கையில் பெரியோர்களின் நற்கருத்துக்களை ஏற்று மனம் கொள்வதன் மூலமாக நல்வாழ்க்கை வாழலாம். மனிதனின் அறிவு, சமூக நலன், மற்றும் வாழ்க்கை தரம் போன்ற கருத்துகள் எல்லாம் நடைமுறைப் பயன்பாட்டையும் வலியுறுத்துகின்றன. ஆத்திசூடி, தமிழின் சிறந்த நீதிக்கவியல்களில் ஒன்று. "அறிவு பழகு" முதல் "நல்லது கடைபிடி" வரையிலான ஒரடிப் பாட்டுகள்,பண்பு,வாய்மை கல்வியின் அவசியம், கடமைகள், மற்றும் பயன்களைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறுகின்றன. ஆத்திசூடி காட்டும் அறக்கோட்பாடுகள் மனிதரின் வாழ்வியல் வளத்தையும் சமூகத்திற்கான பங்களிப்பையும் உயர்த்துகின்றன. எனவே, ஆத்திசூடியின் கருத்துகள், நவீனக் காலத்திற்கும் முக்கியமான வழிகாட்டியாக அமைந்திருக்கின்றன என்பதை அறியமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

1. நீதி நூல்கள்-அருள்வளர்சிவம் அறக்கட்டளை, நெய்தல் கதூமியகம், புதுவை, முதல் பதிப்பு : 2014.

2. வேங்கடசாமி நாட்டார் ந.மு,கொன்றை வேந்தன், பூம்புகார் பதிப்பகம்,127 பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-108, இரண்டாம் பதிப்பு: ஏப்ரல் 2018
3. அறவாணன் க.ப, அற இலக்கியக் களஞ்சியம், தமிழ்க் கோட்டம், அமைந்தகரை, சென்னை-29, இரண்டாம் பதிப்பு:2011
4. கதிர்முருகு, பிற்கால நீதி இலக்கிய வரலாறு, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை-05, முதற்பதிப்பு: 2010
5. சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம் - பொதிகைத் தமிழரசன், பொன்மணி பதிப்பகம், தலையாரிபட்டி, இணங்கனூர், அரவக்குறிச்சி, கரூர்- 639205, மறுபதிப்பு: ஆகஸ்ட், 2008
6. மறைமலை தி.சு.,ஆத்திசூடி மூலமும் உரையும், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு, சென்னை,1948

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# மு.மேத்தா கவிதைகளில் கல்விச் சிந்தனைகள்

**சு.ஜெகநாதன்**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வார்
தமிழ்த்துறை
மாநிலக்கல்லூரி (தன்னாட்சி)
சென்னை – 05.

## முன்னுரை:

இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய உலகின் தனக்கென ஒரு தனிப்பாதையை அமைத்துக்கொண்டு புரட்சிமிக்க சிந்தனை வரிகளால் இளைஞர்களின் மனதில் இடம் பிடித்தவர் மு.மேத்தா. மதுரை தியாகராசர் கல்லூரியில் படிக்கும்போதே மேத்தா இலக்கிய ஆர்வம் கொண்டிருந்தார். வானம்பாடி கவிதை இயக்கம் உருவானபோது அதில் பங்கெடுத்து வானம்பாடி இதழில் கவிதை எழுதினார். புதுக்கவிதையைப் புரட்சிப் போர்வாளாக ஏந்தி, அதனை எண்ணற்ற இளைஞர்களின் போரிடும் ஆயுதமாகத் தந்தவர். கவிஞர் மு.மேத்தா மிகச்சிறந்த சிந்தனையாளர் என்பதை அவருடையப் படைப்புகள் காட்டுகின்றன. இவருடைய முதல் கவிதை நூலாக கண்ணீர் பூக்கள் வெளிவந்து மேத்தா என்கிற பெயருக்கு மகுடம் சூட்டிய சிறந்த இலக்கிய படைப்பாளன் என் பெயரை இலக்கிய உலகிற்கு உணர்த்தியது. கவிஞர், பேராசிரியர், பாடலாசிரியர், சொற்பொழிவாளர், எனப் பன்முக ஆளுமை உடையவர். கவிதை, காவியம், கட்டுரை, புதினம், சிறுகதை என்று பல்வேறு பரிமாணங்களில் தனது படைப்புகளை எழுதி வருபவரின் கவிதைகளில் கல்விச்சார்ந்தச் சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கல்வியின் முக்கியத்துவம்

செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். கல்வி நம் வாழ்வில் முக்கிய அங்கமாக வகிக்கிறது. கல்விப் பயின்று வாழ்க்கையில் வலம் பெறுவதற்காகப் பள்ளிக்குச் செல்கிறோம். நாம் வாழ்வில் எவ்வளவு கற்கின்றோமோ அந்த அளக்குத்தான் அறிவு வளரும். மனிதனின் அறிவுச் சிந்தனையைத் திறந்து வைக்கும் ஆற்றல் கல்விக்கு மட்டுமே உண்டு. உலகில் எத்தனையோ உயிரினங்கள் தோன்றி வாழ்கின்றன. ஆனாலும், சிறந்த உயிரினமாக ஆறறிவுப் பெற்ற மனிதனே சமுதாயத்தில் போற்றப்படுகின்றான். மதிப்பும் மரியாதையும் கல்விப்பெற்ற மனிதன்தான் பகுத்தறிவுச் சான்றாக விளங்குகின்றான். இந்தப் பகுத்தறிவு மூலமாக மனிதன் எது நல்லது, எது கெட்டது என மனிதனால் பகுத்தாராய்ந்து செயல்படுகிறான்.

## சமூகத்தில் நிலைபெற கல்வி வேண்டும்

கல்வி என்பது ஒருவருடைய அறிவையும் ஆற்றலையும் உயர்த்திச் சமூகத்தில் நல்ல மதிப்பை தருவதோடு ஒழுக்கத்தையும் கற்றுத் தருகிறது. வாழ்வில் கல்வி என்ற ஒளிவிளக்கு ஒருவனுக்கு வாழ்வின் செம்மைப்படுத்துகிறது. கல்விப் பற்றி அதிவீரராமபாண்டியன்,

**"கற்கை நன்றே கற்கை நன்றே,**
**பிச்சைப் புகினும் கற்கை நன்றே" (கொன்றை வேந்தன், பாடல் - 35)**

பிச்சை எடுத்தேனும் கல்விக் கற்க வேண்டும் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. கல்வியால் ஒருவன் நற்குணம் பெற்றும் உயர்வான எண்ணங்களைப் பெற்றும் சமூகத்தில் உயர்ந்த மதிப்பை பெற கல்வி அவசியமாகிறது.

**"கற்க கசடறக கற்பவை கற்றப்பின்**
**நிற்க அதற்குத் தக" (குறள் - 39)**

ஒருவன் தெளிவுபடக் கற்று அதற்கேற்றவாரு நடந்துக் கொள்ள வேண்டும் என்றார் திருவள்ளுவர். மேலும், வள்ளுவர்,

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து" (குறள் - 398)**

ஒரு தலைமுறையில் ஒருவன் பெறும் கல்வி அறிவு அவனது ஏழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்பதை வள்ளுவர் விளக்குகிறார். இதன் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை ஆழமாக உணரமுடிகிறது. மேலும், ஔவை, கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறுகையில்,

**"மன்னனும் மாசு அறக்கற்றோனும் சீர் தூக்கின்**
**மன்னனின் கற்றோன் சிறப்பு உடையன் மன்னர்க்குத்**
**தன்தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்**
**சென்ற இடம் எல்லாம் சிறப்பு" (மூதுரை – 26)**

ஒரு நாட்டை ஆளும் அரசனைவிடச் சிறந்த கல்விக் கற்றவனே மேன்மைக் குரியவன். அரசனுக்கு அவன் நாட்டைவிட்டால் வேறெங்கு அவனுக்குச் சிறப்பு இல்லை. ஆனால் கற்றவனுக்குச் செல்லும் நாடு எல்லாம் சிறப்பாக அமையும். கல்விதான் ஒரு மனிதனுக்குச் சிறப்பைப் பெற்றுத் தரும். ஆகையால் கல்வியை அனைவரும் பெற்று வாழ்வில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பது ஔவையின் கருத்தாக அமைகிறது. தந்தைப் பெரியார் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறுகையில், "கல்வியினுடைய குறிக்கோள் என்பது பணம் சம்பாதிப்பது மாத்திரம் என்று நினைக்கக்கூடாது. அறிவை வளர்க்க, நமது இழிவையும் முட்டாள் தனத்தையும் மூட நம்பிக்கையும் ஒழிக்க என்பதாக இருக்க வேண்டும்." (விடுதலை: 4.3.1959) என்று விளக்குகிறார். மேலும், "விஞ்ஞானம், பொதுஅறிவு, தன்மான உணர்ச்சி, ஒழுக்கம் இவை தரும் கல்வியே முக்கியம். இவை அளிப்பதாய் இல்லாவிடில் அக்கல்வியால் பயனில்லை" (விடுதலை 8.6.1963), என்பது பெரியாரின் ஆழமான கருத்தாகும்.

**மு.மேத்தாவின் கல்விச்சிறப்பு**

கல்வி என்பது ஒருவனுடைய வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும். மூடநம்பிக்கையிலிருந்து அவனைச் சுயமரியாதைக் கொண்டவனாகும். பகுத்தறிவுச் சிந்தனை உள்ளவனாகவும் மாற்றும். மு.மேத்தா தன் கவிதைகளில் சமுதாயச் சீர்த்திருத்த கருத்துக்களை வெளிப்படுத்தும் கவிதைகளையும், கல்வியின் முக்கியத்துவத்தையும் தன் கவிதை மூலம் பதிவு செய்துள்ளார்.

**"எழுத்து விதைகள்**
**இதயங்களில்**
**தூவப்படும்போது**
**செழித்து வளர்வது**
**தனிமனிதன் அல்ல**
**ஒரு சமுதாயம்" (மு.மேத்தாவின் கவிதைகள் பக். 46)**

ஒரு சமுதாயம் வளர்ச்சிப்பெற வேண்டுமானால் நாட்டில் உள்ள எழுத்தாளனாலும் தன் கருத்துக்களை எழுத்தால் வெளிப்படுத்த வேண்டும் என்பதை மு.மேத்தா விளக்குகிறார்.

**ஒரு எழுத்தாளனின் எழுத்து**

ஒரு எழுத்தாளன் தனிமனித வளர்ச்சிக்காக மட்டும் அவன் எழுதவில்லை. ஒரு சமுதாயம் முன்னேற்றத்திற்காகவும் எழுதுகிறான் என்பதை தன் கவிதையின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார்.

**"என்னுடைய எதிர்காலம்**
**என் பெற்றோர் நிகழ்காலம்**
**என்னுடைய பெண்டு பிள்ளை**
**இவர் காலம்**
**இவையெல்லாம்**
**இப்போது**
**உம்முடைய கைகளிலே**
**ஊர் கோலம்!**
**அதற்காக**
**சலுகைகள் நான் கேட்கவில்லை**
**தகுதி தரம் தெரிந்து**
**சரியான மதிப்பீடு**
**செய்க எனக் கேட்கின்றேன்!**
**மதிப்பெண்கள்**
**கூட்டிப்போடும்படி**
**கோரிக்கை விடவில்லை**
**நியாயமின்றி**
**குறைத்து விடுவதுதான்**
**கூடாது என்கிறேன்" (என்னுடைய மோதிரங்கள் பக்.62)**

கல்விதான் ஒருவனின் தலையெழுத்தை மாற்றும். அதுமட்டுமல்ல அவனுடைய குடும்பமே முன்னேற்றம் அடையும், ஆகையால் ஒருவன் தேர்வு எழுதி அவன் விடைத்தாள் திருத்தும் ஆசிரியர் அவனுடைய கல்வித்தரத்தை அறிந்து அதற்கேற்றவாறு மதிப்பீடு செய்து வாழ்வை உயர்த்த வேண்டும் என்பதை மு.மேத்தா விளக்குவதை அறிந்துகொள்ள முடிகிறது.

**கட்டாயக் கல்வியின் முக்கியத்துவம்**

சமூகத்தில் ஆண், பெண் பாராமல் அனைவருக்கும் கட்டாயக்கல்வி அளிக்க வேண்டும் என்று காமு ஷெரீப் கூறுகிறார்

**"கல்விச் சிலர்க்கெனும் காய்ச்சலிருந்து**
**கலங்கினாள் மிக பாரதத் தாயுமே!**
**கல்வி அனைவர்க்கும் என்றனம் ஆதலால்**
**கலக்கம் ஒழித்தனள் தாயெனும் பாரதம்"**
**(கவி காமு ஷெரீப் கவிதைகள் பக்.70)**

என விளக்குகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நமது தமிழ் மொழி இன்றளவும் சிறப்புற விளக்குகிறது. என்றால், அதற்கு வள்ளுவர் எழுதிய திருக்குறள் ஒரு முக்கிய சான்றாக விளங்குகிறது. ஏனென்றால் அவைதான் உலகப்பொதுமறை என்கின்றனர் தமிழ்ச்சான்றோர்கள். திருக்குறளில் அறக்கருத்துக்கள் அன்பு, சமுதாயச்சிந்தனை, சாதி பேதமற்ற கருத்து. இவையெல்லாம் திருவள்ளுவருக்குச் சிறப்பு சேர்க்கின்றது.

**"உள்ளங்கள் தோறும்**
**உள்ளவர் - எங்கள்**

**வள்ளுவர்**
**ஒன்றே முக்கால் அடியால்**
**உலகையே அளந்த**
**வல்லவர்" (ஒரு வானம் ஒரு சிறகு பக். 57)**

என வள்ளுவர் பெற்ற கல்விதான் அவரை உலகம் போற்றும் அளவுக்கு உயர்த்திருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது.

**எழுதும் எழுத்து செங்கோலாய் அமையும்**

பாரதியார் சமூக சிந்தனையாளர். அவருடைய கவிதை சமுதாயத்தைப் புரட்டிப்போட்டது. பாரதியார் புதுக்கவிதை என்ற உத்தியை முதன்முதலில் ஏற்படுத்தினார் புதிய புதிய சொல் வளத்தைக் கையாண்டு அவரைப் பின்தொடர்ந்தவர் மு.மேத்தா.

**"அவன் எனக்கும்**
**புத்தகங்கள்**
**வாங்கிக் கொடுத்தான்!**
**சொற்புதிது – பொருள் புதிது**
**சுவைப் புதிது – வலம் புதிது**
**என்று**
**அவனே ஒரு**
**புதுமையான**
**புத்தகமாகவும் இருந்தான்! (ஒரு வானம் ஒரு சிறது பக்.66)**

என மு.மேத்தா பாரதி ஏற்படுத்திய தாக்கம் தான் எனக்குள் புதிய புதிய சொற்கள் புகுந்து சமூகத்திற்கு ஏற்ற கருத்தை என் எழுத்து மூலம் எண்ணால் தர முடிந்தது என்பதை கூறுவதன் மூலம் அறியமுடிகிறது. இதற்கெல்லாம் அடித்தளமாக அமைவது கல்வியின் சிந்தனையாகும். சொற்கள் ஆழமான சிந்தனைக் கொண்டதாக இருந்தால் அவன் எழுதும் எழுதுகோலும் செங்கோலாக மாறும் என்பதை மேத்தா விளக்குகிறார்.

**"சொற்கள் மணிமுடி**
**சூட்டிக் கொண்டால்**
**எழுதுகோல் செங்கோலாய்**
**இருக்கும்" (முகத்துக்கு முகம் பக்.60)**

ஒருவன் எழுதும் எழுத்தும் அவன் பயன்படுத்துகிற சொற்களும்தான் அந்த நாட்டின் தவிர்க்க முடியாத ஆளுமையுள்ள எழுத்தாளனாக உருவாகுகிறான். அவன் எழுதும் எழுதுகோலும் செங்கோலாய் மாறுகிறது. என்பதை ஒருவன் பெற்ற கல்வியின் மூலம் நாம் அறிகிறோம்.

**மாணவர்களின் புத்தகப்பை**

இன்றைய காலகட்டத்தில் கல்வி என்பது மாணவர்களுக்குச் சுமையைத் தரக்கூடியதாக மாணவர்கள் உணர்க்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் சுமக்கும் புத்தகப்பை நிலைதான் அவர்கள் கல்விக் கற்கும் ஆர்வத்தை குறைக்கின்றது என்பதை பின்வரும் கவிதை உணர்த்துகின்றது.

**"கல்வி இங்கே**
**இதயத்தில் சுமக்கும்**
**இனிமையாய் இல்லாமல்**
**முதுகில் சுமக்கும்**
**மூட்டையாகிவிட்டது**

**கொடுமை என்னவென்றால்**
**குழந்தைகளெல்லாம்**
**கூனிகாயினர்" (ஒரு வானம் இரு சிறகு பக்.21)**

கல்வியைக் கற்க பள்ளிக்குச் சிரமம் இல்லாமல் ஆர்வமுடன் கற்கும் சூழ்நிலையை அரசு உருவாகித்தரவேண்டும். புத்தகச் சுமையைத் தூக்கியே மாணவர்கள் கூனியாகிவிட்டனர் என்று தன் எண்ணத்தை கவிதையின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். மேலும்,

**"பள்ளியில் வந்து நான்**
**படிக்கிறேன்! என்னை நீ**
**பாராமல் இருப்பதென்ன?**
**பரீட்சைகள் எத்தனை**
**எழுதினேன் இன்னும் நான்**
**தேறாமல் இருப்பதென்ன? (கனவுக் குதிரைகள் பக்.74)**

ஒரு மாணவனுக்கு எளிதில் புரியும்படி ஆசிரியர் கற்பிக்க முற்படும்போது மாணவன் கல்வியில் கவனம் செலுத்துகிறான். அவன் வகுப்பறையில் எம்முறையில் செயல்படுகிறான் என்பதை ஆசிரியர் கவனித்து தேர்வுக்குத் தேவையான குறிப்புகளைக் கூறித் தேர்வில் வெற்றிப்பெற வைக்க வேண்டும் என்பதை மு.மேத்தா கூறுவதை காணமுடிகிறது.

**வகுப்பறையின் சூழல்**

பள்ளி வகுப்பறைக் காற்றோட்டம் உள்ள சூழல் நிறைந்து உள்ளதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர் ஆசிரியர் கூறுவதை எளிதில் உள்வாங்கிக் கொள்ளமுடியும் இருள் சூழ்ந்து கிடந்தால் அவனின் மனநிலைக் கற்கும் ஆர்வத்தை தூண்டாது அதேபோல் புத்தகம் சுமை இல்லாமல் இருக்க வேண்டும். வகுப்பறையில் சூழலைப் பற்றி வைரமுத்து,

**"வகுப்பறைகளின்**
**புழுக்கத்தில் புழுங்கிப் புழுங்கி**
**மாணவர்களின் நுரையீரல்**
**வெந்துவிட்டது**
**பல இளம் பெண்கள்**
**புத்தகச் சுமைப் பொறுக்காமலேயே**
**பூப்பெய்திவிட்டார்கள்" (இன்னொரு தேசிய கீதம். பக். 89)**

இவ்வாறு இருந்தால் மாணவ மாணவிகள் கல்விக் கற்பதில் ஆர்வம் கொண்டு கற்பார்கள் என்பதை விளக்குகிறார்.

**கல்வியை உணர்த்தும் எண்ணற்ற காகிதம்**

ஒவ்வொரு காகிதமும் ஒவ்வொரு கருத்தை விளக்குகிறது. இன்றைய தலைமுறையில் கல்வியின் தரம் உயர்ந்துக் காணப்பட்டாலும், மக்களிடத்தில் வாசிப்புத்திறன் குறைந்துக்கொண்டே போகின்றது. என்பதை பின்வரும் கவிதைகள் உணர்த்துகின்றன.

**"எடைக்குப் போடும்போதுதான்**
**தெரிகிறது**
**பத்திரிக்கைகளில்**
**படிக்காமல் விட்ட**
**பயனுள்ள பக்கங்கள்" (ஆகாயத்துக்கு அடுத்தவீடு பக்.07)**

இன்றையச் சமுதாயத்தில் அனைவரும் செய்தித்தாள் படிக்கும் பழக்கம் உள்ளவராக இருக்கின்றனர். இலக்கியம், சமூகம் சார்ந்த கருத்து, அரசியல், காதல் போன்ற முக்கியக் கருத்துள்ள செய்திகள் வருகின்றன. அவற்றை சரியான

முறையில் கவனித்துப் படிக்காமல் விட்டுவிடுகின்றனர். ஒருநாள் எடைக்குப் போடும்போதுதான் சில கருத்துள்ள செய்திகள் பார்க்க முடிகிறது. என்ற சிந்தனையுள்ள கருத்தை மு.மேத்தா வெளிப்படுத்துகிறார்.

**“எத்தனை முறை**
**படித்தாலும்**
**அலுத்துப்போகாத**
**உன் எழுத்துக்கள்**
**கண்ணீரில் தொட்டு**
**நீ போட்ட**
**கையெழுத்துக்கள்” (ஊர்வலம், பக்.44)**

ஒரு எழுத்தாளர் எழுதும் எழுத்து வாசகனைக் கவரக் கூடியதாக இருக்க வேண்டும். அந்த எழுத்தாளனைக் கண்டால் வாசகன் அவர் எழுதிய புத்தகத்தில் கையெழுத்து பெறக்கூடிய அளவுக்கு அவருடைய எழுத்து இருக்க வேண்டும். அதற்குச் சான்று மு.மேத்தாவே விளங்குகிறார். ஒருவருடைய எழுத்துக்கள் சமூகத்தில் நடக்கக்கூடிய அவலங்களை எடுத்துக்காட்டுகின்ற விதமாக இருக்க வேண்டும். பயனுள்ள கருத்துக்களை எழுதும் எழுத்தாளர்கள் தமிழ்ச்சமூகத்தில் நிரம்ப இருக்கின்றனர் என்பதை இக்கவிதைப் புலப்படுத்துகிறது.

**முடிவுரை**

கல்வி என்பது தமிழ்ச்சமூகத்தின் அங்கமாக விளங்குகிறது. மூடநம்பிக்கைகளை அகற்றிவிட்டு பகுத்தறிவுச் சிந்தனையும், சுயமரியாதை எண்ணத்தையும் அளிப்பது கல்வி ஆகும். கல்விதான் மனிதநேயத்தை வளர்க்கிறது. ஒரு சமுதாயத்தின் பண்பாடு, நாகரீகம், ஒழுக்கம் மொழிப் போன்றவை கல்வியின் மூலமே பெறுகிறோம். மு.மேத்தா சமூகச்சிந்தனையுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தும் கவிஞராகவும், கல்விச் சிந்தனையுள்ள கருத்துக்களை விளக்கும் கவிஞாகவும் விளங்குகிறார். இவருடைய கவிதைகளில் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிகிறது. கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கருத்திற்கேற்ப அனைவரும் கல்விப்பெற்று, சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். தான் கற்றதைப் பிறருக்கும் பயன்படும்விதமாக நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறு மு.மேத்தாவின் கவிதைகளில் கல்விச்சார்ந்த சிந்தனைகளை அறிந்துகொள்ள வேண்டும்.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# பழந்தமிழரின் குலக்குறியும் அறநெறிக் கோட்பாடும்

**முனைவர் ஏ.ராஜ்மோகன்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.
மாமல்லபுரம், சென்னை -104

**முன்னுரை**

பண்டைய திணைக்குடி, மற்றும் இனக்குழு மக்கள் தம்தம் வாழ்வியலுக்கு பெரும் துணையாக விளங்கும் குலக்குறிப் பொருட்களை தம் அடையாளப் பொருளாக, வாழ்விடப்பொருளாக, உணவுப் பொருளாக, ஒப்பனைப் பொருளாக பயண்படுத்தியது போல சில சூழல்களில் அந்ததந்தக் குலக்குறிப் பொருட்களை விலக்கிவைத்தும், அதனை போற்றி பாதுகாத்தும் வந்துள்ளனர். எனவே ஒவ்வொரு இனக்குழுவும், அரசர்களும் தங்கள் குலக்குறியுடன் சமுக அறநெறியினை கடைப்பிடித்துள்ளனர். அதனைக் குறித்த செய்திகள் சங்க அகப், புறப்பாடல்களில் அதிகம் காணப்படுகின்றன. அதனை புறமணமும் குலக்குறிய அறநெறியும், மனவுணர்வும் குலக்குறிய அறநெறியும், புனிதப் பொருளும் அறநெறியும், உறவுமுறைக் குலக்குறியும் அறநெறியும், கொடைப் பொருளும் குலக்குறி அறமும், குலக்குறி மாலையும் அறநெறியும், காவல் மரமும் அறநெறியும் என்ற முறையில் ஆராய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குலக்குறியும் அறநெறியும்**

பழங்குடிமக்கள் தம் குலக்குறிகள் மீது மிகுந்த மரியாதை செலுத்துவர். அவற்றை இழிவுபடுத்துவதோ கொல்லுவதோ கூடாது என்ற நடமுறையை ஓர் அறநெறியாகவே கடைப்பிடிப்பர். ”ஒரு குலக்குறிக் குலத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் குலக்குறியின் தங்களுடைய குலக்குறி உணவாகப் விலங்கை வேட்டையாட மாட்டார்கள் அதனைக் கொல்லவோ புசிக்கவோ மாட்டார்கள். குலக்குறியானது விலங்காக இராமல் வேறு ஏதேனுமாக இருக்குமேயானால், எவ்வகையிலும் அதனைப் பயன் படுத்துவதிலிருந்து விலக்கிவிடுவார்கள் குலக்குறியைக் கொல்லவோ புசிக்கவோ கூடாது என்பது தொடர்பான விதிகள் மட்டுமே விலக்கல்கள் அல்ல சில சமயங்களில் குலக்குறியைத் தொடுவதினிறும் கூட அவர்கள் தடுக்கப்படுவார்கள் அல்லது கண்ணால் பார்த்தலும் கூடாது குலக்குறியின் பெயரைச் சொல்வது கூட தவிர்க்கப் படுவதும் உண்டு. தங்கள் குலக்குறியைக் போல்வனவாகிய விலக்கல்களைக், காக்கக்கூடிய இவை மீறுவார்களேயானால் தீராத நோய், மரணம் ஆகியவற்றால் தண்டிக்கப்படுவர் என நம்பினர். இது போன்ற விலக்கல் முறையை நடமுறைப்படுத்தியும் வந்தனர். இதன் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மூலம் தமது குலக்குறிகளுக்கு ஒரு புனித தன்மையைக் கற்பித்து அறநேறியாக பின்பற்றுவர்.

**புறமணமும் குலக்குறிய அறநெறியும்**

புறமணம் என்பது ஒரு குலக்குறி உடைய குலமாந்தர்கள் புற குலக்குறியை கொண்ட குலமாந்தர்களை மணப்பதைக் குறிப்பதாகும். அவ்வாறு திருமணம் செய்வார்கள் ஆயின் அக்குலத்தில் இருந்து அம்மக்களை விலக்கி வைப்பது குலமாந்தர்களின் அறம்மாகும். புறமணம் சங்க இலக்கியத்தில் நடந்தற்கான குறிப்பினை குறிப்பிடும்போடு முதலில் சிலம்பு கழித்தல் என்கிற சடங்கு, திருமணச் சடங்குகளில் இடம்பெறுவதை பார்கலாம். சிலம்பு குழந்தைப் பருவத்தில் அணியப்படும் ஓர் அணிகலன். இக்காற் சிலம்பு அணிதல் தலைவிக்கு மட்டுமே உரியதாகும்.

**”நும்மனைச் சிலம்பு கழீஇய அயரினும்**
**எம்மனை வதுவை நன்மணம் கழீகெனச்” (ஐங்.43)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் சிலம்பு கழிக்கும் நிகழ்ச்சி, திருமண நிகழ்ச்சிக்கு முன்னர் நிகழ்த்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறுந்தொகைத் தலைவி ஒருத்தி

அவளுடைய காதல் திருமணம் தடைப்படுமோ என்ற ஐயம் எழுந்த போது தலைவனுடன் சேர்ந்து தன்தமர் அறியாதவாறு பாலை நிலத்தைக் கடந்து சென்றாள் என்பதை

**”வில்லோன் காலன கழலே**
**தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே**
**நல்லோர் யார்கொல் அளியர் தாமே (அகம்.327)**

என்று கூறுகின்றது. இப்பாடலில் வில்லேந்திய இவன் காலில் வீரக்கழல்கள் உள்ளன. வளையலணிந்த இவள் வெள்ளடிகளில் சிலம்புகள் உள்ளன என்று வரும் அடிகளிலிருந்து இன்னும் அவர்கள் திருமணம் செய்து கொள்ளாதவர்கள் என்ற கருத்து உணர்த்தப்பட்டுள்ளது. எனவே சங்க காலப் பெண்கள் திருமணம் நடைபெறும் வரை காலில் சிலம்பணிந்திருந்தனர் என்பது பெறப்படும். தலைவியின் இளமைக் கால விளையாட்டு பற்றிய நிகழ்ச்சியை எண்ணித் தாய் கூறும்

**”சீர்கெழு வியகைர்ச் சிலம்புநக இயலி**
**சீரை யாயமொடு பந்துசிறி தெறியினும் “(அகம்.87)**

அகநானூற்றுப்பாடல் தலைவி தமர் அறியாமல் தலைவனோடு உடன் சென்றமையை உணர்த்தியுள்ளது. மற்றொரு அகப்பாட்டாலும், தலைவனைச் சந்திக்க வந்த தலைவி நள்ளிரவில் அவள் எழுந்து செல்லுவதை அவளது சிலம்பின் ஒலியால் வீட்டார் அறிந்து விடலாகாதே என்று அதன் ஒலிப்பினைக்கட்டி ஒடுக்கி வந்து சென்றதை

**அருஞ்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து**
**துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள் (அகம்.95)**

என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு தலைவன் தலைவியின் அன்பையும் அறிவையும் எண்ணிக் கூறிய பாடலிலும் சிலம்பு பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. உடன்போக்கு நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடும் மற்றொரு பாடலிலும் இதேசெய்தி இடம்பெற்றுள்ளது. அதாவது தலைவனுடன் செல்ல விரும்பிய தலைவி படுக்கையினின்றும் இரவில் எழுந்து செல்லும் பொழுது சிலம்பின் ஒலி கேட்டுத் தாய் விழித்துக் கொள்ளுவாள் என்று தலைவி சிலம்பினைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு சென்றதை

**”அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ**
**யாயறி வுறுதல் அஞ்சி வேயர்**
**பிறங்கல் மலையிறந் தோளே” (அகம்.321)**

என்ற பாடலால் அறியலாம். மேலும் தலைவி உடன்போகிய காலத்து உறவினரில்லாத புதியதொரு நாட்டில் திருமணம் செய்து கொண்டாலும் அங்கும் சிலம்பு கழித்தல் நிகழ்ந்தது என்பதை

**”உள்ளாது கழிந்த முள்ளெயிற்றுத் துவர்வாய்த்**
**சிறுவன் கண்ணி சிலம்பு கழீஇய**
**அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே” (அகம்.385)**

என்பதை அகநானூற்றுப் பாடல் கூறுகின்றது. மேலும் “சிலம்பு கழீஇய செல்வம் பிறருணக் ஃகழிந்தவென் னாயிழை யடியே” (நற்றி.275)என்னும் நற்றிணைப் பாடல் பகுதியால் சிலம்பு கழித்தல் ஒரு செல்வம் என்றும் அதனைக் காணும் பேற்றை ஈன்ற தாய்க்கு அளிக்காது பிறர்க்கு அளிக்கப் போயினாளே தன்மகள் என்றும் ஒரு தாய் வருந்தியுள்ளாள். சிலம்பினை நீக்கினமையால் பரலோசை கேட்காது. எனவே இவள் மணமானவள் என்று அறியப்பட்டது. சிலம்பைக் கழித்தல் இருந்ததை நீக்குதல் என்பது ஒரு காரணமாகவும், அதுவே திருமணத்தின் அறிகுறியாகவும் ஆயிற்று. இது குறித்து கருத்துரைக்கும் வ.சுப. மாணிக்கம். அவர்கள் ”குழந்தை முதலே கிடக்கும் சிலம்பின் நீக்கம் இவள் மனைவியானாள் என்பதை முழுச் சமுதாயத்திற்கும் காட்டிவிடும் (தமிழ்க் காதல்:ப:16) எனக் கூறுகின்றார். சிலம்பு கழித்தல் என்னும் சடங்கு, திருமணத்திற்கு முன் நிகழ்வதின் காரணம் தலைவி திருமணம் செய்து கொண்டு (புறமணம்) வேறொரு குடிக்கு செல்வதால் தன் குலக்குறி அடையாளமான சிலம்பை தவிர்து சென்றுள்ளது குடியின் அறநெறியினை புலப்படுத்துகிறது.

**மனவுணர்வும் குலக்குறிய அறநெறியும்**

சங்கப் பெண்கள் தம் கையில் அணியும் சங்கு வளையல்களை குலக்குறியாக நினைத்து சில சூழலில் அணிவதை தவிர்துள்ளனர். சான்றாக தலைவன் தலைவியைப் பிரிந்து இல் பரத்தையிடம் சென்று விடுகிறான். கொஞ்சநாளில் அங்கிருந்து விலகி சேரி பரத்தையரிடம் தொடர்பு கொள்கின்றான். இதனை அறிந்த இல்பரத்தை தன்னிடம் தலைவன் இருப்பதாய் தலைவி இன்னும் நினைந்து கொண்டிருப்பாள் எனக் கலங்கி கோபம் மேலிட தன் வளையல்களை உடைத்து எறிகிறாள். இக்காட்சி அகநானூற்றில்

**“காவிரி வைப்பின் போஞர் அன்ன, என்**

**செறிவளை உடைத்தலோ இலனே" (அகம். 186)**
இடம் பெறுகின்றது. மேலும், குல மகளிர் அல்லாத பரத்தையர் தம்மை விரும்பும் ஆடவர் பிரிந்து வேறொருத்தியிடம் சென்று விட்டால் தம் வளையல்களை உடைத்துத் தாம் கொண்ட வெறுப்பினை வெளிக்காட்டுவர் இவ்வழக்கம் இருந்தமையை,

**"என்னொடு திரியேன் ஆயின் உடைகவன்**
**நேரிறை முன்கை வீக்கிய வளையபலே (அகம்.336)**
என அகநானூறு சான்று தருகின்றது. இவ்வாறு பெண்கள் கோபத்தில் வளையல்களை உடைத்து மனவுணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு சங்கு வளையல் மகிழ்ச்சியின் அடையாளமாகவும் குலக்குறி அடையாளமாகவும் விளங்குவதால் மகிழ்ச்சியில்லாத போது அதை அணிவதைத் தவிர்த்துள்ளது குடும்ப அறம்மாக பார்க்கமுடிகிறது.

**புனிதப் பொருளும் அறநெறியும்**

குலமாந்தர்கள் தங்கள் வாழ்வில் நன்மைகளை உண்டாக்கும் தாவரங்கள் அல்லது விலங்குகளை வங்குவர். அதுப்போன்ற குறிப்பினை குறுந்தொகையில் வேங்கையை விலக்கிவைத்த காட்சி ஒன்று காணப்படுகிறது. அதாவது வேங்கை என்பது புலியைக் குறிப்பதாக இருந்தாலும் அது வேங்கை மரத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வேங்கை மரம் வேனிற்காலத்தில் பூக்கும். இம்மரம் திருமணத்தைக் கணித்துக் கூறும் இயல்பினை உடையதாகக் கருதப்படுகின்றது. குழந்தைகள் இம்மரத்தின் பூக்களைப் பறிக்கச் சென்றால் அம்மரத்தின் அருகில் சென்று புலி புலி என்று கூறினால் அம்மரம் வலைந்து பூவை பறிக்கக் கொடுக்கும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந்துள்ளது. இம்மரத்தில் இளஞ்சிறார் ஏறாது புலிப்பூசல் செய்தனர் என்பதை,

**"கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறார்**
**வேங்கை மலர்பத நோக்கி**
**ஏறா திட்ட வேமப் பூசல்" (குறுந்.241)**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இதனைப் புலிப்பூசல் அல்லது வேமப் பூசல் என்பர். இது குறித்து கருத்துரைக்கும் உ.வே.சா. அவர்கள் வேங்கை மரத்தில் தெய்வம் உறைவதால் வேங்கை மரத்தின் மேல் சிறுவர்கள் ஏறமாட்டார்கள் என்று குறிப்பிடுகின்றார். இங்கு வேங்கை மரம் குலக்குறி மரமாகவும் அதனால் குலத்தின் புனிதப் பொருள் என கருதி ஏறமல் விலகியுள்ளது குலமாந்தர்களின் அறசெயலாக காணமுடிகிறது.

**உறவுமுறைக் குலக்குறியும் அறநெறியும்**

குலமாந்தர்கள் தங்கள் குலக்குறி பொருளான விலங்கு அல்லது தாவரங்களை மனித உறவாக கருதி அவற்றுடன் பல்வேறு வகையில் தொடர்புடையவர்களாக அங்கம் வகிக்கின்றனர். இதுப்போன்ற குறிப்புகள் சங்க அகப்பாடல்களில் காணப்படுகின்றன. சான்றாக "புன்னை" மரம் தங்கை என உறவாவதால் அம்மரத்தின் அடியில் காதலன் அவளுடன் உறவாட வந்ததைத் தவிர்த்து தோழி தலைவனுக்குக் கூறுகிறாள். அதைப் (நற்றி.172) பாடல் குறிப்பிடுவதிலிருந்து. நெய்தல் நிலமக்களின் குலக்குறியான புன்னையினை மரத்தை மனித உறவான சகோதரியாக நினைத்து தன் சந்திப்பை தவிர்த்துள்ளது சிறந்த அறமாகும்.

**கொடைப் பொருளும் குலக்குறி அறமும்**

குலமரபினை உடைய மக்கள் வாழும் பகுதியில் இடம்பெறும் குலக்குறிப் பொருட்களான உயிருனங்கள் மீது இரக்கவுணர்வு கொண்டுள்ளதையும் தம் அடையாளச் சின்னமானதை பிற குழுவுடைய மக்களுக்கு பரிசு பொருளாகவும் உணவுப் பொருளாகவும் அளித்துள்ளதை சங்கப் பாடல்கள் சான்று பகர்கின்றது. ஏழு வள்ளல்களாக போற்றப்படும் பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி என்னும் பெயருடையோர் வள்ளல் தன்மை மூலமாக குலக்குறி குறித்த பதிவுகள் கொடைமடத்தில் காணமுடிகின்றது. இவர்கள் எழுவரும் காலத்தால் ஒத்தவரென்று கொள்ளினும் வள்ளல் தன்மையிலும் இன்னவர்தாம் சிறந்தாரெனக் கூற இயலாதவாறு புகழ்கொண்டு திகழ்கின்றனர். பேகன் மலையில் திரியும் மயில் குளிரில் அகவியது கண்டு தனது கலிங்கத்தை அம்மயிலுக்குப் போர்த்தினான் என்பதைத்

**"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந்திரல் அணங்கின் ஆவியர் பெருமகன்**
**பெருங்கல் நாடன் பேகன்." (சிறுபா.85-87)**
என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் குறிப்பிடுகின்றது. பேகன் செய்த கொடை மடத்தைப் பற்றி
**"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளி**
**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை**
**கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம். 145)**

என்ற பரணர் பாடல் குறிப்பிடுகின்றது. இதேப் போன்று முல்லைக்கொடி படர்வதற்குரிய கொழு கொம்பாகத் தனது தேரை ஈந்தவன் பறம்பு மலையைச் சார்ந்த பாரி என்பதை (சிறுபா.89-

91) சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. மேலும் தேனீக்கள் தேன் உண்ணுமாறு தேன் சுரக்கும் சுரபுன்னை மரங்கள் நிறைந்த நீண்ட வழியிலே காணப்பட்ட முல்லைக் கொடிக்குத் தனது பெரிய தேரை அளித்ததை "தேருடன் முல்லைக்கு ஈத்த" பாரியின் கொடைத்திறனைக். (புறம்.201) குறிப்பிடுகின்றது

பேகன், பாரி ஆகிய இருவரும் அஃறிணைப் பொருட்களுக்கு இரங்கி அருள் செய்தமை வியப்பிற்குரியவாகவும் உள்ளன. பேகன், பாரி ஆகிய இருவரும் மயிலிடத்தும் முல்லைக்கொடியிடத்தும் காட்டிய தொடர்பினை பார்க்கும் போது இனக்குழு மனிதன் தனக்கு இணையாக, தம் மக்களுள் ஒருவராகக் கருதி ஒரு விலங்கையோ, பறவையையோ, தாவரவகையையோ அணுகி நடந்து கொண்டால் அது நிச்சயம் குலக்குறி இயல்புகளில் ஒன்றாக இருக்க வேண்டும். தம் கூட்டத்தின் குலக்குறி விலங்காக, பறவையாக, தாவரமாக உள்ள ஒன்றினுக்கு இடையூறு நேர்ந்தாலோ இழப்பு நேர்ந்தாலோ தன் கூட்டத்தினரில் ஒருவருக்கு எப்படி ஓடிச் சென்று உதவுவானோ அதனைப் போலவே அக்குலக்குறி விலங்கிற்கும் உதவ வேண்டும் என்பது குலக்குறி மாந்தர்களின் கடமையாகும். எனவே அதன் அடிப்படையில் பாரி, பேகன் ஆகியோரின் செயல்பாடுகள் அமைந்துள்ளன எனலாம். இதன் மூலம் மயில், முல்லை ஆகியவை இரக்க உணர்வு அடிப்படையில் குலமாந்தர்கள் உதவிசெய்துள்ளது முதன்மையான அறமாகும்.

**குலக்குறி மாலையும் அறநெறியும்**

ஒவ்வொரு குலமாந்தர்களும் தங்கள் குலத்தின் அடையாளங்களை புறவயமாக ஒப்பனைகளில் கலைவடிவமாக வெளிப்படுத்துவர். அது அவர்களின் இனத்திற்குறிய அடையாளமாக விளங்கும் குலக்குறியின் உறுப்புகள், அல்லது உருவங்களும் இடம்பெறும். இதுப்போன்ற கூறுகள் கோவூர்கிழார் பாடிய புறநானூறில் உள்ள பாடல் ஒன்று ''நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி'' என்ற இரண்டு சோழமன்னர்களும் போரிடும் நேரத்தில் இருவரிடமும் சமாதானம் பேசி, போரை நிறுத்த முயன்ற போது பாடிய பாடலில்

**''நின்ன கண்ணியும் ஆர் மிடைந்து அன்றே, நின்னொடு**
**பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்துஅன்றே'' (புறம் .45)**

என்ற குறிப்பு காணப்படுகின்றது. இதில் மூவேந்தர்களின் அடையாள மாலை குறித்த அடையாளக்குறிப்பும் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகிய இருவருக்கும் 'ஆர்' என்னும் ஆத்தி மாலை குலக்குறி மாலை இடம்பெற்றுள்ளதை காணமுடிகின்றது. இங்கு ஒரே குலத்தில் பிறந்தவர்கள் சகோதர உறவு உடையவர்கள் ஆவர். அதனால் போரினை தவிர்த்துள்ளது குலமாந்தர்களின் அறசெயலாக பார்க்க முடிகிறது.

**காவல் மரமும் அறநெறியும்**

அரசர்கள் தங்களின் அடையாளச் சின்னங்களாக காவல் மரங்களை கொண்டிருந்தனர். அதனை தங்களின் குலக்குறியாகக் கருதி அரசர்களும் வீரர்களும் பாதுகாத்து வந்துள்ளதை சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. அம்மரத்தை ஊரின் புறங்களிலும் நடுவிலும் வளர்த்து வந்துள்ளனர். காவல் மரங்களை எரிப்பது எதிரி மன்னரை வெல்வதும் அந்நாட்டை கைப்பற்றுவதற்குமான ஒப்பானது என மன்னர்கள் கருதியுள்ளனர். அவற்றினை குலக்குறி அடையாள மரமாக கருதி அதற்கு தீங்கு வராமலும் அப்படித் தீங்கு வந்தால் தம் அரசர் குலத்திற்குத் தீங்கு நேரும் என்ற நம்பிக்கையால் அதனை காத்தும் வந்துள்ளனர். அதனால் காவல் மரத்தை வெட்டுவதோ, அதன் தழைகளைப் பறிப்பதோ கிளை, இலை, பூ, காய் உறுப்புகளை தொடுவதோ கிடையாது. வேறு எந்த வகையிலும் குறை ஏற்படாதவாறு அதனை தம் குலத்தின் புனிதப் பொருளாகப் போற்றப்பட்டு பாதுகாப்பான முறையில் காத்து வந்ததை சங்கப் பாடல்களில் காணமுடிகிறது சான்றாக்

**கடிமரந் துளங்கிய காவு (புறம். 23)**
**கடிமரந் தடிய மோசை தன் ஊர் (புறம். 36)**
**கடிமரந் தடித லோம்பு (புறம். 57)**

மேற்கூறிய பாடல்களில் கடிமரம் சொல்லுக்குக் காப்பு மரம் அல்லது காவல்மரம் என்னும் பொருளை குறிப்பிடுகிறது. பழந்தமிழக மன்னர்கள், காவல் மரத்தைத் தன்மானத்தின் குறியீடாக, உயிரினும் மேலாகப் பாதுகாத்துள்ளது சிறந்த அறம்மாக கருதமுடிகிறது.

**முடிவுரை**

- பண்டைய திணைக்குடி, மற்றும் இனக்குழு மக்கள் தம்தம் வாழ்வியலுக்கு பெரும் துணையாக விளங்கும் குலக்குறிப் பொருட்களை தம் அடையாளப்பொருளாக, வாழ்விடப்பொருளாக, உணவுப் பொருளாக, ஒப்பணைப் பொருளாக பயண்படுத்தியது போல சில சூழல்களில் அந்ததந்தக் குலக்குறிப் பொருட்களை விலக்கிவைக்கவும் செய்துள்ளனர்.

- விலகள் என்பது தவிர்த்தல் அல்லது மறுத்தல் என்பதாகும். இவை சிலம்பணி தவிர்த்தல், புன்னையை தமக்கையாக ஏற்று அதன் அருகில் செல்லாமல் தவிர்த்தல், (புன்னையை தவிர்த்தல்) கணவன் அல்லது மகிழ்ச்சி இல்லாத நேரத்தில் வளையல் அணிவதை தவிர்த்தல் அல்லது உடைத்தல் நிலையிலும் மற்றும் தாவர, விலங்கு குலக்குறி விலகல் போன்ற நிலைகளும் வெளிப்படுகின்றன.
- விலகல் முறையினை அகமாந்தர்கள் பல்வேறு நிலைகளில் தங்களின் குலக்குறிப் பொருட்களை தவிர்த்துள்ளனர். அதாவது சிலம்பு, புன்னை, வளை, வேங்கை, ஆகியவற்றை குலக்குறி என்பதால் தவிர்த்துள்ளனர் இவற்றுள் சிலம்பு கழித்தல் என்னும் சடங்கு, திருமணத்திற்கு முன் நிகழ்வதின் காரணம் தலைவி திருமணம் செய்து கொண்டு (புறமணம்) வேறொரு குடிக்குச் செல்வதால் தன் குலக்குறி அடையாளமான சிலம்பை தவிர்தலுக்காக செய்வது என அறியலாம்.
- வேந்தர்கள் தங்கள் குலக்குறியான காவல் மரத்தினை பாதுகாத்துள்ளதும், குறுநில மன்னர்கள் குலக்குறி உயிரினங்களை போற்றிப் பாதுகாத்துள்ளதும் குலக்குழு மாந்தர்களின் கடமையாகபார்க்க முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1.பாலசுப்பிரமணியம் .கு.வெ - அகநானூறு (தொகுதி1,2) வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.
2.பாலசுப்பிரமணியம் .கு.வெ - பத்துப்பாட்டு பகுதி-1, பகுதி.2, வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.
3.பாலசுப்பிரமணியம் .கு.வெ - ஐங்குறுநூறு, வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை – 98.
4.பாலசுப்பிரமணியம் .கு.வெ - புறநானூறு (தொகுதி1,2), வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை - 98.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# சங்க இலக்கியத்தில் அரசியல் அறம்

**முனைவர் இரா.இராமன்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தனலட்சுமி சீனளிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.
மாமல்லபுரம், சென்னை -104

**முன்னுரை**

பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் அகம் புறம் என்னும் இருகூறுகள் போற்றப்பட்டன. அகம் இல்வாழ்க்கைக்கும். புறம் இல்வாழ்க்கை அல்லாத பிற ஒழுக்கங்களுக்கும் பற்றுக் கோடாக அமைந்தன. சங்க காலப்புறப் பாடல்களும் அகப்பாடல்களும் வீரத்தையும் காதலையும் மட்டுமே இரு கண்களாகப் போற்றாமல் சமூகத்தில் உள்ள அனைத்துக் கூறுகளையும் சிறப்பித்துக் கூறுவதில் முன் நிற்கின்றன.

சங்க இலக்கியங்கள் கூறும் அரசியல் கருத்துகள் புற இலக்கியங்களேயன்றி அக இலக்கியங்களிலும் நிரம்பியிருக்கின்றன. அரசியல் - நாட்டை ஆளும் அரசனின் ஆளுமை பற்றிப் படிக்கும் ஒன்றாக அரசியலைக் கொள்ளலாம். நாடு சிறப்புற்றிருப்பதை அரசனின் ஆட்சிச் சிறப்புத் தான் உணர்த்தும், அதனால் தான் பண்டைய புலவர்கள் அரசனது ஆட்சிச் சிறப்பின் பெருமைகளைக் கூறிப் பாடல்கள் பல புனைந்துள்ளனர்.

நாட்டினது உயர்வு என்பதும், வளம் என்பதும் அமைதியான வாழ்க்கை என்பதும் அமைதியையும் ஆட்சி செய்யும் முறையையும் சார்ந்ததாகும். பண்டைய தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களும், குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தனர். புறநானூறு இலக்கியம் பல்வேறு வேந்தர்களை அறிமுகம் செய்யும் வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கிறது. தமிழ்ப் பாரம்பரியத்தின் அரசியல் கருத்துகளை எல்லாம் தொகுத்துக் கூறும் கலைக்களஞ்சியமாகப் புறநானூறு திகழ்கின்றது. எனவே இந்த கட்டுரையில் அரசியல் சார்ந்த செயல்பாடுகளை பற்றி ஆராய்வதே நோக்கமாக விளங்குகிறது.

**அரசன் சிறப்பு**

ஒரு நாட்டின் வாழ்வும் வீழ்வும் ஆட்சித் திறனில் இருக்கின்றது. மக்களைக் காக்கும் முறை, ஆட்சி செய்யும் முறை முதலியவை அரசன் எத்தகைய தன்மை உடையவன் என்பதைக் காட்டிவிடும். அதனால் அரசன் சிறந்தவனாக இருத்தல் நாட்டிற்கு நலம் பயப்பதாகும். கொடைத் தன்மை மிக்கவனாக இருக்கின்ற போதும், எளியவர்களை ஆதரிக்கின்ற போதும் அரசனின் சிறப்புகள் பெரிதும் வெளிப்படுகின்றன. நல்லாட்சி மிக்க நாட்டில் தான் அனைத்து அறங்களும் சிறந்து விளங்கும்.

சங்க கால புலவர்கள் மன்னர்களுக்கு பல்வேறு வகையில் அறிவுரைகள் வழங்கியுள்ளனர். அதில் அரசியலில் உள்ளவர்கள் தவறு செய்யக்கூடாது. அறநெறி நிரம்பிய மனத்துடன் பெரியோர்களாகிய முன்னோர்கள் சென்ற வழியில் சென்று உலகம் தோன்றிய காலம் தொட்டு, நிலவு பிறையாய் இருந்து வளர்வது

போல உன் குலமும் சிறக்கட்டும் என்று மாங்குடி மருதனார் போற்றிப்பாடும் திறம் சிந்திக்கத்தக்கது. இதனை,

**ளஅரசியல் பிழையாது அறநெறிகாட்டி**
**பெரியோர் சென்ற அறவழிப் பிழையாது**
**குடமுதல் தோன்றிய தொன்று தொழ பிறையின்**
**வழிவழிச் சிறக்க நின்வலம் படு கொற்றம் ” (மதுரை.191-114)**

என்னும் பாடலடிகளால் அறியலாம். நாடு எவ்வளவு வளம் பெற்றதாக இருந்தாலும் அதனால் பலனில்லை. நாட்டை நல்வழியில் நடத்திச் செல்ல நல்ல தலைமை வேண்டும். அதனால் தான் மோசிகீரனார்.

**நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர்அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால், யான்உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே “ (புறம்.186)**

நாட்டு மக்களின் உயிரைக் காப்பது நெல்லும் நீருமன்று. அந்நாட்டை ஆளும் மன்னனே எனக் குறிப்பிடுகின்றார். சிறந்த அரசனை மனதில் கொண்டு வள்ளுவர்,

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறை என்று வைக்கப்படும் (குறள்.388)**

என்ற குறள் குறிப்பிடுவதிலிருந்து நீதிப்படி அரசாட்சி நடத்தி மக்களைக் காப்பவனே சிறந்த அரசன் எனக் குறிப்பிடுகின்றார். மேலும் இதேப்போன்று இரவலர்கள் நாடிவரும் வேளையில் பொருளைக் கொடுத்துக் காப்பதும், அவர்கள் நலிவடைந்த வேளையில் காப்பதும், சுற்றத்தைப் போற்றலும் இயல்பாயிருந்தன. நடுவு நிலைமையோடு இருந்து சோர்வில்லாமல் பாடுபடும் இயல்பு உடையவனாக மன்னர் இருந்த தன்மையை,

**”முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும்**
**வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி**
**இடைத் தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி,**
**கொடைக் கடன் இறுத்த கூம்பா உள்ளத்து**
**உரும்பு இல் சுற்றமொடு இருந்தோன் “(பெரும்.443-447)**

நல்ல அரசனைச் சுற்றிக் கொடுமை செய்யாத நல்ல அமைச்சர்கள், சான்றோர்கள், நண்பர்கள் இருப்பார்கள் என்பதை இப்பாடலடிகள் எடுத்துக் கூறுகின்றன.

பண்டைக் காலத்தில் தன்னலமற்ற மன்னர்கள் வாழ்ந்தனர். மாற்று நாட்டு மன்னர்கள் மக்களை இகழும் போதும் அவர்களில் பலரை வென்று நாட்டைக் காப்பேன் என்று வஞ்சினம் கூறும் நிலையை,“

**‘‘சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை**
**அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு**
**ஒருங்கு அகப் படேஎன் ஆயின் பொருந்திய**
**என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது**
**கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக’’ (புறம்.72)**

என்னும் பாடல் எடுத்தியம்புகிறது. நாடு சிறக்கவும் முறைப்படி நாட்டில் அனைத்துச் செயல்களும் நடைபெறவும் சிறந்த அரசன் தேவை என்பதையே இலக்கியப் பாக்கள் வாயிலாக புலவர்கள் வலியுறுத்துகின்றனர்.

**செங்கோன்மை**

செங்கோன்மை மன்னனின் நீதித் தன்மையைக் கூறும் சொல்லாகும். முறையறிந்து நீதி வழங்கலும், முறையறிந்து அறம் செய்தலும், நாட்டைக் காத்தலும், மக்களைப் பேணுதலும் அரசனின் தலையாய அறங்களாகும். மன்னன் நடுவு நிலைமை மாறாமல் இருக்கின்ற போதுதான் நாடு சிறக்கும். தவறாக நீதி

வழங்குகின்ற போது அரசனின் அறமே கூற்றாக நின்று அழிவை உண்டாக்கும் இயல்புடையது. அரசன் அதிகாரத்தைச் சுமந்திருக்கும் போது வேலைப்பாட்டோடு செய்யப்பட்ட கோலைக் கையில் கொண்டிருப்பான். அதுவே செங்கோலாகும். அரசனின் ஆட்சி நேர்மையானது என்பதற்கு எடுத்துக் காட்டாக அது நேராகச் செய்யப்பட்டிருக்கும். அரசன் செய்யும் நல்லாட்சிக்கு அடையாளமாகவே வெண்கொற்றக் குடையும், செங்கோலும் கொள்ளப்பட்டன.

**அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து**
**முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர் (புறம்.35)**

என்னும் பாடலடிகள் அக்கருத்திற்கு அரண் செய்கின்றன. நன்மையாகிய செயல்களைச் செய்து அறமுறைப்படி வாழ்கின்ற அரசனானவன் நீதியை வழுவாது போற்றும் சிறப்பினை உடையவன். பொன்னை உரைத்துப் பார்த்து மாற்றுக் காணும் கட்டளைக் கல் போலும் செம்மையான மனம் கொண்டவனாக இருத்தல் வேண்டும் என்கிறது பெரும்பாணாற்றுப்படை, இதனை பொன்காண் கட்டளை என்னும் பாடலடியால் அறியலாம். தீயசெயல்கள் பெருகும் போது அதனைக் கண்டிப்பதாக அமைந்திருக்கிறது அரசனின் செங்கோல் இதனை, அல்லது கடிந்த அறம்புரி செங்கோல் பல் வேல் திரையன் என்னும் பாடலடியால் அறியலாம்.

நீதியைக் காக்க வேண்டிய அரசன் முறையறிந்து நீதி வழங்க வேண்டும். அவ்வாறான நிலையில் அறங்கூறு அவையத்தில் இவர் நம்முடையவர் என அவர் செய்த கொடுமையைப் பொறுத்துச் செங்கோல் வழுவாமல் செயல்பட வேண்டும். அயலவர் என்று அவர்களின் நற்குணங்களை அழிக்காமல் அறத்தை நிலை நாட்ட வேண்டும். இதனை,

**........நமரெனக் கோல்கோ டாது**
**பிறர்எனக் குணம் கொல் லாது (புறம்.55)**

பாடலடிகள் நிரூபிக்கின்றன. அரசன் செங்கோன்மையில் சிறந்தவனாக இருப்பதால் அறநெறி முதற்றே அரசின் கொற்றம் ” எனக் கூறப்பெற்றது. செங்கோல் வழுவாமல் செய்யப்படும் ஆட்சியே சிறந்த ஆட்சி. அதனையே அனைவரும் விரும்புவர். மரநிழல் குளிர்ச்சி தரும் தன்மை உடையதை.

**கடன்அறி மன்னர் குடைநிழற் போலப்**
**பெருந் தண் ணென்ற மர நிழல் (நற்றி.146)**

என்ற பாடல் குறிப்பிடுகிறது. மரம் எவ்வாறு மக்களுக்கு நிழல் தருகின்றதோ அதுபோல மன்னனின் ஆட்சி முறை அமைதல் சிறந்த அறமாக பார்க்கப்படுகிறது.

**குடை**

அரசனை அலங்கரிக்கும் வெண்கொற்றக் குடை தூய்மை. கொற்றம், வெற்றி முதலியவற்றின் சின்னமாகப் போற்றப்படுகின்றது. மக்களைத் துயரின்றித் தண்ணியதாகக் காப்பதால், காவல் வெண்குடை எனப் பெயர் பெற்றது. முழுமதியின் ஒளி குளுமை தரக்கூடியது. அதனை

**உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை**
**நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற (புறம்.3)**

என்ற பாடலில் முழுமதியினது வடிவத்தைக் கொண்ட உயர்ந்த வெண்கொற்றக் குடையை உடையவன் அரசன் எனக் கூறப்பெறுகின்றது. மன்னனின் காவல் திறனை உணர்த்தும் வகையில், “கடனறி மன்னர் குடைநிழல் போல ” என்னும் நற்றிணை 146 பாடலடி கையாளப் பெற்றிருப்பதன் மூலம் எந்த வகையிலும் குற்றமற்ற நற்பண்பினை கொண்டவனாக மன்னர்கள் ஆட்சி அமைதல் வேண்டும் என்பதை புலவர்கள் வலியுருத்துகின்றனர்.

**கொடைத்திறம்**

தன்னை நாடி வந்த இரவலர்களுக்கும், புலவர்களுக்கும் நல்ல மனதோடு பொருட்களைக் கொடுத்து வறுமையை நீக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள் சங்ககால மன்னர்கள். தங்களின் பொருட்கள் அடுத்தவர்க்கும் பயன்படுமாற்றையும், பொருட்கள் பெறும் போது அவர்களின் மகிழ்வு கண்டு மனநிறைவு கொள்வதும் அவர்களின் உயர்ந்த குணமாகும். சங்க மன்னர்களின் வள்ளண்மையைச் சங்கப் பாக்கள் பல எடுத்துக் கூறுகின்றன. தன் செல்வம் தனக்கன்றிப் பிறர்க்கும் பயன்பட வேண்டும் என்னும் உயரிய மனத்தைச் சங்க இலக்கியங்களிலே தான் காணமுடிகிறது. மன்னர்கள் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் உள்ளம் கொண்டவர்கள்.

**இனியவை பெறினே தனி தனி நுகர்கேம்**
**தருகென விழையாத் தாவி னெஞ்சத்துப்**
**பகுத்தூண் டொகுத்த வாண்மைப்**
**பிறர்க்கென வாழ்தி நீ யாகன் மாறே (பதிற்று.38)**

என்ற பாடல் குறிப்பிடுகிறது. இனியவை பெற்ற போதும் தான் மட்டும் தனித்து உண்ண விரும்பாமல் பிறருக்கும் பகுத்துக் கொடுத்து உண்ணும் தன்மை பெற்ற மன்னன் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவன் என்பதை சிறந்த மன்னனின் அறமாக எடுத்துக் கூறுகிறது.

**குடிகளைக் காத்தல்**

தன்னைச் சார்ந்து வாழும் நாட்டு மக்களைக் காப்பது மன்னனின் தலையாய அறமாகும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கூலங்களை விற்கும் வணிகர் குடிகளையும், உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுக்கும் வேளாளர் குடிகளையும் காத்தலைத் தன் கடமையாகக் கொண்டான். மழை வேண்டுபுலத்து மாரி நிற்குமாறு, நோயும் பசியும் நீங்கத் தன் நாட்டைக் காத்தனன் எனப் பதிற்றுப்பத்து கூறுகிறது. அதனை,

**பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்**
**குடிபுறம் தருகுவை யாயின்நின்**
**அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே” (புறம்37)**

என்ற பாடல் வாயிலாக நாட்டைக் காப்பதற்கும், படைக்கலன்கள் கொண்டு போரிடும் வீரர்களைக் காப்பதற்கும் உணவுப் பொருட்கள் தேவை. உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுப்பவர்கள் உழவர்கள். அதனால் உழவர்கள் குடியினைக் காக்க வேண்டும் என்னும் கருத்தை வெள்ளக்குடி நாகனார் வலியுறுத்துகிறார்

**போர் அறம்**

பண்டைக் காலத்தில் மன்னராட்சியில் மக்கள் உயரிய மன்னர்களால் நல்வாழ்க்கை வாழ்ந்த போதும், போரும் பூசலுமான சூழல்களை உணர்வதற்கு இடம் இருந்தது. ஒருவரை ஒருவர் போரில் வெற்றி கொள்வது பெருமையாகக் கருதப்பட்ட காலம் அது. அதனால் வீரத்திற்குப் பெரிய அளவில் சிறப்பளிக்கப் பெற்ற காலமாக இருந்தது. போர்கள் நடைபெற்ற போதும் அப்போர்கள் சாதாரண மக்களுக்கு இடர்கள் ஏற்படுவதினின்று காத்த காலமாகும்.போருக்குத் தூது முக்கியமானதாகக் கருதப்பட்டது. இரு மன்னர்களுக்கு இடையே ஏற்படும் பூசல்கள் தூதின் மூலமாகக் கூடத் தீர்க்கப்படுதல் உண்டு.

**இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து**
**கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**
**கொல்துறைக் குற்றில மாதோஎன்றும்**
**உண்டாயின் பதம்கொடுத்து. (புறம்.141)**

இப்பாடல், அதியமானிடம் இருந்து தொண்டைமானிடம் தூதுவராகச் சென்ற ஔவையார் இருவரிடையேயும் நிகழ இருந்த போரைத்தனது மதிநலத்தால் தடுத்தார். தொண்டைமானின் படைக்கலத்தைப் பார்வையிட்ட ஔவையார் அதியமானின் படைக்கலன்கள் எப்போதும் உலைக்களத்தில் இட்டுக் கூர் தீட்டப்படுகின்றன. புதிய போர்க்கருவிகள் செய்யும் ஒலி கேட்ட வண்ணம் இருக்கின்றது. ஆனால் உனது படைக்கலன்கள் நெய்பூசப்பெற்றுக் காட்சிப் பொருள் போல அழகாக வைக்கப்பட்டிருக்கின்றன என்று அதியமானைப் பழிப்பது போலப் புகழ்ந்தும், தொண்டைமானைப் புகழ்வது போலப் பழித்தும் பேசுகிறார். இங்கு மறைமுகமாக அதியனின் வீரத்தை உணர்த்திய ஔவையின் அறமான பேச்சு போரைத் தடுக்கக் காரணமாக அமைந்தது.

**முடிவுரை**

சங்க கால மன்னர்கள் மக்களையும் நாட்டினையும் போற்றி பாதுகாத்தால் மன்னன் நாட்டின் உயிராகக் கருதப்பட்டானர். அவர்கள் நாட்டைக் காப்பதில் வீரம் மிக்க காவலனாகவும். மக்களையும், தன்னைச் சார்ந்த சுற்றத்தையும் காப்பதில் தாய் போலவும் விளங்கினான் என்பதை புலவர்களின் குறிப்பில் வாயிலாக அறியமுடிகிறது. சங்க கால மன்னர்களின் நேர்மையான ஆட்சியின் சின்னமாகச் செங்கோல் போற்றப்பட்டது பார்கமுடிகிறது. நாட்டில் உள்ள இரவலர்களைக் காக்கவும், சுற்றம் பேணவும், பிறர் போற்றவும், புகழுக்காகவும் கொடை வழங்கலை மன்னர்கள் மேற்கொண்டிருந்ததை பார்க்கமுடிகிறது. மன்னர்கள் குடிமக்களைக் காப்பதைத் தம் தலையாய அறமாகக் கொண்டிருந்தனர். மன்னர்கள் புலவர்களின் அறிவுரைப்படியும் அவர்களின் கருத்துக்கள் அடிப்படையில் அரசு அறநெறிகளை பின்பற்றியுள்ளதை கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1.பாலசுப்பிரமணியம் .கு.வெ - அகநானூறு (தொகுதி1,2) வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.

2.பாலசுப்பிரமணியம் .கு.வெ - பத்துப்பாட்டு பகுதி-1, பகுதி.2, வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.

3.பாலசுப்பிரமணியம் .கு.வெ - நற்றிணை, வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை – 98.

4.பாலசுப்பிரமணியம் .கு.வெ - புறநானூறு (தொகுதி1,2), வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை - 98.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# வளையாபதி கூறும் வாழ்வியல் அறம்

**முனைவர் சொ.யுகஜெயப்பிரதா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மாமல்லபுரம்.

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் காப்பியம் மிக உயர்வான இடத்தைப் பெற்றுள்ளது. எண்ணற்ற காப்பியங்கள் தோன்றி இன்றுவரை வளர்ந்து வருகிறது. காப்பியம் என்பது தொடர்நிலைச் செய்யுள் என்று அழைக்கப்படுகிறது. இதனைப் ஐம்பெருங்காப்பியம் என்றும் ஐஞ்சிறுகாப்பியம் என்றும் பகுத்துள்ளனர். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக வளையாபதிக் காப்பியம் அமைந்துள்ளது. இன்றைய நடைமுறை வாழ்விற்கு வாழ்வியல் அறங்கள் மிகமிக தேவையானதாக உள்ளன. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான வளையாபதியில் மிகுதியான அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. வளையாபதிக் காப்பியம் ஒரு காலத்தில் மிகவும் புகழோடு விளங்கியதை உரையாசிரியர்கள் உரைகளின் வாயிலாக அறியமுடிகிறது. கற்புடைய தலைவியின் நற்பண்புகளையும், குழந்தைச் செல்வத்தின் பயனையும், களவு செய்தல், பொய்சொல்லுதல், பிற உயிர்களைக் கொல்லுதல் போன்றவற்றால் ஏற்படும் பாவத்தினையும் வளையாபதி விரிவாக எடுத்துரைக்கிறது. இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை போன்ற நிலையாமைக் கருத்துக்களையும் வளையாபதி தெளிவுற எடுத்து இயம்புகிறது. மனித வாழ்க்கை மேலும் மேன்மையுற வளையாபதி பல்வேறு அறங்களை எடுத்துரைக்கிறது. வாழ்வியலுக்குத் தேவைப்படும் அடிப்படையான அறங்களை வளையாபதி வாயிலாக இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

## அறம் விளக்கம்

“அறு” என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்ததே அறமாகும். அறம் என்றால் அறுத்து செல் அல்லது வழியை உண்டாக்கு என்று பொருள்படும். அறம் என்ற சொல்லிற்கு இணையாக ஆங்கிலத்தில் எதிக்ஸ் (நவாளைஉள) என்ற சொல்லை பயன்படுத்துவர், மனிதன் தனக்கென வகுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுப்பே அறம் என்று கூறுவர்.

## செல்வம் நிலையாமை

மனித வாழ்க்கைக்கு செல்வம் மிகவும் அடிப்படையான ஒன்றாகும். போதிய அளவு இல்லாதபோது வாழ்வே மிகவும் வருத்தம் உடையதாக ஆகிவிடும் செல்வம் ஓரிடத்தில் நிலைபெற்றிருப்பதில்லை. ஆதலால் நிலையில்லா செல்வத்தின் மீது மிகுந்த பற்று தேவையில்லை செல்வமானது வெள்ளமும். மறதியும், வெற்றியுடைய வேந்தரும், நெருப்பும். தாயத்தாரும் கள்வரும் என்று கூறப்படுகின்ற இந்த ஆறு வழிகளாலும் அழிந்து போகும். இயல்புடையதாகும் நிலையில்லாத பொருள் மேல் பற்றுவைக்காமல் சான்றோர் அவற்றைத் துறந்து

வாழ்வார். பிறர் இகழ்தற்குக் காரணமான பெரிய துயரங்களைச் செய்யும் பிறவிப் பிணியாகிய துன்பத்தை நீங்கி வாழ்வர் இதனை,

**வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தாயம்**
**கல்வர்என்று இவ்வாறிற் கைகரப்பத் தீர்ந்தகலும்**
**உள்ளில் ஒரு பொருளை ஒட்டாது ஒழிந்தவர்**
**எள்ளும் பெருந்துயர்நோய் எவ்வம் இகப்பவோ (வளையாபதி. 35)**

என்ற வளையாபதி பாடல் குறிப்பிடுகிறது. அழிவில்லாத நல்ல தருமங்களைச் செய்யாதவர்களாகியும், யாசகர்களுக்குக் கொடாதவர்களாகியும், பொருளைச் சேர்த்து வைப்பவர்களள் செல்வம் உறுதியாக அதனை ஒருநாள் இழந்தே விடுவார்கள் இதற்கு பற்பல மலர்களினின்றும் தேனைக் கொண்டு வந்து கூட்டிலே சேர்த்துவைக்கும் தேனீ நல்ல சான்றாகும். தேன் கூட்டினின்றும் தேனைப் பிறர் எடுத்துக் கொள்வதுபோல அவனுடைய அவ்வளவு பொருளையும் எவரேனும் ஒரு நாள் கவர்ந்து கொண்டு போய் விடுவார் என்பதை,

**“உடாஅதும், உண்ணாதும், தன் உடம்பு செற்றும்**
**கெடாஅத நல்லறமும் செய்யார் கொடாஅது**
**வைத்தீட்டி னாரிழப்பர் வான்தோய் மலைநாட**
**உய்த்தீட்டும் தேனீக் கரி” (நாலடியார.10)**

என்று நாலடியார் பாடல் குறிப்பிடுகிறது. நிலை இல்லாத செல்வத்தைப் பலருக்கு உதவி செய்து வாழ்ந்தால் நிலைத்தப் புகழை அடையமுடியுமென்று வளையாபதி தெரிவிக்கின்றது.

**இளமை நிலையாமை**

மனித வாழ்க்கையில் இளமையும், இன்பம் நிலையில்லாததாகும். அதனைப் பாதுகாத்தாலும் அடுத்த பிறவிக்குக் கிடைத்திடாது. இப்பிறவியில் கிடைத்த இவற்றைக் கொண்டு நல்லறங்களைச் செய்ய வேண்டும். “இன்பநுகர்தற்குரிய இளமைப் பருவம் நிலையில்லாதது ஆகும். நுகரும் இன்பங்கள் நிலை இல்லாததாகும். அவ்வின்பத்திற்குக் காரணமான செல்வங்களும் நிலையானவை இல்லை. ஆதலால் இளமையும், இன்பமும், வளமையும் நிலைத்தனவென்று இருத்தல் வேண்டாம். முன்பு விளைந்த நிலத்தில் உள்ள பயிர்களிடமிருந்து விதையினை எடுத்து மறுபடியும் பயிர் செய்வது போல இளமையிலேயே அறமாகிய வித்தினை செய்து வாழ வேண்டும்” என்பதை,

**“இளமையும் நிலையாவால் இன்பமும் நின்ற அல்ல**
**வளமையும் அஃதேபோல் வைகலும் துன்பவெள்ளம்**
**உளவென நினையாதே செல்கதிக்கு என்றும்என்றும்**
**விளைநிலமே உழவார்போல் வித்துநீர் செய்துகொண்மீன்”**
**(வளையாபதி.41)**

என்னும் வளையாபதி பாடல் மூலம் அறியமுடிகிறது. மரங்களிலே முதிர்ச்சியுற்றிருந்த கனிகள் மட்டுமே அல்லாமல் நல்ல காய்களும் கடுங்காற்றினால் உதிர்ந்து போதலுமு நிகழ்வதுண்டு. அதுபோல முதியவர்கள் மட்டுமல்லாமல் இளமைப் பருவத்தினரும் இறந்து போதல் நிகழ்வது உண்டு. ஆதலால் இளமை நிலையற்றது என்பதை உணர்ந்து உடனே தருமஞ்செய்வதிலே ஈடுபடுங்களென்று,

**“மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்**
**முற்றி இருந்த கனியொழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு” (நாலடியார.19)**

என்று நாலடியார் உணர்த்துகின்றது. இப்பிறவியில் கிடைத்த மனித வாழ்க்கையில் நல்லறங்களைச் செய்து அடுத்த பிறவிக்கான புண்ணியத்தைச் சேர்த்திட

வேண்டும். நிலையில்லாத இளமைப் பருவத்தில் நல்ல அறங்களைச் செய்து நிலையுடையதான புகழோடு வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகுமென்று வளையாபதி வற்புறுத்துகிறது.

**அன்பு செலுத்துதல், ஊழ்வினை**

மனித உலகத்தை இணைத்து வாழச்செய்யும் அற்புத சக்தி அன்புக்கே உண்டு. அறம் பெருக வேண்டும் எனில் நல்லனவற்றை தேடிச் சென்று இனிய சொற்களின் வழிக் கூறவேண்டும்.

**‘‘ஆற்று மின்னரு னாருயிர் மாட்டெலாந்**
**தூற்று மின்னறந்தொநனி துன்னன்மின்**
**மாற்று மின்கழி மாயமு மானமும்**
**போற்று பின்பொரு ளாவியைக் கொண்டுநீர்”** (வளையாபதி.45)

என்ற பாடலின் வழி பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்று சுட்டுவதை உய்த்துணர முடிகின்றது. இன்பம் துன்பம், என்பது நம் வினையின் காரணமாக அமைவதாகும். இன்பமும், துன்பமும் உலகின் இயல்புகளாகும் என்பதை உணர்ந்து விருப்பு, வெறுப்புகளை நீக்கி வாழ்ந்திடல் வேண்டும் என்பதை வளையாபதி.

**“பருவந்து சாலப் பலர்கொல் என்றெண்ணி**
**ஒருவந்தம் உள்ளத்து உவத்தல் ஒழிமின்**
**வெருவந்த துன்பம் விடுக்கும் திறவோன்**
**ஒருவன் உலகிற்கு ஊன் என்னுமாறே?** (வளையாபதி.49)

என ஊழ்வினை பற்றி பேசுகிறது. கொல்பவனக்கு தீவினை வருவது போலவே உண்பவனுக்கு பழியும், பாவமும், பகையும் ஆகியவை உறுதியாக வந்து சேரும், (ப.13), கொல்பவனுக்கு தீவினை வருவது போலவே. உண்பவனுக்கு தீவினை வந்து சேர்வது உறுதி (ப.18)என்று பாடல்களின் வழி அறியமுடிகிறது. ஒழுங்கு இன்றியமையாதவை என்று கருதப்பட்டு அவை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால் அவை அறங்கள் எனப்படும் அன்பாய் இருப்பது, இனிமையாக பேசுவது கடுஞ்சொற்களை தவிர்ப்பது அகத்தே எண்ணும் எண்ணங்களின் தூய்மையாலும், நெஞ்சில் இன்பதுன்ப உணர்வுகளாலும் அறத்தை அறியக்கூடுமே அன்றி புறத்தே உள்ள உயர்வு தாழ்வுகளால் அறியமுடிகிறது.

**நல்லொழுக்கம்**

ஒழுக்கமோடு வாழும் போது நற்சிந்தனை இயல்பாகவே வந்துவிடுகிறது. ஆண்மகன் எவன் ஒருவன் நல்லொழுக்கங்களைக் பெற்று தன் குடும்பத்தை அன்பாக செலுத்தி வாழ்கின்றானோ அவனை அவ்வூர் மக்களும், அவனுடைய நாடும் சேர்ந்தும் போற்றி புகழ்மாலை சூட்டும்.

**‘‘தாரம் நல்வதம் தாங்கித் தலைநின்மின்**
**ஊரும் நாடும் உவத்தல் ஒருதலை**
**வீரவென்றி விறல்மிகு விண்ணவர்**
**சீரின் ஏத்திச் சிறப்பு எதிர்கொள்பவே** (வளையாபதி.11)

என்ற பாடலின் வழியே புகழ் குறித்து குறிப்பிட்டுள்ளது. இதே போன்று சிறந்த ஒழுக்க நெறியைப் பின்பற்றி வாழ்பவர்கள் மேலான உலக இன்பத்தையும், மோட்சத்தையும் அடைந்து நிலைத்த இன்பத்தை பெறுவர் என்பதை,

**‘‘நகைநனி தீதுதுணி நன்றி யார்க்குப்**
**புகைநனி தீதுபணிந்தீ யாரோடும்**
**மிகைநனி பொருள் என்று இறத்தல் இவரே**
**வகைமிகு வானுலகு எய்திவாழ் பவரே”**(வளையாபதி.74)

என்ற பாடல் மூலம் ஒவ்வொரு மனிதனும் உள்ளத்தைத் தூய்மையுடன் வைத்தலே அறமாகும் அறம் என்பது தூய எண்ணம், சொல். செயல் சேர்ந்த

ஒன்றாகும். ஒருவன் அறத்தோடு வாழ்க்கையை நடத்திச் செல்ல எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமையும், அறத்தின் வழியே செல்லும் நல்லொழுக்கதினால் தான் வாழ்வில் இன்பத்தை அடைகின்றான். என்பதை இப்பாடலின் மூலம் மகிழ்ச்சி பற்றி வளையாபதி கூறியுள்ளதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

உறுதிப்பொருள்கள் நான்கனுள் முதன்மையாக இருப்பது அறமாகும். அறத்தின் வழியே பொருளையும், இன்பத்தையும் பெருபவனுக்கு வீடு பேறு இயல்பாக அமைந்திடும். மனிதன் நிலைக்குமென்றாலும் பொய்கூறாது வாழ்பவர்களுக்கு இம்மையும் மறுமையும் வீடு பேற்றையும் தரும். நிலையில்லாத செல்வத்தைக் கொண்டு பலருக்கும் உதவி செய்து வாழ்ந்தால் நிலைத்தப் புகழை அடைய முடியும். நிலையில்லா இளமைப் பருவத்தில் நல்ல அறங்களைச் செய்து நிலைத்தப் புகழோடு வாழவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அறச்சிந்தனைகள் இயல்பாக அமைந்திட வேண்டும் என்று வளையாபதி வற்புறுத்துகிறது. மனித வாழ்க்கையின் மேன்மைக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது தனிமனித வாழ்வியல் அறங்கள்தாம் என்று வளையாபதி ஒங்கிச் சொல்கின்றது. மனித வாழ்க்கைக்கு தேவையான வாழ்வியல் அறங்களை எடுத்து இயம்பியுள்ள வளையாபதிக் காப்பியம் என்றென்றும் போற்றுதலுக்குரியதாகும். பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும். ஊழ்வினை பற்றி நினைக்காமல் இருக்க வேண்டும். பிறர் மனைவியை விரும்பும் கயவர்களுக்கு பழியும். பாவமும், பகையும் ஆகியவை உறுதியாக வந்து சேரும் என்றும், ஒவ்வொரு மனிதனுக்கும் அறச்சிந்தனைகள் இயல்பாகவே அமைய வேண்டும். அப்போது தான் அவனுடைய வாழ்க்கை செம்மாந்து அமையும் என்பதை காப்பியங்கள் உணர்த்துவதை உணர முடிகிறது.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# “அடுக்கிய கோடி பெறினும்”

**முனைவர் ப.சு.செல்வமீனா,**
இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி – 630 003

**முன்னுரை**

தமிழ்நிலம் தொன்மையும் பழமையும் வாய்ந்தது. உயிரினங்கள் சிறந்து தோன்றி நன்கு உருப்பெற்ற இடமாகிய குமரிக்கண்டமே தமிழர்களின் தாய்நிலமாகும். நம் தாய்மொழியாம் தமிழ்மொழி கணக்கில்லாக் கலைக் கருவூலங்களைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. தமிழன்னைக்கு அணிசூட்டிய அணிகளுள் தலைசிறந்தது பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களுள் முதன்மையானதாகிய திருக்குறளாகும். ‘‘என்றுமுள’’ தென்தமிழ் என்னும் சிறப்புடைய தமிழ்மொழிக்கு ஏற்றம் தருவது உலகப்பொதுமறையாம் திருக்குறளாகும். எண்ணரும் வாழ்வியல் விழுமியங்களைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ள திருக்குறளில் இடம்பெறும் **ஷகோடி’** என்னும் சொல்லாட்சியின் வழி அறநெறிச் சிந்தனைகளை எடுத்துரைப்பதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திருக்குறளும் திருவள்ளுவரும்**

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களுள் சிறப்புடையது திருக்குறளாகும். இது முப்பால், ஒன்பது இயல்கள், 133 அதிகாரங்கள், அதிகாரத்திற்குப் பத்துக் குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்களுடன் அமைந்துள்ளது. ‘‘எல்லாப் பொருளும் இதன்பாலுள’’ என்னும் சிறப்புடைய திருக்குறள் உலகளாவிய நூலாகும். அமுதத்தின் சுவைகூடத் திருக்குறள் சுவைக்கு ஈடாகாது. அமுதமோ தேவர்களுக்கு மட்டும் உரியது. திருக்குறளோ உலக மக்கள் அனைவருக்கும் உரியது.

‘‘வள்ளுவத்தின் பொதுமை அறம் என்ற தன்மையே எக்காலத்திற்கும் எச்சமூகத்திற்கும் உரிய பேச்சாளராக எச்சமூகத்திற்கும் உரிய பேச்சாளராக வள்ளுவரை வெளிப்படுத்தும் இலக்கியத் தன்மையே ஒரு வகையில் உயர் சமூக நோக்குத்தான் எனலாம்.’’[1]

‘‘உலகின் பல மொழிகளிலும் பன்முறை மொழிபெயர்க்கப்பட்டதுடன் இந்திய மொழிகளிலும் தன் ஆற்றல்மிக்க அறக் கருத்துக்களால் இடம் பெற்றது திருக்குறள். தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் இந்நூல்.’’[2]

தெய்வப்புலவர் எனப்பெறும் திருவள்ளுவர் பாரதியாரால்,

**‘‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’’**[3]

என்று போற்றப் பெற்றவர்.

‘‘தமிழுக்குத் ஷகதி’ யாவார் இருவர். ஷக’ என்பது கம்பரையும் ஷதி’ என்பது திருவள்ளுவரையும் குறிக்கும் என்பர் அறிஞர்.’’[4]

அறம், பொருள், காமம் என்னும் முப்பாகுபாட்டுள் அறத்தையும், விழுமியத்தையும், பொதுமையையும் பாடிப்புகழ் பெற்றவர் தெய்வப்புலவராவார்.

**அறம் - விளக்கம்**

பண்டைத்தமிழர் அறத்தைப் போற்றி வாழ்ந்து வந்தனர். பண்டைத்தமிழ் இலக்கியங்கள் அறவாழ்வின் முதன்மையை விளக்குவன. அறுூஅம் ஸ்ரீஅறம், ‘‘அறமாவது உயிர்களுக்கு இதமாவன செய்தலும், சத்தியம் சொல்லுதலும், தானதருமங்களைச் செய்தலுமாம்.’’[5] ஷஅறம்’ என்பதற்கு இணையான ஆங்கிலச்சொல் ஷநுவாஉைள’ ஆகும். ‘‘தனி மனிதன் பிறருடன் தொடர்பு கொள்ளத்துணை செய்யும் பொது இயல்பான ஒழுக்கம்’’[6] என்று அறத்திற்கு ஆங்கில அகராதி பொருள் தருகிறது. மனித வாழ்க்கையின் படிநிலைகளைப் போலவே அறவாழ்க்கையின் படிநிலைகளும் காலந்தோறும் மாறிக்கொண்டே வருவன. மாற்றம் ஒன்றே மாறாதது.

**திருக்குறளில் ஷகோடி’ என்னும் சொல்லாட்சி தரும் அறச்சிந்தனைகள்**

வள்ளுவர் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பார். எண் கணிதவியலுக்கும் எழுத்து இலக்கியத்திற்கும் அடிப்படையாகும். ‘‘இன்றைய அறிவியலின் ஆக்கங்களுக்கெல்லாம் எண்ணி ஆயும் ஆற்றலையும், எண்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவானவையே. எழுத்தை விட எண்ணுக்கே

அரிய பேராற்றல் உண்டு என்பதை உணர்த்தத்தான் வள்ளுவர் எண்ணை முதலில் வைத்தார் போலும்”[7] “பொருள்களின் எண்ணிக்கை, அளவு, வடிவம் முதலியவற்றை எண்கள், குறியீடுகள் வழி விளக்குவது கணிதமாகும். “கணிதவியலை தொடக்க நிலை கணிதம், மேல்நிலைக் கணிகம் எனப் பகுத்தும் ஆய்வர்.”[8]

“எண்களைத் தொகுத்துப் பத்து, நூறு, ஆயிரம் எனப் பத்தின் மடங்காக உயர்த்திக் கோடி வரை சொல்வதுண்டு.”[9] இவ்வாறு கணிதவியலில் கூறப்படும் ஷகோடி’ என்னும் எண்தரும் அறச் சிந்தனைகளைப் பின்வருபவை சுட்டுகின்றன.

**கோடியும் அறிவுடையார் பகையும்**

உலகத்து உயிர்களைப் பிணிப்பது நட்பாகும். நட்பு நல்நட்பு, கூடாநட்பு, தீநட்பு என்று நட்பின் தன்மையைப் பொறுத்துப் பல வகைப்படும். பேதமையார் நட்பு தீமை பயக்கக்கூடியது.

அறிவில்லாதவனது நெருங்கிய நட்பைவிட அறிவுடையாரது பகைமை கோடி மடங்கு நல்லது. ஏனெனில் அறிவுடையாரின் பகைமை ஒரு போதும் துன்பத்தைத் தராது என்பதனை,

**“பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி யுறும்”** (குறள் : 816)

என்னும் குறள் சுட்டுகிறது. சி.இலக்குவனார் “அறிவிலாதானின் மிக நெருங்கிய நட்பைக் காட்டிலும் அறிவுடையார் நட்பில்லாத் தன்மை கோடி மடங்கு நன்மை தரும்”[10] என்கிறார்.

**கோடியும் பகையுடையாரும்**

நகைப்பதற்கு மட்டும் காரணமான நட்பை விடப் பகைவரால் பத்து மடங்கு நன்மையுண்டாகும் என்பதனை,

**“நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்**
**பத்தடுத்த கோடி உறும்”** (குறள் : 817)

என்னும் குறள் விளக்குகிறது.

“முகத்தளவில் மலரும் நட்பைக் காட்டிலும் பகை பத்துகோடி நல்லது”[11] என்பர் வ.சுப.மாணிக்கம்.

**கோடியும் நிலையாமையும்**

உலகத்தில் தோன்றிய உயிர்கள் இல்லாது போதலே இயல்பு. பிறத்தலும் சாதலுமே உலகத்து இயற்கை. ஷஉறங்குவது போலும் சாக்காடு’ என்பர் வள்ளுவர். கூட்டிலிருந்து பறவை பறப்பது போல உடம்பிலிருந்து உயிர் பறந்து செல்லும். அறிவில்லாதவன் ஒருநாள் ஒருபொழுதளவும் உயிரும் உடம்பும் கூடி வாழ்ந்திருப்பதை அறிந்திருக்கமாட்டார். ஆனால் கோடியளவு மட்டுமல்லாமல் அதனினும் கூடுதலான எண்ணங்களை எண்ணுவதனை,

**“ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல”** (குறள் :337)

என்னும் குறள் விளக்குகிறது. “இங்குக் கோடி ஆசைகளைக் கனவு காண்பதாகச் சுட்டுவதற்கும் திருவள்ளுவர் வரம்பற்ற கணக்கைக் குறிக்கவும் பல என்ற சொல்லே உதவுகிறது”[12] நொடிப் பொழுது கூற நிலையற்றதாம் தன்மையில் கோடிக் கனவு காணும் மக்களின் நிலை சுட்டப்படுகிறது.

**கோடியும் ஊழ்வினையும்**

மக்களின் நம்பிக்கைகளுள் ஊழ்வினையும் ஒன்றாகும். ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் ஏதுவான முயற்சியும் முயலாமையும் ஊழ்வினையால் தோன்றும். சிலம்பு ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்கிறது. ஐம்பொறிகளால் நுகரப்படும் பொருள்கள் கோடியளவு முயன்று சேர்த்து வைத்தவர்க்கும் ஊழ் வகுத்த வகையால் அல்லால் நுகர்தல் முடியாது. இதனை,

**“வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி**
**தொகுத்தார்க்குந் துய்த்த லரிது”** (குறள் : 377)

என்னும் குறள் மொழிகிறது.

“கோடீசுவரனே ஆயினும் ஊழ் என்னும் இறைமை வகுத்த வகையை மீறினால் அவர்தம் பொருளை அனுபவிக்க முடியாது.”[13]

**கோடியும் பழிநாணுதலும்**

சான்றோர் நற்பெயர் பெறுதலையே விரும்புவர். உயர்குடியில் பிறந்தோர் மிகப்பலவாகிய அடுக்கிய கோடியளவு பெற்றாலும் தமது ஒழுக்கம் பெருமை ஆகியவற்றைக் குறைக்கும் செயல்களில் ஈடுபடமாட்டாரென்பதனை,

**“அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்த லிலர்”** **(குறள் : 954)**

என்னும் குறள் பகர்கிறது. இதனை,

**“- - - - - - - - - - - - சான்றோர்**
**பழியொடு வரூஉம் இன்பம் வெ.்.கார்”**[14]

என்னும் அகநானூற்றுப் பாடலடிகளோடு ஒப்பு நோக்க முடிகிறது.

**கோடியும் தவறிழைக்கும் அமைச்சரும்**

அரசருக்கு அருகிலே வீற்றிருந்து ஆலோசனை வழங்கி நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பதே நல்லதோர் அமைச்சருக்கு அழகாகும். அறங்களை அறிந்து தனக்கேற்ற கல்வியால் நிறைந்து அமைந்த சொல்லை உடையவனாய் எக்காலத்தும் செயல் செய்யும் திறங்களை அறிந்த அமைச்சன் அரசர்க்கு ஆராய்ச்சிக் கேற்ற துணையாவான்.

அரசன் அருகிலிருந்து கொண்டே அரசனுக்குத் தீங்கிழைக்கும் அமைச்சனை விட அவ்அரசனுக்கு எதிரில் நிற்கும் எழுபது கோடிப்பகைவர் நல்லவராவரென்பதனை,

**“பழுதென்னும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்**
**எழுபது கோடி உறும்”** (குறள் : 639)

என்னும் குறள் எடுத்துரைக்கிறது. துரோகியை விட எதிரியே சிறந்தவன் என்பது பெறப்படுகிறது. தீய வழிகாட்டும் அமைச்சரை விட வெளிப்படையாகப் பகை கக்கும் எண்ணற்ற பகைவர்கள் மேலானவர்.

**கோடியும் பயனின்மையும்**

பணம் படைத்த செல்வர்கள் பிறர்க்கு ஈயும் இயல்பினைப் பெற்று விளங்க வேண்டும். மனங்கனிந்து பிறர்க்குக் கொடுப்பதும் தாம் நுகர்வதுமாகிய இரு செயல்களையும் உடையவராகாதவர்க்குப் பலவாகிய கோடிப் பொருள் இருப்பினும் அதனால் பயனில்லை என்பதில்லை,

**“கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய**
**கோடியுண் டாயினும் இல்.”** (குறள் : 1005)

என்னும் குறள் குறிக்கிறது.

**“வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான்”**[15]

என்னும் சிலப்பதிகார அடி மாசாத்துவான் வருநிதியைப் பிறர்க்கு வழங்கும் இயல்பினன் என்பதனை உணர்த்துகிறது.

கொடுத்தல், அனுபவித்தல் இரண்டுமில்லாதவர்க்கு அடுக்கிய கோடிப் பொருள் இருப்பினும் எப்பயனும் இல்லை.

**கோடியும் இரத்தலின்மையும்**

செல்வர் தாம் பெற்ற செல்வத்தை இரப்பவர்க்கு மனமுவந்து அளிக்க வேண்டும். தன்னிடம் உள்ள பொருளை மறைக்காது முழுமனதுடன் கொடுப்பினும் எவரிடத்தும் ஒரு பொருளையும் வேண்டிப்பெறாது வறுமையுடன் வாழ்தலே கோடி மடங்கு சிறந்தது என்பதனை,

**“கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி யுறும்”** (குறள் : 1061)

என்னும் குறள் செப்புகிறது. “மகிழ்ந்து கொடுப்பவரிடத்தும் சென்று இரவாமை மிகநன்று”[16] என்பர் ந.சி.கந்தையாபிள்ளை.

**எண்ணுப் பொருளல்லாக் கோடி**

ஷகோடி’ என்னும் சொல் திருக்குறளில் இரு (554, 559) இடங்களில் எண்ணுப் பொருளல்லாது அரசன் கொடுங்கோலானாயின் அவனது நாடு அழிவுறும் பருவமழை பொய்த்துப் போகும் என்னும் இரு இடத்து வள்ளுவரால் கையாளப் பெற்றுள்ளது.

**தொகுப்புரை**

பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களுள் முதன்மையானது திருக்குறள். இது உலகத்துப் பொருண்மைகளையெல்லாம் ஒருங்கே தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. உலகப் பொதுமை நோக்கிய திருக்குறள் உலகத்து மொழிகளிலெல்லாம் பெயர்ககப்பெற்ற சிறப்புடையது. **“அடுக்கிய கோடி பெறினும்”** என்னும் ஆய்வுக் கட்டுரையின் வழி,

- அறத்தின் தேவையைச் சுட்டுதல்
- திருக்குறளில் ஷகோடி’ என்னும் சொல்லாட்சி வழி அறச் சிந்தனைகளை எடுத்துரைத்தல் (337, 377, 639, 816, 817, 954, 1005, 1061).
- அறிவிலாதானின் நட்பை விட அறிவுடையாரின் பகைமையே கோடி மடங்கு நன்மை தருமெனல் (816).
- நகைப்பதற்கு மட்டும் பயன்படும் நட்பை விட பத்துக்கோடி பகை நல்லதெனல் (817)
- நொடிப் பொழுது கூட நிலையற்றதான தன்மையில் கோடிக்கனவு காணும் நிலை சுட்டுதல் (337)
- கோடியளவு பொருள் முயன்று சேர்த்தாலும் ஊழின் படியே அனைத்தும் நடக்குமெனல் (377)
- நற்குடிப்பிறந்தோர் கோடியளவு பொருள் பெறினும் ஒழுக்கக் குறைபாடுகளில் ஈடுபடமாட்டாரெனல் (954)
- அரசர்க்குத் தீய வழிகாட்டும் அமைச்சரை விட எழுபது கோடிப் பகைவரே மேலானவரெனல் (639)
- கொடுத்தல், அனுபவித்தல் எனும் இருநிலையில்லாதார்க்கு அடுக்கிய கோடிப் பொருள் இருப்பினும் எப்பயனுமில்லையெனல் (1005)
- உவந்து கொடுப்பவரிடத்தும் ஒரு பொருளை இரவாது வறுமையுடன் வாழ்தலே கோடி மடங்கு சிறந்ததெனல் (1061)
- கொடுங்கோலாட்சி புரியும் மன்னவின் நாடு அழியும் (554), பருவமழை பொழியாது (559) என்னும் ஆய்வு முடிவுகள் பெறப்படுகின்றன.

வள்ளுவர் ஷகோடி’ எனும் சொல்லாட்சி வழியே இவ்வுலகமக்களுக்கு அறக்கருத்துகளை எடுத்துரைத்துப் புகழ்பெற்ற திறம் சுட்டப்பெற்றுள்ளது.

**சான்றெண்விளக்கம்**

1. சிற்பி பாலசுப்பிரமணியன், நீலபத்மநாபன் (பதி) பதிய தமிழ் இலக்கிய வரலாறு, ப.335.
2. மேலது, ப.341.
3. பாரதி கவிதை செந்தமிழ் நாடு. 7 : 1-2.
4. முனைவர் நிர்மலா மோகன், இலக்கிய நெறி, ப.20.
5. நாலடியார் உரைவளம், ப.86.
6. ருளைநசளயட னுைஉவழையெசலஇ சுநயனநசஇ னுபைநளவ யுளளழஉயைவழைஇ ீ.527.
7. பொன் முகிலன், தமிழரின் வல்லமை சொல்லும் இலக்கிய வளங்கள், ப.43.
8. திருக்குறளில் அறிவுத்துறைகள், சிலம்பொலி.சு, செல்லப்பன், கட்டுரை, கணிதவியல், ப.249.
9. மேலது, ப.251.
10. மு.ந.ராமசுப்பிரமணிய ராஜா, திருக்குறள் உரைக்களஞ்சியம், ப.830.
11. மேலது, ப.831.
12. பேராசிரியர் கருவை பழனிசாமி, திருக்குறளில் மரபும் திறனும், ப.32.
13. டாக்டர் எஸ்.ஆர்.கே.திருக்குறள் ஆய்வுரை, ப.133.
14. அகநானூறு. 112 : 11-12.
15. சிலம்பு. மங்கல வாழ்த்துக. 33.
16. மு.ந.ராமசுப்பிரமணிய ராஜா, திருக்குறள் உரைக்களஞ்சியம், ப.1075.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX,* பதிப்பு *22,* ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# அறத்துப்பாலில் இயற்சீர் வெண்டளையான்அமையும் குறட்பாக்கள்

**முனைவர் க. காயத்ரி**
உதவிப் பேராசிரியர்,
சீனிவாசன் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
பெரம்பலூர் –621 212.

முன்னுரை :

திருக்குறள் குறள் வெண்பாவால் ஆன ஓர் அறநூல். வெண்பாவுக்குரிய ,லக்கணம் யாப்பருங்கலக்காரிகையில் கூறப்பட்டுள்ளது.

வெண்பாவின் ,லக்கணம் :

“ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்
சீரிய வான்றினிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசைகுன்றா
தோரிண்டாயும் ஒருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகு நெறிசுரி பூங்குழல் நேரிழையை”1

,ரண்டியான் வரும் வெண்பா குறள் வெண்பா எனப்படும். வெண்பா செப்பலோசை பெற்று வரும். ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடி நாற்சீராகவும் வரப்பெறும். வேற்றுத்தளைக் கலவாமல் ,யற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் பெற்று வரும்.

தளை வகைகள் :

“சீர்கள் ஒன்றோடொன்று கூடும் கூட்டத்திற்கு தளை என்று பெயர். தளைதல் – கட்டுதல் ,ரண்டுச் சீர்களை ஒன்றாகத் தளைதல்”2 நின்ற சீரின் ஈற்றசையும், வரும் சீரின் முதலசையும் ஒன்றுதலும், ஒன்றாமையும் தளை எனப்படும். தளையின் வகைகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

தளை ஏழு வகைப்படும்.

1 நேரொன்றாசிரியத்தளை
2 நிரையொன்றாசிரியத்தளை
3 ,யற்சீர் வெண்டளை
4 வெண்சீர் வெண்டளை
5 ஒன்றிய வஞ்சித்தளை
6 ஒன்றாத வஞ்சித்தளை
7 கலித்தளை

இதில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும், வெண்பாவுக்குரியவை ஆகும்.

,யற்சீர் வெண்டளை:

“ மா முன் நிரையும் விளம் முன் நேரும்
வருவ தியற்சீர் வெண்டளையாகும்” 3

நின்ற சீர் தேமா, புளிமா என முடிந்து வரும் சீரின் முதலெழுத்து நிரையில் வருதலும், நின்றசீர் கருவிளம், கூவிளம் என முடிந்து, வரும் சீரின் முதலெழுத்து நேர் என முடிந்தால் அது ,யற்சீர் வெண்டளையாகும்.

அறத்துப்பாலில் இயற்சீர் வெண்டளை:

திருக்குறள் அறம், பொருள்,,ன்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. ,தில் அறத்துப்பாலில் மொத்தம் 38 அதிகாரங்கள் உள்ளன. எந்தெந்த அதிகாரங்களில் எந்தெந்த குறட்பாக்கள் ,யற்சீர் வெண்டளையை பெற்று வருகிறது. என்பதைக் கீழ்வருமாறு காணலாம்.

கடவுள்வாழ்த்து என்னும் முதல் அதிகாரத்தில் மூன்றாவது குறட்பாவில் இயற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (குறள் - 3)

| | | | |
|---|---|---|---|
| மலர் /மிசை | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் நேர் வந்தமையால்,யற்சீர் வெண்டளை |
| ஏ/கினான் | நேர், நிரை | கூவிளம் | விளம் முன் நேர் வந்தமையால் இயற்சீர் வெண்டளை |
| மா/ணடி | நேர், நிரை | கூவிளம் | விளம் முன் நேர் வந்தமையால் இயற்சீர் வெண்டளை |
| சேர்ந் /தார் | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் இயற்சீர் வெண்டளை |
| நில/மிசை | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் நேர் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| நீ/டுவாழ் | நேர், நிரை | கூவிளம் | விளம் முன்நேர் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| வார் | நேர் | நாள் | |

நீத்தார் பெருமை என்னும் மூன்றாவது அதிகாரத்தில் எட்டவாது குறட்பாவில் இயற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (குறள் - 23)

| | | | |
|---|---|---|---|
| மாந்/தர் | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| பெரு/மை | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| நிலத் /து | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| மறை/மொழி | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| காட் /டி | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| மாந் /தர் | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| நிறை/மொழி | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் நேர் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| விடும் | நிரை | மலர் | |

அடக்கமுடைமை என்னும் பதின்மூன்றாவது அதிகாரத்தில் நான்காவது குறட்பாவில் இயற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

நிலையின் திரியாது தடங்கியான் தோற்றம்
மலையினும்மாணப் பெரிது (குறள் - 124)

| | | | |
|---|---|---|---|
| நிலை/யின் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| திரி/யாது | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| தடங்/கியான் | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| தோற்/றம் | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| மலை/யினும் | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| மா/ணப் | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| பெரிது | நிரை,நேர் | பிறப்பு | |

ஒழுக்கமுடைமை என்னும் பதினான்காவது அதிகாரத்தில் முதலவாது குறட்பாவில் இயற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (குறள் - 131)

| | | | |
|---|---|---|---|
| ஒழுக் /கம் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| விழுப் /பம் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| தர/லான் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| ஒழுக் /கம் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| உயி/ரினும் | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |

| | | | |
|---|---|---|---|
| ஓம் /பப் | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| படும் | நிரை | மலர் | |

ஒழுக்கமுடைமை என்னும் பதினான்காவது அதிகாரத்தில் முதலவாது குறட்பாவில் இயற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

ஒழுக்கம் உடைமைகுடிமை இழுக்கம்
இழிந்தபிறப்பாய் விடும் (குறள் - 133)

| | | | |
|---|---|---|---|
| ஒழுக் /கம் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| உடை/மை | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| குடி/மை | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| இழுக் /கம் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| இழிந் /த | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| பிறப் /பாய் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| விடும் | நிரை | மலர் | |

பொறைஉடைமை என்னும் பதினாறாவது அதிகாரத்தில் ,ரண்டாவது குறட்பாவில் இயற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

பொறுத்தல் ,றப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று (குறள் - 133)

| | | | |
|---|---|---|---|
| பொறுத் /தல் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| இறப் /பினை | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| என் /றும் | நேர், நேர் | தேமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| அத/னை | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| மறத/தல் | நிரை, நேர் | புளிமா | மா முன் நிரை வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| அதனினும் | நிரை, நிரை | கருவிளம் | விளம் முன் வந்தமையால் ,யற்சீர் வெண்டளை |
| நன்று | நேர், நேர் | காசு | |

பயன்இல சொல்லாமை என்னும் 20-வது அதிகாரத்தில் மூன்றாவது குறட்பாவிலும் ஐந்தாவது குறட்பாவிலும்,யற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது. தீவினைஅச்சம் என்னும் 21-வது அதிகாரத்தில் ,ரண்டாவது குறட்பாவிலும், ஒப்புரவுஅறிதல் என்னும் 22-வது அதிகாரத்தில் ஐந்தாவதுகுறட்பாவிலும், ஈகை என்னும் 23-வது அதிகாரத்தில் நான்காவது குறட்பாவிலும், புகழ் என்னும் 24-வது அதிகாரத்தில் ஒன்பதாவது குறட்பாவிலும், தவம் என்னும் 27-வது அதிகாரத்தில் ஒன்பதாவது குறட்பாவிலும், பத்தாவது குறட்பாவிலும், கூடாவொழுக்கம் என்னும் 28-வது அதிகாரத்தில் பத்தாவது குறட்பாவிலும், வெகுளாமை என்னும் 31-வது அதிகாரத்தில் பத்தாவது குறட்பாவிலும், துறவு என்னும் 35-வது அதிகாரத்தில் முதல் குறட்பாவிலும்,,யற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

முடிவுரை:

உலகப் பொதுமறை என அனைவராலும் அழைக்கப்படுகின்ற ஒரே நூல் திருக்குறள். திருவள்ளுவர் ,யற்றிய 1330 குறட்ப்பாக்களில் அறத்துப்பாலில் 14 அதிகாரங்களில் ,ருந்து 17 குறட்பாவில் ,யற்சீர் வெண்டளை பயின்று வந்துள்ளது.

அடிக்குறிப்புகள்:

1. யாப்பருங்கலக்காரிகை, அமிதசாகரர் ,யற்றிய மூலமும் குணசாகரர் உரையும் ப . 63
2. யாப்பதிகாரம் ப. 33
3. யாப்பருங்கலக்காரிகை, அமிதசாகரர் இயற்றிய மூலமும் குணசாகரர் உரையும் ப .31